# வாழ்க்கைப் படகு

எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்க்கா


வர்மா பதிப்பகம்

55, வெங்கட் நாராயணா சாலை,
தியாகராய நகர், சென்னை.—600 017


நல்
கலை

முதற்பதிப்பு : ஆகஸ்டு, 1991
உரிமை : ஆசிரியர்க்கு.

2965651

11347

விலை ரூ. 33.

அச்சிட்டோர்

அமுதன் அச்சகம்
66, பெரியார் தெரு,
எம்.ஜி.ஆர். நகர்
சென்னை—78.



பதிப்புரை

# வழி காட்டும் வாழ்க்கை!

காதல் வேறு, திருமணம் வேறு என்ற நிலையை உலகில் பார்க்க முடிகிறது.

எதைப் பற்றியும் சிந்திக்காமல் தீவிரமாகக் காதலிப்பது சிலரது பழக்கம்.

பிறகு பெற்றோர்களால் முடிவு செய்யப்பட்ட திருமணத்திற்கு உடன்பட நேர்வது ஒரு சிக்கலாக மாறிவிடுகிறது.

இடம் மாறி உறவை ஏற்பவர்கள், மனம் மாறி வாழ முற்படுகின்றார்கள். அப்படி மாற முடியாமல் தவிக்கும் வாழ்க்கை எத்தனை துயரமானது, துன்பமானது என்பதை இக்கதை மாந்தர் வாயிலாக, இந்நூலாசிரியர் மிக அருமையாக விவரித்துள்ளார்.

காதலன் வேறொரு பெண்ணை மணந்து கொண்டு, அப் புதியவளிடம் நாட்டமின்றிப் புறக்கணிக்கிறான். காதலியுடன் முன் போலவே பழகுகிறான். திருமணமான ஆணுடன் தான் முன்போல் பழகலாமா என்று காதலியும் சிந்திக்கவில்லை.

இந்த நிலையில், பாசமற்ற கணவனுடன் ஒரு நல்ல மனைவி எப்படி வாழ்கிறாள் என்பதை இக் கதைக் கடல் காட்டுகிறது.

ஆசிரியரின் நுட்பமான அநுபவ எழுத்தாற்றல் வாழ்க்கைப் பிரச்சினைகளை மிகத் துல்லியமாகப் பின்னிச் செல்கிறது.

எழுத்தாளரின் திறமைக்கு இக் கதை மேலும் ஒரு சான்றாகத் திகழ்கிறது. அவர் பாராட்டுக்கு உரியவராகிறார்.

வாசகர்கள் இதைப் படிக்கும்போதே, தங்களையும் தங்கள் சுற்றுப் புறங்களில் உள்ள நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டவாறே சிந்திக்க முடியும்.

நம்முடையதும் பிறருடையதுமான வாழ்க்கைப் போக்குகளையும் முடிவுகளையும் இக் கதையோட்டத்தினால் சிந்தித்துப் பார்த்திடவும் தெளிவடைந்திடவும் வழி ஏற்படுகிறது.

படிக்கும் நிலையில், நாமும் ஒரு பாத்திரமாக மாறுகிறோம். பாத்திரங்களோடு ஒட்டியும் உறவாடியும் உணர்ச்சிவசப்பட்டும் போகிறோம் நாம்.

இதுவே இக்கதையின் சிறப்பாகும். சிந்தனைக்கு உதவும் கதையைப் படித்து சீர்மிகு வாழ்வை நடத்துவோமாக.

—பதிப்பகத்தார்



11347

# 'வாழ்க்கைப் படகு'

வானத்தில் பௌர்ணமி நிலவு மெல்ல மேலே எழும்பிக்கொண்டிருந்தது. கடற்கரையில் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் ரவிசங்கரனும் வசந்தியும் உட்கார்ந்திருந்தார்கள். வசந்தி முகவாயை ரவிசங்கரனின் முழங்காலின் மீது ஊன்றிக் கொண்டிருக்க, அவன் அவள் தலையைப் பரிவோடு தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

வெகுநேரமாய் யோசனையில் ஆழ்ந்து போய் உட்கார்ந்திருந்த அவர்கள் கவனம் சிதறிற்று, அருகில் வந்து அழைத்த சுண்டல்காரனின் குரலால்.

'வசு.'

'உம்.'

'போகலாமா?'

'உம்... உங்களைத் திரும்பி எப்போது பார்ப்பதோ?'

'நாளைக்கு காலையில் ஒன்பது மணிக்கு — நீ ஆபீசுக்குக் கிளம்பும் நேரத்தில் பஸ் ஸ்டாண்டிற்கு வரேன்'

'நாளைக்குக் காலையில் ஒன்பது மணியா?' வசந்தி விரல் விட்டு எத்தனை மணி நேரம் என்று கணக்கிட்டவள்— 'எவ்வளவோ யுகம் போலிருக்கே?' என்றாள்.

ரவிசங்கரன் சிரித்தான்.

இருவரும் எழுந்து நடந்தார்கள்.

'ரவி, அந்த முழுநிலாவைப் பாருங்கள், உங்களுக்கு என்ன தோணுகிறது?'— கேட்டாள் வசந்தி.

'நம்மைப் போலவே சந்தோஷத்தால் பொங்கிப் பூரிப்பது போலத் தோணுகிறது'

'எனக்கும் அப்படித்தான் தோணுகிறது.'

நம்ம மனசு எப்படி இருக்கிறதோ அப்படித்தான் உலகமும் நம் கண்ணுக்குத் தெரியும் வசு.

'அப்படியா? நாம் எப்போதுமே சந்தோஷமாய் இருந்துட்டால் போறது.'

'எல்லோருமே அப்படித்தான் விரும்புவாங்க. ஆனால் கடவுள் அந்த அதிர்ஷ்டத்தை எல்லோருக்குமே வழங்கிட மாட்டார்.'

வசந்தி அவன் கையைப் பற்றிக் கொண்டாள் 'ரவி மற்றவங்க விஷயம் நமக்கெதற்கு? நம்மைப் பொறுத்த வரை தெய்வம் நம்மை சந்தோஷமாய்தானே வைத்திருக்கிறார்? என்ன சொல்றீங்க?'

அவன் தலையசைத்தான்.

வசந்தி அவன் கரங்களை உற்சாகத்துடன் ஆட்டிவிட்டு 'நீங்க நம்ப விஷயத்தை உங்கம்மாவிடம் இன்றைக்கே சொல்லிடறதாய் சொன்னீங்க. அவங்க சம்மதித்



ததுமே நான் இன்னொருச் சுபச் செய்தியை] சொல்லப் போகிறேன் உங்களுக்கு?'

'என்ன விஷயம்?'

'ஊஹூம், இப்போதே சொல்ல மாட்டேன்'

'இப்போதே சொல்லாவிட்டால் அப்புறம் நான் என்னிக்குமே கேட்கவே மாட்டேன் உன்னை.'

'ரவி, ப்ளீஸ்!' வசந்தியின் குரலில் குழைவு கொஞ்சிற்று.

'ஆல் ரைட் சரி' என்றான் ரவிசங்கரன்.

இருவரும் பஸ் ஸ்டாண்டிற்கு வந்தார்கள்.

'நீங்க நாளைக்கு பஸ் ஸ்டாண்டிற்கு வரும் வரையிலும் என் மனசு என்னவோ போலத்தான் இருக்கும்' என்றாள் வசந்தி.

'நீ அதைப்பற்றி ஒரு கவலையும் படவேண்டாம்னு சொல்லிட்டேன். என் படிப்பு முடிந்துடுத்து. எங்கம்மா அப்பாவுக்கு நான் மூத்த மகன். என் பேச்சைத் தட்ட மாட்டாங்க. அதுவும் சம்பாதிக்கிற மருமகள் கிடைத்தால் யார் வேண்டாம்பாங்க? எங்கப்பாவுக்குப் படித்த பெண்கள் என்றால் ரொம்பப் பிடிக்கும்.'

அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே வசந்தி ஏறும் பஸ் வந்து விட்டது. பஸ்ஸிற்குள் ஏறிய வசந்தி திரும்பிப் பார்த்தாள். கீழே அவன் நின்றிருந்தான். அவள் கண்களில் பிரிவாற்றாமையானது வேதனையாய் நிழலாடிற்று.

'குட் நைட்' அவன் கையாட்டினான். பஸ் புறப்பட்டது ரவி சங்கரன் ஒரு நிமிஷம் நிதானித்து விட்டு

எதிரே தென்பட்ட ஸ்வீட் ஷாப்பிற்குள் நுழைந்து சிறிது மைசூர் பாகைக் கட்டி வாங்கிக் கொண்டு திரும்புவதற்குள் அவன் ஏறவேண்டிய பஸ் வந்து விட்டது.

ஏறி அமர்ந்தான்.

அவன் கையிலிருந்த ஸ்வீட் பாக்கெட்டைப் பார்த்துவிட்டு அவன் அம்மா— 'எதற்குடா? வேலை கிடைத்துடுத்தா?' என்று கேட்பாள்.

'இல்லைம்மா' என்று அவன் வசந்தியின் விஷயத்தைச் சொல்லிவிடுவான். அம்மா முதலில் ஆச்சரியமடைந்தாலும் பிறகு சந்தோஷப்படுவாள். தம்பி தங்கைகளும் 'அண்ணாவுக்குக் கல்யாணம்' என்று குதித்துக் கும்மாளமிடுவார்கள்.

நேரத்தைப் பார்த்துக் கொண்டான். நாழியாகி விடவில்லை. அப்பா இதற்குள் சீட்டுக் கச்சேரியிலிருந்து திரும்பியிருக்க மாட்டார்.

அம்மா சமைத்துக் கொண்டிருப்பாள் தம்பி தங்கைகள் சாப்பாட்டுப் பந்திக்குத் தட்டுக்களைப் பரப்பி வைத்துக் கொண்டு தம்ளர்களில் தண்ணீரை ஊற்றிக் கொண்டிருப்பார்கள். அவன் பெருமூச் செறிந்தான்! அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்தே அவன் தாய் எப்பொழுது பார்த்தாலும் வேலை பண்ணிக் கொண்டேயிருக்கிறாள். உழைக்கவே பிறந்தவளைப் போல ஒரு நிமிஷம் கூட ஓய்வு ஒழிச்சலின்றிப் பம்பரமாய்ச் சுற்றிக் கொண்டிருப்பாள்.

ரவி சங்கரனுக்குத் தாயின் மேல் அளவு கடந்த வாஞ்சை. அவனுக்கு வாழ்க்கையில் ஒரே குறிக்கோள். வரப்போகும் மனைவி அவனைக்காட்டிலும் அவன் தாயின் மேல் மட்டற்ற அக்கறைக் கொண்டவளாய் இருத்தல் வேண்டும், என்பதே அது.

ரவிசங்கரன் வசந்தியை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து தாய்க்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறான். படித்து உத்யோகம் பார்க்கும் பெண்ணாயிருந்தும் அத்தனை அடக்கமாய் இருந்ததைக் கண்டு மகிழ்ந்தாள் அவன் தாய்.



'இந்தப் பெண்ணை எனக்கு ரொம்பப் பிடிச்சுடுத்துடா. அந்த லீலாங்கிற எதிர்த்த வீட்டு காலேஜ் படிக்கிற பெண்ணையுந்தான் பாரேன், எப்படி மதர்த்த குதிரைமாதிரி இருக்கு?' என்றாள்.

தாய் சொன்னதை ரவிசங்கரன் வசந்தியிடம் கூறிய போது அவள் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையில்லை.

அவனுக்குத் தாயின் மேல் வாஞ்சை அதிகம். அந்தத் தாய்க்கு அவளைப் பிடித்திருக்க வேண்டியது மிகவும் இன்றிமையாதது.

வசந்தி ரவிசங்கரனின் வீட்டிற்கு அடிக்கடி வரத் தொடங்கினாள். தாய் காமாட்சியம்மாள் ஜாடைமாடையாய் விஷயத்தைத் தெரிந்து கொண்டாள். ஆனால் கணவரிடம் எதுவும் சொல்லவில்லை. ஆனால் மகனும் வசந்தியைப் பற்றி பேச்செடுக்காததால் அவள் மகனுக்கு வேறிடங்களில் சம்பந்தங்கள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் வசந்தி ரவிசங்கரிடம் கேட்டாள்:

'நம்ப திருமணம் ஆகிவிட்டால் அந்த வீட்டில் படுக்கை அறை எங்கே?'

அவன் குழம்பினான். ஆம்! அவன் வீட்டில் தனியாய் படுக்கையறை கிடையாது.

'நான் நமக்காக வேறு வீடு பார்க்கிறேன்' என்றாள்.

அவன் அவளையே வெறிக்கப் பார்த்தான். அவள் 'க்ளுக்' கென்று சிரித்துவிட்டு, 'பயந்துட்டீங்களா? நமக்காக என்றால் நம்மிருவருக்கும் மட்டும் இல்லை. நம்ப

எல்லோருக்குமாய்ச் சேர்ந்துதான்னு அர்த்தம். வீட்டு வாரியத்தின் வீட்டிற்காக நான் அப்ளை பண்ணியிருக்கிறேன். அது கிடைத்து விட்டால் நமக்கு நல்லது. என்ன நான் சொல்வது சரிதானே?'

'அதுமட்டுமில்லை, உன்னைப்போன்ற மருமகளை அடையப் போகும் எங்கம்மா எவ்வளவு அதிர்ஷ்டசாலின்னு சந்தோஷப்படறேன்'

'சரி, போதுமே! உங்கம்மா இதைக்கேட்டால் எம் பிள்ளையைப் போன்ற ஒருவரைக் கணவனாய் அடையப் போற உன்னைவிட அதிர்ஷ்டசாலி கிடையவே கிடையாதும்பாங்க.'

அதைத் தொடர்ந்து வசந்தி கோயம்புத்தூரிலிருந்த பெரியம்மாவிற்கு உடம்பு சரியில்லாததால் பெரியப்பாவின் வீட்டிற்குப் போய்விட்டு நான்கு நாட்களில் திரும்பி வந்தாள்—

வசந்தியின் சிநேகிதி காவேரியின் வீட்டில்—

வசந்தி ரவிசங்கரனுக்கு முன்னால் உறுமும் வானத்தைப் போலிருந்தாள்.

'உங்களுக்குத் தெரியாதென்றால் எப்படி நம்ப முடியும் என்னால்? நீங்க என்ன சிறு பையனா—உங்கம்மாவும் அப்பாவும் பலவந்தப்படுத்தி அழைத்துண்டு போவதற்கு?'

வசந்தியைத் தேற்ற பல விதங்களில் முயன்றான் ரவி சங்கரன்.

'வசு! உறவுக்காரங்க வீட்டுக்கு வான்னு கூப்பிட்டாங்களேயொழிய, அங்கே பெண் பார்க்கும் படலம் உண்டுங்கறது எனக்குத் தெரியவே தெரியாது. என்னை நீ நம்பாவிட்டால் நான் என்ன பண்ணுவது?'



அவன் முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்டபிறகு வசந்தியின் மனம் கொஞ்சம் சமாதானமடைந்தது

'நாம் உடனே திருமணம் பண்ணிக் கொண்டு விடலாம். உங்கம்மா அப்பாவிடம் சொல்லிடுங்க' என்றாள்.

அவன் செய்வதறியாது பார்த்தான். வசந்தி அவனுக்கு அண்மையில் வந்து கோழையாய், ரவி, என் பயம் உங்களுக்குப் புரியவே புரியாது. நீங்க அந்த சிதம்பரத்தின் மகளைப் பெண்பார்க்கப் போய்விட்டு வந்ததாய் காவேரி சொன்னதிலிருந்து என் மனது என் வசமில்லை. நீங்கநம்ப விஷயத்தை உங்கம்மா அப்பாவிடம் எடுத்துச் சொல்லாத வரை உங்களுக்கு இத்தத் தொந்தரவு இருந்துண்டேதான் இருக்கும். இதற்கெல்லாம் நீங்கள்தான் காரணம். உத்யோகம் கிடைத்த பிறகு சொல்லிக்கலாம்னு தள்ளிப் போட்டுக் கொண்டே வந்ததால் அதற்குள் இந்த மாதிரி சிக்கல் எல்லாம் முளைத்து விட்டது. அதனால் இன்னைக்கே என்னைப்பற்றிச் சொல்லிடுங்க.'

'சரி வசு.'

'பிராமிஸ்?'

நீட்டிய வசந்தியின் கரத்தில் அவன் தன் கையை வைத்தான். சட்டென்று வசந்தி அவன் தோளில் முகம் சாய்த்துக்கொண்டு விம்மும் குரலில் சொன்னாள்.

'நேற்றிரவிலிருந்து எனக்குப்பொட்டுத்தூக்கமில்லை. அதனால்தான் ரொம்ப உடம்பு சரியில்லை. உடனே வாங்கன்னு காவேரி மூலமாய் உங்களுக்குச் சொல்லியனுப்பினேன்.'

'நானே வரலாம்னுதான் இருந்தேன்.' வசந்திக்கு அத்தனைத் துன்பம் உண்டாகக் காரணமாகி விட்டேனே என்று. உள்ளூர வருந்தினான் அன்று அவன்.—

யோசனை வெள்ளத்தில் மூழ்கித் திணறிக் கொண்டிருந்த ரவிசங்கரனின் கால்கள் பஸ்ஸை விட்டிறங்கி எப்படி வீட்டை அடைந்தனவோ அவனுக்கே தெரியவில்லை.

வெறுமே சாத்தியிருந்த கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். தம்பி தங்கைகள் சாப்பாட்டுப் பந்திக்கு ஆயத்தம் ஆனார்கள்.

அவனைக் கண்டதுமே, 'அம்மா, இதோ அண்ணா வந்தாச்சே!' என்று மகிழ்ச்சியுடன் அவனை நோக்கி ஓடி வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

'எங்கேடா போனாய்?' என்று கேட்டார், கால் கழுவிக்கொண்டு புழக்கடையிலிருந்து உள்ளே வந்த தந்தை.

தாய் வெளியே வந்து ஒரு முறை அவனை உற்றுப் பார்த்துவிட்டு, சந்தோஷத்துடன் உள்ளே போய்விட்டாள்.

எல்லோரையும் பார்த்தான் அவன். எல்லோரின் முகமும் மலர்ந்திருந்தன. பரவாயில்லை, தான் சொல்லப் போகும் விஷயத்திற்கு சூழ்நிலை அனுகூலமாகவே இருக்கிறது.

சமையலறையிலிருந்த தாய் அவனுக்கருகில் வந்தாள். கையிலிருந்த ஸ்வீட் பொட்டலத்தை எடுத்துத் தாய்க்குத் தூக்கிக் காட்டினான்.

'அம்மா, ஒரு நல்ல சேதி' என்றான்.

'இருடா, உன்னையும் முந்திண்டு நான் உனக்கு சுப வார்த்தை ஒன்று சொல்லப் போறேன்.' உள்ளங்கையிலிருந்த சர்க்கரையை அவன் வாயில் திணித்தாள் காமாட்சி.



'என்னதும்மா?' சந்தோஷமாய் விசாரித்தான்.

'நீ எங்கே போயிட்டே? உனக்காக மத்யானத்திலிருந்து உங்கப்பா தேடியலைந்தார். காலையில் நீ சாப்பிட்டுட்டு அந்தப் பக்கமாய்ப் போனதுமே சிதம்பரம் வந்தார். அவர் பொண்ணு உமாவுடன் உனக்குத் திருமணம் நிச்சியமாயிடுத்து. வெற்றிலைப் பாக்கு மாத்திண்டாயிடுத்து.'

காமாட்சி பரபரக்க ஓடிப்போய் ஒரு பெரிய பாக்கெட்டைக் கொண்டு வந்தாள்.

'இத பார், நமக்குத் துணி எடுத்திருக்காங்க, எவ்வளவு விலையுயர்ந்தது பாரு.'

அவள் மகனின் முகவாயைப் பிடித்துச் சொன்னாள்.

'எனக்குத் தெரியுண்டா ரவி! நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி! நீ சின்னவனாயிருந்தபோது ஒரு ஜோசியர் சொன்னார். அடுத்த புதன்கிழமை விடியற்காலையில் ஐந்து மணிக்கு லக்னம் வைத்து விட்டாங்க. ரொம்ப நல்ல லக்னமாம்.'

ரவிசங்கரனின் முகம் வெலவெலத்தது.

'அவங்களோடு சம்பந்தம் வெச்சுக்கப் போறோம்னு கேட்டதுமே அக்கம் பக்கத்தலங்க கண்களில் பொறாமைத் தீ எரியத் தொடங்கிடுத்துடா. அதற்காகதான் காதும் காதும் வைத்தாற்போல ரெண்டாம் பேரறியாமல் வெற்றிலைப்பாக்கு மாற்றிக் கொண்டு விட்டோம்.'

காமாட்சி துணிகளை எடுத்துச் சென்று உள்ளே பெட்டியில் வைத்துவிட்டு வந்தாள். பணக்கார சம்பந்தம் அவளுக்கு மிகவும் பிடித்து விட்டது.

'இனிமே ஊர் சுற்றுவதைக் குறைத்துண்டு வீட்டோடு இரு. ஏகப்பட்ட வேலை கிடக்கு. நான் ஒண்டியாய் எவ்வளண்ணு பண்ண முடியும்?' என்றார் தந்தை.

தாய் உணவு பறிமாறத் தொடங்கினாள்.

ரவிசங்கரன் சிலையாய் நின்று விட்டான். அவன் கையைப் பற்றி இழுத்துத் தம்பி தங்கைகள் கும்மாளமிடத் தொடங்கினார்கள். 'அண்ணா கல்யாணம்!'

'அண்ணா, இனிமேல் உன் பேர் என்ன தெரியுமா?'

'உமா-சங்கரன், உமாசங்கரன்!' குழந்தைகள் கைக் கொட்டி ஆரவாரித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களின் சிரிப்பும் கைக்கொட்டலும் அவன் செவிகளைத் துளைத்தெடுப்பது போலிருந்தது.

ரவிசங்கரனுக்குக் காலடியில் பூமி நழுவத் தொடங்கிற்று. குழப்பத்துடனும் கலவரத்துடனும் அப்படியே நின்று விட்டான்.

## 2

வசந்தி கட்டிலில் சோர்ந்துப்போய் உட்கார்ந்திருந்தாள். ஒரு வாரத்திற்கு முன்னால் வசந்தியைப் பார்த்தவர்கள் இப்பொழுது மறுபடியும் பார்க்க நேர்ந்தால், அவள் வசந்திதான் என்று நம்பவே மாட்டார்கள். அத்தனை இளைத்துப் போய், கன்னங்கள் ஒட்டி, கண்கள் குழிவிழுந்துக் கிடந்தன. தன்னம்பிக்கையும் சந்தோஷமும் அவளைவிட்டு ஓடி ஒளிந்துக் கொண்டன.

வசந்தியின் கட்டில் நெருங்கினாள் காவேரி. கையிலிருந்த ஹார்லிக்ஸை நீட்டி, 'காலையிலிருந்து



எதுவுமே சாப்பிடவில்லையே! கொஞ்சம் ஹார்லிக்ஸாவது குடி வசு' என்று கெஞ்சினாள். வசந்தி மறுத்து விட்டாள்.

'வசு உன் போக்கே எனக்குப் புரியலை. இதற்கெல்லாம் நீயே தானே காரணம். நீயே வரவழைத்துக் கொண்டு விட்டு, இப்பொழுது உட்கார்ந்து வருந்துவதில் என்ன லாபம்? அந்த ரவிசங்கரன் எங்கேயாவது போய்த் திருமணம் பண்ணிக்கொண்டு விடுவோம்னு உன்னை எத்தனை கெஞ்சினார்? நீ மசிந்துக் கொடுத்தாயா? மாட்டேன் என்றாய் நான் அப்போதே உன்னை யோசித்துப் பார்த்து விட்டு முடிவெடுக்கச் சொன்னேன். நீயோ, எல்லாம் நன்றாய் யோசித்துதான் சொல்கிறேன் என்று சொல்லி விட்டாய்.'

'நான் எடுத்த முடிவுக்கு நான் ஒன்னும் வருத்தலையே காவேரி.'

'பின்னே ஏன் இப்படி வருத்தப்படுகிறாய்?'

'தெய்வம் இந்த மாதிரி ஏன் பண்ணிடுத்துன்னு தான்.'

'இத பார், அதான் எனக்குக் கோபம் பத்திண்டுவரது. நீயே முடிவெடுத்துட்டு நடுவில் தெய்வத்தை ஏன் இழுக்கிறாய்?'

'இந்த மாதிரி சூழ்நிலை ஏன் உண்டாகணும்?'

'உன் கெட்டிக்காரத்தனத்தைச் சோதிப்பதற்காக இருக்கும்! ரவிசங்கர் உன்னிடம் சொல்லாமல் அவங்க அம்மா அப்பா பார்த்த பெண்ணைச் செய்து கொண்டு விட்டிருந்தால் அப்பொழுது இந்தமாதிரி பேசறது நியாயந்தான். ஆனால் பாவம் அவர் அன்று எவ்வளவு மனவேதனையோடு வந்தார்? எங்காவது போயிடலாம்னு உன்னை எத்தனைக் கெஞ்சினார்!'

'ரவிசங்கரன் அம்மா அப்பாவைச் சம்மதிக்கச் செய்து
விட்டு, என்னை அவங்க வீட்டுக்கு மருமகளாய் அழைத்
துண்டு போவார் என்றுதான் எண்ணியிருந்தேனேயொழிய
இந்தமாதிரி திருட்டுத்தனமாய் ஓடித் திருமணம் செய்துக்
கலாம் வா என்றழைப்பார் என்று நினைக்கவேயில்லை
நான்.'

வசந்தி சட்டிலைவிட்டு எழுந்திருந்தாள். அவளைக்
கண்டால் குட்டிப்போட்ட பூனையைப் போல ஓரிடத்
திலும் நிற்க முடியாதவளாயும், உட்கார முடியாத
வளாயும் சொல்லமுடியாத வேதனையால் தவிப்பவளைப்
போலவுமிருந்தது.

ஜன்னலுக்கருகில் போய் நின்று கொண்டாள்.

'காவேரி, உனக்கென்ன தெரியும்? ரவிக்கு அவங்கம்மா
வின் மேல் உயிர். தன் தாயைத் திருப்திப்படுத்தும்
பெண்ணே தனக்கு வேணும் என்று அடிக்கடி சொல்வார்.
அவர் மனது எனக்கு நன்றாய்த் தெரியும். இப்பொழுது
ஆவேசத்தோடு என்னை மணந்துக் கொண்டாலும்
பிற்பாடு வருந்துவார். நான் மருமகளாய் வர்றதே
பிடிக்காத அவங்கம்மாவை என்னால் எப்படித் திருப்திப்
படுத்த முடியும். சொல்லு?'

'அதையெல்லாம் அவர் பார்த்துக்கிறாரு.'

'எனக்காக அவர் தன் குடும்பத்தைத் துறப்பது
எனக்குப் பிடிக்கவேயில்லை. நான் பண்ணிய திர்மானம்
சரியானது தான்னு நினைக்கிறேன்.'

'நீ இதைத் தியாகம்னு நினைக்கிறாய் போலிருக்கு'
என்று ஏளனமாய் நகைத்தாள் காவேரி.

'தியாகமா? சீ; நடைமுறைக்கு ஏற்றாற்போல
யோசித்துப்பார்த்தேன்; அவ்வளவுதான். அவரை நான்



மணந்துக் கொண்டால், வாழ்க்கை சுகமாய் நிம்மதி
யாய்க் கழியணும்.

அதில் எந்த அபஸ்ருதியும் ஏற்பட்டுவிடக்கூடாது.
என்னை அடைந்ததால் தன்மனுஷங்களை இழக்க நேர்ந்த
தேன்னு அல்லது ஏதோ நஷ்டமாயிட்டாற்போலவோ
அவர் பாவிக்க நேர்ந்தால்...அந்த மாதிரி திருமணம் நடக்
கிறதைவிட நடக்காமலிருப்பதே மேல்.'

அப்பொழுது புலு புலுவென்று இரு சிறுமிகளும் ஒரு
சிறுவனும் குதூகலத்துடன் அங்கு ஓடிவந்தனர். அவர்கள்
ரவிசங்கரனின் தம்பி தங்கைதான். காவேரி அவர்களைக்
கண்டு, வாங்க, வாங்க என்று வரவேற்றாள். சிறுவனின்
கையிலிருந்த அழைப்பிதழைக் கண்டதும் வசந்தியின்
முகம் கறுத்தது. அங்கிருந்த கட்டிலில் போய் அமர்ந்தாள்.

'காவேரி அக்கா, எங்கண்ணா கல்யாணம். அழைப்
பிதழைத் தந்துட்டு உங்களை அழைத்துட்டு வரச்சொன்
னாங்க' என்று அழைப்பிதழை நீட்டினான் சிறுவன்.

குழந்தைகள் புத்தாடை அணிந்துகொண்டு கலகலப்
புடன் சந்தோஷமாய் இருந்தார்கள். சிறுவன் வசந்தியைப்
பார்த்துட்டு, 'அட வசந்திக்காகூட இங்கேயே இருக்
காங்களே. அப்பாடீன்னால் உங்க வீட்டுக்கு வர்ற வேலை
இல்லை' என்று இன்னொரு அழைப்பிதழை எடுத்து
அவளிடம் தந்தான்.

'உங்களுக்கு வரப்போற அண்ணியைப் பார்த்தீங்
களா நீங்க?' என்று அவர்களைக் கேட்டாள் காவேரி.

'ஓ!'

'எப்படி இருக்கா?'

'சிவப்பாய், ரொம்ப அழகாய் இருக்கா. கொஞ்சம்
குள்ளமாய், குண்டமாய் இருக்கா.'

'இல்லை, குண்டு இல்லை! ஒல்லிதான்' என்றாள் சிறுமி.

'இல்லை, குண்டுதான்.'

'எங்க அண்ணிக்கு எவ்வளவு நகை இருக்கு தெரியுமா? கை, கழுத்து, காது எல்லாத்துக்கும் மாட்சிங் செட்தான்.'

'உங்கண்ணாவுக்கு வரதட்சணைத் தந்தாங்களா?'

'என்னவோ தெரியாது. எனக்கு, அண்ணாவுக்கு மாத்திரம் அவங்க வைர மோதிரம் ஃபாரின் வாட்ச் இன்னும் விலையுயர்ந்த துணிமணிகள் தராங்க. எங்கம்மாவுக்கும் எங்கள் எல்லோருக்கும் காஞ்சிபுரம் பட்டுதான்.'

எல்லோரின் முகத்திலும் தெரிந்த உற்சாகத்தைக் கவனித்தாள் வசந்தி. அவர்கள்தான் எத்தனை சந்தோஷமாய் இருக்கிறார்கள்!

'போய் வரோம் அக்கா. ரொம்பப் பேர் வீட்டுக்குப் போகணும்' என்று எழுந்திருந்தனர்.

வசந்தியின் கண்கள் அழைப்பிதழின் மீது படர்ந்தன. அதைக் கண்டதும் அன்று ரவிசங்கர் நேராய் வந்து, 'எங்கேயாவது போய் விடலாம் வா' எனறழைத்த நிகழ்ச்சி கண் முன் நிழலாடிற்று.

இன்னும் ரவிசங்கர் எதிரே நிற்பது போலவே இருந்தது வசந்திக்கு.

'வசு, வாதாடாதே; நாம் எங்காவது போய் திருமணம் பண்ணிக் கொள்வோம்.'

'உங்கம்மா? அவங்களுக்கு என்ன பதில் சொல்லுவீங்க?'



'கொஞ்ச நாளில் அம்மாவே நம்மைப் புரிந்துப்பாங்க.'

'உங்கம்மா அப்பாவை உங்களால் சம்மதிக்கச் செய்ய முடியலையா?'

'வசு. நான் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். அவங்க கேட்டுக்கவே யில்லை. அந்த உமாவைத்தான் பண்ணிண்டு தீரணும்னு உபத்திரவப்படுத்தறாங்க.'

வசந்தி யோசனையில் ஆழ்ந்தாள்.

'என்ன யோசிக்கிறாய்?'

'நான் உங்களைப்பற்றிதான் யோசிக்கிறேன். உங்களுக்கு உங்கம்மாவின் மேல் உயிர். உங்கம்மாவைத் திருப்திப்படுத்தும் பெண்ணே உங்களுக்கு மனைவியாய் வரணும் என்று நீங்கள் கனவு காண்பதும் நான் அறிவேன. அந்தக் கனவை நினைவாக்கணும்னுதான் இருந்தேன நான்.'

அவன் ஆவேசத்துடன் வசந்தியின் கையைப் பற்றிக் கொண்டான்.

'வசு, ப்ளீஸ், எது கெட்டது எது நல்லதுன்னு எனக்கு ஒண்ணுமே புரியவில்லை. நான் உன்னை இழந்துவிடுவேனோங்கிற பயம் என்னைப் பித்துப் பிடித்தவனைப் போல ஆட்டுவிக்கிறது.'

'எனக்கு யோசிக்க டயம் தாருங்கள்.'

'நம்மிருவரின் வாழ்க்கைக்கும் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான இந்த விஷயத்தைப்பற்றி யோசிக்காமல் எப்படி?'

இருவரும் மறுநாள் சந்திப்பதாய் முடிவெடுத்தனர். வசந்தி சொன்ன தீர்மானத்தைக் கேட்டு அவன் வெலவெலத்துப் போய்விட்டான்.

'என்னது? நான் இந்த உமாவைத்தான் செய்துக்கணுமா? இதனா நீ எடுத்த முடிவு? உனக்குப் புத்தி சித்தி ஏதாவது இருக்கா?'— ஆவேசத்துடன் கத்தினான்

'புத்தி இருந்துதான் இதைச்சொல்றேன். இத பாருங்க, நான் வேலை செய்யறேன், வீடு வாங்கிக்கப் போறேன். என் வாழ்க்கையில் பாதி ஸ்திரமாகிவிட்டது. நான் திருமணம்னு ஒண்ணு பண்ணிண்டால் அதன் மூலம் நான் சுகப்படணுமேயொழிய பிரச்னைகளிலும் சிக்கல்களிலும் மாட்டிக்கக்கூடாது. நீங்க சொல்லுவதுபோல நாம் இப்பொழுதே கிளம்பி ஏதாவது கோவிலில் யாருக்கும் தெரியாமல் திருமணம் பண்ணிக்கொண்டுவிடலாம்தான். ஆனால் அதன் விளைவு? உங்கம்மா என்னை ஒரு திருடியைப் போல அருவருப்போடு கேவலமாய் நோக்கினால் நான் எப்படிப் பொறுப்பேன்? திருமணம் ஆனால் எல்லோரின் சம்மதத்தின் பேரிலும் நடக்க வேண்டும். உங்கள் குடும்பம் அனைத்தும் என்னுடைய குடும்பமாகணும். உங்க வீட்டில் ஒவ்வொருவரும் என்னை மதிக்கணும்.'

'வசு, என்னைப் பற்றி நீ யோசிக்கவேயில்லை.'

'நான் உங்களைப்பற்றிதான் யோசிக்கிறேன். முதலில் இத்தனை நாளும் நீங்கள் உங்கம்மா அப்பா, தம்பி தங்கைகளிடம் பாசத்தைப் பொழிந்து வந்ததை நான் அறிவேன். இப்பொழுது உங்களை அவர்களிடமிருந்து பிரிப்பது,பந்தலிலிருந்து கொடியைக் கத்தரித்துப் பிரிப்பது போலத்தான் ஆகும். பிற்பாடு,... பிற்பாடு நீங்கள் எனக்கு அண்மையிலிருந்த போதிலும் உங்கள் மனது மட்டும் அவங்களிடம்தான் இருக்கும்.'

'இன்னும் ஒரு முறை நன்றாய் யோசித்துப் பார்.'



'நான்றாய் யோசித்துப் பார்த்துதான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன்.'

'நீ என் பேச்சைத் தட்டாமாட்டாய் என்றெண்ணினேன்.'

'உங்கள் இப்போதைய ஆவேசத்தை விட நம் எதிர்காலம்தான் மிக முக்கியம்.'

'நீ இத்தனைப் பிடிவாதக்காரின்னு நினைக்கவேயில்லை. சரி, இனி என்னைக் குற்றம் சொல்லாதே. இந்தத் தீர்மானம் நீ எடுத்ததுதான்.'

வசந்தியைச் சம்மதிக்க வைக்க முடியாதவனாய்க் கோபத்துடன் அங்கிருந்து வெளியேறினான்.

'என்ன வசு! அப்படியே நின்று விட்டாயே?' காவேரி வந்து அழைத்தாள்.

'ஒண்ணுமில்லை.' வசந்தி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

## 3

சிதம்பரத்தின் மகள் உமாவுடன் ரவிசங்கரனின் விவாகம் ஆடம்பரமாய் நடந்தேறி விட்டது. சிதம்பரத்திற்கு பணப்பசை அதிகம். ஜனங்களிடையே செல்வாக்கு மிகவும் உண்டு.

அத்தனைப் பணக்காரர் தம் மகளுக்குப்பெரிய இடத்திலிருந்து மருமகனை வரவழைத்துக் கொள்ள விரும்பவில்லை. தம்மைவிட பணக்கார இடமாய்ப் பார்த்துத் தந்தால் தாமே அவர்களுக்கு எல்லாம் செய்யவேண்டிவரும். தம்மைவிடத் தாழ்ந்த அந்தஸ்திலிருக்கும் ஒருவ

னைப பார்த்துத் தந்தால் சொன்னபடி கேட்பான்; கைக்குள் அடக்கமாய் இருப்பான் என்றெண்ணினார். அதனால் ரவிசங்கரனை அவருக்கு மிகவும் பிடித்து விட்டது.

மாலையில் ரிசப்ஷனுக்கு காவேரி வந்தாள். 'வசந்தி வருவதாய்ச் சொன்னாள். வந்து விட்டுப் போயிட்டாளா?' என்று கேட்டாள்.

ரவிசங்கரனின் முகம் சிவந்தது. 'வரலை' என்றான்.

'வசந்தி யாரு?' என்று கேட்டாள் உமா. ரொம்ப நேரமாய்ப் பார்த்துண்டேதான் இருந்தாள். ரவிசங்கருக்கு சிநேகிதர் குழாம் அதிகமாகவே இருந்தார்கள் போலிருக்கிறது. ரொம்பப் பேர் வந்தார்கள். அவர்களுள் இரண்டு மூன்று பேர் 'வசந்தி வரலையா?' என்று கேட்டார்கள்.

'உங்களவருக்குத் தெரியும்' என்றாள் காவேரி குறும்பாய்.

ரவிசங்கரன் முள்ளின் மேல் நிற்பதுபோல எப்பொழுது இந்த விழாக்கள் எல்லாம் முடியுமோ என்று நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டு ஆத்திரத்துடன் நின்று கொண்டிருந்தான். எப்படியோ அவன் பொறுமையை நன்றாய்ச் சோதித்து விட்டே அவ்விழா முடிவடைந்தது. வந்தவர்கள் யாவரும் போய்ச் சேர்ந்தார்கள். நாற்காலிகளை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ரவிசங்கரனும் உமாவும் உள்ளே வந்தார்கள்.

உமாவின் தாய் வந்து, 'அம்மா உமா, கொஞ்சம் இப்படி வாம்மா; சித்தி ஊருக்குப் போறாளாம்' என்று அழைக்கவே உமா அறையை விட்டு வெளியேறினாள்.



ரவிசங்கரன் களைத்துப்போய் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவனுக்குக் கழுத்திலிருந்த மாலைகளைப் பிய்த்து உதறி எறிந்துவிட்டு எங்கேயாவது ஓடிப் போய்த் தனியாய் உட்கார்ந்து அழவேண்டும் போலிருந்தது.

'சாமி, உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க.' வேலையாள் வந்து சொன்னான். ரவிசங்கரன் நிமிர்ந்து நோக்கினான். அறைக்குள் வசந்தி வந்தாள்.

அவன் சட்டென்று திடுக்கிட்டுப் போய்விட்டான்.

வசந்தி பச்சைநிற ஷிபான் புடவையில் பூ வேலைப்பாடுகள் செய்திருந்த புடவை அணிந்திருந்தாள். அவ்வுடையில் அவள் பளிங்குச் சிலையாய்த் தோற்றமளித்தாள். கையில் கலர் காகிதத்தால் சுற்றப்பட்டிருந்த வெகுமதியொன்று இருந்தது.

அறையில் ரவிசங்கரன் தனியாய் இருந்ததையும் தன்னைக் கண்டு விட்டுத்திடுக்கிட்டதையும் கண்ட வசந்திக்கு கசப்பை உண்டாற் போலிருந்தது.

ரவிசங்கரன் வசந்தியையே பார்த்தான்.

வசந்தியும் அவனையே பார்த்தாள்.

'ஏன் அங்கேயே நின்றுவிட்டாய்? உள்ளே வா.'

வசந்தி உள்ளே வந்தாள்.

அவன் வசந்திக்கு எதிரே நின்றான். ஏளனம் நிறைந்த குரலில் கோபமாய் வந்தது அவன் வார்த்தைகள்.

'இத பார். என்னை நன்றாய்ப் பார்! இப்போ உனக்கு சந்தோஷமாய் இருக்கா?'

வசந்தியின் கண்களில் மடைதிறந்தாற்போல் நீர் ஊற்றெடுத்தது. தன்னுள் வரவழைத்துக்கொண்டிருந்த

தைரியம் அவளை விட்டு நீங்கிவிட்டது. கையிலிருந்த வெகுமதி பாக்கெட்டை அங்கிருந்த நாற்காலியில் வைத்து விட்டு, சரேலென ஒரே பாய்ச்சலில் வெளியே ஓடிவிட முனைந்தாள். ரவிசங்கர் கையைப் பிடித்து அவளைத் தடுத்து நிறுத்தினான். வசந்தியை ஒருவாறு பிடித்துக் கொண்டே திரைச்சீலையைத்தாண்டி அடுத்த அறைக்குள் இழுத்துச் சென்றான்.

'வசு, ஏன் இப்படிப் பண்ணிட்டே? உன் பேச்சை நான் ஏன் கேட்டேனோ? உன் மேல் கோபித்துண்டு நான் ஏன் இந்தப் பைத்தியக்காரத்தனத்தைப் பண்ணிவிட் டேனோ? எனக்கு ரொம்பவும் பயமாய் இருக்கு எங்கே யாவது ஓடிவிடலாம் போலிருக்கு'

'கையை விடுங்க. இதென்னது? யாராவது வருவாங்க.'

உமா கழுத்திலிருந்த மாலையைச் சீர் செய்துக் கொண்டே அவ்வறைக்குள் நுழைந்தாள்; அறைக்குள் நுழைந்த உமா அங்கு கணவனைக் காணாது திகைத் தாள். பேச்சுக்குரல் மட்டும் பக்கத்து அறையிலிருந்து தெளிவாய்க் கேட்டது.

'விடுங்கள். இதென்னது? யாராவது வருவாங்க' என்ற ஒரு பெண்ணின் குரல் கேட்டது. திரைச்சிலைக் கீழே பச்சை நிற ஷிபான் புடவை தெரிந்தது. ரவிசங்கரனின் பாண்ட்டும் பாதங்களும் தென்பட்டன. அப் பாண்ட்டும் பாதங்களும் பச்சைநிறப் புடவையின் கொசுவங்களின் மீது உராய்ந்து கொண்டிருந்தன.

'வசு, வசு... ஐ லவ் யூ! என்னால் இதைத் தாங்க முடியலை. நாம்ப எங்கேயாவது ஓடிவிடுவோம் வா. இப்பவாவது என் பேச்சைக் கேளேன். அந்த உமாவின் காற்றுப் பட்டாலே எனக்குக் கம்பளிப்பூச்சியைத் தீண்டு வது போலிருக்கு. போயிடலாம் வா.'



'உங்களுக்குப் புத்தி பிசகி விட்டதா என்ன? யாரா வது வந்துடுவாங்க, என்னை விட்டுடுங்க.'

'விடமாட்டேன். அவங்களிடமே சொல்லிடறேன். இந்தப் பொண்ணைத்தான் நான் காதலித்தேன். நாங்கள் திருமணம் பண்ணிக்கலாம் என்றிருந்தோம். எங்கப்பா அப்பா என் உயிரை எடுத்து இந்த உமா என்ற உபத்திர வத்திற்கு என்னை பணம் முடித்து வைத்துட்டாங்க என்பேன்'

'ரவி, உங்களுக்குக் கோடி புண்யம், என்னை விட்டு டுங்க. அப்புறமாய்ப் பேசிக்கலாம் நாம்.'

'பிராமிஸ்?'

'பிராமிஸ்தான். என்னை விட்டுடுங்க? உமா சரேலென ஓட்டமாய் ஓடி வந்துவிட்டாள்.

தன் அறைக்குள் ஓடிவந்த உமாவின் முகம் பேயறைந் தாற் போலிருந்தது. முகம் சிவந்து உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. அழுகை பொத்துக்கொண்டு வந்தது அவளுக்கு. பயங்கரமான வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வருவதுபோல கண்களிலிருந்து கண்ணீர் மடை திறந்தது.

உமா தலையிலிருந்த பூக்களைப் பிய்த்து உதறி எறிந் தாள். கழுத்திலிருந்த பூமாலையையும் நகைகளையும் கழற்றிக் கட்டிலில் விட்டெறிந்தாள்.

எவ்வளவு முயன்றும் அடக்க முடியாத அழுகை பொத்துக்கொண்டு வரவே கட்டிலில் விழுந்துக் குமுறிக் குமுறி அழத் தொடங்கினாள்.

# 4

உமாவின் தாய் தேங்காய் வெற்றிலைப் பாக்கு பைகளை வைப்பதற்கு அல் வறைக்குள் நுழைந்தாள். அறைக்குள் காலடி எடுத்து வைத்தவளுக்கு, கட்டிலில் குப்புறப்படுத்து அழுது கொண்டிருந்த மகளைக் கண்டதும் தூக்கி வாரிப் போட்டது. கலவரத்துடன் அருகில் வந்து தோளைத் தட்டி, 'ஏம்மா, என்னவாச்சு?' என்று கேட்டாள்.

உமா தாயின் கையை உதறித் தள்ளிவிட்டு இன்னும் பெரிதாய் அழத் தொடங்கினாள்.

'என்னதான் நடந்தது? இதென்ன அலங்கோலம்? இந்தப் பூவையெல்லாம் ஏன் பிய்த்து எறிந்தாய்? நகைகளையும் விட்டெறிந்திருக்கிறாய்? யாராவது உன்னை ஏதாவது சொன்னாங்களா?'

உமா தாயின் கையை உதறித்தள்ளிவிட்டு, 'நீங்கள் என் தலையில் இடியைப் போட்டு விட்டீங்க' என்று அழுதாள்.

மகளின் வார்த்தைகள் எதுவுமே புரியவில்லை அமிர்தத்திற்கு.

'உன் போக்கே எனக்குப் புரியலையேம்மா, சரியாய் சொல்லித் தொலையேன்' என்றாள்.

உமா எழுந்து உட்கார்ந்து கொண்டு இடையிடையே விசும்பிக் கொண்டே நிகழ்ந்தவைகளை எடுத்துச் சொன்னாள்.

'நிஜந்தானா?' அமிர்தம் மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டாள்.



'நிஜந்தாம்மா. என்னைப் பார்த்தால் கம்பளிப்பூச்சி தாக்கினாற் போலிருக்காம். நான் உமாங்கிற உபத்திரவமாம்.'

சொல்லச் சொல்ல மேலும் அழுகை வந்து கொண்டேயிருந்தது உமாவுக்கு.

மகளின் சோகத்தைப் பார்த்த அமிர்தத்திற்கு வயிற்றைப் பிசைந்தெடுத்தது. அவள் இந்த சம்பந்தத்தை வேண்டாம் என்று மறுத்துக் கொண்டே வந்திருக்கிறாள், ஆனால் சிதம்பரம் கேட்டுக் கொள்ளவேயில்லை. எடுப்பதும் கொடுப்பதும் சம அந்தஸ்திலேயே இருந்தால்தான் நல்லது என்று அவள் வாய் வலிக்கக்கத்தியாகி விட்டது.

'அந்தக் குசேலர் குடும்பத்தில் போய் பெண்ணைத் தந்தால் அவர்கள் எல்லோருமாய்ப் படையெடுத்து வந்து நம் வீட்டை மேய்ந்து விடுவார்கள்' என்று தலைப்படைத்துக் கொண்டாள்.

'நீ வாயை மூடிண்டு இரு உனக் கொண்ணுமே தெரியாது' என்று அவள் வாயை அடைத்து விட்டார் அவர்.

உமா தாயை அணுகினாள். அவள் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டு, 'அம்மா என்னைக் கம்பளிப் பூச்சின்னவர் எனக்கு வேண்டியதில்லை. அப்பாவிடம் இப்போதே சொல்லிவிடு. அந்தப் புருஷன் எனக்கு வேண்டியதில்லை.'

அமிர்தம் மகளைக் கட்டிக் கொண்டாள். 'சீ, சீ, இன்னும் உன் காலில் செம்பஞ்சுக் குழம்புகூடக் காயவில்லை. இந்த மாதிரி அபசகுனமாய்ப் பேசாதேம்மா. ஆனாலும் உனக்கா இவ்வளவு கஷ்டம் வந்து சேரணும் கண்ணா? உன்னை நன்றாய் வைத்துப்பான்னு மகிழ்ந்தோமே.'

'இதெல்லாம் என் துரதிர்ஷ்டம்மா 'என்றாள் உமா.

'இல்லையம்மா. என் தலைவிதிதான் இது. கல்யாணப் பெண் கோலத்தில் உன் மூஞ்சியில் இந்தனை வருத்தத்தைப் பார்க்க நேர்ந்ததே கண்ணு.'

இருவரும் ஒருவரை யொருவர் கட்டிக் கொண்டு அழத்தொடங்கினார்கள். சிதம்பரம் அப்பொழுது அந்த அறைக்குள் நுழைந்தார்.

'இதப்பாரு, உன்னைத்தான்...' என்று கூறிக் கொண்டே வந்த அவர், தாயும் மகளும் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு அழுத காட்சியைக் கண்டு கலவரமடைந்தார்.

'என்னது? என்னவாச்சு?' என்று அருகில் வந்தார்.

'உமா, என்னம்மா? என்ன நடந்தது!'

உமா புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு மேலும் பலமாய் அழத் தொடங்கினாள்.

'என்னது? உமாவுக்கு என்ன நேர்ந்தது? அவர் கலவரத்துடன் மனைவியை விசாரித்தார்.

அவள் மூக்கை சிந்திப் போட்டுக்கொண்டு மௌனமாய் இருந்து விட்டாள்.

அவருக்குக் கலவரம் அதிகரித்துவிட்டது. கோபம் பொத்துக்கொண்டு வந்தது. மனைவியை நோக்கி உறுமி விட்டு, 'எனக்குக் கோபம் தலைக்கேறிவிட்டால் நாலு அறை அறைந்து விடுவேன், என்ன நடந்ததுன்னு சொல்லி விட்டு அழுங்கள்' என்றார்.

அமிர்தம் மகள் சொன்னவைகளை ஒன்று பாக்கி விடாமல் ஒப்புவித்தாள் அவரிடம்.



கேட்ட சிதம்பரத்திற்கு ஒரு நிமிஷம் திக்கென்றது. ஓட்டப் பந்தயத்தில் தோற்று விட்டவரைப்போல முகம் களையிழந்தார். என்றுமே அவர் குறி தவறியதில்லை. ரவிசங்கரனைப் பார்த்ததுமே மிகவும் யோக்கியன் என்று முடிவெடுத்து விட்டிருந்தார். அவர் குறி இன்று தவறி விட்டது! எதற்காகவும் சட்டென்று கலவரமடையும் குணம் இல்லை அவரிடம். தன் ஏமாற்றத்தையும் வேதனையையும் பூசி மெழுகி மறைத்துக் கொண்டார்.

'ரொம்பக் கிழிச்சீங்க! இதற்காக ராகம் போட்டு அழுதுண்டு உட்கார்ந்து விடுவதா? அவள்தான் சின்னவள், ஒன்றும் தெரியாது. உனக்குப் புத்தி எங்கே போய் ஒளிந்து கொண்டது? வீடு நிறைய விருந்தாளிங்க இருக்காங்க. கிரகப்பிரவேசத்திற்கு நாழியாயிடுத்து

அவளுக்கு ஏதாவது தைரியத்தை எடுத்துச் சொல்லாமல் நீயும் உட்கார்ந்துண்டு அழுகிறாயா? உனக்கு மூளை இல்லை. நல்லவேளை, இந்த ரூமுக்குள் வேறு யாரோ வராமல் வந்தது நானாகவே இருந்து விட்டது. புறப்படு!' என்று மனைவியின் மேல் எரிந்து விழுந்தார் அவர்.

'கிரகப்பிரவேசமா? நான் செத்தாலும் பண்ணிக்க மாட்டேன்' உமாவின் பிடிவாதம் அவர் அறிந்ததே. எதிர்த்தாலும் பிடிவாதம் மேலும் கூடும். அதனால் அவர் கெஞ்சுவது போல சொல்லலானார். 'பாரும்மா உமா. நீ சொன்ன இந்த விஷயங்களைக் காதாரக் கேட்டும் என்னால் நம்பவே முடியலைம்மா.'

'நம்பத் தேவையில்லைப்பா நீங்க, நம்பாவிட்டால் போங்க' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'அதில்லைம்மா, உண்மையில் நீ சொன்னதைக் கேட்டு என் வயிறு பற்றிண்டுதான் எரிகிறது. நான்

உனக்கு நல்ல பையனாய்ப் பார்த்து தேர்ந்தெடுக்க எத்தனைக் கஷ்டப்பட்டிருக்கேன்? இந்த மாதிரி ஏன் நடந்ததுன்னுதான் புரியலை.'

'என்னை... என்னைக் கம்பளிப்பூச்சி என்றார்.' தேம்பினாள் உமா

'அப்படியா சொன்னான்? இதுவே வேறு யாராவது சொல்லியிருந்தால் அவன் மென்னியைத் திருகிக் கொன்று போட்டிருப்பேன்.'

'நீங்க போய் நாலு திட்டுத் திட்டித் தீர்த்துவிட்டு, நம்ப வீட்டை விட்டுப் போயிடச் சொல்லுங்கப்பா.'

அவர் கசப்பை விழுங்கினாற் போலானார். ஒருவாறு தன்னை சமாளித்துக் கொண்டு 'இத பாரும்மா, அப்படிச் சொல்விடலாம் ஒரே நிமிஷத்தில் ஆனால் அதனால் யாருக்கு நஷ்டம்னு எண்ணிப்பார். ஊரார் என்னைப் பழிப்பாங்க. ரொம்ப அழகுப் பறக்கக் கல்யாணம் பண்ணிவைத்தான் என்று என்மீதுக் காறி உமிழ்வாங்க. நம்மைப்பத்தி புனை சுருட்டுக் கதைகளை அளக்கத் தொடங்கிடுவாங்க. நாம செல்வாக்கு உடையவர்கள். நமக்குக் குடும்ப மானம் பெரிசில்லையாம்மா?' உமா ஆமாம் என்று தலையசைத்தாள்.

'பெரிய இடத்து மக்கள் தப்புப் பண்ணக் கூடாது. ஒருக்கால் செய்து விடடாலும் காதும் காதும் வைத்தாற் போல சீர்திருத்திக் கொண்டு விடணும். அதை விட்டுட்டு நடுச்சந்திக்குக் கொண்டு வரக் கூடாது விஷயங்களை.'

இப்போ என்னை என்னப்பா பண்ணச் சொல்றீங்க? நான் மாமியார் வீட்டுக்கு அவரோடு போகமாட்டேன்.'

'நான் மட்டும் உன்னைப் போகவா சொல்றேன்? கிரகப் பிரவேசம் நடந்து முடிந்துடட்டும். விருந்தாளிங்



கள்ளாம் புறப்பட்டுப் போன பிற்பாடு நாம் அதைப்பற்றி முடிவெடுக்கலாம். நம்ப கலாட்டாவெல்லாம் நமக்குள்ளேயே இருக்கணும். வேலைக்காரங்கள் காதில்கூட விழக் கூடாதும்மா.'

உமா யோசித்துப் பார்த்தாள். இறுதியில், சரி என்று தலையசைத்தாள்.

தந்தை கூறியது உண்மை தானே? குடும்ப மானமே பெரிது. அதற்குக் களங்கம் ஏற்படக் கூடாது. அவ்விஷயம் உமாவுக்கும் நன்றாய் விளங்கிற்று. வீசி எறிந்த நகைகளை ஒவ்வொன்றாய் எடுத்து அணிந்து கொண்டாள்.

விருந்தாளிகள் யாருமில்லாத சமயமாய்ப் பார்த்து சிதம்பரம் இவ் விஷயங்களையெல்லாம் ரவிசங்கரனின் தந்தையிடம் எடுத்துக் கூறினார். அதைக் கேட்ட அவர் ஸ்தம்பித்து நின்று விட்டார். மகனின் அந்த நடவடிக்கை அவருக்குப் பெரும் தலைக் குனிவை உண்டாக்கியது.

'அந்த வசந்திங்கறது யாரு? உங்க பிள்ளைக்கு எத்தனை நாளாய் அவள் சிநேகம்?' என்று கேட்டார் சிதம்பரம்.

சரேலென்று சிதம்பரத்தின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டார் ரவிசங்கரனின் தந்தை.

'சம்பந்தி சார், எனக்கு ஒன்றுமே தெரியாது; வசந்தின்னு ஒருத்தி இவன்கூட படித்தவள்; பாங்கில் வேலை பார்க்கிறாள். ஓரிரு முறை வீட்டிற்கு வந்திருக்கிறாள். ஆனால் இருவருக்குமிடையில் பழக்கம் எவ்வளவு தூரம் இருந்ததுன்னு எனக்கு ஒண்ணுமே தெரியாது.'

'சரிங்க, இதில் உங்க பொறுப்பு ஒண்ணுங் கிடையாது. எங்களை மோசம் எதுவும் பண்ணிடலை. பிழை

எங்கள் மீதுதான். பிழை புரிந்துவிட்டால் திருத்திக்க வேண்டியது எங்கள் பொறுப்பில்லையா? அதையும் நானே பண்ணிடறேன். அவனை அந்த வசந்தியிடமிருந்து நானே பிரித்துவிடுகிறேன் முதலில். ஆனால் நீங்க அதற்கு முழுமையாய் ஒத்துழைக்க வேண்டும்' என்றார்.

'ஐயோ அது கூடவா என்னால் முடியாது? நீங்க என்ன பண்ணச் சொன்னாலும் பண்றேங்க' என்றார் உமா சங்கரின் தந்தை.

'பேருக்கு கிரகப்பிரவேசம் ஆகட்டும். பையனை இங்கேயே வைத்துக்கொள்கிறேன். கொஞ்ச நாளைக்கு என் கண்ணுக்கெதிரில் இருந்தால் இந்த விவகாரத்துக்கு ஒரு முடிவு கட்டலாம்.'.

'சரிங்க' என்றார் அவர்.

'உங்க பிள்ளையிடம் ஒரு மாதத்திற்கு இங்கேயே இருக்கணும்னு சொல்லிடுங்க. எப்படிச் சொல்லுவீங்களோ உங்களிஷ்டம்.'

ரவிசங்கரின் தந்தைக்குத் தொண்டைக்குழியில் ஏதோ அடைத்தாற்போலிருந்தது.

'சரி, சரி' என்று தலையசைத்தார். அத் தலையசைப்பில் சற்று முன் இருந்த ஆர்வம் இல்லை.

'என்னது? நீங்கள்ளாம் போயி நான் மட்டும் இங்கேயே இருக்கணுமா? நீங்க எப்படிச் சொல்றீங்க? ரவிசங்கரன் கொதித்தெழுந்தான்.

'நான் ஏன் சொல்றேன்னு புரிந்துக்கோ. இத்தனை செல்வத்திற்கிடையில் வளர்ந்து வந்திருக்கும் பொண்ணு நம்ப கிட்டே அங்கே வந்து என்ன சுகப்பட்டுட முடியும்?



ஏதோ ஒரு மாதம் ஆசைக்கு... ரவிசங்கரன் சுள்ளென்று எரிந்து விழுந்தான்.' 'நீங்க இந்த மாதிரி சும்மாச் சும்மா நம்பளை இல்லாதவங்க, ஏழைங்க என்றெல்லாம் சொல்வது எனக்குப் பிடிக்கவேயில்லை. நாம்ப ஏழைங்களா, பணக்காரங்களாங்கறது இந்தத் திருமணத்தை நிச்சயம் பண்றதுக்கு முன்னாடி அவங்களுக்குத் தெரியாதாமா?'

'அதில்லைடா. அவங்களுக்கு ஆண் குழந்தையில்லை. நீ மாப்பிள்ளையாய் வந்தவுடன் வீட்டில் ஆண் பிள்ளை காலடி எடுத்து வைத்து விட்டதாய் எண்ணிப் பொங்கிப் பூரித்துப் போயிட்டாங்க அவங்க. அவங்க ஆசையை நாம் எதுக்குக் கெடுக்கணும்? உன்னைப் பார்க்க அவங்களும் இவங்களும் வந்திண்டிருப்பாங்க. அவங்களை வரவேற்க நம்ப வீட்டில் ஒரு நாற்காலிகூடக் கிடையாது. அதோடு மட்டுமில்லை, அவரு பிஸினஸ் விவகாரங்களை உனக்குக் கற்றுத் தராராம்.'

ரவிசங்கரன் வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

'எனக்கு பாங்கில் வேலை கிடைக்கப்போறது, அதில் சேர்ந்துக்கறேன்.'

வாதாடிப் பயனில்லை என்று காமாட்சி இடைமறித்து, 'ரவி, அப்பா சொன்னபடி கேளுடா. அவங்க ஆசையை நாம் கெடுக்கக்கூடாது. நாங்க போறோம், நீ இரு.'

'அதில்லைம்மா, இவங்க புது மனுஷங்களுக்கிடையில் எனக்குத் தொந்தரவாயிருக்கும்.'

'புது மனுஷங்க எப்படிடா ஆவாங்க? அவங்களும் இனிமேல் எங்களைப் போலவே உன் மனுஷங்கதான்.'

'நீ என்ன சொன்னாலும் சரிம்மா, நான் இருக்க மாட்டேன்.'

'என் கண்ணில்லையா? நீ ஏதாவது எதிர்ப்புத்தெரிவித் தாயானால் உங்க மாமனாருக்குக் கோபம் வரும். அதனால் எனக்கு ரொம்ப மனக்கஷ்டமாயிடும்டா. நான் உன்னை எவ்வளவோ நன்றாய் வளர்த்திருக்கேன்னு பெருமையடைந்தேனே...' என்று அவள் கண் கலங்கினாள்.

அதற்கு மேல் பேசவில்லை ரவிசங்கரன், கிளம்புங்கால் தாய் அவனை நோக்கி, 'போயிட்டு வரட்டுமா'? என்று கேட்டாள்.

அவன் வேறு வழியின்றி தலையசைத்தான்.

'நானும் அவ்வப்போது வந்துண்டிருக்கேன்' என்றாள் அவன் 'சரி.' என்றான்.

தாய் தந்தையர் போனதும், புகுந்த வீட்டில் தனித்து விடப்பட்ட மணப் பெண்ணைப் போலுணர்ந்தான் அவன்.

'வாப்பா, வா. உள்ளே போவோம்' என்று சிதம்பரம் மருமகனை அழைத்தார்.

அவருடன் உள்ளே நுழைகையில் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்த உமா தென்பட்டாள். ஒரு நிமிஷம் கணவன் மனைவி இருவர் பார்வையும் கலந்தன. இருவரின் பார்வையிலும் நாணமோ, ஆர்வமோ, புதுமணத் தம்பதியருக்கே இருக்கவேண்டிய ஈடுபாடோ கடுகளவும் தென்படவேயில்லை. ரவிசங்கரன் சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டான. உமாவின் கண்கள் அதைக் கண்டு அடியுண்ட பெண் [illegible] சீற்றம் கொண்டன.



# 5

சிதம்பரம் ரவிசங்கரனை அழைத்துச் சென்று ஓர் அறையைக் காண்பித்து, 'இத பாருப்பா, இது உனக்குத் தனி அறை. இங்கே யாருமே வரமாட்டாங்க' என்று காட்டினார். வேலையாளைவிட்டு படுக்கை முதலிய வசதிகளைப் பண்ணித்தரச் சொன்னார்.

ரவி சங்கரனின் கண்கள் அவ்வறையைச் சுற்றிலும் நோட்டமிட்டன. மென்மையான பஞ்சணைகளும், சோபா செட்டுகளும், மிதியடிகளும், புத்தக அலமாரிகளும் டேப்ரிகார்டும் டி.வி.யும் ரேடியோவும் இருந்தன அவ்வறையில். எல்லாம் இருந்தும் அது ஓர் சுதந்தரமில்லாத பறவைக்கூண்டாய்த் தோன்றிற்று அவனுக்கு.

வசந்தியின் நினைவு வந்து விட்டது அவனுக்கு. என்ன காரியம் பண்ணிவிட்டான் அவன்! வசந்திக்கு ஆசைகாட்டி இறுதியில் மோசம் பண்ணி விட்டானே! இல்லை அவன் மோசம் பண்ணவில்லை. வசந்தியே தான் நிராகரித்து விட்டாள் என்று அந்தராத்மா ஆர்ப்பரித்தது. ரவிசங்கரனின் உள்ளத்தில் நிரம்பி வழிந்த வசந்தியின் மேலிருந்த காதலானது அவ்வந்தராத்மாவின் ஓலத்தைத் துடைத்தெறிந்தது.

வசந்தி மறுத்தாளா? ஏன் மறுத்தாள்? அவனுக்காகத் தானே? அவன் மனநிம்மதிக்காகவும், சுகத்துக்காகவும் குடும்ப நலனுக்காகவும் அன்றோ நிராகரித்தாள்!.

வசந்தி எத்தனைத் தன்னலமற்றவள்! அவனுக்கு அப்பொழுது வசந்தியிடம் சொல்லமுடியாத கழிவிரக்கம் பெருக்கெடுத்தோடிற்று. அவ்வளவு நல்ல குணவதியான பெண்ணை விடா, பிடியாக நின்றாவது மணந்து கொண்டிருக்க வேண்டும் அவன். இல்லாவிட்டால் திருமணம் பண்ணிக் கொண்டிருக்கக் கூடாது!'

இம்மாதிரியான ஆலோசனைகள் உதித்ததும் அவன் உள்ளம் வேதனை மயமாகி விட்டது. அவனுக்கு வசந்தி வேண்டும். இந்தத் திருமணம் உடலுக்குத்தான் நடந்ததே யொழிய உள்ளத்திற்கு இல்லை.

'ஐயா சாப்பிடக் கூப்பிடறாங்க' என்றழைத்தான் வேலையாள். திடுக்கிட்டு நிமிர்ந்தான் ரவிசங்கரன். 'சாப்பாடா? எனக்குப் பசிக்கலைன்னு போய்ச் சொல்லு.' வேலையாள் போய்விட்டான்.

ஐந்து நிமிஷங்களுக் கெல்லாம் சிதம்பரமே மேலே வந்து விட்டார்.

'வாப்பா, இன்னிக்கு முதல் முதலில் எங்களோடு கலந்து விருந்து உண்ணப் போகிறாய். முதல் நாளே மறுத்தால் அபசகுனமாய்த் தோன்றும். எழுந்து வாப்பா' என்று பரிவுடன் அழைத்தார்.

வேறு வழியின்றி எழுந்து வந்தான். சாப்பாட்டு மேஜைக்கருகில் சிதம்பரத்தின் மனைவியும் உமாவும் காத்துக் கொண்டிருந்தனர். மாமனாருக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தான் சாப்பிட்டு முடியும் வரையிலும் அவன் எதிரேயிருந்த உமாவை ஏறெடுத்தும் பார்க்கவே யில்லை. பெயருக்கு சாப்பிட்டுவிட்டு எழுந்திருந்தான்.

சோபாவில் கைகளைத் தலைக்குக் கீழ் வைத்துக் கொண்டு படுத்தான். கண்ணை மூடினால் வசந்தியே நிழலாடினாள். அவன் அறியாமல் இந்தத் திருமணம் என்ற வலையில் வந்து சிக்கிக்கொண்டு விட்டான். தன் கழுத்தில் விழுந்த இந்தச் சுருக்குக் கயிறானது இறுகுவதற் குள் அவன் கெட்டிக்காரத்தனமாய் இதிலிருந்து தப்பித்து ஓடிவிடவேண்டும்!

காலடியோசை கேட்டது!



கண்ணைத் திறந்துப் பார்த்தான். அப்பெண்ணை உட்காரச்சொல்வதா அல்லது அவன் அவ்வறையைவிட்டு எழுந்துப்போய் விடணுமா என்று தடுமாறினான்.

'நான்...நான் உங்களோடு பேச வந்திருக்கிறேன்' உமாவின் குரல் கம்மிற்று.

மேலும் தொடர்ந்தாள்.

'அப்பா உங்களையும் என்னையும் சேர்த்து மைகுருக்கு அனுப்பலாம்னு இருக்கார். அந்தப்பிரயாணம் நாம்ப பண்ணப் போறமா இல்லையான்னு கேட்கத்தான் வந்தேன்' என்று பட்டென வந்தது சொற்கள்.

'எனக்கென்ன தெரியும்.'

'உங்களுக்குதான் தெரியும். நீங்க நான் கேட்கும் கேள்விக்கு தரப்போகும் பதிலைப் பொறுத்திருக்கிறது அது.'

உமாவின் பேச்சிலிருந்த துணிச்சலை கவனிக்கத்தவற வில்லை அவன். ஒரு நிமிஷம் இருவருக்குமிடையே மௌனம் நிலவிற்று. அந்த மௌனத்தை கலைத்துக் கொண்டு கூரிய கத்தியாய் வெளிவந்தது உமாவின் குரல்.

'வசந்தி யார்'

அப்பெயரைக் கேட்டதும் அவன் திடுக்கிட்டான்.

'நீங்க நிஜத்தைச் சொன்னால் உங்களுக்கும் இன்னும் எனக்கும் கூட நல்லது.'

'ஒரு பெண்.'

'அவள் உங்களுக்கு என்னவாகணும்? உமாவின் தோரணையைக் கண்டால் பிரதிவாதியை விசாரிக்கும் லாயரைப் போலிருந்தது.

'என்னவாகணுமா? என்னத்தைச் சொன்னால் உனக்-
குப் புரியும்? வசந்தி என் உயிர்த் தோழி. உள்ளங் கவர்ந்-
தவள். இன்னும் சொல்லப் போனால்...எனக்கு மனைவி
யாகியிருக்க வேண்டியவள். மயிரிழையில் அந்தப்
பதவியை இழந்துவிட்ட துரதிர்ஷ்டசாலி.'

உமா திடுக்கிட்டாள்.

'வசந்தி ஏன் மனைவியாகலை?'

'உன்னால் தான்.'

'என்னாலா?'

'ஆமாம். என்னை உனக்குப் பிடித்திருந்தது என்
துரதிர்ஷ்டமாகி விட்டது. நீ உங்கப்பாவின் செல்லப்
பெண்! வேணும்னு விரும்பினாய். உங்கப்பா அழைச்
சுட்டு வந்து உன் மடியில் போட்டு விட்டார்.'

'சீ, வெட்கமாயில்லையா உங்களுக்கு அந்த மாதிரி
பேச? எங்கப்பா ஒன்னும் உங்களை அழைச்சுட்டு வந்து
என் மடியில் போடலை. உங்கப்பாதான் எங்க பணத்
தைக் கண்டு மோகித்து எங்களைக் கழுத்தைப் பிடித்து
இழுத்துட்டு வந்து, எங்க தலையில் கட்டி விட்டார்
உங்களை. வசந்தியைக் காதலித்தால் இந்த உமா என்கிற
உபத்திரவத்துக்கு ஏன் தாலி கட்டினீங்க என்கிறேன்?'

'நீங்க ஆம்பிள்ளை தானே? அவ்வளவு காதலித்தப்
பெண்ணை விட்டுவிட்டு வந்து என்னை ஏன் மணக்
கணும்?

'உங்கப்பாவை எதிர்த்துக் கேட்க முடியாத
கோழைன்னு சொல்லுங்க. இல்லை, என் பணத்தைக்
கண்டு மயங்கி விட்டீங்க. உண்மையைச் சொல்லுங்க.
என்னிடம் பணம் இல்லாவிட்டால் என்னை நீங்க
மணந்து கொண்டிருப்பீங்களா?'



'உமா.'

'உங்க உண்மை சொரூபம் நேற்று தான் எனக்குப்
புரிந்தது. உங்களோடு குடித்தனம் பண்ண முடியாதுன்னு
நேற்றே அப்பாவிடம் சொல்லிட்டேன். ஆனால்
எங்கப்பா கேட்டுக்க வில்லை. இந்தப் பிரயாணத்தை
நீங்க தான் தடுத்து நிறுத்தணும். எப்படிப் பண்ணுவீங்
களோ தெரியாது. இதைச் சொல்லத் தான் வந்தேன்.'
சரேலென்று வெளியேறப் போனவள் ஒரு நிமிஷம் நின்
றாள்.

'இந்த உலகத்தில் ஆண்களிலேயே ரொம்பக் கயவர்
கள் யார் தெரியுமா? தான் காதலித்தப் பெண்ணை மணந்
துக்காதவனும் மணந்துக் கொண்ட பெண்ணை காதலிக்
காதவனும் தான். இந்த ரெண்டையுமே நீங்க பண்ணிட்
டீங்க. இதற்குத் தகுந்த தண்டனையை நீங்க அனுபவிக்
காமல் போக மாட்டீங்க' என்று கூறிவிட்டு வெளியேறி
னாள்.

ரவிசங்கரன் சிலையாய் நின்று விட்டான்.

## 6

அன்று ரவிசங்கரன் தன் வீட்டிற்கு வந்தான். சாப்
பிட்டானதும் காமாட்சியிடம், 'அம்மா, நான் இனிமேல்
அவங்க வீட்டுக்குப் போகமாட்டேன். நீங்க விரும்பியதால்
தான் அந்தப் பெண்ணை மணந்துக்கொண்டேன்.
திருமணம் ஆகிவிட்டால் பெண்தான் மாமியார் வீட்டிற்கு
வர வேண்டியது;ஆண் பிள்ளை போகக்கூடாது. அவங்
களுக்கு இந்தச் செய்தியை அப்பாவைக் கொண்டு
சொல்லச் சொல்லிவிடு' என்றான்.

'ரவி...வந்து...'

'மேலே எதுவும் பேசாதிங்கம்மா. இந்தத் திருமணத் தைப்பண்ணிண்டு நான் குற்றுயிராகி விட்டேன். இன்னும் கொஞ்ச நஞ்சம் பாக்கி இருக்கிற உயிரையாவது விட்டு வையுங்க. நான் அவங்களிடம் சொல்லிக்காமலேயே வந்து விட்டேன். இன்னும் கொஞ்சநேரத்தில் எனக்காக அங்கிருந்து காரை அனுப்பினாலும் அனுப்புவாங்க. நான் வரமாட்டேன்னு சொன்னதாய்ச் சொல்லி அனுப்பி விடுங்க' என்றான் ரவிசங்கரன்.

காமாட்சியம்மாள் திக் பிரமையடைந்து விட்டாள்.

'உங்களுக்கேம்மா கவலை? நீங்க பிள்ளையின் தாய்னு நினைவு வைச்சுக்குங்க' என்று கூறிவிட்டு அறையில் வந்து படுத்துக் கொண்டான். இப்பொழுது அவனுக்குக் கொஞ்சம் பாரம் குறைந்தாற் போலிருந்தது.

கொஞ்சநேரத்தில் வெளியே போயிருந்த தந்தை திரும்பிவந்தார். காமாட்சியிடமிருந்து எல்லாவற்றையும் கேட்டறிந்து கொண்டார். மாலையில் அவன் வெளியே கிளம்ப முற்பட்ட பொழுது' அவனை அழைத்து, 'எங்கேடா போகிறாய்? மாமியார் வீட்டிற்கா?' என்று கேட்டார்.

'இல்லை, கடை வீதிக்கு.'

அப்பொழுது, வீதியில் கார் வந்து நின்றது. அதில் டிரைவர் மட்டுமே இருந்தான். ரவிசங்கரனைக் கண்டு பணிவோடு வணங்கி விட்டு, 'கார் கொண்டாந்திருக் கேன், சார்' என்றான்.

ரவிசங்கரன் 'என்னால் வரமுடியாது. நீ போ' என்றான். கடுகடுவென்றிருந்த அவன் முகத்தை ஓரக் கண்ணால் கவனித்தவாறே காரை ஸ்டார்ட் செய்தான் டிரைவர். அதற்குள் ரவிசங்கரனின் தந்தை எழுந்திருந்து வந்து, 'இருப்பா டிரைவர். வரான் இரு' என்று கத்தினார்.



டிரைவர் அவரையும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து விட்டு,

'சரிங்க' என்றான்.

'ஏண்டா போகமாட்டேங்கிறே? என்னதான் நினைச் சிண்டிருக்கே நீ?' என்று உலுக்கி எடுக்கத் தொடங்கினார்.

'நான் போகமாட்டேன். மத்யானமேசொல்லிட்டேன் அம்மாவிடம்' என்றான் ரவிசங்கரன்.

'எல்லாம் உன்னிஷ்டந்தானாங்கறேன்?' கோப மாய்க் கத்தினார்.

'இல்லை, பாதி உங்களிஷ்டப்படி கேட்டேன். அதனால்தான் இந்தபெண் என்னோடு குடுத்தனம் நடத்தணும்னு இருந்தால் இங்கே வரச்சொல்லுங்க; நான் மாமனார் வீட்டோட வந்து இருக்கிறதாய் வாக்கு ஒண்ணும் தரலை.'

ரவிசங்கரன் செருப்பை மாட்டிக்கொண்டு பரபர வென்று வெளியே போய்விட்டான்.

'நீ இந்தமாதிரி ஏன் பண்றேன்னு தெரியும் எனக்கு. இதெல்லாம் அந்த வசந்திதான் உனக்குக் கற்றுத்தராள்.' தந்தை பற்களை நறநறத்தார்.

சென்று கொண்டிருந்த ரவிசங்கரன் ஒரு நிமிஷம் நின்றான்.

'அப்பா, அவ பேரை மட்டும் எடுக்காதீங்க; அந்தப் பொண்ணு என்னைப் பண்ணிக்காமல் போனதால் நஷ்டமடைந்தது அவளில்லை; நீங்கதான்; நாம்பதான்! நீங்க இழந்த இழப்பு என்னங்கறது நான் சொன்னாலும் விளங்காது உங்களுக்கு' என்று கூறி விட்டுப் போய் விட்டான்.

'இப்போ என்ன பண்றது?' என்று கேட்டாள் காமாட்சி 'போய் அவரையே கேட்கிறேன். என் ஜரிகை அங்கவஸ்திரத்தை எடு.'

மனைவி எழுந்திருந்து போய் எடுத்துத்தந்தாள். அவர் அதை எடுத்துப்போட்டுக் கொண்டு போய் காரில் ஏறி அமர்ந்தார்'

'போப்பா டிரைவர்' என்றார்.

டிரைவர் அலட்சியமாய் காரை ஸ்டார்ட்பண்ணினான். திடீரென்று குலுங்கிய குலுக்கலால் ஒரு பக்கமாய் சாயப் போன அவர் தன்னை சமாளித்துக்கொண்டு சரியாய் உட்கார்ந்து கொண்டார்.

சொன்னவைகளையெல்லாம் கவனமாய்க் கேட்டு விட்டு, 'அந்த வசந்திங்கிறவள் எங்கே வேலை பண்றான் னீங்க?' என்று கேட்டார்.

ரவிசங்கரனின் தந்தை சொன்னார்.

'சரிங்க, அந்தப்பெண்ணைக் கிட்ட நெருங்கவிடாமல் நான் பார்த்துக்கிறேன். கல்யாணமான புதுசு, நாலுபேர் நாலுவிதமாய்ப் பேசுவாங்க. உங்க பிள்ளை இங்கே வந்து இருக்கிறதுக்கு மனம் விரும்பாவிட்டால் பெண்ணையே உங்க வீட்டுக்கு அனுப்பற ஏற்பாடு பண்றேன். கொஞ்ச நாளைக்குப் பலவந்தமாகவாவது சேர்ந்து இருந் தாங்கன்னா அவங்களே சமாதானமாயிடுவாங்க' என்றார்.

ரவியின் தந்தை 'சரி சரி' என்று தலையசைத்தார்.

சிதம்பரம் சொன்னதோடு நிறுத்திக் கொள்ளாமல் அரைமணிக்கெல்லாம் உமாவை அனுப்பும் முயற்சியை மேற்கொண்டார். உமா முதலில் மறுத்தாள். சிதம்பரம் நல்ல வார்த்தைகள் சொல்லி அவளைப் புறப்பட வைத்து விட்டார்.

* * * *



அன்று மாலை காவேரியின் வீட்டிற்கு வந்தாள் வசந்தி.

'காவேரி'—என்று அழைத்துக்கொண்டே வந்த வளுக்கு பதிலில்லை. வசந்தி தயக்கத்துடன் உள்ளே நுழைந்தாள். அங்கு ரவிசங்கரன் சோபாவில் அமர்ந்திருந் ததைக் கண்டு திடுக்கிட்டாள்.

'காவேரி இல்லை. கடைத்தெருவுக்குப் போயிருக் காள்.!

வசந்தியின் உடம்பில் குப்பென்று மின்சாரம் பாய்ந் தது. இதற்கு முன்பு வசந்தி ரவிசங்கரனை அடிக்கடி காவேரியின் வீட்டில் சந்தித்ததுண்டு.

அப்பொழுதும் 'காவேரி' வீட்டிலில்லை' என்று ரவி சங்கரன் கூறியதுதான் தாமதம்—வசந்தி அவன் நீட்டிய கரங்களில் அணைப்புண்டு தன்னை மறந்து விடுவாள். அப்பொழுதெல்லாம் சுவர்க்கமாய் இனித்தவை இப் பொழுது நரகமாகி விட்டது. அவனுக்கும் இது நினைவு வந்து விட்டது போலும்! அவன் முகத்திலும் சுரத்தே இல்லை.

காவேரி வந்ததும் நான் வந்துட்டுப் போனதாய்ச் சொல்லுங்கள்' என்று கூறிவிட்டுத் திரும்பத் தொடங் கினாள்.

'வசு!' அவன் குரலிலிருந்த வேதனை வசந்தியை இழுத்து நிறுத்தியது.

'ஒன்று கேட்டுவிட்டுப்போ.'

திரும்பி, என்னவென்று கேட்டதுபோல நோக்கி னாள்.

'என் மேல் இன்னுமா கோபம் போகலை?'

வசந்தியின் உதடுகள் துடித்தன.

'கோபமா? ஏன்? என் கையாலாகாத தனத்திற்கு நீங்க என்ன பண்ணுவீங்க? நீங்களே ஒண்ணும் என்னை மோசம் பண்ணிடலையே! பின்னே உங்கமேல் கோபம் எதற்கு வரணும்?'

'ஒரு நிமிஷம் உட்காரமாட்டாயா? ப்ளீஸ்'

'உட்காருவதால் என்ன லாபம்? வேற்று மனுஷங்களோடு பேச்சே கிளம்பாது எனக்கு.'

'வசந்தியின்வாயிலிருந்து வேற்றுமனுஷங்கள்' என்ற வார்த்தையைக் கேட்டதும் ரவிசங்கரனின் இதயம் தூள்தூளாயிற்று. அதை வெளிக்குக் காட்டாமல் கட்டுப்படுத்திக் கொண்டவன்' 'தப்புப்பண்ணிட்டேன் வசு! உன் வருத்தத்தைப் பற்றியே யோசிக்காமல் போயிட்டேன் நான்.'

'வருத்தமா? உங்களுக்கென்ன வந்தது? சிதம்பரத்தின் மருமகனாகிட்டீங்க இனிமேல் என்ன குறைச்சல் உங்களுக்கு?'

'குறைச்சலில்லாமலிருக்கலாம். ஆனால் அந்த சுகத்தை அனுபவிக்கிறதுக்கு மனசுன்னு ஒண்ணு வேண்டாமா? அந்த மனதைதான் நீ ஆக்ரமித்துக் கொண்டு விட்டாயே. இந்த உடலைத்தானே உமா திருமணம் பண்ணிண்டிருக்கிறாள்.'

வசந்திக்கு அந்த நிமிஷமே அவன் கரங்களில் துவண்டு விழுந்து விடவேண்டும் போலிருந்தது. மிகப் பிரயாசைப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

'ரவி, இதப் பாருங்கள், நீங்க சொல்றது புரிஞ்சுது எனக்கு; ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் வைச்சுக்



குங்க. மற்றவங்க சொத்துக்கு ஆசைப்படற கேவலமான வர்க்கமில்லை நான். நீங்க இப்பொழுது உமாவின் கணவர் அவளை எப்படி வைத்துக் கொள்ளுவீங்களோ அது உங்களிஷ்டம். ஆனால் என்னைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை. என்னோடு இனிமேல் இந்த மாதிரி பேசுவதற்குக் கூட முயற்சி செய்ய வேண்டாம். என்னைத் தனியாக சந்திக்கவும் முயற்சிக்காதீங்க.'

வசந்தி சரேலென திரும்பி ஓட்டமாய் ஓடிவந்து விட்டாள்.

ரவிசங்கரன் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டான். அவனுக்கும் வசந்திக்குமிடையே ஏதோ பிளவு ஏற்படத் தொடங்கி விட்டாற் போலுணர்ந்தான். வசந்தி தன் கைக்கெட்டாத தொலைவிற்குப் போய் விடுவாளோ?

ரவிசங்கரன் வேண்டுமென்றே சுற்றித் திரிந்து விட்டு வெகு தாமதமாய் வீடு திரும்பினான்.

தாய் கதவைத் திறந்தாள்.

'நீ அவங்க வீட்டுக்குப் போகமாட்டேன் என்றாயோனோ? உமாவே இங்கே வந்து விட்டாள்டா' என்றாள் அன்னை.

அவன் தாயுடன் சமையலறைக்குள் நுழைந்தான். காமாட்சி அவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டே சொன்னாள்.

'சாயந்திரம் வந்தாள். உங்கப்பாவே அழைத்துண்டு வந்தார். அவளோடு அவள் செல்ல நாயும் வந்திருக்குடா. ராத்திரி அந்த நாய்க்குப் பால் கொடுக்கிற வழக்கமாம். நம்ம வீட்டிற்கே பாலில்லை. அதனால் ஹார்லிக்ஸைக் கலந்துண்டுப் போய்த் தந்தாள். அந்த வாசனை அதுக்குப் பிடிக்கலையாம், சாப்பிடவேயில்லை. ஒரே

சுத்தல். இப்ப தான் கொஞ்சம் ஓய்ந்தது. மருமகளுக்கு
உன் அறையைத் தந்துட்டு உங்கப்பாவின் கட்டிலை
அவள் நாய்க்கு எடுத்துப் போட்டேன். நானும் குழந்தை
களும் இந்த சமையலறையிலே படுத்துக்கிறோம் என்
றாள்.

உமா வருவாள் என்று ரவிசங்கரன் கனவிலும் கருத
வில்லை. சாப்பிட்ட பிறகு மனைவி இருந்த அறைக்கு
அவன் போகவில்லை. நாற்காலி ஒன்றை இழுத்துப்
போட்டு அதில் அமர்ந்தவாறு ஜன்னலில் காலை தூக்கிப்
போட்டுக் கொண்டு படுத்துக் கொண்டான்.

உமா வந்தால் வந்துக்கட்டும், அவனுக்கென்ன
வந்தது? உமாவின் கர்வம் அடங்கிஅவனை ஒருமனிதனாய்
மதித்தால்தான் அவன் அவளோடு பேசுவான்.

# 7

உமாவுக்கு அவள் வீட்டிலிருந்து காரியரில் டிரைவர்
சாப்பாடு கொண்டுவந்து தந்துகொண்டிருந்தான். காலை
யில் டிபனும் பிளாஸ்கில் காபியும் வந்துகொண்டிருந்தன.
உமா காபி குடிக்கும்பொழுது டிரைவர் நாய்க்கு பிரட்டும்
பாலும் தருவான்.

உமாவுக்கு டிரைவரே காரியரை எடுத்து வெளியே
பரப்பி வைத்து விட்டுத் தட்டை அலம்பிக் கொண்டுவந்து
தண்ணீர் எடுத்துவைத்துவிட்டு அப்பால்போய்விடுவான்.
சாப்பிட்ட பிறகு காரியரை மூடி எடுத்துக்கொண்டுபோய்
விடுவான்.

காமாட்சிக்கு இந்த சாப்பாட்டு விஷயம் சிறிதும்
பிடிக்கவேயில்லை, தன் வீட்டிற்கு வந்த மருமகள் தம்
மோடு கலந்து உண்ண வேண்டுமென்பதே அவள் அவா.



முதல் முதலில் வேலையாள் கொண்டுவந்த காரியரை
சமையலறையில் வைக்கும்படிதான் உமா உத்தரவிட்
டாள். காமாட்சி அதைத்திறந்து பார்த்தாள். அவ்வுணவு
சரியாய் இருவருக்கு மட்டுமே போதுமானதாயிருந்தது.
இந்தக்காரியர் விஷயத்தைக் கேட்டு கோபமடைந்தான்,
ரவிசங்கரன்.

'இதென்னம்மா வேஷம்? 'நம்மோடு இருக்கணும்னு
இருந்தால் நீங்க சமைத்ததைச் சாப்பிட்டுட்டு இருக்கச்
சொல்லுங்க. இல்லாவிட்டால் போயிட்டும். அதை
விட்டுட்டுக் சாப்பாட்டை அங்கேயிருந்து கொண்டுவரக்
கூடாதுன்னு சொல்லிடுங்கம்மா' என்றான்.

உமா கதவிற்கருகில் வந்து நின்றாள். 'அத்தை, நீங்க
சமைத்ததைச் சாப்பிட எனக்கொண்ணும் ஆட்சேபணை
யில்லை. ஆனால் அது எனக்கு அரைவயிறுதான் நிரம்பும்.
பட்டினிக் கிடந்து பழக்கமில்லை எனக்கு. இதோ இந்தக்
காரியரிலிருப்பதையெல்லாம்பார்த்தீங்களோனோ? நாளை
யிலிருந்து இதே மாதிரி சமைப்பதானால் காரியர் வேண்
டாம்னு நானே சொல்லிடறேன்' என்றாள்.

காமாட்சி மகனை ஏறிட்டு நோக்கினாள். ரவிசங்கரன்
பதில் பேச முடியாதவனாய் கையிலிருந்த பேப்பரை
அங்கிருந்த மேஜையின் மீது விட்டெறிந்து விட்டுக்
கோபமாய் அங்கிருந்து போய் விட்டான்.

காரியார் வருவது நிற்கவில்லை. தான் சாப்பிட்டு
விட்டு மீதிதை ரவிசங்கரனுக்காக சமையலறையில்
கொண்டு போய் வைக்கச் சொல்லுவாள் உமா. தாய்
அதை எடுத்து பறிமாற வந்தால் தடுத்து விடுவான் ரவி

'தம்பி தங்கைங்க என்ன சாப்பிட்டாங்களோ
அதையோ எனக்கும் வைங்கம்மா' என்பான். அதனால்
உமா சாப்பிட்டு எஞ்சியதை வேலைக்காரி எடுத்துக்
கொண்டு போவாள்.

நாளடைவில் உமா அக்கம்பக்கத்தாரிடையே நல்ல சிநேகத்தை சம்பாதித்துக் கொண்டு விட்டாள். பெண் மணிகளுக்கு உமாவின் சிநேகம் பிடித்து விட்டது. உமா விடம் வாரப்பத்திரிக்கைகளும், மாதப் பத்திரிக்கைகளும் இருந்ததால் அவற்றைக் கேட்டு வாங்கிக்கொள்ளத் துடித் தார்கள். மணிப்பை பின்னுதல் வயர் பை முடைதல் பூவேலைப்பாடு முதலியவைகளில் உமா கைதேர்ந்திருந் தாள். அவளிடமிருந்து கற்றுக் கொண்டனர். சினிமா கதைகளை வம்பளந்தார்கள். அதனால் வருவோர் அனை வரும் நேராய் உமாவிடம்தான் வந்து உட்காருவார்கள். காமாட்சியம்மாளும் குழந்தைகளும் எங்கேயாவது புழக் கடை மூலையில் இருப்பார்கள். பிற்பகல் நேரத்தில் உமா ஒரு கேந்திரமாகிவிடுவாள் எல்லோருக்கும்.

'உங்க மாமியார் உன்னோடு நன்றாய்ப் பேசுவாங் களா?' என்று துருவிக் கேட்பார்கள்.

'ஏன் மாட்டாங்க? நன்றாய்ப் பேசுவாங்களே' என்பாள் உமா.

'நீங்களிருவரும் ரொம்பப் பேசிக் கண்டதில்லையே.'

'அதுவா? எனக்கும் அவங்களுக்கும் பேசறத்துக்குப் பெரிதாய் என்ன இருக்கும் சொல்லுங்க? எனக்குப் புத்தகம் படிக்கப் பிடிக்கும்; அவங்களுக்குப் பிடிக்காது. தையல் வேலைகள் பிடிக்கும் எனக்கு. அவங்களுக்கு அது வராது. சினிமாவும் அவங்களுக்குப் பிடிக்காது. அப் புறம் வேறு என்னதான் பேசுவது?'

'உன் புருஷனும் நீயுமாய்ச் சேர்ந்து சினிமாவுக்கோ வேறு எங்காவதோ போக மாட்டீங்களா?' என்று கேட் டார்கள் அவர்கள்.

'எப்படிப் போக முடியும்? அவருக்கு இந்தி சினிமா தான் பிடிக்கும்! எனக்கோ தமிழ் தான் பிடிக்கும்.



அதோடு அவர் கம்பனியில் வேலை சுத்துக்கிறார், வீட்டி லிருப்பதே அரிது!'

'இந்தத் தலை எழுத்து உனக்கேம்மா? கப்பல் மாதிரி வீடு அங்கே இருக்கும்போது அதை விட்டுட்டு இங்கே வந்து இந்த இரண்டே அறையில் தசுங்கி சாகணுமா?'

'எங்கப்பா சொன்னார், இந்த மாதிரி தொந்தரவு களையும் நான் தெரிந்துக்கணுமாம். திருமணமாகிட் டால் மாமியார் வீட்டிலிருப்பதுதான் மதிப்பாம். அதான் இங்கே வந்திருக்கேன்.'

உமாவின் வார்த்தைகளை காமாட்சியம்மாள் புழக் கடையிலிருந்து கேட்டுக் கொண்டுதானிருந்தாள். அவ ளுக்கு அந்த நிமிஷமே உமாவின்பால் சொல்ல முடியாத கழிவிரக்கம் தோன்றலாயிற்று. எவ்வளவு கெட்டிக் காரத்தனமாய் அவர்களுக்கு பதில் சொல்லி விட்டாள்! கணவனையோ, மாமியார் வீட்டு மக்களையோ சற்றும் ஏளனமாய்ப் பேசி விடவில்லை!

அவளுக்குக் கண்களில் நீர் சுரந்தது. மேலுக்குப் பகட்டாய்த் தென்பட்டாலும் உமாவின் உள்மனம் நல்லதுதான் என்று தோன்றியது.

வந்தவர்கள் யாவரும் போய்ச் சேர்ந்தார்கள்.

அன்று ஏனோ உமாவின் வீட்டிலிருந்து காபி வர வில்லை. உமா காபி குடிக்கவில்லை.

காமாட்சி காபியைக் கலந்து எடுத்துக்கொண்டு உமாவின் அறைக்குள் நுழைந்தாள்.

எதிர்பாராமல் மாமியாரைத் தன் அறைக்குள் கண்ட உமா விருட்டென்று நாற்காலியைவிட்டு எழுந்திருத்தாள்.

'இன்னும் கார் வரலையேன்னு நானே காபி கொண்டு வந்தேன், இந்தா குடி' என்று நீட்டினாள்.

'உமாவின் புருவங்கள் ஒரு நிமிஷம் சந்தோஷத்தால் ஏறி அதே வேகத்தில் இரங்கி விட்டது.

'வேண்டாம் அத்தை.ஒருநாள் குடிக்காவிட்டால்தான் என்ன?'

கொஞ்சம் குடித்துப்பாரு, நன்றாயில்லாவிட்டால் வேண்டாம்.'

'நன்றாயிருக்காதுன்னு யார் சொன்னது?'

'நானே ஊகித்துண்டேன்.'

'நான் அதுக்காக வேண்டாங்கலை.'

'பின்னே?'

உமா சற்று நிறுத்தி, பிறகு மெதுவாகச் சொன்னாள்.

நீங்கள்... நீங்கள் என்னவோ நான் பணம் கொடுத் தாலும் வாங்கிக்க மாட்டீங்க. நான் எதுக்குக் குடிக் தணும்? நான் குடிப்பதால் அந்தக் கொஞ்சம் காபியில் ஒருத்தருக்கு இல்லாமல்தானே போகும்'? 'உமா!'

என்னை மன்னிச்சுக்குங்க அத்தை. ஒண்ணும் நினைச்சுக்காதீங்க என் கழுத்தில் தாலி கட்டிய உங்க மகனே என்னை வேற்று மனுஷியாய்ப் பார்க் கிறார். நீங்க அப்படிப் பார்த்தாலும் நான் ஒன்றும் நினைத்துக்க மாட்டேன்.

'உமா, நான் அவனுக்கு எவ்வளவோ சொல்லிட் டேம்மா, அவனுக்குப் புத்தியே இல்லை. கொஞ்சம் பொறுமையாயிரும்மா எல்லாம் சரியாயிடும். காபியைக் குடி நல்லப் பெண்ணோனோ.'

உமா காமாட்சியை ஏறிட்டு நோக்கினாள். அக்கண் களில் மின்னிய பரிவிற்கு முன்னால் உமாவின் பி... வாதம் தளர்ந்தது. காபியை வாங்கிக் கொண்டாள்.



11347
296865
...நகர், சென்னை-...

8

ரவிசங்கரன் வீட்டிற்குள் நுழைந்தபோது படுக்கை அறையிலிருந்து உமாவின் குரலும் குழந்தைகளின் குரலும் கலகலவென்று சிரிப்பும் கும்மாளமுமாய்க் கேட்டது

சமையலறைக்குள் நுழைந்தவன் அப்படியே திகைத்து போய் நின்றுவிட்டான். அங்கு அவன் தாய் காமாட்சியம் மாள் தனியாய் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்திருந்து செல்ல முனைந்தாள்.

'ஏம்மா? என்னவாயிற்று?' ரவிசங்கரன் பரிவோடு கேட்டான்.

'என்னவானால் உனக்கென்னடா வந்தது? எங்க மேல் கொஞ்சமாவது அக்கறை இருந்திருந்தால் நீ இந்த மாதிரி பண்ணுவாயா?'

'நான் என்ன பண்ணிட்டேன்?'

'என்னன்னு இன்னுமா தெரியலை? எங்களை நாலு பேர் பார்த்து சிரிக்கும்படி பண்ணிவிட்டாய் உமாவுடன் உன் திருமணம் நடந்தேறி விட்டால் நீ சந்தோஷமாய் இருப்பாய்னு நினைத்தோம். இந்த மாதிரி நம்பக் குடும்பம் நடுச்சந்திக்கு வந்து நிற்கும்னு எண்ணலை.'

ரவிசங்கரனின் தலை குனிந்தது.

'வீட்டுக்காரர் காலையில் வந்தாரு. வாடகையைக் கூட்டித் தரணுமாம். வேலைக்காரி சொல்லிட்டா, சம்பளம் ஜாஸ்தி தந்தாலொழிய வேலைக்கு வரமாட் டாளாம்' பலசரக்குக் கடைக்காரன் பாக்கியைக் கேட் கிறான். யாருக்குன்னு என்னால் பதிலைச் சொல்ல

முடியும்? உங்கப்பாவோ ரிடயரானதும் அந்த வீட்டுக் கட்டேகதின்னு மூழ்கி விட்டார். நான் என்னத்தைப் பண்ணுவேன் சொல்லு? அக்கம்பக்கத்தார் பார்த்து ஏளனமாய்ச் சிரிக்கிறதைத் தாங்கமுடியலையே.'

'என்னை என்னம்மா பண்ணச் சொல்றீங்க?'

'உமாவோடு அவங்க வீட்டுக்குப் போய் இரு.'

'அம்மா.'

வேறு வழி இல்லைடா உமாவை நான் புரிந்து கொண்டு விட்டேன். ஏதோ செல்லமாய் வளர்ந்து விட்டதால் துடுக்காய் பேசி விடுகிறாள். ஆனால் பொண்ணு நல்ல பொண்ணுதான்டா. பசங்களும் என் பேச்சைக் கேட்டுக்கறதில்லை. ஸ்கூலுக்குப் போகாமல் எப்போப் பார்த்தாலும் உமாவிடமே பழியாய்க் கிடக்கிறார்கள்! பாரு இதோ, கார் வந்துடுத்து. என் தலைவிதி! மருமகள் குடுத்தனத்திற்குலந்தாள், ஏதோ நம்மோடு சேர்ந்து சாப்பிட்டாள்னு இல்லாமல், நம்ம தரித்திரத்தைச் சுட்டிக் காட்டுவதுபோல இது ஒண்ணு! இந்தப் பசங்கள் ஒண்ணு கூப்பிட்டாலும் வரவே மாட்டாங்க' என்று அலுத்துக் கொண்டே எழுந்திருந்து பசங்களை ஒவ்வொருவராய்ப் பெயரிட்டு அழைத்தாள்.

'ஆங் வரோம்' என்று குரல் கொடுத்தார்களேயன்றி யாருமே வரவில்லை.

உமா அவர்களுடன் கலந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் தன் அறையில்.

சிறிது நேரங்கழித்து சிறியவள் ஓடிவந்து,' அம்மா, அண்ணியோடு 'ஜூ'வுக்குப் போறோம்மா' என்றாள்.

'ஒண்ணும் வேண்டாம். வாயை மூடிண்டு வீட்டில் விழுந்துக்கிடங்க' என்று அவர்கள் மேல் எரிந்து விழுந்



தாள் காமாட்சி கொஞ்ச நேரங்கழித்து உமா அலங்கரித்துக்கொண்டு வெளியே வந்து' நன்றாய் பசங்களை அழைத்துண்டு 'ஜூ'வுக்குப் அத்தை நான் போறேன்' என்றாள்.

உமாவின் வார்த்தைக்குக் காமாட்சியால் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை.

'சரிம்மா, சீக்கிரமாய் திரும்பிடுங்க' என்றாள்.

'சரி.'— உமா போகும் முன்னால் அங்கிருந்த ரவிசங்கரனின் மேல் ஒரு அலட்சிய பார்வையை எடுத் தெறிந்து விட்டுப்போகத் தவறவில்லை. அப்பார்வை அவனை ஊசியாய்த் துளைத்தெடுத்தது.

அவர்கள் போனபிறகு காமாட்சியம்மாள் திரும்பவும் மகனிடம் வந்தாள்.

'ரவி, நீ உமாவோடு அவங்க வீட்டில் போய் இருந்தால் என்னவாகிடப் போறது?' என்று கேட்டாள்.

அவன் அம்மாவை முறைத்துப் பார்த்தான்.

'அம்மா, நான் செத்து ஒழிந்தால் என்னவாகிடப் போறது?'

'சீ, சீ, இதென்னடா பேச்சு? இதெல்லாம் என் தவறு தான்னு தோன்றது. உன் மனசைப் புரிந்துக்காமல் இந்தத் திருமணத்துக்கு சம்மதிக்க வைத்துவிட்டு, உன் சந்தோஷத்தைக் கெடுத்துட்டேன்.'

'நடந்ததுக்கு இப்போ வருந்தி என்ன பிரயோஜனம்மா?'

'சரி, நடந்தது நடந்துடுத்து! இனிமேல் நடக்கப் போறதைக் குறித்தாவது நீ சிந்தி.'

'அது ஆண்டவனுக்குதான் தெரியும்.'

மாலையில் ஜூவுக்குப் போன குழந்தைகள் உமாவோடு திரும்பி வந்து விட்டார்கள். வந்ததுமே சிறியவள் ரவியிடம் ஓடி வந்து, 'அண்ணா, நாங்க 'ஜூ'வில் சுற்றும் போது வசந்தியைப் பார்த்தோம்' என்று கூறினாள்.

தங்கையின் இரு கரங்களையும் அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டு, 'வசந்தியைப் பார்த்தாயா? நிஜமாவா? என்ன சொன்னாள்?' என்று ஆர்வத்துடன் கேட்டான் ரவி சங்கரன்

'ஒண்ணும் சொல்லலை, அண்ணா ஏன் வரலைன்னு கேட்டாள.'

'நீ என்ன சொன்னே?'

'எனக்குத் தெரியாதுன்னேன்'

'இன்னும் என்ன கேட்டாள்?'

'அதுக்குள்ளே அண்ணி வந்துட்டா, இந்தப் பொண்ணு யாருன்னு கேட்டாள். 'எங்க அண்ணி உமான்னோம். வசந்தி சிரித்துண்டே பேச வந்தாள். ஆனால் அண்ணிதான், அண்ணா முகத்தைத் திருப்பிக்கிட்டாங்க. 'வாங்க போலாம்' என்று சொல்லிட்டதால் வந்துட்டோம்

ரவிசங்கரனுக்குக் கோபம் வந்தது. கொஞ்சம் நாகரிகமாய்ப் பேசி விட்டால்தான் என்ன என்று நினைத்தான்.

தங்கை போகக் கிளம்பினவளைக் கையைப் பிடித்து இழுத்தான்.

'வசந்தியோடு இன்னும் யார் யார் இருந்தாங்க?



'இன்னொருத்தி இருந்தாள்.'

'வசந்தி என்ன புடவைக் கட்டிட்டிருந்தாள்?'

'புடவையா?... 'தங்கை யோசித்தாள்.

'ஜரிகைப் பூ வேலை பண்ணிய பச்சை எபான் புடவைக்கட்டிட்டிருந்தாள். பின்னிட்டுப் பூ வைத்துட்டிருந்தாள்—போதுமா, ஏளனமாகவும் கடுகடுவென்றும் வெளிவந்த அச்சொற்களைக்கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அங்கு உமா நின்று கொண்டிருந்தாள். உமாவின்பார்வை கூரிய கத்தியாய் அவன் மேனியைக் குத்திக் குதறலாயிற்று.

❀ ❀ ❀

'உன் மகன் என்னதான் சொன்னான்? மாமனார் வீட்டிற்குப் போகப் போறதில்லையாம்மா?' என்று கேட்டார் ரவியின் தந்தை காமாட்சியிடம்.

காமாட்சி மௌனமாயிருந்தாள்.

'உன்னைத்தான் கேட்டதுக்கு ஏன் பதிலைக் காணோம்?' கோபமாய்க் கத்தினார் அவர்.

'போகமாட்டேன்னு சொல்லிட்டான், அவனுக்குப் பிடிக்காதபோது நாம் எப்படி பலவந்தப்படுத்துவது? அவன் என்ன பச்சைக் குழந்தையா?

'அப்படின்னால் இந்த வெட்கக் கேட்டை நாம் வாயை மூடிண்டு பொறுத்தக்கணும்னு அர்த்தமா?

'அவன் மனசைப் புரிஞ்சுக்காமல் இந்தத் திருமணத்தைப் பண்ணி வைத்தது நம்ப தப்புன்னு நினைக்கிறேன்.'

வாயை மூடு எல்லாம் உன்னால்தான். அவனை நயந்தோ, மிரட்டியோ எதுவுமே சொல்ல மாட்டாய்.

இப்பொழுதே சொல்லிட்டேன் அவன் மட்டும் போகலின்
லைன்னால் நான் இந்த வீட்டில் இருக்கவே மாட்டேன்
இனி உன் மகனிடம் சொல்யிவிடு. நான் கவனிக்கிறதில்
லைன்னா நினைக்கிறான்? அவன் அந்தப் பெண்ணோடு
பேசறதேபாவம்னு நினைக்கிறாப்போல நடந்துக்கறானே!
நாம் அறியாமல் அந்தப் பெண்ணை வாட்டுகிறோம்.
உமாவுக்கு என்ன குறைச்சலாம்? நான்' நீன்னு போட்டி
போட்டுண்டு யார் வேணும்னாலும் பண்ணிண்டிருப்
பாங்க! என்ன சொன்னாலும் கேட்டுண்டிருப்பாங்க. சீ,
சி, வீட்டுக்கு வந்த ஸ்ரீதேவியைக் காலால் எட்டி உதைக்
கிறான்.

அவர் வேண்டுமென்றே பெரிதாய் இரைந்தார்.
ஒன்று மகனின் காதில் விழுவேண்டுமென்றும்,
இரண்டாவது உமாவுக்குத்தம் மேல் எந்தத் தப்பும்
இல்லை என்று புரியவேண்டும் என்றும் அவர் உத்தேசம்.
ரவியை அவர்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்க அவர்,
எவ்வளவு சிரமப் படுகிறார் என்று உமா உணர
வேண்டும்!

காமாட்சி அளுத்துக் கொண்டாள். 'ஏன் கத்துதீங்க?
மருமகள் காதில் விழும்.'

'விழட்டும். இதென்ன ரகசியமா? நிஜத்தைதானே
சொல்றேன். பாவம் அந்தப் பொண்ணு இவனைப்
பண்ணீண்டு என்ன சுகத்தைக் கண்டாள்? எத்தனைச்
செல்லமாய் வளர்ந்திருப்பாள்! இந்த கஷ்டங்களை
யெல்லாம் எதுக்குப்படறாள்? அவனுக்காகத்தானே?
இந்த ஞானம் கூடவாகிடையாது அவனுக்கு?'

உமாவுக்கு இவ்வார்த்தைகள் காதில் விழுந்தன.
அவளுக்கு அழுகை வரத்தொடங்கித்று. மாமனார்
எவ்வளவு நல்லவர்! தன் துன்பம் பெரியவர்களுக்காவது
புரிகிறதே, அதுவே போதும என்றெண்ணினாள்.



'அவன் மனைவியோடு போய் அங்கே இருக்கப்
போறானா அல்லது நான் வீட்டைவிட்டுப் போகணு
மான்னு கேளுஅவனை..

'அவன் மத்யானம் போனவன் இப்பத்தான் திருப்பி
வந்தான்.'

இதைக்கேட்டு அவர் இன்னும் வெகுண்டார்.
மத்யானம் போனவன் இப்பத்தானா திரும்பி வந்தான்'
எங்கே போனான்? அந்த வசந்திக்கிட்டேதான் போயிருட்
பான்,

அவனுக்குப் புத்தி இருக்கா? அவன் முதலில் ஏன்
இங்கேயே இருக்கணும்னு நினைக்கிறான் தெரியுமா?
இங்கே இருந்தால் இஷ்டப்பிரகாரம் அந்த வசந்தியோடு
சுற்றலாம்னுதான். இங்கேன்னால் எப்ப வேணும்னாலும்
வீட்டை விட்டுப் போய்க்கலாம், வரலாம், அங்கெல்லாம்
அந்தப் பாச்சா பலிக்காதே.

'சும்மா ஏன் அந்தப் பெண்ணை இழுக்கிறீங்க?'
காமாட்சி அலுத்துக் கொண்டாள்.

என்னதான் தப்பிருந்தாலும் மகனை மருமகளுக்கு
முன்னால் இடித்துரைத்தால் மருமகளுக்கு அவன்மேல்
ஏளனமான பாவனை தோன்றிவிடும் என்று அஞ்சினாள்
அவள். ஆனால் அவருக்கோ அதைப்பற்றிய அக்கறையே
கிடையாது.

அவருக்கு உமா தன் வீட்டிலிருப்பது பிடிக்கவில்லை
உமா மகனோடு அவள் வீட்டிலேயே இருந்தால்தான்
அவருக்கு மதிப்பு! செல்வந்தரின் மகளை மணந்தும் மகன்
காரில் போகாமல் நடந்து போவதையும், முன்பு
மாதிரியே இருந்ததையும் கண்டு அவர் ஆத்திரமடைந்
தார். மகன் செல்வந்தர் வீட்டு மருமகனாகி, அதனால்

வறுமையின் பிடியில் சிக்கிண்டு அலைப்புற்ற அவர் குடும்பத்திற்கு ஒரு வழி பிறக்கச் செய்து போலவும், என்றெண்ணியிருந்த அவர் கனவானது சிதறிவிட்டது.

சிதம்பரம் தன் செல்வாக்கால் வசந்தியை டிரான்ஸ்பா பண்ணிவிட்டார். ஆனால் வசந்தியோ பிடிவாதக்காரி. லீவு போட்டு விட்டு வீட்டில் இருந்தாள். வேலையில் போய் சேரவில்லை.

என்னவானாலும் சரி; மகனை மாமனார் வீட்டிற்கு அனுப்பியே வைத்துவிடுவது என்று சங்கல்பம் செய்து கொண்டார் ரவியின் தந்தை.

'ஏன் உட்கார்ந்துண்டிருக்கே? போய்க் கேளு அவளை' என்றார்.

'கேட்கிறேன். நீங்க சாப்பிடுங்க முதலில்.'

'முதலில் கேட்டுட்டு வா.'

காமாட்சி எழுந்திருந்தாள்.

அதற்குள் படுத்துக் கொண்டிருந்த ரவிசங்கரனே கட்டிலை விட்டு எழுந்திருந்து உடை மாற்றிக் கொண்டான். தாயைக் கண்டதும் அவனே சொன்னான்.

'அம்மா, நான் வீட்டை விட்டுப் போறேன். என்ன தீர்மானம் வேணுமோ பண்ணிக்கோங்க நீங்களே' என்று கூறிவிட்டு மளமளவென்று செருப்பை மாட்டிக் கொண்டு வீதியில் இறங்கி நடக்கலானான்.

'ரவி, டேய்!' தாயின் கூக்குரலை அவன் கேட்டுக் கொள்ளவேயில்லை. திரும்பிப்பாராமல் இருளில் மறைந்து விட்டான்.

அறைக்குள் சத்தடி கேட்டது. உமா மளமளவென்று தன் துணிமணிகளை எடுத்துப் பெட்டியில் திணித்துக் கொண்டாள். எவ்வளவு அவமானம்! உமாவுக்கு துக்கம்



பொத்துக் கொண்டு வந்தது. சாமான்களைத் திணித்துக் கொண்டு வெளியே வந்து, 'மாமா, டாக்சி பிடித்துண்டு வருவீங்களா எனக்கு?' என்று கேட்டாள்.

மாமனார், 'எங்கேம்மா போகணும்?' அவர் கலவரமுடைந்தார்.

'வீட்டுக்குப் போயிடறேன்.'

'இப்பொழுதா? இந்த இரவு நேரத்திலா?'

'ராத்திரியானாலும் பரவாயில்லை. நான் இனி இங்கே ஒரு நிமிஷம்கூட நிற்கமாட்டேன் தயவுசெய்து என்னைக் கெஞ்சாதீங்க.'

அவள் முகத்தைக் கண்டு அஞ்சினார் அவர்.

அந்த முகத்துடன் இந்த வேளையில் அவள் வீட்டிற்குச் சென்றாளானால் சிதம்பரம் தன்னை உயிரோடு விட்டு வைப்பாரா?

'விடிஞ்சதும் போய்க்கலாம்மா.'

'நான் போயிடறேன். நீங்க டாக்சி கொண்டு வரா விட்டால் நடந்தே போயிடறேன்.' உமா செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

'இரு, இரு. நானே டாக்ஸியைக் கூட்டிட்டு வரேன்.' அவர் வீதியில் இறங்கி ஓடினார்.

அரை மணியில் டாக்சி வந்தது. மாமியாரிடம் போய் விட்டு வரேன் என்று கூடச் சொல்லிக் கொள்ளாமல் டாக்சியில் ஏறி அமர்ந்தாள். தான் விட்டுவிட்டு வருவதாய்ச் சொல்லி ரவிசங்கரனின் தந்தையும் ஏறி அமர்ந்துக் கொண்டார் டாக்சியில்.

காமாட்சியம்மாள் வெறிச்சோடிக் கிடந்த வீட்டில் ஊமையாய் நின்று விட்டாள்.

# 9

மாலையிலிருந்தே வசந்தி நெருப்பிலிட்டப் புழுவாய் தவித்துக் கொண்டிருந்தாள். உத்யோகம் ட்ரான்ஸ்பர் ஆகி விட்டதால் லீவு போட்டு விட்டு வீட்டிலிருக்கலா னாள். ஒரு வாரமாய் வீட்டிலேயே இருந்து வந்ததால் வெறிபிடித்தாற் போலிருந்தது.

அதனால், தெரிந்தவர் ஒருவர் வீட்டில் யாருக்கோ பிறந்த நாள் என்று அழைத்ததால் பொழுதைப் போக்க அங்குக் கிளம்பினாள்.

அங்கு குழுமியிருந்த பெண்கள் வசந்தியைப் பார்த்து விட்டுக் குசுகுசுக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஒருத்தி— ,எப்போ கல்யாணம்?' என்றுக் கேட்டு விட்டாள்.

'சுவாமி வழி காட்டினப்போய் என்று விட்டேற்றி யாய் சிரித்துக் கொண்டே பதிலளித்தாள் வசந்தி.

அதற்குள் வேறொருத்தி — 'வசந்தி. உனக்கும் ரவிசங்கரனுக்கும் கல்யாணமாகப் போவதாய் அல்லவா கேள்விப்பட்டடேன்? உங்கக்கா வேறு சொன்னாளே? பின்னே இப்போ அந்த சிதம்பரத்துப் பெண்ணைப் பண்ணிண்டுட்டானே ஏன்?' என்றுக் கேட்டுவிட்டாள்.

'அவன் பண்ணக்கிறேன்னா சொல்லியிருப்பான்? இந்த ஆண்கள் சிநேகிதர்களாய் சுற்றுவார்களேயன்றி கல்யாணம் பண்ணிக்க முன் வருவாங்களா என்ன? பெண்பிள்ளைங்களுக்கு புத்தி இருக்க வேண்டியது!' என்றாள் அவள் திரும்பி.



கேட்கவேண்டியதை மூஞ்சியறைந்தாற்போல கேட்டு விட்டாள் அவள். பொழுது போக்கிற்காகப் போய்விட்டு மனம் முழுவதும் எரிச்சலையும் திகிலையும் சுமந்துக் கொண்டுத் திரும்பினாள் வசந்தி.

வசந்திக்கு திடீரென்று உலகமே அஸ்தமித்து விட்டாற் போலிருந்தது. ரவிசங்கரனை நிராகரித்தது எத்தனை முட்டாள்தனம் என்றுப் புரிந்தது. தான் அவன் குடும்ப நலனைக் கருதாமல் தன் நலனையே பார்த்துக் கொண்டிருந்திருக்க வேண்டியது.

இறுதியில் அவனும் கைநழுவிப் போக, அலவாதங் களும் வந்து சேருகின்றன. இப்பொழுது வருந்தி என்ன பயன்?

கதவைத் தட்டிய ஓசை கேட்டது.

கட்டிலியிருந்து எழுந்து விளக்கைப் போட்டாள். மணி பத்து. இந்த சமயத்தில் யார் வரப்போகிறார்கள்?

ஊருக்குப் போயிருந்த அக்காவும் அவள் கணவனுந் தான் திரும்பி விட்டார்களா என்ன?

போய் கதவைத் திறந்தாள்.

எதிரே வாசலில் ரவிசங்கரன் நின்று கொண்டிருந் தான்.

வசந்திக்குத் தன் கண்களையேதான் நம்பமுடிய வில்லை.

'நீங்களா?' என்றாள்.

அவன் பதிலளிக்காமல் நேராய் உள்ளே வந்தான்.

'இந்த நேரத்தில் வந்திருக்கிங்களே, ஏன்? 'ஆச்சரியத் துடன் கேட்டாள்.

ரவிசங்கரன் உள்ளே வந்து கதவை சாத்தித் தாழிட்டான்.

'வசந்தி, என்னோடு வரப்போகிறயா, மாட்டாயா?'

'உங்களோடா, எங்கே?'

'எங்கேயோ ஓரிடத்திற்கு நான் வீட்டை விட்டு வந்துட்டேன். இந்த ஊரை விட்டே எங்கோ வெகு தொலைவிற்கு ஓடிப் போயிடப்போறேன். நான் எங்க வீட்டாருடன் சம்பந்தத்தை முறித்துக் கொண்டு வந்துட்டேன். நீயும் என்னோடு வருகிறாயா சொல்லு?'

வசந்தி அவனை சரியாய் ஏறிட்டுக்கூட பார்க்கவில்லை. ஓரடி முன்னுக்கு வந்து சட்டென்று அவன் கழுத்தைச் சுற்றிக் கரங்களைக் கோர்த்துக்கொண்டுவிட்டாள். அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அடுத்த வினாடி திடீரென்று அழுது தீர்த்துவிட்டாள்.

ஒரு நிமிஷம் அவன் சிலையாய் அதிர்ந்து நின்றுவிட்டான் எனலாம்.

வசந்தி மிகவும் கட்டுப்பாடு மிக்கவள். அடிக்கடி கண்கலங்கும் சுபாவமுடையவளில்லை. வசந்தியைப் புயலாய் இத்தனை துக்கம் சூழ்ந்துக் கொண்டிருந்ததென்றால் ஏதோ விபரீதந்தான் நிகழ்ந்திருக்கிறது.

அவன் வசந்தியின் தலையை மார்போடு அழுத்திக் கொண்டான். அவன் விரல்கள் வசந்தியின் கேசத்தை பரிவோடு தடவித் தந்தன.

'வசு... என்னவாச்சு? ஏன்?' கவலையோடு தடுமாறியபடி கேட்டான்.

வசந்தி பதிலளிக்கும் நிலையிலில்லை. இறுதியில் ரவிசங்கரன் வசந்தியைத் தோளைச் சுற்றிக் கரத்தைப் போட்டு அழைத்துக் கொண்டு வந்து சோபாவில்



தனக்கருகில் உட்கார வைத்தான். வசந்தி சோபாவில் உட்கார்ந்ததுமே சட்டென்று அவன் மடியில் துவண்டு சரிந்தாள்.

'வசு... வசு... என்னது? என்னவாச்சு? யாராவது ஏதாவது சொன்னாங்களா?' தோளைப் பிடித்துக் குலுக்கினான்.

'எனக்கு வாழ்க்கையே நரகமாயிருக்கு. என்னால் தாங்க முடியலை' அழுகைக்கிடையே தெளிவின்றி வெளிவந்தன அவள் சொற்கள்.

அவன் ஒரு வினாடி மெளனமாய் இருந்து விட்டான். 'நீயாகவே வரவழைத்துக் கொண்டதுதானே இது?' என்றுக்கோபமாய் கேட்டுவிட வாய் வரையிலும் வந்து விட்டது. ஆனால் அடுத்த வினாடியே வசந்தியை ஏறிட்டுப் பார்த்தபொழுது பரிதாபமாயிருந்தது.

வசந்தி நல்ல பெண். நல்ல உள்ளத்தோடு தன் நலத்தைப்பாராமல் அவன் நன்மையைக் கருதி, அவன் குடும்ப சாதக பாதகங்களை உணர்ந்து ஒரு விதத்தில் தன் சுகத்தையும் சந்தோஷத்தையும் தியாகம் பண்ணியிருக்கிறான். அவன் பலவந்தமாய் தோளைப் பிடித்து எழுப்பி உட்கார வைத்தான் அவளை, கண்ணீர்க் கோடிட்டிருந்த கன்னத்தைத் துடைத்தான்.

'காரணம் சொல்லாட்டால் எனக்கெப்படித் தெரியும்? உன்னை என்னால் எப்படித் தேற்றமுடியும்? ப்ளீஸ், என்னவாச்சுன்னு சொல்லேன்.'

'எல்லோரும்... எல்லோரும்... நீங்கதான் என்னை விட்டுட்டுப் பணக்காரப் பெண் மோகத்தில் விழுந்து அந்தப் பெண்ணைப் பண்ணிக் கொண்டு விட்டதாய் சொல்கிறார்கள். நான்தான் உங்களை அந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கச் செய்தேன் என்றால் ஒருத்தருமே

நம்பலை. நான் உங்களோடு சுற்றிக் கெட்டலைந்தேனாம். அதற்கேற்ற தண்டனைதானாம் இது. என்னால் இந்த குத்தல் மொழிகளைக் கேட்டுத் தாங்க முடியலையே...' பேதையாய் மொழிந்த வசந்தியின் வார்த்தைகளைக் கேட்டுக் குனிந்துச் சட்டென்று கண்ணின் மேல் ஒரு முத்தமிட்டான்.

'உலகம் பொல்லாதது. தன் வழியில் தான்பாட்டுக்குப் போயிண்டிருப்பவர்களைக் கூட வம்புக்கிழுத்து வேடிக்கைப் பார்க்கும். அது கூட தெரியாதா வசந்தி உனக்கு?'

'தெரியும் ஆனால் உண்மையைச் சொன்னாலாவது சரி, அபவாதங்கள் எதற்குன்னுதான்... உத்யோகம் ட்ரான்ஸ்பர் ஆயிடுத்து நான் போகாமல் லீவைப்போட்டுட்டு வீட்டிலிருப்பதால் இன்னும் பேசுறாங்க... உங்களுக்காகத்தான் நான் போகாமல் இருக்கிறேனாம்....

அவன் ஒரு வினாடி வசந்தியின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

'வசு...உலகம் பழிக்கறதைக் கேட்டுண்டு நாம் சும்மாயிருந்துட்டால் போதாது...'

'என்ன பண்றது?'

'நீ உத்யோகத்தில் சேர வேண்டிய ஊருக்குப் போயிடலாம் நாம்.'

அது எங்கேயோ பட்டிக்காட்டுக்கு மாறுமூலை. நம்மிருவருக்கும் கல்யாணமாயிட்டதாய் சொல்லிப்போம். நான் உன்னைக் கல்யாணம் பண்ணிண்டுடறேன்.'

வசந்தியின் கண்கள் பயத்தால் படபடத்தன.

'எப்படி முடியும் ரவி?'



'ஏன் முடியாது?'

'சட்டம் எப்படி ஒப்புக்கும்? நீங்க கல்யாணமானவர்.'

'சட்டத்தை எதிர்த்து வாழறவங்க கிடையாதா? சட்டத்தின் எல்லைக்குள் நமக்கு சுகமில்லை. சட்டத்தை எதிர்த்துண்டு ஓடிப் போயிடலாம்.'

வசந்தி எழுந்து உட்கார்ந்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள், லேசாய் சொரணை வரத் தொடங்கிற்று அவளுக்கு இப்பொழுதுதான். கலவரத்துடன் வாயிற்கதவை நோக்கினான்.

அது தாழிடப்பட்டிருந்தது.

'உங்க அக்காவும் புருஷனும் எங்கே?' அவனும் இல்லைகிற்கு மீண்டவனாய் கேட்டான்.

'ஊருக்குப் போயிருக்காங்க...இதோ வரேன்.'

வசந்தி உள்ளே போய் விட்டு ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்தாள். முகம் கழுவிக் கொண்டு பொட்டு வைத்துக் கொண்டிருந்தது தெளிவாய் தெரிந்தது

தொலைவிலேயே நின்றாள். ரவிசங்கரன் வசந்தியை ஏறிட்டு நோக்கினான். வசந்தியிடமிருந்த துக்கத்தின் திரை அகன்று விட்டாற் போலிருந்தது. அப்பார்வைக்கு வழக்கமான உள்ளத்துக் காதலை வெளிப்படுத்தும் சக்தி பிறந்தது.

'காபி ஏதாவது வேணுமா?'

'இப்ப ஒண்ணும் வேண்டாம். இங்கே வா' கைகளை விரித்துக் கூப்பிட்டான். வசந்தி வரவில்லை. தொலைவிலேயே நிற்கலானாள். அவன் எழுந்து வந்து வசந்தியின் கையைப் பிடித்து இழுத்து வந்து சோபாவில் உட்கார வைத்தான்.

'சாரி? முணுமுணுத்தாள் அவள்.

'ஏன்?'

'பைத்தியம் மாதிரி அழுது விட்டேன். கோழையாய் நடந்துக்கிட்டேனில்லே?'

அவன் வசந்தியின் தலையை மார்போடழுத்திக் கொண்டான். 'உன் துணிச்சலெல்லாம் உலகத்திற்கு முன்னால் காட்டு. என்னிடம் வேண்டாம். வசு, இப்போதாவது நாமிருவரும் இழந்த இழப்பு எத்தனை விலை மதிப்பு வாய்த்ததுன்னு புரிஞ்சுதா உனக்கு?'

வசந்தி அவன் தோளில் தலையை சாய்த்துக் கொண்டாள்.

'இப்போ தெரிஞ்சு என்ன லாபம்? வீணாய் வரவழைத்துக் கொண்டதுதானே? அனுபவித்துத் தீரணும் வாயை மூடிண்டு.'

'வேண்டாம். அப்படிச் சொல்லாதே யோசித்துப் பார்த்தால் எல்லாம் என் கையாலாகாதத் தனத்தால்தான் வந்துதோன்னு தோண்றது. நீதான் ஏதோ சொன்னாய் என்றால் நான் எதுக்குத் தலை வணங்கினேன் அதை? அம்மா அப்பாவுக்கு முன்னால் ஏன் சங்கோஜப் பட்டேன்? போகட்டும், இப்பொழுதும் இன்னும் அவகாசம் கை நழுவிடவில்லை. அந்த உமாவை நான் கல்யாணம் பண்ணின்டேனே யொழிய எனக்கும் அவளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை இது வரையிலும். நான் அவளை உதறுவதில் தவறில்லை.

நான் உமாவிடம் உன்னைப் பற்றிச் சொல்லிவிடறேன். மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடறேன்.' ஆனால் வசந்தி வாளாயிருந்தாள். அவன் வார்த்தைகள் வசந்தியின் மூளையை மயக்கமருந்தை ஊட்டினாற் போல கிறு



கிறுக்கச் செய்துவிட்டன. அவன் மடியில் தலை சாய்த்துக் கொண்டாள். அவன் நெருக்கமும் அன்பும் சுகமாய்தோன்றிற்று அவளுக்கு. தனிமை பூண்டோடு அழிந்துவிட்டாற் போலிருந்தது. இவரைப் போய் வேண்டுமென்றே கை நழுவ விட்டு விட்டேனே என்று மனமார வருந்தலானாள்.

'நாப்ப எங்கே தொலைவிற்குப் போயிடலாம். ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துப்போம், நம்மிருவருக்கும் ஒருவர்க்கு மற்றவர்தான் துணை. நமக்கு உத்யோகம் கிடைக்காமல் போகாது.' வசந்தியின் தலையைக் கோதியவாறு சொன்னான்.

'உடனே கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. என் நகைகள் வேண்டியது இருக்கு. அதன் உதவியோடு ஓர் இரண்டு வருஷமாவது நிச்சிந்தையாயிருக்கலாம்.' என்றாள் வசந்தி.

அவன் குரல் மென்மையாகவும் கணீரென்றும் ஒலித்தன. உணர்ச்சிப்பூர்வமாயிருந்தது அவ்வார்த்தைகள் வசந்தியின் உள்ளத்தில் இது சாத்தியக்கூறா? என்ற ஐயத்தை ஏற்படுத்தின.

'இந்தக் கனவு எத்தனை நன்றாய் இருக்கு!' என்றாள் வசந்தி மயக்கம் விடுபடாமலே.

'இது கனவில்லை, நடக்கப் போற நஜந்தன் மேடம்?

'ரவி, இதெப்படி சாத்தியப்படும்?' பேதையாய் நோக்கினாள அவள்.

'சாத்தியமாகிறாப் போல பண்றேன் பார். முதலில் இருவரும் இங்கேயிருந்து போய் விடுவோம். பிறகு அம்மா அப்பாவுக்கு லெட்டர் போடுகிறேன் உமாவுக்குக் கூட போடறேன். நாமிருவரும் சிநேகிதர்கள் என்ற விஷயம் உமாவுக்குக் கூட தெரியும். எனக்கு அவளைப் பிடிக்காதபோது என்னோடு எப்படிக் குடுத்தனம் நடத்துவாள்?'

'உங்களை உலகம் கெட்டவராய் எடுத்துச் சொல்லும்.'

'சொல்லிக்கட்டும்.'

'உமாவுக்கு துரோகம் பண்ணிட்டதாய் சொல்லும்.'

'நான் எல்லோருக்கும் நியாயம் பண்ணியதாய் நினைச்சுப்பேன்.'

'உங்க மாமனார் பகைமை கொண்டு ஏதாவது பண்ணினால்?'

'அவரால் என்னை என்ன பண்ணிட முடியும்?'

'என்னவோ?' வசந்தி பயத்துடன் அவனிடம் ஒண்டிக் கொண்டாள்.

'ஆனால்...உங்களுக்கு கல்யாணம் ஆன பிறகு...'

சட்டென்று அவள் வாயைப் பொத்தினான் ரவி சங்கரன்.

'நீ எதுவும் பேசாதே இனி. ஒரு முறை உன் பேச்சைக் கேட்டுண்டு வாழ்க்கையை இவ்வளவு தூரம் பாழடித்துக் கொண்டாகி விட்டது, இனியும் கேட்கப் போவதில்லை. வசு, எனக்கு உமாவோடு நடந்த திருமணத்தை அடியோடு மறந்துடறேன்.'

வசந்தி பெருமூச்செறிந்தாள்.

'என் முட்டாள் தனத்தால் உங்களுக்கு இந்த தண்டனை.'

'பரவாயில்லை, என்னால் தாங்க முடியும்.'



வசந்திக்கு அந்த நேரத்தில் அவனைக் கண்டால் மிக அருமை வாய்ந்தவனாய் தோன்றிற்று. எத்தனை நல்லவன்! அவள் முட்டாள்! அவள்தான் அவனுக்கு அவள் மீதிருந்த அன்பை, உணர்ந்துக் கொள்ள முடியாமல் அவன் அம்மா அப்பா என்று ஏதோ அதிவேகமாய் யோசித்து விட்டாள். இதனால் இருவருக்குமே சுகமில்லாமல் போய் விட்டது!

அவள் உள்ளத்தில் உலகத்தைப் பற்றிய பயம் போய் விட்டது. இத்தனை அரிய ஒரு ஆண்மகனுக்கு முன்னால் உலகம் ஒரு பொருட்டா?' என்றெண்ணினாள்.

சுவற்றுக் கடிகாரம் மணி நாலடித்தது.

வசந்தி ரவிசங்கரனின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்தாள். அவளிடம் இரவெல்லாம் விழித்திருந்த அலுப்பே இல்லை.

தெருக் கதவைத் தட்டிய ஓசை கேட்டது.

'பால்க்காரனாயிருக்கும், இருங்கள்' என்று எழுந்துக் சொன்றாள்.

ரவிசங்கரன் சோபாவில் பின்னுக்குச் சாய்ந்துப் படுத்துக் கொண்டான்.

அவனுக்கு மயக்கத்தைப் போல உறக்கம் வந்தது. இருவரும் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டிருந்தார்கள். ரவிசங்கரன் இனி வீட்டிற்குப் போகமாட்டான்.

விடிந்ததுமே ஏதோ ஒரு ரயிலையோ பஸ்ஸையோ கிடைத்ததைப் பிடித்துக் கொண்டு எங்கோ தொலை தூரத்திற்குப் போய் விட வேண்டியது. அங்கு ஒரு வாரம் தங்கியிருந்து என்ன பண்ணவேண்டியது என்று எதிர்காலத்தைத் திட்டமிட்டுக் கொள்ளவேண்டியது... இவ்வாறு

தீர்மானித்துக் கொண்ட பிறகு நிச்சிந்தையாயிருந்தது அவனுக்கு. செய்த தவற்றைத் திருத்திக் கொண்டு விட்டாற்போல திருப்தியை நல்கிற்று.

கதவைத்திறந்த வசந்தி ஓரடி பின் வாங்கினாள் வெளியே யாரோ புது ஆள் நின்றிருந்தான்.

'ரவிசங்கரன் இருக்கானா?' அவன் கேட்டான்.

வசந்தி என்ன பதிலளிப்பதென்று தடுமாற்ற மடைந்தால்.

நான் அவன் சிநேகிதன். நேற்றிரவு அவன் தந்தை காலமாயிட்டார். ரவிசங்கருக்காக நாங்க ராத்திரி பூரா தேடிண்டிருக்கோம்.'

அதற்குள் படுத்துக் கொண்டிருந்த ரவிசங்கரனே எழுந்துவந்து விட்டான். வெளியே நின்றிருந்தவனைப் பார்த்துவிட்டு 'என்னடா கோபி?' என்றுக் கேட்டான்.

'ரவி, ராத்திரி அப்பா போயிட்டார்டா? சீக்கிரமாய் விட்டற்கு வா'. ரவிசங்கரன் சிலையாய் நின்றுவிட்டான்.

'ராத்திரி 12 மணிக்கு உன் தங்கை எங்க வீட்டுக்கு ஓடிவந்தாள். நான் வருவதற்குள் உயிர் போயிடுத்து,'

அவசரமாய் செருப்பை மாட்டிக்கொண்டான் ரவிசங்கரன்.

'நான் போயிட்டு வரேன் வசந்தி.' வசந்தி தலை யாட்டினாள். மறுபேச்சின்றி வெளியேறினான் அவன்.

ஆடாமல் சிலையாய் அப்படியே நின்று விட்டாள் வசந்தி. மனம் முழுவதும் மரத்துவிட்டாற் போலாயிற்று.



# 10

நான்கு வாரங்களுக்குப் பிறகு—

ரவிசங்கரன் மேஜைக்கருகில் நின்றுக் கொண் டிருந்தான், அவனுக்கெதிரே சமையலறை வாசலில். அரிசியை முறத்திலிட்டுப் பொறுக்கிக் கொண்டிருந்த காமாக்ஷி, கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

ரவிசங்கரனின் நிலைமை கைகால்களைக் கட்டிப் போட்டு அசைக்க முடியாமல் பண்ணிவிட்ட கைதியைப் போலிருந்தது. அவன் மனதில் தோன்றி மறைந்த உணர்ச்சிகளை அவன் தாடை எறும்புகளின் அசைவிலிருந்து உணரமுடிந்தது. காமாக்ஷி கண்களைத் துடைத்துக் கொண்டு மூக்கைச் சித்திப் போட்டுச் சொல்லலானால்— ரவீ, நீ எங்களை விட்டுட்டுப் போக எண்ணினால் போய்க்கொள். நானோ பசங்களோ உன் சுகத்துக்குக் குறுக்கே வரப் போவதில்லை. ஆனால், முன்னால் இத்தனை விஷத்தைக் கொடுத்துட்டுப் போய் விடு. உங்கப்பாதான் எப்படியும் என்னை அநியாயம் பண்ணிட்டுப் போயிட்டார். இருந்த வரையிலும் அவர் என் பேச்சைக் கேட்டதேயில்லை. சீட்டாட்டத்தில்தான் அவர் கவனமெல்லாம். ஆனாலும் உனக்காகத்தான், உன்னை நம்பித்தான், அவர் படுத்திய கொடுமைகளை யெல்லாம் சகித்துண்டிருந்தேன். இப்போ உன் வழியை நீ பார்த்துப் போறதாய் சொல்கிறாய். இந்தப் பசங்களை நான் என்ன பண்றது? என்னால் முடியாதுடா, நீயாக விஷத்தைத் தராவிட்டாலும் நானே அதைத்தான்தின்று மடியப்போகிறேன். நீ இந்த வீட்டை விட்டுப் போன மறுவினாடி அதுதான், நிகழப்போகிறது என்பதை நினைவு வைத்துக் கொள்

'அம்மா' அவன் வேதனையுடன் அழைத்தான்.

'நான் எத்தனைப் பாலம் பண்ணியிருக்கேனோ பாருடா நீ பெரியவனானதும் கவலையின்றி இருக்கலாம்னு. நினைத்திருந்தேன். இப்பொழுது உன் வாயிலிருந்து இதைக்கேட்டதும் என் நலையே வெடித்து விட்டாற் போலிருக்கு,

ரவிசங்கரன் பெருமூச்செறிந்தான்.

அவள் முறத்தை எடுத்துக்கொண்டு சமையறைக்குள் போய் விட்டாள்.

அவனுக்குத் தாயின் மேல் அபரிமிதமான இஷ்டம், கௌரம். தான் வளர்ந்து அவளை சுகமாய் வைத்திருக்க வேண்டும் என்றெண்ணியிருந்தான். அதற்கு முற்றிலும் மாறுபாடாய் நிகழ்ந்து வருகிறதே!

செருப்பை மாட்டிக்கொண்டு வீதியில் இறங்கினான். கங்காதரேஸ்வரர் கோவிலுக்குப் போய் பிரகாரத்தூணில் சாய்ந்து கொண்டான்.

அன்று தந்தையின் காரியம் முடிந்த பத்தாவதுநாள் உறவினர்களுக்கு முன்னிலையில் சிதம்பரம் காமாக்ஷிக்கு வாக்களித்தார்— 'அம்மா, நீங்க எதுவும் கவலைப்படத் தேவையில்லை. உங்க வாழ்க்கை என்னவாகுமோங்கற திகில் தேவையில்லை. எனக்கு மட்டும் வேறு யார் இருக்கிறார்கள்? எனக்கு ஆண் சந்ததி இல்லேயேன்னுதானே அந்தக்குறையை உங்க மகன் தீர்ப்பான் என்கிற நம்பிக்கையில், எத்தனைப் பணக்காரர்கள் வந்து சம்பந்தம் பேசியபோதும் மறுத்துவிட்டு, உங்க வீட்டு வாசலுக்கு வந்து உங்க பிள்ளையைத்தான் வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்?

இன்றையிலிருந்து உங்கபிள்ளை ஃபாக்டரிக்குப்போய் பார்த்துக்கட்டும். அவனுக்குச் சம்பளம் நாலாயிரம்



தரேன். அது உங்க குடும்பத்துக்கு உபயோகித்துக்குங்க. இதில் நான் உங்களுக்குத் தர தானம் எதுவுமில்லை. உங்க பிள்ளையின் உழைப்பில் நீங்க சாப்பிடுவது போலதான்.'

ரவிசங்கரன் மாமனாரின் வார்த்தைகளைக் கூர்ந்துக் கேட்டுக் கொண்டுதானிருந்தான். அவனுக்கு வேதனை ஏற்பட்டது.

அவனுக்குப் பணம் தேவையில்லை. சுதந்திரம்தான் வேண்டியது. சிதம்பரம் 'பணக்காரர்கள் பலர் கேட்டுக் உங்க மகனையே நாடினேன்' என்று அடிக்கடி சொல்வதும் 'உங்க பிள்ளை ஏழையானாலும் பரவாயில்லை' என்று தேர்ந்தெடுத்தேன்' என்று சொல்வதும் தலைக் குனிவாய் இருந்தது. அவனுக்கு அது எரிச்சலை அளித்தது. தாயிடம் சொன்னால் 'அதிலென்ன தப்பு, நிஜந்தானே?' என்றாள்.

அவன் இவங்களையெல்லாம் விட்டு ஒதுங்கி வசந்தியுடன் தன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்ள முயன்றதை தெய்வமே தடுத்து நிறுத்தி விட்டது. அவன் காலுக்குக் கட்டுப் போட்டாற் போலாயிற்று.

நாளையிலிருந்து ஃபாக்டரியைப் பார்த்துக்கொள்ளச் சொல்லி விட்டுப் போய் விட்டார் மாமனார்

ரவிசங்கரன் போகவில்லை. தந்தையின் மறைவுக்கு வருந்துகிறான் என்றெண்ணிக் கொண்டார் சிதம்பரம். மேலும் இரண்டு வாரங்கள் ஓடி மறைந்தன.

தாயும் ஃபாக்டரிக்குப் போகச் சொல்லி நினைவூட்டினாள்.

அவன் மனதிலிருந்ததைச் சொல்லி விட்டான்.

'அம்மா, நான் சிதம்பரத்தின் ஃபாக்டரிக்குப் போகப் போவதில்லை' என்றான்.

'ஏன்?' அவள் ஆச்சரியமாய்க் கேட்டாள்.

'வேறிடத்தில் வேலை பண்ணப் போறேன்.'

'எங்கே?'

'கிடைக்கலை இன்னும். முயற்சி பண்றேன்'

'வேறிடத்தில் எதுக்கு, சொல்லு?'

ரவிசங்கரன் சொல்லி விட்டான். 'அம்மா, நான் உமாவை டைவர்ஸ் பண்ணிடப் போறேன். வசந்தியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.'

அவள் அதிர்ந்து விட்டாள். கணவன் இறந்ததைக் காட்டிலும் அதிகமாய் அழத் தொடங்கினாள். அவள் அழுகையைக் கண்டு தத்தளித்து விட்டான் அவன். எப்படி சமாதானப்படுத்துவதென்றே அவனுக்குத் தெரியவில்லை,

'நீ சொரணை கிரணை இருந்துதான் இப்படிப் பேசறயா? உனக்கு ஏதாவது பைத்தியந்தான் பிடித்துடுத்தா? எங்களை என்ன பண்ணச் சொல்றாய்? கொன்று விடுகிறாயா?'

'அம்மா'

'சரி உன் சந்தோஷத்தை நீ பார்த்துக்கோ. நாங்க எங்க பாட்டைப் பட்டுக்கிறோம்' என்றாள்.

அவளோடு வாதாட இயலவில்லை அவனால் நயந்தும் கூற முடியவில்லை அவனால்.

அவன் பின்னுக்குச் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

'கடவுளே, காதலித்தப் பெண்ணை மணக்க முடியாத துரதிர்ஷ்டம் யாருக்குமே கூடாது'— அவனுக்கு அந்த



சமயத்தில் வசந்தி தன் மார்பில் சாய்த்துக் கொண்டிருப்பதுபோலவேயிருந்தது. அந்த உணர்ச்சிதான் எத்தனை அருமையானது! பணந்தான் உலகம் என்பவர்களுக்கு அதன் அருமை தெரியாது. ஆனால் பணத்தால் வரும் சுகம் கானல் நீரைப் போன்றது. பலர் அக்கானல் நீரை நோக்கி ஓடிக் கொண்டிருப்பார்கள். அதிலேயே பெரும்பாலும் அவர்கள் வாழ்க்கை கழிந்து விடும்.

அவனுக்கோ பதவி ஆசையோ, பணத்தாசையோ கிடையாது. ஆடம்பரம் ஹோதா முதலியவற்றைக் கண்டாலோ பிடிக்காது.

அவனுக்கு உண்மையான அன்பைப் பகிர்ந்தளிக்கும் ஒரு துணை தான் வேண்டும்.

வாழ்க்கையை ஆரம்பரமின்றி சொகுசாக்கிக் கொள்ளும் மனப்பாங்குடையவன் அவன். அவனுக்கு சரியான ஜோடி வசந்திதான்—

சுயநலத்தைக் கருதி வசந்தியை அடைந்து, தாயையும் தம்பி தங்கைகளையும் உதறுவதா? அல்லது சுயநலத்தை விடுத்து தாயை சுகப்படுத்தி விட்டு வசந்தியை உதறுவதா? இருதலைக் கொள்ளி எரும்பாயிருந்தது அவன் நிலைமை'

அவன் யோசித்தான் ஒரு தீர்மானத்திற்கு வந்தான், ஜேபியிலிருத்த சிறிய டைரியை எடுத்து அதில் எழுதினான்.

'வசந்தி'

மன்னிக்கும்படி கேட்கும் அருகதையில்லை எனக்கு. தந்தை இறந்தது என் துரதிஷ்டம். நான் கஷ்டப்படணும் என்றே எழுதி வைத்திருகிறது போலும்! அன்று உமாவை மணக்கமுடியாது என்றபோது நீ அம்மா முதலியவர்களைச் சுட்டிக்காட்டினாய். இன்று நான் அவர்களை

உதறிவிட்டு வர முயலும்பொழுது தெய்வமே எனக்கு விலங்கிட்டு விட்டது. அன்றிரவு உன்னுடன் பேசியது நான் தானா என்றே சந்தேகமாயிருக்கிறது.

வசந்தி, அன்றைய இரவை ஒரு கனவாக மறந்துவிடு, ஒன்றை நினைவு வைத்துக்கொள். எனக்கு சந்தோஷமோ சுகமோ இருக்குமானால் அது உன்னிடந்தான் கிடைக்கும். நான் என் ஆனந்தத்தையும் சுகத்தையும் துறந்துவிட்டதை நீ என்றாவது உணர்ந்துக் கொள்வாய் ரவிசங்கரன்.'

அப்பக்கத்தை டைரியிலிருந்து கிழித்து மடித்து கவரை வாங்கி அதை வைத்து மூடி விலாசத்தை எழுதி போஸ்ட் பண்ணினான்.

வீட்டிற்கு வந்து படுத்துக் கொண்டான். அவன் மனது சூனியமாகி விட்டிருந்தது.

தங்கை அவன் கையை உலுக்கி— 'அண்ணா, அம்மா நீ போனதிலிருந்து ஒரே அழுகைதான். மத்யானம் எங்களுக்கு சாப்பாடு போடவேயில்லை. சாப்பாடு போடச் சொன்னால் 'போய் சாகுங்கள்' என்று திட்டுகிறாள்' என்றாள் அவன் ஒரு நிமிஷம் தங்கையை ஏறிட்டு நோக்கினான், அக்கண்களில் ஊமை வேதனையும் பயமும் படபடத்துக் கொண்டிருந்தன.

எழுந்து உட்கார்ந்தான். தங்கையின் தலையை இழுத்து அணைத்துக் கொண்டான்.

'நான் பிழைத்திருக்கும் போது உங்களுக்கு எந்த துன்பமும் வராது' என்றெண்ணிக் கொண்டான்.

தங்கையை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான், சமையலறைக் கதவைத் தள்ளித் திறந்தான். தம்பி தங்கைகளைக் கூப்பிட்டு தட்டுக்களை வைக்கச் சொன்னான். எல்லோருக்கும் தானே உணவை எடுத்துப்பரிமாறினான். இன்னொரு தட்டில் உணவை எடுத்துத் கொண்டு தாயைக் கூப்பிட்டான்.

'அம்மா சாப்பிட வாம்மா.'

தாய் மௌனமாயிருந்தாள்.

'இனி ஒரு போதும் உன்னை வருத்தப்படுத்த மாட்டேன். நாளைக்குப் போய் சிதம்பரத்தில் ஃபாக்டரியில் சேர்ந்து விடறேன்.'

அவள் நிமிர்ந்துப் பார்த்தாள்.

'சாப்பிட வாம்மா, நீ காலையில் கூட சாப்பிடவே இல்லை.' என்றான்.

அவள் கண்களில் கண்ணீர் குபுக்கென்றது. துடைத்துக் கொண்டு எழுந்து வந்தாள்.

# 11

உமா வராந்தாவில் மடியில் நாய்க்குட்டியை வைத்துக் கொண்டு தடவிக் கொடுத்தவாறு உட்கார்ந்திருந்தாள். கூண்டிலிருந்த கிளி திடீரென்று 'உமா, உமா, உன் புருஷன் வந்துட்டான்' என்று கத்திற்று.

'சட், மூடு வாயை, கோபமாய் கத்தப் போன உமாவின் வார்த்தைகள் இடையிலேயே நின்றுவிட்டன. ரவிசங்கரன் உண்மையிலேயே வந்துக் கொண்டிருந்தான்.

ஒரு நிமிஷம் அவனைப் பார்த்த உமாவிற்கு வாய் புரள மறுத்தது. அப்படியே நின்று விட்டாள்.

உமா, புருஷன் வந்துட்டான்' மறுபடியும் கத்திற்று கிளி.

உமா கிளியை முறைத்துப் பார்த்துவிட்டு— 'மூடு வாயை சமூத்தில் தாலி கட்டிட்டால் மாத்திரம் புருஷனாகிட மாட்டாங்க. வந்திருக்கிறவர் எங்கப்பாவுக்கு மாப்பிள்ளை. எனக்கொன்றும் புருஷனில்லை. அவருக்கு எங்கப்பாவின் பணத்தின் மேல்தான் ஆசை. என் மேலில்லை.' நாற்காலியை விட்டு எழுந்திருந்து விசுக்கென்று உள்ளே போய் விட்டாள்.

ரவிசங்கரனின் முகம் சிவந்தது. ஒரு நிமிஷம் அந்த வீட்டிற்கு வெகு தொலைவில் ஓடிப் போய் விட வேண்டும் போலிருந்தது. அதற்குள் சிதம்பரம் வெளியே வந்து விட்டார். ரவிசங்கரனைப் பார்த்ததும் அவர் முகம் மலர்ந்து விட்டது.

'வாப்பா, வா, வா, சொல்லியனுப்பியிருந்தால் காரை அனுப்பியிருப்பேனே, அம்மா எப்படியிருக்காங்க?'

'சௌக்கியந்தான்'

'வா உள்ளே, உமா, உமா, யார் வந்திருக்காங்க பாரு'

'ஆங்...எல்லாம் பார்த்தேன். உங்க மாப்பிள்ளை வந்திருக்கிறார்.'

அவ் வார்த்தையிலிருந்த பழிப்பு அவர் மூளையில் எட்டவேயில்லை. 'டேய் வெங்கா, காபி கொண்டா ஓடு.'

'இப்ப ஒண்ணும் வேண்டாங்க. குடித்துட்டு தான் வந்தேன். ஃபாக்டரிக்குப் போவோமா?' என்றான். அவன் முகம் ஜெயிலிலிருந்து தப்பி ஓடித் திரும்பவும் ஜெயிலுக்கு வந்துச் சேர்ந்த கைதியைப் போலிருந்தது.

சிதம்பரத்திற்குத் தலைகால் புரியவில்லை.



'ஆங்...டிரைவர் எங்கே?' என்று கத்தினார்.

டிரைவர் வந்தான்.

சிதம்பரம் மருமகனை அழைத்துக் கொண்டு ஃபாக்டரிக்குப் போய் விட்டார்.

உமா, மாடியிலிருந்து கார் கண்ணுக்கு மறையும் வரையிலும் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவன் வந்ததும் எத்தனை மகிழ்ச்சியாயிருந்தது. 'உமா, சௌக்கியமா?' என்று ஒரு வார்த்தைக் கேட்டு விட்டால் முத்து உதிர்ந்து விடுமா? அப்பா'வை ஏதோ விரோதியைப் பார்ப்பது போலல்லவா இருந்தது? நான் என்ன பண்ணி விட்டேன்? அவர் என்னை எதற்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்? பண்ணிக் கொண்ட பிறகு மனைவியாய் என் உரிமை எனக்குக் கிடையாதா என்ன? அவனுக்கு அந்த வசந்தியின் நினைவு வந்து விட்டது. அந்த வசந்திக்கு என்ன இருக்கிறது? சம்பாதிக்காவிட்டால் நாட்களை ஓட்ட முடியாது. சாப்பிட நல்ல ஆகாரம் கூட இராது. தான் அவ்வாறில்லை. எல்லா சுகங்களையும் பிறந்ததிலிருந்தே கடவுள் வாரி வழங்கியிருக்கிறார். இதுவரையிலும் துன்பம் என்றாலே என்னவென்று தெரியாமலிருந்தது. இத்திருமணம் ஆனதிலிருந்துதான் கவலை என்பது தொடங்கி விட்டது. ரவிசங்கரனைப் பார்த்து விரும்பி விட்டாள். அவனுடன் தன் திருமணம் நிச்சயமானதும் பொங்கிப் பூரித்து விட்டிருந்தாள்.

ஆனால் அச்சந்தோஷம் நீர்க் குமிழியாய் கரைந்து விட்டது. அவன் மனம் வசந்தி என் முறைப்பெண்ணையே சுற்றி இருந்து வந்ததாய் அறிய நேர்ந்ததும் அவனைக் கொன்றுப் போட்டுவிட வேண்டும் போல ஆத்திரம் ஏற்பட்டது. அவ்வாறிருக்கையில் தன்னை ஏன் மணக்க வேண்டும்? வசந்தியின் மீது அவனுக்கு காதல் இருந்ததற்காக அவள் கலங்கவில்லை. ஆனால் அவளை எதற்கு

மணக்க வேண்டும் என்பதே அவள் எரிச்சலுக்குக்காரணம். ஒருபெண்ணின் மீதுஉள்ளத்தைவைத்துக் கொண்டு மற்றொரு பெண்ணோடு வாழ்க்கையா?

தந்தை இறந்த சமயத்தில் ரவிசங்கரன் வசந்தியின் வீட்டிலிருந்தது அவளுக்குத் தெரியும். உமாவின் மனம் கசந்தது. சிலசமயம் அவனைத் திருத்தி தன் வழிக்குக் கொண்டுவர வேண்டும் போலிருந்தது. ஆனால் இத்தகைய செய்திகளைக் கேட்க நேர்ந்து விட்டாலோ மனம் புஸ்ஸென்று பற்றிக் கொள்ளத் தொடங்கி விடுகிறது ரவிசங்கரனின் மீது உமாவுக்கு இப்பொழுது மதிப்புப் போய் விட்டது. தன் பேச்சாலும் செயலாலும் அவனைப் பழி வாங்க வேண்டும் போலிருந்தது.

இந்த உமா பணக்காரி மட்டுமில்லை, நல்லஉள்ளமும் படைத்தவள் என்பதை அவன் உணரவேண்டும். அவள் தலையை சிலிர்த்துக் கொண்டாள். இவ்வுலகத்தில் பணமின்றி செத்துப் போகுபவர்கள் உண்டேயின்றி ஆண்களின் காதலின்றி செத்தவர்கள் யாருமில்லை. ஒருக்கால் யாராவது செத்தாலும் அவர்கள முட்டாள்கள்தான். ரவிசங்கரன் இந்த உமா யார் எப்படிப்பட்டவள் என்பதைத் தெரிந்து கொள்வான்.

உமாவுக்கு மாமியாரிடம் நெருக்கம் உண்டு. அன்று பிற்பகல் போன உமா மாமியாரிடம் மிகப் பக்குவமாய்ச் சொன்னாள்: 'அம்மா, நீங்களும் குழந்தைகளும் இங்கேத் தனியாய் இருக்கிறது எனக்குப் பிடிக்கலை. அங்கே எங்கம்மாவின் உடம்பும் நன்றாயில்லை. நான் இங்கே இருந்து விட்டால் அம்மாவைப் பார்த்துக்கிறவங்களும் கிடையாது. நீங்களும் குழந்தைகளும் அங்கேயே வந்துடுங்க, எல்லோரும் ஒன்றாயிருக்கலாம்.'

மருமகளின் நல்ல குணத்தைக் கண்டு மாமியாரின் கண்கள் பனித்தன.



'அவன் என்ன சொல்லுவானோ, கேட்டுப் பார்க்கிறேன்' என்றான்.

'அவர் என்ன சொல்லப் போகிறார். இந்த மாதிரி விஷயங்களைக் கேட்காமலேயே பண்ணனும். கேட்டால் தன்மானம் குறுக்கிட்டு தடை விதித்து விடுவார்கள் ஆனாலும் நான் இந்த வீட்டு மருமகள் இல்லையா? அந்த உரிமை கூடவா என்னிடம் இல்லை?'

'ஐயோ, ஏன் கிடையாதும்மா?' என்றாள் கலவரத்துடன்.

அன்று மாலையில் ரவிசங்கரன் வீடு திரும்பும்பொழுது அவ்வீட்டிற்கு முன்னால் 'வீடு வாடகைக்கு விடப்படும்' என்ற போர்டு தொங்கிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துத் தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு.

வீட்டுக்காரர் வந்து தெரிவித்தார். பிற்பகல் உமா வந்தாளாம். வீட்டைக் காலி பண்ணப் போவதாய்ச் சொல்லி வாடகை மொத்தத்தையும் தந்துவிட்டாளாம். ரவிசங்கரனின் தாயையும் குழந்தைகளையும் காரில் அழைத்துச் சென்று விட்டாளாம்.

காலையில் பத்து மணியிலிருந்து மாலை ஆறு மணிக்குள் இத்தனைப் பெரிய மாறுதலா? அவனுக்குத் தாயின் மேல் கோபந்தான் வந்தது. தன்னிடம் சொல்ல வேண்டும் என்ற ஞானம் கூடவா இல்லை?

வேறு வழியின்றி மாமனாரின் வீட்டிற்குக் கிளம்பினான் ரவிசங்கரன்.

தாய்க்கும் குழந்தைகளுக்குமாய் தனியாய் இருந்த ஒரு அறையை ஒழித்துத் தந்திருந்தார்கள். குழந்தைகள் சாப்பிட்டு விட்டுச் சுகமாய் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

'இதென்னமா, எங்கிட்டே சொல்லவாலது வேண்டாமா?' தாயின் மீது கோபித்துக் கொண்டான்.

'சொல்றேன்னுதான் சொன்னேன். உமாதான் வேண்டாம்னுட்டாள்டா. உமா எனக்கு அந்நியமாடா?'

'என்னைக் கொன்னுட்டாய் அம்மா. ஏற்கனவே இடுப்பு ஒடிந்து கிடந்த என்னை நடைப் பிணமாக்கிட்டாய்' நாற்காலியில் சரிந்தான்.

சமையற்காரன் வந்து சாப்பிடக் கூப்பிடுவதாயும் உமா அம்மா காத்திருப்பதாகவும் சொல்லிவிட்டுப் போனான்.

தாயின் பலவந்தத்தின் பேரில் எழுந்துச் சென்றான் அவன்.

சமையற்காரன் பறிமாறப் போனபோது உமா இடைமறித்துச் சென்றாள் 'நீ போ, நான் பறிமாறறேன்.'

சமையற்காரன் போய் விட்டான்.

உமா அவனுக்குப் பறிமாறத் தொடங்கினாள்.

அவனுக்கு சாப்பிடவே தோன்றவில்லை. அவன் தனியாய் சாப்பிட்டுப் பழக்கமேயில்லை.

பரிமாறிக் கொண்டே சொன்னாள் உமா. 'ஃபாக்டரியை இனிமேல் அப்பா என் தலைமையில் விட்டுடப் போறதாய் சொல்லிட்டார்.

இனிமேல் அதைப் பற்றிய எந்த விஷயத்தையும் நீங்க என்னிடம் சொல்லணும். அம்மாவும் அப்பாவும் ரொம்ப நாளாய் பத்ரிநாத்துக்கும் ரிஷிகேசத்துக்கும் போகணும்னு சொல்லிண்டிருக்காங்க. போயிட்டு வரச் சொல்லிட்டேன் நானே.'



ரவிசங்கரன் மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்து விட்டான்.

ஏதோ கொறித்து விட்டு எழுந்திருந்தவன் சொன்னான்.

'நாளையிலிருந்து நான் அம்மாவோடு சேர்ந்து சாப்பிடறேன். தனியாய் சாப்பிடப் பிடிக்காது எனக்கு.' உமா கவனமாய் கேட்டாள். பிறகு கண்டிப்பான குரலில் சொன்னாள்.' அது முந்தைய பழக்கம். இப்பொழுது நீங்க இந்த வீட்டு மருமகன். அந்த மாதிரி பழக்கங்களை எத்தனையோ மாற்றிக்க வேண்டியிருக்கும் இனி' என்றாள்.

உமா சொன்ன விதத்தைக் கேட்டு அவன் பொறுமையிழந்தான். அறைக்குள் வந்து படுத்துக் கொண்டான். அவ்வறை இதற்கு முன்பே அவனுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறைதான். அவனைத் திணறடித்தாற் போலிருந்தது அவ்வறையின் அலங்காரம். அவ்வழகும் ஐஸ்வரியமும் அவனைப் பழித்தாற் போலிருந்தது.

அவனுக்கு வசந்தி நினைவுக்கு வந்தாள்.

எழுந்து சோபாவில் படுத்துக் கொண்டான். வசந்தியின் வீட்டு சோபா நினைவுக்கு வந்து விட்டது. தலையணையை எடுத்து மார்பில் அணைத்துக் கொண்டான்.

'வசந்தி...வசந்தி...' அவன் மனம் புலம்பலாயிற்று. உமா அவ்வறைக்கு வந்து விடுவாளோ என்று பயம் தோன்றிற்று அவனுக்கு. ஆனால் அவள் வரவேயில்லை.

# 12

உமா, பிற்பகல் மாமியாரிடம் உட்கார்ந்து ரவி சங்கரனுக்கு என்னென்ன பிடிக்கும், என்னென்ன பிடிக் காது என்பதைக் கேட்டுத்தெரிந்துக் கொண்டாள். ரவி சங்கரனுக்குப் பெரிய பெரிய பூக்கள் போட்ட புடவை களோ கோடு போட்ட புடவைகளோ பிடிக்காதாம்.

அன்று மாலையோ உமா கடைக்குப் போய் பெரிய பூப்போட்ட புடவைகளையும் கோடுபோட்ட புடவை களையும் அரைடஜன் வாங்கிக் கொண்டுத்திரும்பினாள்.

அவன் பாகற்காய் கறி சாப்பிடமாட்டான் சாப் பாட்டில் அடிக்கடி அதே அயிட்டம் இருந்து வந்தது. அவனுக்கு வீடு நிசப்தமாயிருந்தால்தான் பிடிக்கும். மாலையில் அவன் வரும்பொழுது டேப் ரிகார்டரில் கோலாகலமாய் சங்கீதம் காதைத் துளைத்துக் கொண் டிருக்கும்.

தாய்தந்தையரை யாத்திரைக்கு அனுப்பி வைத்து விட்டாள். ஃபாக்டரி விஷயமாய் எது பண்ண வேண்டு மானாலும் ரவிசங்கரன் உமாவிடம் முன்கூட்டியே அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

விரைவிலேயே தெரிந்துப் போய்விட்டது— பெய ரளவில் ரவிசங்கரன் எஜமானனேயன்றி அதிகாரம் முழுவதும் அவள் கையில்தான் இருந்ததென்பது. முதல் தேதி வந்ததும் ரவிசங்கரன் எல்லா வேலையாட்களுக்கும் சம்பளத்தைப் பட்டுவாடா பண்ணி விட்டுத் தானும் நாலாயிரம் ருபாய் எடுத்துக்கொண்டு கையொப்ப மிட்டுக்கொண்டான். வீடு திரும்பியதும் கவரில் அதை வைத்து உமாவிடம் தந்தான்.



‘இது என்ன?’ கேட்டாள்.

‘பணம்’

‘எதற்கு?’

‘அம்மாவும் குழந்தைகளும் இந்த வீட்டில் இருக் கிறார்கள். நானும் இங்கேயே இருக்கிறேன். எங்களுக் காக சாப்பாட்டிற்கு செலவாகிறது. அதற்காக’

உமா புருவங்களை உயர்த்தி ஒரு நிமிஷம் அவனை உற்றுப் பார்த்தாள். பிறகு ஏளனமாய் —‘அது எங்க பணந்தானே? அதைத் தந்தால் எங்க கடன் எப்படித் தீரும்?’

என்றுமில்லாதவாறு ரவிசங்கரனின் முகத்தில் கோபம் ஏற்பட்டது.

‘உங்க பணமா? எப்படியாகும்? நான் ஃபாக்டரி வேலையாட்களில் ஒருத்தன். அவங்களோடு சமமாய் வேலை பண்றேன். சம்பளம் வாங்கிக்கறேன். அது என் பணம். ஏனிப்படி இரைந்து கத்தறீங்க? நீங்க என்னிடம் பணம் தரதை வேலையாட்கள் எல்லோரும் தெரிந்துக் கொள்ளனுமா?’

‘நான் ஒண்ணும் கத்தலை. நீதான் அனாவசியமாய் என்னை இழுத்தடிக்கிறாய்,’ உமா கட்டிக் கொண்டிருந்த அந்த பெரிய பெரிய அகலக் கோடு போட்ட புடவையைக் கண்டவனுக்கு அருவருப்பாயிருந்தது.

‘நானா?’ வியப்புடன் கேட்டாள் அவள். ‘ஆமாம். நீதான். போனவாரம் ஃபாக்டரியில் செலந்தியின் மனை விக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னானேன்னு நான் லீவு கொடுத்திருந்தப்ப,உன்னிடம்சொல்லாமல்வேலைக்கு வரலைன்னு நீ சம்பளத்தைக் கட் பண்ணிட்டாய்.

எல்லாத்தையும் நீயே பார்த்துக்கறதாயிருந்தால் நான் ஒருத்தன் எதற்கு அங்கே?'

'உலகத்தாரின் முன்னால் உங்களுக்கு வேலைவெட்டி இல்லைன்னு தெரியாமலிருப்பதற்குத்தான். உங்கம்மா மருமகளின் பணத்தில் சாப்பிடுகிறோமேன்னு வருந்தாமலிருக்கத்தான்.'

'ஓஹோ' அவன் ஆவேசத்தால் பதற்றமடைந்தான். உமாவை அடித்துப் போடவேண்டும் போலிருந்தது அவனுக்கு அப்பொழுது. ஆனால் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

'சரி, இப்போ தெரிஞ்சுடுத்து' விருட்டென்று திரும்பிப் போய் விட்டான்.

'நில்லுங்கள்' உமா கத்தினாள்.

அவன் நின்றான்.

'இந்த நாலாயிரம் உங்கள் எல்லோருக்கும், சரி, அப்ப என் செலவிற்கு?'

அவன் ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தான்.
'உன் செலவிற்கா?,

'ஆமாம் நீங்க என்னைக் கல்யாணம் பண்ணின்டாகி விட்டது. உங்கம்மாவையும் தம்பி தங்கைகளையும் மட்டும் பார்த்துக்கிறப்போ என்னைப்பற்றியும் நினைக்கத் தேவையில்லையா? நீங்க தாராளமாய் சிரமப்பட்டு சம்பாதிக்கிற நிலைமையில் உள்ளபோது நான் எங்கப்பாவின் சொத்தை எதற்கு திங்கணும்?'

அவன் தாடை எலும்புகள் அசைந்தன.

'எத்தனை வேணும் உனக்கு?'



உமா கையிலிருந்த பணத்தைக் காட்டினாள். 'இந்த நாலாயிரமும் என் செலவிற்கே சரியாயிடும் உங்கம்மாவுக்காகவும் தங்கைதம்பிகளுக்காகவும் இன்னும் கொஞ்சம் சம்பாதியுங்கள்,'

அவன் கோபத்தை மென்று விழுங்கியவாறு அவளை நோக்கினான்.

இதப் பாருங்கள், நான் உங்க மனைவியாய் எந்தச் சுகத்தையும் பெறாவிட்டாலும் சமூகத்தில் உங்க மனைவியாகத்தான் கருதப்படுகிறேன். நான் உங்கள் மீது புகார் சொல்லவில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு மதிப்பு என்று ஒன்றுண்டு. உங்க மனைவின்னு நினைச்சுக்கிறதுக்காக நான் சில விஷயங்களில் அதிருப்தியை அடைந்துதான் தீரணும். நான் எனக்காக இல்லாவிட்டாலும் என் பெற்றோர்களின் மான மரியாதைக்காகவாவது உங்களைக் கணவராய் தாங்கிக்க துணிந்து வந்திருக்கிறேன். என் கணவராய் நீங்க கொஞ்சம் மரியாதைகளை ஏற்று நடத்துக்கணும். அந்த மரியாதை எல்லைக்குள் நீங்கள் இருக்கிற வரையிலும் நான் உங்க ஜோலிக்கு வரமாட்டேன்.'

'என்ன? நீ என்ன சொல்றே? தெளிவாய் சொல்லு' அவன் கடுமையாய் கேட்டான்.

உமாவும் கடுகடுப்பாய் நோக்கி விட்டுச்சொன்னாள். 'நேற்று காவேரிங்கிற பொண்ணு பாக்ட்ரிக்கு ஏன் வந்தாள்? உங்களுக்கு சிநேகிதர்கள் இருந்தால் வெளியே சந்தித்துக் கொள்ளுங்கள். என்சம்பந்தப்பட்ட எல்லைக்குள் மட்டும் வரவிடமாட்டேன். நீங்க ஆபீசில் எது பண்ணினாலும் எனக்குத் தெரிந்துவிடும். அதை மாத்திரம் நன்றாய் நினைவு வைத்துக்குங்க.' ரவிசங்கரனின் முகம் சிவந்துவிட்டது. ஒரு வினாடி பதில்பேச முடியாதவனாகி விட்டான்.

உமா அங்கிருந்து போய்விட்டாள்

அவன் மெதுவாய் தன் அறைக்குள் வந்தான். பசங்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். தாய் மிஷினில் ஏதோ தைத்துக் கொண்டிருந்தாள்.

நேற்று காவேரி ஆபீசுக்கு வந்தது உண்மையே. வசந்திக்கு ஜுரம் அதிகமாயிருக்கிறதாம். படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே முடியவில்லையாம். அதைக்கேட்டதிலிருந்து வசந்தியைப் போய் பார்க்க வேண்டுமென்று அவன் உயிர் துடித்தது. எப்படிப் போவது?

வசந்திக்கு உடம்பு சரியில்லை என்றதுமே அவன் மனம் தொய்ந்து விட்டது.

வசந்தி மிக ஆரோக்கியமாய் இருப்பாள். என்னவாயிற்று?

அன்ன ஆகாரமில்லையாம். இளைத்து உருமாறி விட்டாளாம். யார் எது பேசினாலும் அழுதுக் கொண்டேயிருக்கிறாளாம். லீவு போட்டிருந்ததால் சம்பளம் வருவது இல்லை.

'ஆஸ்பிடலில் சேர்த்துவிடச் சொன்னான் ரவி சங்கரன்.

'சேர்க்கலாம். ஆனால் பார்த்துக்கிறவங்க யார்?'

என்றாள் காவேரி' அவனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

காவேரியிடமே வசந்தியை கவனித்துக் கொள்ளும் படி திரும்பத் திரும்ப சொல்லியனுப்பினான்.

வசந்தியின் உடல் நிலையைப் பற்றியே அவனுக்கு ரொம்பவும் கலவரமாயிருந்தது.



ரவிசங்கரன் வசந்தியை ஆசுபத்திரியில் சேர்ப்பித்தான். ஆசுபத்திரியிலருந்து உமாவுக்குப் போன் பண்ணினான். 'வசந்திக்கு உடம்பு சரியாயில்லை நான் இங்கேயே இருக்கிறேன். வீட்டிற்குத் திரும்பி வர தாமதமாகலாமோ என்னவோ?'

அவன் துணிச்சலுக்கு உமா வியந்து விட்டாள். அவன் சொல்ல வேண்டியதை சொல்லி முடித்து விட்டாற் போலவும் வேலை முடிந்து விட்டாற் போலவும் போனை வைத்து விட்டான். உமாவுக்கு ஆவேசம்' வந்தது. என்றுமில்லாமல் காலடியில் வந்து வால் ஆட்டிய நாய்க்குட்டியை ஓர் உதை விட்டாள். அது வீவிட்டு அலறிக் கொண்டு வெளியே ஓடிற்று.

'உமா, உமா பசிக்கிறது' என்ற கிளியைப் பார்த்துக் கோபமாய் முறைத்துவிட்டு 'எதிலாவது விழுந்து சாகு' என்று கூண்டுக் கதவைத் திறந்து விட்டாள்.

ஆனால் கூண்டிற்குள்ளேயே பழக்கப்பட்டுப் போன கிளி கூண்டிற்குள்ளேயே ஒண்டி ஒரு மூலையில் உட்கார்ந்துக் கொண்டதேயன்றி பறந்து வெளியே செல்லவேயில்லை.

சமையல்காரன் வந்து 'ராத்திரிக்கு என்னம்மா சமையல் பண்ணட்டும்?' என்றுக் கேட்டான். 'போ தூர. என்னை ஒண்ணும் கேட்காதே' என்றுக் கத்தினாள்.

டிரைவரை அழைத்தாள் அப்பொழுதே. ரவிசங்கரன் சொன்ன நர்சிங் ஹோமை நோக்கிக் காரில் கிளம்பி விட்டாள். அவ்விடத்திலேயே உண்டு இல்லை என்று கொண்டுவிட வேண்டும் என்ற ஆவேசம் பிறந்தது.

ஆவேசத்துடன், வெடிக்கத் தயாராயிருக்கும் எரிமலையைப் போல நர்சிங் ஹோமை நோக்கிப் புறப்பட்டாள்.

உமா. ஆனால் அங்கே தென்பட்ட காட்சியைக் கண்டு வாயடைத்துப் போய் நின்று விட்டாள். வசந்தி மிகவும் இளைத்துப்போய் விட்டிருந்தாள். அடையாளம் தெரியாமல் உரு மாறிவிட்டிருந்தாள். அத்தகைய வசந்தியை அவன் தாய் பச்சைக் குழந்தையை அணைத்துக் கொள்வது போல பிடித்துக் கொண்டு மருந்தைக் குடிக்கச் செய்துக் கொண்டிருந்தான். ஜன்னியிலிருந்த வசந்தி ஏதோ புலம்பிக் கொண்டிருந்தாள். 'வசு... வசு...' என்கிறான் அவன்.

உமா ரவிசங்கரனையே பார்த்தாள். அவன் வார்த்தையில் தான் எத்தனைக் குழைவு? அக்கண்களிலும் பேச்சிலுந்தான் எத்தனைக் கலக்கமும் துடிதுடிப்பும் தெரிந்தது? அந்த சமயத்தில் அவன் முகத்தைப் பார்த்த யாராலுமே சொல்லிவிட முடியும் அவன் கரங்களில் துவண்டுக் கொண்டிருந்த அந்த எலும்புக் கூட்டுப் பெண்ணின் மேல் அவனுக்குத் தான் எத்தனை உயிர் என்று! அந்த சமயத்தில் தான் வந்த காரியத்தையே மறந்து விட்டபடி நிற்கலானாள் உமா. ரவிசங்கரனைப் பார்த்ததும் வாயிலிருந்து வார்த்தைகளே புரள மறுத்தது.

நிசப்தமாய் கனவில் நடப்பது போல மெதுவாய் ஆசுபத்திரிக்கு வெளியே வந்து விட்டாள். காரில் வீடு திரும்பி விட்டாள். எத்தனை நேரமாகியும் உமாவின் கண்களுக்கு முன்னால் அக்காட்சி அகல மறுத்தது. நிசப்தமான நிழற்படமாய் அது அப்படியே நிலைத்து விட்டது. அவனுள்தான் எத்தனை காதல் நெஞ்சம் இருக்கிறது! கைக் கெட்டியது வாய்க் அகப்படாதது போல தான் அவனை மணந்துக் கொண்டிருந்ததும் அவன் அன்பைப் பெற முடியவில்லையே! வசந்திக்குப் பணம், அழகு, ஹோதா எது இல்லாவிட்டால்தான் என்ன? அவளைக் காதலிக்கும் ரவிசங்கரன் இருக்கிறான். அது தான் அவள் சொத்து வசந்திக்கு முன் தான் எத்தனை வறியவள்!



ரவிசங்கரன் உமாவிடம் வசந்திக்குத் தான் பண்ணிய உதவிகள் ஒன்றையுமே மறைக்கவில்லை. ஆபீசில் மாத நடுவில் அட்வான்சாய் ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டான்.

'எதற்கு இது?' உமா கேட்டாள்.

'வசந்திக்கு வைத்தியம் பண்ணணும்' என்றான் அவன்.

உமா நிமிர்ந்து நோக்கினாள் அவனை. அவன் பயமின்றி எந்தத் தடுமாற்றமுமின்றி சொன்னான். 'இதப் பார். இந்த மாதிரி விஷயங்களை நானே சுயமாய் உன்னிடம் சொல்விடறது நல்லதுன்னு நினைக்கிறேன். வேறுயாராவது வந்து ஏதாவது சொல்லிக் கேட்டுக்க வேண்டியிராது.'

அன்றிலிருந்து அவன் வீட்டிற்குத் தாமதமாகவே திரும்பிக் கொண்டிருந்தான்.

உமா ஆசுபத்திரியில் ரவிசங்கரைப் பார்த்து விட்டு வந்ததிலிருந்தே ஒருவித தீனமான உணர்ச்சியில் மிதந்துக் கொண்டிருந்தாள் எனலாம். அதற்கு முன்னால் ரவிசங்கரனைக் கண்டால் ஒருவித கோபம் மட்டுமே மேலோங்கிக் கொண்டிருந்தது. இப்பொழுது தன்னையறியாமல் ஒருவித இஷ்டமும் அவன்பால் ஏற்படத் தொடங்கிவிட்டது. எத்தனை அன்போடு அப்பெண்ணின் உருகி நிற்கிறான். திரும்பத் திரும்ப அதையே நினைத்துக் கொண்டது அவள் மனம்.

அவனிடம் காதல் உள்ளம் உள்ளது. அதுதான் அவளுக்கு வேண்டியது! ரவிசங்கரன் வசந்தியை உயிராய் பாவிப்பது அவள் அறிந்ததே. ஆயினும் அந்தப் பொறாமையில்கூட அவன் பால் ஏதோ அன்பு பெருக்கெடுத்தோடிற்று. தான் மணந்து கொண்டிருக்கும் இவர் எல்லோரையும் போன்றவரில்லை.

அவனிடம் ஒரு தனிச்சிறப்பு உள்ளது. அவனுக்குப் பணம் ஒரு பொருட்டல்ல. அனாவசியமான வெளிவேஷமில்லை. அவன் தோற்றத்தில் எத்தனை சாமானியமானவனாய் தோன்றுகிறேனோ அத்தனைக்கத்தனை அவன் உள்ளம் மிக உயர்ந்தது. அவ்வாறு யோசிக்க யோசிக்க உமாவுக்குத் தானே வசந்தியாய் இருந்தால் நன்றாயிருக்குமே என்றுத் தோன்றலாயிற்று.

## 13

இரவு மணி பத்தடித்தது.

உமா படுக்கையறையில் உட்கார்ந்திருந்தாள். வீட்டில் எல்லோரும் உறங்கி விட்டார்கள். உமா ரவிசங்கரனுக்காகக் காத்திருந்தாள். ஒரு வாரமாக அவன் வீடு திரும்புவதற்கு இரவு வெகுநேரமாகிக் கொண்டிருந்தது.

வசந்திக்கு உடல் நலமில்லாததால் அவன் கலக்கமடைந்துக் கொண்டிருந்தான். முதல்நாள் அவன் தாமதமாக வந்த பொழுது உமா— 'இப்பத்தானா வரது? உங்களுக்காகக் காத்திருப்பதற்கு எனக்கு என்ன தரீங்க?' என்றுக் கேட்டு விட்டாள். திடீரென்று. அவன் கேளாதது போல தன் அறைக்குப் போய்விட்டான்.

அரைமணிக்குப்பிறகு உமா கதவிற்கருகில் வந்து நின்றாள்.

'நான் இன்னும் எத்தனை நேரந்தான் காத்திருப்பது? நான் என்ன பண்ணிட்டேன்னு எனக்கு இந்த தண்டனை?'

அவன் அறைக்குள் நாற்காலியில் வீற்றிருந்தான்.



உமா. தயவு செய்து. இன்றைக்கு மாத்திரம் என்னை ஒன்றும் தொந்தரவு படுத்தாதே.' அக்குரலில் விவரிக்க இயலாத வேதனையும் துன்பமும் இழையோடிற்று.

'இன்று! இன்றில்லாவிட்டால் என்றைக்குதான் உங்களைச் சொல்லும் அதிகாரம் எனக்கிருக்கு? எழுந்து சாப்பிட வாருங்கள்.'

'எனக்குப் பசிக்கலை.'

'உங்களுக்காக காத்துக் கொண்டிருந்து நானும் சாப்பிடலை.'

'எனக்காகக் காத்திருக்க வேண்டாம்னு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்?'

'எத்தனை முறை சொன்னாலுந்தான் என் மூளைக்கு ஏறலையே? உங்களுக்குப் பசிக்கலைன்னால் சொல்லிடுங்க நானும் படுத்துக்கிறேன் நான் மத்யானம் டிபன் கூட சாப்பிடலை.'

தனக்காக உமா சாப்பாட்டைத் துறப்பது அவனுக்கு சரியாய் தோன்றவில்லை மௌனமாய் எழுந்து வந்தான். அவன் கைகால் கழுவிக்கொண்டு உடைமாற்றிக் கொண்டு வருவதற்குள் உமா பரிமாறி விட்டிருந்தாள். சாதம் சூடாக இருந்தது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. சமையல் காரன் இருந்த போதிலும் அவனுக்காக அவள் அடிக்கடி இவ்வாறு சமைக்கலானாள். உமாவுக்கு சமையல் வரும் என்றறிந்ததும் அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. சந்தோஷமாகவுமிருந்தது. பெண்களுக்கு சமையலைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும் என்ற கொள்கையுடையவன் அவன்.

உமா சிற்சில பழக்க வழக்கங்களால் அவனைச் சிறைப்படுத்த முனைந்தாள். இரவு அவன் திரும்பும்

வரையிலும் சாப்பிடாமலிருந்தாள். தன் பேச்சாலும் குணத்தாலும்காமாட்சியம் மாளையும் குழந்தைகளையும் தன் வலையிலிட்டுக் கொண்டுவிட்டாள். ரவிசங்கரன் நல்லவன் தான். ஆயினும் அவன் நல்ல குணத்தைப் பிடித்துள்ள கிரணம் விடுபடுவதற்காக காத்திருக்கத் தலைப்பட்டாள் உமா. ரவிசங்கரனின் அன்பைப் பெற வேண்டுமானால் அவனுக்குப் பிடித்த காரியங்களைப் பண்ண வேண்டும், தான் இதுவரையிலும் அவனுக்கு விரோதமாய் நடந்துக் கொண்டு மேலும் விலகி வந்திருக்கிறாள்!

பெரிய பூப் போட்ட புடவைகளையும் கட்டம் போட்ட குறுக்குக் கோடிட்ட புடவைகளையும் வேலைக் காரிக்குத் தந்து விட்டாள்.

அவனுக்குப் பிடிக்காத அயிட்டங்களை சாப்பாட்டிலிருந்து விலக்கி விட்டாள். முன்பு போல தேவையில்லாத போதிலும் அவனை வம்பிற்கிழுப்பதை விட்டாள். அவனை விட்டு ஒதுங்கி இருக்கத் தொடங்கினாள். ரவிசங்கரன் உமாவிடம் தோன்றியிருந்த இம்மாறுபாட்டை உணரத் தொடங்கினான். உமாவுக்குத் தன் மீது விரக்தி தோன்றிவிட்டது என்றெண்ணி மகிழ்ந்தான்.

வசந்தி கட்டிலில் ஆயாசத்துடன் படுத்திருந்தவள் கண்ணைத்திறந்தாள், குனிந்து ஒரு உருவம் 'எப்படி இருக்கு?' என்றுக் கேட்டது புரிந்தது.

எதிரே ஒரு பெண்மணி வீற்றிருந்தாள். வசந்தியைப் பார்த்து அன்போடு ஒரு புன்னகையை உதிர்த்தாள்.

'என்னைத் தெரிகிறதா, உங்க ரவிசங்கரனின்மனைவி உமா' என்றாள்.

வசந்தி சரேலென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள். 'நீங்க... நீங்க...' கலவரத்துடன் சொல்லப்



போனால், 'பரவாயில்லை. நான் ஒன்றும் அந்நியமனுஷி இல்லை உங்களுக்கு. உங்க ரவிசங்கரனின் மனைவி தானே, மரியாதை எதற்கு?' என்றாள்.

வசந்தி குழப்பத்துடன் நோக்கினாள்.

'அவர் எப்பொழுதும் உங்களைப்பற்றி என்னிடம் சொல்லுவார்—அவர் நினைவெல்லாம் உங்க மீதுதான்னு நினைக்கிறேன். உமா, வசந்தியைப்போன்ற நல்லமனுஷி உலகத்திலேயே கிடையாது, அவள் எனக்குஆப்தசிநேகிதி, அவள் சிநேகம் ஒரு மறக்கமுடியாத அனுபவம் என்பார். எங்க மாமியாருக்கு என்னவோ இதெல்லாம் ஒன்றுமே புரியாது. அவங்க சந்தேகத்துடன் பார்ப்பாங்க அவரை. அவங்க பெரியவங்க இல்லையா? அவங்களுக்கு நம்மைப் புரிஞ்சுக்க முடியாது. ஒரு ஆணும் பெண்ணும் கொஞ்சம் கலந்து பேசிட்டால் போதும், கண்ணும் காதும் வைத்துப் பேசிடுவாங்க. அவருக்கு உங்களைக் கல்யாணம் ஆவதற்கு முன்னாடியே பரிச்சயம், கல்யாணம் ஆகிவிட்டதால் அந்த பரிச்சயத்தை முறித்துக்கத் தேவையில்லைன்னு சொன்னாலும் புரியாது. அவர் சங்கதிதான் உங்களுக்குத் தெரியுமே. தெரியுமாவது? அவரை உங்களைக் காட்டிலும் நன்றாய் புரிஞ்சுண்டவங்க கிடையாதுன்னுஎனக்குத் தெரியும். பெருமையாய் சொல்லிக்கலை, அப்படிப்பட்ட நல்ல இயல்புடையவரை என் கணவராய் பெற்றது என் பூர்வ புண்ணியந்தான். அவர் சிநேகிதியாயிருப்பதால் நீங்களும் அப்படித்தான் எண்ணியிருப்பிங்கன்னு நினைக்கிறேன் இல்லையா?'

வசந்திக்கு வாய்வார்த்தைப் புரள மறுத்தது. விநோதமாய் நோக்கலானாள் உமாவை.

உமா தன்னைச் சந்திக்க வந்ததே ஆச்சரியம். அதிலும் இத்தனை சரளமாய் தன்னுடன் பழக முற்படுவது மேலும் அதிசயந்தான். வசந்தியின் வியப்பைப் பொருட்படுத்தாத உமா, 'தான், நீங்கள் ஆசுபத்திரியில் சேர்ந்த அன்றைக்கே

வருவதாய்தான் இருந்தேன். அவர் தான் 'நான் அழைச்சுண்டு போறேன்' என்றார். சொன்னாரேயொழிய அது நடக்கிற காரியமா? அவருக்கு ஓய்வு ஏது? நீங்க மருந்து ஏதாவது சாப்பிடணுமா?'

நினைவூட்டுவது போல கேட்டாள் வசந்தி தலையாட்டினாள். உமா எழுந்துச்சென்று மேஜையின் மேலிருந்த மருந்துகளைக் கொணர்ந்தாள். 'இந்த மாத்திரையை எத்தனை சாப்பிடணும்? இந்த காப்சுல்?'

வசந்தி சொன்னாள். உமா குடிக்கத் தண்ணீரைக் கொண்டு வந்துத் தந்து மருந்தை சாப்பிடச் செய்தாள். நெற்றியில் வியர்த்த வியர்வையைப் புடவைத்தலைப்பால் ஒற்றி எடுத்தாள்.

'உங்களிடம் ஒரு ரகசியத்தைச் சொல்லட்டுமா?' என்றாள்.

'சொல்லுங்கள்' வசந்தி பயத்துடன் நோக்கினாள்,

'நான் இங்கே வரது அவருக்குப் பிடிக்கலை. அதான் அழைச்சுண்டு போறேன்னு சாக்குச் சொல்லித் தப்பிட்டுண்டிருந்தார். அதை ஊகிச்சுண்டு நானே கப் சிப்னு வந்துட்டேன். நான் இங்கே வந்து உங்களைப்பார்த்ததை அவரிடம் சொல்ல மாட்டேன். நீங்க சொல்லணும்னு இருந்தால் சொல்லிக்குங்க. எனக்கொண்ணும் ஆட்சேபணை இல்லை. ஒரு நாலு திட்டுத்திட்டிடப்போறார்? அவ்வளவுதானே' என்றாள்.

ஐயோ, அவ்வளவுக்குத் துணிவேனா, நானா?' என்றாற் போல ஒரு பார்வை பார்த்தாள் வசந்தி.

உமா வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள், தன் தாம்பத்திய வாழ்க்கையைப் பற்றியே பேசினாள்.

ரவிசங்கரன் தன்னை எத்தனைப் பிரியமாய் நடத்துகிறார் என்று எடுத்துச் சொன்னாள். அவர்களிருவருக்கும்



இடையே கருத்து வேற்றுமையே கிடையாதாம் சாப்பிட்டால் இருவரும் சேர்ந்துதான் சாப்பிடுவார்களாம், சினிமாவுக்குப் போனால் சேர்ந்துதான் போவார்களாம். ஒருவரைவிட்டு ஒருவரால் இருக்கவே முடியாதாம் குழந்தைகள் பிறக்கவில்லையே என்று ரவிசங்கரனுக்கு ரொம்ப வேதனையாய் இருக்கிறதாம்.

சிரித்த முகத்துடன் இதையெல்லாம் செவிமடுக்க மிகப் பிரயாசைப் பட வேண்டியிருந்தது வசந்திக்கு. கேட்பவர்களுக்கு, தடபுடல் இன்றி அமரிக்கையாய் அவள் எல்லாவற்றையும் சொல்லிக் கொள்வது போலவேயிருந்தது.

ரவிசங்கரன் உமாவைப் பிரியமாய் கவனித்துக் கொள்வதை கவனமாய் கேட்கலானாள். வசந்தி. வசந்தியின் உள்ளத்தில் புயலைப் போன்ற உணர்ச்சி உதிக்கலாயிற்று.

உமா எழுந்திருந்தாள். 'போயிட்டு வரேனுங்க. உடம்பை ஜாக்கிரதையாய் பார்த்துக்குங்க. உங்க உடம்பு சரியானதும் கண்டிப்பாய் வந்து எங்க வீட்டில் 4நாள் தங்கணும்' என்றாள். வசந்தி தலையசைத்தாள் உமா போய்விட்டாள். வசந்தி சூனியத்தை நோக்கினாற் போல் வீற்றிருந்தாள். உமாவின் வார்த்தைகளே செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. ரவிசங்கரன் உமாவை அத்தனைப் பிரியமாகவா நடத்துகிறான்? அவள் முகத்தைப் பார்த்தாலே புரியவில்லையா அது? உமாதான் எத்தனை அதிர்ஷ்டசாலி! வசந்திக்கு உமாவின் பால் பொறாமை தோன்றவில்லை. தெய்வத்தின் மீதுதான் கோபம் வந்தது எல்லாம் ஒருத்தருக்கேவா தரவேண்டும்?

ரவிசங்கரன் யார் இப்பொழுது: உமாவின் கணவன். வசந்திக்கு ஏதோ சிநேகிதன் மட்டுமே.

அன்று ரவிசங்கரன் மிகத்தாமதமாய் வந்தான். பிற்பகல் பாக்டரிக்கு வருவதாய் உமா செய்தி சொல்லியனுப்பியிருந்தாள். வெகு நேரம் காத்திருந்தும் வரவேயில்லை. வீட்டிற்குப் போன் பண்ணினால் இல்லை. கிளம்பி வெகு நேரமாகிவிட்டது என்றாள் தாய். வழியில் ஏதாவது சிநேகிதியைப் பார்த்து நின்றிருக்கலாம் என்றெண்ணிக் கொண்டான்.

ஐந்து மணிக்கு உமா போன் பண்ணினாள். ஒரு சிநேகிதியைப் பார்க்கப் போய்விட்டாளாம். நேரமாகிவிட்டதால் வரமுடியவில்லையாம். ரவிசங்கரனுக்குதேகம் பற்றி எரிந்தது. ஆசுபத்திரிக்கு வந்தான்.

வசந்தி தனித்து அமர்ந்திருந்தாள். வந்ததுமே கேட்டான். 'இன்னிக்கு உடம்பு எப்படி இருக்கு?'

தினத்தைப் போல இல்லை இன்று வசந்தி.

மௌனமாய் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் அவள் கண்களில் பளிச்சிடும் சந்தோஷம் மின்னவில்லை.

'மருந்து சாப்பிட்டாயா?'

எங்கோ பார்த்துத் தலையாட்டினாள்.

ரவி சங்கரனுக்கு வசந்தியின் மௌனம் விளங்கவில்லை. அவனால் அதற்குமேல் தாளமுடியவில்லை நாற்காலியைவிட்டு எழுந்து வந்து வசந்திக்கு எதிரே நின்று—

'வசு... என்னவாயிடுத்து? ஏன் இப்படி இருக்கே?' என்று கேட்டான்.

வசந்தி மௌனம் வகித்தாள்.

'சொல்லு வசு, என்னவாச்சு? நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்?' கடுமையாய்க் கேட்டான்.



வசந்தி திரும்பி அவன் கண்களை உற்றுப்பார்த்தாள்.

அக்கண்களில் வேதனை தென்பட்டது. வசந்தி, ஆழ்ந்து அவன் இதயத்தின் அடித்தளத்தில் என்ன விருந்தது என்பதைக் கண்டுப் பிடித்து விடவேண்டும் என்பதுபோல உற்று நோக்கினாள் அவனை. இதெல்லாம் வேஷந்தானா?, வசந்தியால் தாளமுடியவில்லை. இவன் யார், ரவிசங்கரன் இல்லையா? இல்லை, உமாசங்கரன்! உமாவின் கணவன் தான். அதை இத்தனை நாளாய் தன்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லையே. அப்படித் தன்னை மயக்கி விட்டிருக்கிறான், வசந்திக்கு அவன் மேல் கோபம் வரவில்லை. தன் மீதே தனக்குக் கோபம் வந்தது. திருமணமானதும் அவன் அன்னிய மனிதன். தன்னுடையவன் என்று எப்படி எண்ணிவிட்டாள்? வசந்திக்கு அழுகை வந்தது. தன்னுள் மிக நுட்பமான உணர்ச்சி ஏதோ தகித்துக் கொண்டிருப்பது போன்ற வேதனை அது. 'வசு...' அவன் குரல் குழைவாய் வந்தது. அவன் வசந்திக்கு அண்மையில் வந்தான். தலையை முகத்தோடு உராய்ந்து.

'என்னவாச்சு, சொல்லு?'

'ஒண்ணுமாகலை, ஒண்ணுமாகலை'

'பின்னே ஏன் இத்தனை வருத்தப்படுகிறாய்?'

'புத்தி இல்லாமல்! எனக்கு புத்தியே இல்லை'

'என்னது வசந்தி இது?' அவன குரலுக்கு உருகிவிட்டாள். இனி தாள முடியவில்லை அல்லால் உமா வந்ததைச் சொல்லி விடுவோம் என்று நாக்கு நுனி வரையிலும் வந்துவிட்டது' உமாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்துவிட்டது. திட்டுவானாமே! ஏன்? உமா தன்னிடம் ஏன் வரக்கூடாது. வந்தால் தவறென்ன? இவன் பண்ணுவதெல்லாம் தெரிந்துடப் போகிறதே என்றா? ஊஹூம், உமா வந்ததாய் சொல்லக் கூடாது.

சொன்னால் வீட்டிற்குப்போய் திட்டுவான். பிறகு உமா வரமாட்டாள். ரவிசங்கரனைப் பற்றி ஏதேனும் தெரிந்துக் கொள்ளணும் என்றால், தான் உமாவோடு பரிச்சயம் பண்ணிக்க வேண்டும்.

'வசு, ஏன் இப்படி மௌனமாய் இருக்கிறாய்?'

'ஒன்றுமில்லை என்றாள் வசந்தி.

பிறகு வசந்தி அவனோடு உரையாடினாள் ஆனால் இருவருக்குமிடையே ஏதோ குறுக்குச் சுவர் இருந்தாற் போலவே உணரலானான் ரவிசங்கரன். அவன் மனம் மிகக் கலவரமெய்திற்று. வசந்தி ஏன் இப்படி இருக்கிறாள் என்றுப் புரியவில்லை.

அவன் இரவு நெடு நேரங்கழித்தே வீடு திரும்பினான் சாபபிட்டுக் கொண்டிருக்கையில் உமா கேட்டாள்.

'வசந்தி எப்படி இருக்கா'

அவன் ஆச்சரியத்துடன் தூக்கிவாரிப் போட அவளை நிமிர்ந்து நோக்கினான். உமா சாதத்தைப் பிசைந்துக் கொண்டே சொன்னாள்— 'சொல்லுங்க பரவாயில்லை. எனக்கு ஒன்னும் பொறாமையில்லை' அவளை உங்க சிநேகிதியாய் மதிக்கிறேன். கோபம் ஏதாவது எனக்கு இருந்தால் அது உங்கள் மேல்தான் அன்றி வசந்தியின் மேல் இல்லை ' என்றாள்.

ரவிசங்கரன் வாயைத் திறக்க முடியாதவனாய் அப் படியே பார்த்துக் கொண்டிருந்தான் அவளை.



11347
296651

14

ரவிசங்கரன் பழரசத்தைப் பிழிந்து [illegible] கொணர்ந்தான். வசந்தியின் தோளைப் பிடித்து எழுப்பி உட்கார வைக்கக் குனிந்தான்.

'வேண்டாம்' வசந்தி தானே பலவந்தமாய் சக்தியை வரவழைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண் டாள், தலை கிர்ரென்று சுற்றலாயிற்று. கையால் தலை யைப் பிடித்துக்கொண்டு 'அம்மா...' என்றாள். ரவிசங் கரன் வசந்தியின் தலையையும் முதுகையும் கையால்தடவி விட்டான். அவன் உதட்டில் வைத்ததை அருந்த பிடிக் காதவனைப்போல முகத்தைச் சுளித்துக்கொண்டாள். கையிலிருந்த தம்ளரைத் தானே வாங்கிக் கொண்டு அருகி லிருந்த மேஜையின் மீது வைத்தாள்.

'குடி' என்றான் அவன்.

'குடிக்கணும்னு இல்லை' முணுமுணுத்தாள் அவள்.

'குடிக்காவிட்டால் பலவீனம் வரும்' குழைவாய் சொன்னான் அவன்.

ரவிசங்கரன் கெஞ்சலானான்.பலவந்தப்படுத்தினான். ஆனால் லாபமில்லை. வசந்தியை அன்று முழுவதும் ஆரஞ்சு ரசம் மட்டுமில்லை, மருந்துகளைக்கூட சாப்பிட வைக்க முடியவில்லை அவனால்.

வசந்தியிடம் ஏதோ மாறுபாடு தெரிகிறது. அது ஏன் எப்படி வந்ததென்றுதான் புரியவில்லை அவனுக்கு. யாரே னும் வந்திருப்பார்களோ? ஏதாவது சொல்லியிருப்பார் களோ!

அவன் சுமார் ஒருமணி நேரம் உட்கார்ந்திருந்தான் வசந்திக்கு மருந்து கொடுப்பதற்கு அவன் இரண்டு மூன்று முறை நேரத்தைப் பார்த்துக் கொண்டான். அவன்போக்கு அவளை வேறு விதமாய் எண்ண வைத்தது. வீட்டிற்குப் போக அவசரப்படுவதாய் எண்ணிக் கொண்டாள்.

'உமாவை எங்காவது அழைத்துச் செல்வதாய் சொல்லியிருப்பான் போலும், அதான நேரத்தை அவ்வாறு அடிக்கடி பார்த்துக் கொள்கிறான்' என்றெண்ணிக்கொண்டாள்.

'நீங்க போங்கள்' என்றாள்.

'நானா? ஏன்? எதற்கு? யாராவது இப்போ இங்கே வரப்போறாங்களா?' என்று கேட்டான் விளங்காமல்.

'யார் வருவாங்க? எனக்கு யார் இருக்காங்க வரத்துக்கு?' என்றாள். வசந்தியின் குரலில்; வெறுப்பு தொனித்தது.

அவன் ஒருவினாடி வசந்தியையேஉற்றுப்பார்த்தான். வசந்தி உத்திரத்தைப் பார்த்து யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

'வசு'

'உம்'

'என்ன யோசிக்கிறாய்?' அவன் தலைமேல் கையை வைத்துக் கேட்டான்.

'ஒன்றுமில்லை.'

'என்னிடம்கூட ஒளிக்க முடியுமா நீ!'

உத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வசந்தி திரும்பினாள். அவனை நோக்கி. அப்பார்வை பொறுமையின்றி



வேதனை நிரம்பி வழிந்ததாய் தோன்றிற்று. 'என்னிடம் நீங்க மட்டும் மறைக்கலாமா?' என்று திருப்பிக் கேட்பது போலிருந்தது. அவன் தத்தளித்தான். வசந்திக்கு என்ன வாகி விட்டது?

'நீங்க வீட்டுக்குப் போங்க' என்றாள்.

'போகச் சொல்லி நீ சொல்லணுமா? எனக்குத் தெரியாதா? இதென்னது, இன்னிக்கு வினோதமாய் இருக்கிறதே நீ பேசுவது?' என்றான் அவன்.

'எனக்குப் பைத்தியம் பிடித்துடுத்து, போதுமா?' எழுந்து உட்கார்ந்து ஆவேசத்துடன் மொழிந்தாள்.

'வசந்தி,' அவன் எழுந்து வந்து சட்டென்று அவள் தோளைப் பிடித்துக் கொண்டான். வசந்தி அவனை உதறி விட்டாள்

'என்னை விடுங்க, உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும், நீங்க பேயிடுங்க. நீங்க எனக்காக இரங்கத் தேவையில்லை.'

அவன் பேசவில்லை.

வசந்தியின் வார்த்தையிலிருந்த பொருளைக் கண்டுப்பிடிக்க முயல்வது போல சற்று மௌனமாயிருந்துவிட்டான். எனக்கு உடம்பு சரியில்லாமலிருந்தது, நீங்க எனக்கு உதவி புரிந்தீங்க, உங்களுக்கு என் நன்றி. இனி எனக்காகப் பாடுபடத் தேவையில்லை, தயவுசெய்து போயிடுங்க, ப்ளீஸ்,... 'கைளைக் கூப்பினாள் அவள்.

அவன் அக்கரங்களைப் பற்றிக் கொண்டான்.

'வசந்தி, இன்னிக்கு உனக்கென்னவாயிடுத்து? ஆவேசம் போன்ற உணர்ச்சியை மென்று விழுங்கினாற் போலிருந்தது அவன் வார்த்தை'

'ஒண்ணுமாகலை, எனக்குத் தெப்பு நன்றாய் வந்துடுத்து 'உடல்பில்சொரணை வந்துடுத்து. உங்களைத் தொந்தரவுப் படுத்தக்கூடாதென்ற உண்மையும் புரிந்து விட்டது. போங்கள். போய் நிச்சிந்தையாய் இருந்துக்குங்க' என்றுத் தோளைப் பிடித்துக் தள்ளினாள் அவனை.

அவன் கட்டிலை விட்டு எழுந்திருந்தான். வசந்தியை வினோதமாய் நோக்கினான், பிறகு மெதுவாய் ஓசையின்றி வெளியேறிவிட்டான். வசந்தி அப்படியே அமர்ந்திருந்தாள்.

அழுகை திடீரென்று நின்று விட்டது. ரவிசங்கரன் போய் விட்டான். தான் போகச் சொன்னவுடன் போய் விட்டான். அவனுக்கு உண்மையிலேயே தன் மீது இஷ்டம் இருக்குமானால் போவானா? போகத்தான் முடியுமா? பலவீனமாயும் உடல்நலமின்றி நலிந்தும் இருந்த வசந்திக்கு அந்த நோத்தில் ஏதோ அனாதரவான தனிமையானது வந்துக் சூழ்ந்துக் கொண்டாற் போலாயிற்று.

ரவிசங்கரன் போய்விட்டான். வெளியே கார் காத்துக் கொண்டிருந்திருக்கும். காரிலேயேதான் வந்தும் இருப்பான். ஆம், உமாவின் கணவன் காரில் வராமல் நடந்தா வருவான்? பஸ் ஸ்டான்டில் பஸ்ஸிற்காக தவமிருப்பானா பின்னே? கார் ஆனதால் ஐந்தே நிமிஷத்தில் வீட்டிற்குப் போயிருப்பான். அங்கே உமா காத்துக்கொண்டிருந்திருப்பாள். உமாவுக்குக் கணவன் பேரில் எத்தனைப்பிரியம் என்பதுதான் அவள் வார்த்தைகளிலிருந்து வெளிப்பட்டு விட்டதே! 'ஏங்க, என்னவோ போலிருக்கீங்க என்றுக் கேட்பாள். ஒருக்கால் அவன் மடியிலேயே உட்கார்ந்துப்பானோஎன்னவோ? 'அப்பப்பா...அந்த வசந்திக்கு என்ன வாச்சுன்னே தெரியலை, இன்னிக்கு ஒரே அழுகைதான்' என்பான் போலும்.

வசந்திக்கு அருவருப்பாயிருந்தது. அவன் வேஷத்தை உணரமுடியாத தன் அசட்டுத்தனத்திற்கு அழுகைதான்



வந்தது. அவளுக்குத்தான் எத்தனைத் தனிமை வந்துச் சூழ்ந்துக் கொண்டு விட்டது! ரவிசங்கரனின் மூலமாய் அன்போடு கலனித்து வந்து அக்காவையும் உதறிக் கொள்ள நேர்ந்தது. தான் பார்த்த சம்பந்தங்களை வேண்டாம் என்று ஒரேப் பிடிவாதமாய் மறுத்து விடுவதைக் கண்டு அக்காவுக்குத் தலைகால் புரியாத கோபம் வந்துவிட்டது. இறுதியில் என் பேச்சைக் கேளாத பொழுது என் வீட்டில் மட்டும் எதற்கு இருக்கணும், போய் விடு.' என்று சொல்லி விட்டாள்.

அதன்பிறகும் கூட அங்கேயேதான் இருந்து வந்தாள். எத்தனை வெட்கங் கெட்டவள்! அக்கா சொன்னதும் நிஜந்தான். அவள் வீட்டிலிருக்க வேண்டுமென்றால் அவள் பேச்சுப்படி தானே இருக்கவேண்டும்? இல்லாவிட்டால் வீட்டைவிட்டுப் போய்விட வேண்டும், அவள் இவ்விரண்டையுமே பண்ணவில்லை.

அக்காவுக்கு எ ப் ப டி ச் சொல்வதென்றுதான் வசந்திக்குப் புரியவில்லை. ரவிசங்கரனைத் தவிர வேறு யாரையும் தன்னால் கணவனாய் ஊகித்துக் கொள்ளவும் முடியாது என்றால் அவளுக்குப் புரியாது. வீண் பசப்பல் என்பாள். ஒருவரைக் காதலித்து அவர் காதலையும் பெற்று கனவு கூட்டைக் கட்டிக்கொண்டு அதிலேயே அவனுடன் குடித்தனம் பண்ணித் தான் அடைந்த ஆனந்தத்தை அவளால் எடுத்துச் சொல்லத்தான் முடியுமா? அவர்கள் இருவரும் கணவன் மனைவியாக முடியவில்லை. ஆனால் உள்ளத்தில் அக்கூட்டைக் கலைத்து விட்டு வேறொருவனுடன் அக்கூட்டைக் கட்டிக் கொள்வதென்பது அவளால் இயலாது. ஏதோ ஒரு கல்யாணத்தைப் பண்ணிப்போம் என்று இயந்திரமாய் கழுத்தை நீட்டும் கல்யாணம் அவளுக்குத் தேவையில்லை கல்யாணம் பண்ணிக் கொண்டால் அதன் மூலம் தனக்கு முழு சுகமும் கிட்டவேண்டும்.

அவை கிடைக்காத பட்சத்தில் கல்யாணம் என்று ஒன்று எதற்கு? ரவிசங்கரன் அனுபவிக்கும் நரகத்தைத்தான் அவளும் கண்டுவருகிறாளே!' என்றெண்ணிக்கொள்வான். எத்தனை பைத்தியக்காரி அவள்?

அவள் நரகவேதனையை அனுபவிக்கிறாள் என்றால் அவனுக்குத் திருப்தி. அத்திருப்தியிலேயே சந்தோஷம் மேலிடுகிறது. தன்னிடம் பெறும் சந்தோஷத்தை அவனால் அத்திருமணத்தின் மூலம் பெற முடியவில்லை என்றால் அவள் உள்ளத்திற்கு தான் அது எத்தனை ஆறுதலாயிருக்கிறது? அவனுக்காகவே இப்படியே இருந்துவிட வேண்டும் போலிருந்தது. அக்காவுக்குக் கோபத்தை வரவழைத்து விட்டாள். சமூகத்தின் பழிப்புக்களைத் தாங்கிக் கொண்டாள்.

அவனுக்கு முன்னால் இதெல்லாம் துச்சம் என்றெண்ணினாள்.

எல்லோரையும் துறந்துவிட்டு அவனை நோக்கி வந்திருக்கிறாள். அவனோ, அவளிடம் வேஷம் போடுகிறான்! அங்கு மனைவியுடன் சுகமாய் குடுத்தனம் பண்ணிக் கொண்டே தன்னிடம் வந்து எந்த சுகமும் இல்லை என்று மறைக்கிறான். உமாதான் இன்று வந்துத் தன் கண்ணைத் திறந்தாள்,

'போ' என்றதும் போய்விட்டான்.

தன்மீது நிஜமாய் அன்பிருந்தால் அவ்வாறு போயிருப்பானா?

வசந்திக்கு அழுகை வந்து விட்டது. அவளுக்கு யாருமே இல்லை. யாருமே கிடையாது! தன் இந்த நிலைமைக்குக் காரணம் அவனைக் காதலித்தது தானே?

வாசலில் காலடியோசைக் கேட்டது. விக்கி விக்கி அழுதுக் கொண்டிருந்த வசந்தி சட்டென்று அழுகையை



நிறுத்திவிட்டு கண்களைத் துடைத்துக் கொண்டுத் திரும்பிப் பார்த்தாள். வாசலில் ரவிசங்கரன் நின்றுக் கொண்டிருந்தான். அவனுடன் டாக்டரும் இருந்தார்.

'என்னவாயிடுத்து? என்னவோ ரகளை பண்றீங்களாமே!' டாக்டர் அருகில் வந்தார் வசந்திக்கு வெட்கமாயிருந்தது. ரவி சங்கரனைப் போகச் சொல்லிவிட்டுத் தான் துணிச்சலுடன் நடந்துக் கொள்ள முடியாமல் போனதற்கு — டாக்டர் சோதித்தார்.

'ஓய்வெடுத்துக்கோம்மா. எதற்கு அத்தனை மனம் வருந்துகிறாய்?' என்றார்.

வசந்திக்கு அவர் வார்த்தை காதில் விழவில்லை. ரவிசங்கரனையே அவள் பார்வை அளந்துக் கொண்டிருந்தது. ரவி போகவில்லையா? தன்னை விட்டு விட்டு வீட்டிற்குப் போய் விடவில்லையா? வியப்புடன் நோக்கினாள்.

டாக்டர் பரிசோதித்து மருந்தைத் தந்து விட்டு அகன்றார். அவர் போனதும் ரவிசங்கரன் கட்டிலில் வந்து அமர்ந்துக் கொண்டான்.

'வசு, டாக்டர் சொன்னதைக் கேட்டாயா? நீ எதற்கோ வருந்துகிறாய் என்றார்.'

வசந்தி பதில் பேசவில்லை.

'சொல்லு, என்னிடம் கூடவா ஒளிவு மறைவு? நான் உனக்கு யாரோவா?'

வசந்தி பதிலளிக்கவில்லை. அடுத்த நிமிஷம் எழுந்துச் சென்று அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சிறு குழந்தையைப் போல விசும்பலானாள்.

'சொல்லு' அவன் கேட்டான். வசந்தியின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் உதிர்ந்தன. அந்த வினாடியில் தெளிவாய் புரிந்துவிட்டது—தான் படும் இந்த உபாதை அவனால் ஏற்பட்டதில்லை. தானே சுயமாய் ஏற்படுத்திக் கொண்டதுதான் என்பதே அது.

அவனும் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. அவ ஊமை வேதனையைப் புரிந்துக் கொண்டவனாய் மௌனமாய் இருந்துவிட்டான். கொஞ்சநேரங்கழித்து வசந்தி மெதுவாய் கேட்டாள்.

'நீங்க இந்தமாதிரி ஆசுபத்திரிக்கு வருவது உமாவுக்குத் தெரியுமா?'

'தெரியும்.'

ஒண்ணும் சொல்ல மாட்டாளா?'

'எதற்கு சொல்லணும்? சொன்னால் மட்டும் நான் பொருட்படுத்துவேனா?'

அவன் ஒரு நிமிஷம் பொறுத்து வசந்தியின் தலையை பலவந்தமாய் தூக்கிக் கேட்டான். 'ஏன் இப்படிக் கேட்கிறாய்?'

வசந்தி தலையைத் தூக்க விடவில்லை. 'சும்மாதான்.'

'இந்த மாதிரி யோசனைகளால் மூளையைக் கெடுத்துக்கிறாயா?'

அவள் தலையை மார்போடமுத்திக் கொண்டே கேட்டாள்.

'உங்களுக்குக் கல்யாணமாகி விட்டது. நீங்க...நீங்க இப்படி என்னைப் பார்க்க வரது நன்றாயிருக்கிறதா? உமா என்ன நினைப்பாள்? உலகம் என்ன நினைக்கும்?'



'உமாவுக்கு உன்னைப்பற்றி எல்லாம் தெரியும். உன் மேல் எனக்கு இஷ்டம், அதானே வேண்டியது எனக்கு. உமா என்னோடு சண்டையிட்டால் தனக்கு நான் நஷ்டம் என்பதைத் தெரிந்துக் கொண்டு விட்டாள் நன்றாய். என்னோடு ஒத்துழைக்கத் துணிகிறாள். அவளுக்கு நாமும் கொஞ்சம் பயம் தரவேண்டும்—உலகத்தைப் பெண்ணான நீயே பொருட்படுத்தாதபோது, நான் பொருட்படுத்துவேனா? எனக்கு உன்னைவிட உலகம் ஒன்றும் பெரிய முக்கியமில்லை. இதப்பார், உமாவை நான் ஏதோ கல்யாணம் பண்ணிக்க நேர்ந்திடுத்தேயன்றி உன்னை என்னால் விடவே முடியாதென்று அவளுக்குத் தெரிந்தது தான்.'

'உங்களிருவருக்கும் சண்டை வராதா?'

'வரும், ஏன் வராது? காதலித்தவங்களுக்குள் சண்டை வந்தால் உலகமே தலைகீழாகி விட்டாற்போலாயிடும். ஆனால் எஞ்சியவங்களோடு சண்டை வந்தால் கோபந்தானே வருமேயொழிய மனசு உடைஞ்சு மட்டும் போயிடாது. உங்க அக்காவாவோடு சண்டை போடுவதற்கும் என்னோடு மனஸ்தாபப்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தை கவனிக்கலையா? வசு...என்னை நம்பு' அவள் தலையை நிமிர்த்திச் சொன்னான்.—

'இதப்பார் வசு...... மனுஷங்களுக்கிடையே நம்பிக்கையைவிட பெரிய பலம் வேறில்லை. வேத மந்திரங்களுடன் புரோகிதர்களுக்கு முன்னால் போடும் மூன்று முடிச்சுக்களைவிட இருமனங்களுக்குள் போடப்படும் இந்த முடிச்சு மிக பலம் வாய்ந்ததென்பதே என் அபிப்பிராயம்.'

வசந்திக்கு ஏதோ போலாகி விட்டது. உமாவின் வார்த்தைகள் ஒரு விதத்தில் கலவரத்தையளித்தால் இவன் வார்த்தைகளோ வேறுவிதமாய் கலக்கத்தை ஊட்டுகின்றன.

உமாவின் வார்த்தைகள் இருவருக்குமிடையேயிருந்த காதல் கோபுரத்தைத் தகர்த்தெறிய பார்த்தால் ரவிசங்கரனின் வார்த்தைகளோ அந்த பயங்கர ஆபத்தைத் தப்பித்து விட்டாற்போல செய்தன.

வசந்திக்கு அவன் கரங்களில் விவரிக்க முடியாத அமைதி உண்டாயிற்று மனிதனுக்கு மனோபலம் வழங்கக்கூடிய நிச்சிந்தையே அது. உலகத்தாரிடமிருந்து பிறக்கும் எந்த எதிர்ப்பையும் எதிர்த்து நின்று சமாளிக்கக் கூடிய துணிச்சலோடு கூடிய சாகசம் அது.

அந்த நேரத்தில் வசந்திக்குத் தான் அதிர்ஷ்டசாலியா துரதிரஷ்டசாலியா என்றுப் புரியவில்லை. அவன் காதலைப் பெற முடிந்ததேயன்றி திருமணம் செய்துக் கொள்ள முடியவில்லையே அவளால்.

## 15

வசந்தியை ஆசுபத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் பண்ணினார்கள். அக்கா வந்து வீட்டுற்கு அழைத்துச் சென்றாள். அன்று மாலையில் வசந்தி வீட்டிற்குப் புறப்பட்ட பொழுது ரவிசங்கரன் பெருமூச்செறிந்தபடி சொன்னான். 'வசந்தி, யாருமே ஆசுபத்திரியில் இருக்கணும்னு விரும்ப மாட்டாங்கதான். ஆனால் ஆசுபத்திரியிலிருந்து நீ போய் விடப் போகிறாய் என்றாலே திகிலாயிருக்கிறது. இங்கேயானால் நான் எப்பொழுது பிடிக்குமோ அப்பொழுது சுதந்திரமாய் வர முடிந்தது. இனிமேல் உன்னைப் பார்க்க வேண்டும் என்றால்...'

அவன் வேதனை புரிந்தாற்போல அவன் கையைத் தடவிக் கொடுத்தாள் வசந்தி. அவன் ஆபீஸ் போன் நம்பரைத் தந்தான். 'உங்க தெருக் கோடியிலிருக்கிற கடையிலிருந்து தினமும் காலையில் 10,30 மணிக்கும்.



பிற்பகல் 1 மணிக்கும் மாலையில் 5 மணிக்கும் கண்டிப்பாய் போன் பண்ணு. அந்த நேரத்தில் எனக்கு என்ன வேலையிருந்தாலும் சரி எங்கேயும் போகாமல் ஆபீசிலேயே இருக்கிறேன். இந்தா பில்லை எல்லாம் கட்டி விட்டேன். மருந்துகளை வேளைத் தவறாமல் குடிக்கத் தவறாதே.' ரவிசங்கரன் வசந்தியின் கையை எடுத்து மார்போடமுத்திக் கொண்டு சொன்னான்.—

'இதப்பார் வசந்தி, இந்த உன் உடம்பு உன்னைச் சேர்ந்ததில்லை, என்னைச் சேர்ந்தது. நான் உன்னிடம் ஜாக்கிரதையாய் ஒப்படைத்திருப்பதாய் எண்ணிக்கொள். ஹார்லிக்ஸைக் குடி. பழரசம் அருந்து. மருந்துகளைச் சாப்பிடு. உங்க அக்கா ஏதாவது சொன்னால் கோபித்துக் கொண்டு படுத்துவிடாதே. இதப்பார். நீ ஒருநாள் போன் பண்ணாவிட்டாலும் சரி நேராய் வீட்டிற்கே வந்து விடுவேன் தெரியுமா? உன் வேலைதிரும்பவும் இங்கேயே டிரான்ஸ்பர் ஆகிவிட முயன்றுக் கொண்டிருக்கிறேன். அநேகமாய் அடுத்த மாதம் கிடைத்துவிடும். அது வரையிலும் நீ லீவிலேயே இருக்கலாம்.'

இவ்வார்த்தைகளைக் கேட்டுவிட்டு வசந்தி உதாசினமாய் பதிலளித்தாள். 'ரவி, என்ன சொன்னீங்க நீங்க? இன்னுமா லீவில் இருப்பது? நான் இதுவரையிலுமே இரண்டு மாதம் சம்பளமில்லாத லீவில் இருந்தாகி விட்டது இந்த நோயால் பாங்கில் இருந்த பணங்கூட கொஞ்சமோ நஞ்சமோ செலவழிந்துவிட்டது ரவி, ஆசுபத்திரிக்கு நீங்க எத்தனை வழங்கினீங்கன்னு கூட நான் கேட்கலை, ஏன் தெரியுமா? பாங்கில் இருப்பது போதாதுன்னு தெரியும் எனக்கு.'

'பைத்தியமே' 'ரவிசங்கரன் வசந்தியின் தலையைக் கோதிவிட்டான். வசந்தி குனிந்து அவன் தோளில் தலை வைத்து வரும் கண்ணீரை அடக்கிக் கொண்டு சொன்னாள்—' ரவி, எனக்கு என்ன தோணுகிறது தெரியுமா?'

'சொல்லு'

ஏதாவது விபரீதமான உடல் நலக்கோளாறு ஏற்பட்டு வாழ்நாள் எல்லாம் இந்த ஆசுபத்திரியிலேயே இருக்கமாட்டோமான்னு தோன்றது. ஏன் என்றால் தான் இங்கே இருந்தால் நீங்க வருவீங்க, என்னைப் பார்ப்பீங்க, என்னைப்பற்றிக் கவலைப்படுவீங்க.'

'நீ நிஜமாய் பைத்தியக்காரிதான்' அவள் தலையைக் கோதியவாறு மொழிந்தான் அவன்.

'திரும்பவும் எப்போ சந்திப்பது?

அவன் ஒரு வினாடி யோசித்தான்.

'உன் உடம்பு நன்றாய் தேறியபிறகு.'

'எங்கே, எப்படி?'

'இடமா இல்லை? நான் உன் வீட்டுக்கும் நீ என் வீட்டிற்குந்தான் வரமுடியாமல் இவங்களால் தடுக்க முடியுமேயன்றி இந்த பரந்த உலகத்தில் நாம் வேறு எங்காவது சந்திப்பதற்குத் தடை என்ன?'

அவன் மெல்லிய குரலில் சொல்லத் தொடங்கினான்.

'இதப்பார் வசந்தி உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு முன்னால் எனக்குத் திருமணம் என்பது மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கியமானதும் அபூர்வமானதுமாகத் தோன்றிற்று. பிற்பாடு நான் உன்னை என்று மணக்க முடியாமல் போயிற்றோ அன்றே அத் திருமணத்தின் மீது எனக்கிருந்த உணர்ச்சியே வடிந்து விட்டது.

திருமணம் என்பது இப்பொழுது எனக்கு அத்தனை விலைமதிப்பு வாய்ந்த பந்தமாய் தோன்றவேயில்லை. அது



ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்து வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டி சமூகம் ஏற்படுத்தியுள்ள ஒரு கட்டுப்பாடு மட்டுமேயாகும். கல்யாணமே ஆகாவிட்டாலும் பரவாயில்லை இருவர் இணைந்து வாழ்வதற்குத் திருமணம் என்ற ஒன்று தேவையேயில்லை

ஒருவர் மீது மற்றவருக்கு அன்பும் விருப்பமும் இருக்கும் வரையிலும் அதுவே முடிச்சுப் போடப்பட்ட ஒரு பந்தமாகி விடுகிறது.

கணக்கெடுத்தால் நூற்றுக்கு அறுபது சதவீதம் பேர்கள் அதிருப்தியான திருமண வாழ்க்கையைத் தான் வாழ்ந்து வருகிறார்கள். நாம் கல்யாணம் பண்ணிக்காததால்தான் நமக்கு அந்த பிரம்மை ஏற்படவில்லை.'

வசந்தி மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் ஆலோசிக்கும் விதம் அவளுக்கு விளங்க வில்லை. பிடிக்கவில்லை. கூட கல்யாணம் பண்ணிக்காவிட்டால் காதலின் அர்த்தம் என்ன என்று தான் தோன்றிற்று.

கல்யாணம் என்பது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஒரு நல்ல எஜமானனின் தலைமையில் தோட்டத்தில் மலர்ந்துக் குலுங்கும் பூவைப்போல மணம் மிகுந்தும் பரிபூர்ணமாயும் விளங்குவது. திருமணமாகாத பெண்ணின் வாழ்க்கையோ தெருவில் நிற்கும் ஒரு மரத்தைப் போன்றது யாருக்கும் சொந்தமில்லை, யார் நெருங்கினாலும் ஆட்சேபணை இல்லை.

ரவிசங்கரன் திருமணம் என்றால் ஒரு ஆண் காதல் மட்டுந்தான் என்றெண்ணி விட்டான். இல்லை, அது இடையவே கிடையாது. அவன் சொல்வதைப்பார்த்தால் தன் காதலை வேறு யாருக்குமே பகிர்ந்தளிக்காமல் உனக்கே தருகிறேன் அல்லவா, அதனால் நமக்கு இனி திருமணம் என்று ஒன்று எதற்கு

என்று பொருள்படுகிறது. அவனுக்குக் காதல் ஒன்றே போதும் போறும்! அவளுக்கு அவ்வாறில்லை.

அவன் காதலோடு கூட அவன் உதிரத்தைச் சேர்ந்த மக்கள் தேவை' அழகிய இல்லம் ஒன்று தேவை. திருமணமாகி விட்டால் பிரிக்க முடியாத பந்தம் ஏற்பட்டு விடும், பயம் இருக்காது. திருமணமாகாவிட்டால் எதற்குமே அச்சந்தான்.'

'என்ன யோசிக்கிறாய் வசந்தி?' கேட்டான் ரவி சங்கரன்

'ஒன்றுமில்லை' என்றாள்.

மறுநாள் வசந்தி வீட்டிற்குத் திரும்பி விட்டாள், ரவி சங்சரன் வசந்தியின் பாங்க் பாஸ் புத்தகத்தைத்திருப் பித்தந்துவிட்டான். அதைப் பிரித்துப்பார்த்த வசந்தி அதிர்ந்து விட்டாள்' அதிலிருந்து ஒரு பைசாவைக் கூட அவன் எடுத்துக்கொள்ளவில்லை. தான் எழுதித்தந்த செக் எல்லாமுமே அதற்குள் வைக்கப்பட்டிருந்தன. சுமார் ஐந்தாயிரம் செலவழிந்தது அவளுக்காக. அத்தனையையும் ரவிசங்கரனே தாங்கினானா? வசந்தி பதைபதைத்து விட்டாள். கோபமும் வரலாயிற்று அவளுக்கு.

அத்தனைப்பணம் அவனுக்கு எங்கிருந்து வந்தது? அதெல்லாம் உமாவின் பணந்தானா? உமாவின் பணத்தை அவள் செலவழித்ததைக் கண்டு அவள் வாளாயிருந்து விடுவாள் என்றா எண்ணி விட்டான்? வசந்தி காவேரி மூலமாய் அப்பணத்தை பாங்கிலிருந்து எடுத்து வரச் செய்து அதை ஒரு கவரில் வைத்து அத்துடன் கடிதம் ஒன்றையும் இணைத்து அனுப்பினாள்.

ரவி, என்னை ஏன் இப்படி மோசம் பண்ணிவிட்டீர் கள்? என்பணமே என்னிடமிருந்தபோது நீங்கள் இவ்வாறு செலவழிப்பது நியாயமாகுமா? என்னை கதியல்லாத



வளாக்கி விட்டீர்கள் அல்லவா? எனக்கு உங்கள் அன்பு தான் தேவை. ஏன் என்றால் அதுதான் உங்களிடம் சொந்தமாயிருப்பது. அது எனக்கு அமிர்தம் போன்றது. நீங்கள் தரும் பணத்தில் ஒரு பைசாவும் வேண்டாம், அது எனக்கு விஷத்தைப் போன்றது. ஏனெனில் அது உமா வின் பணமாதலால். தயவு செய்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் '—

மாலையில் காவேரி அக்கவரைத் திருப்பிக் கொண்டு வந்தாள். அப்பணத்தோடு ரவிசங்கரன் எழுதியிருந்த கடிதமும் இருந்தது.

'என் பைத்தியக்காரி வசந்தி!

யாரையும் அவசரப்பட்டு முடிவெடுத்து விடக் கூடாது. அதிலும்உன்னை உயிராசப் பாவிக்கும் என்னை. நான் செலவழித்தப் பணம் உமாவுடையதென்று எப்படி எண்ணிவிட்டாய்? பணமில்லாவிட்டால் யாசித் தாவது உனக்கு வழங்குகிறேன். அது கிடைக்காவிட்டால் நீ சாவதைக் கூட பார்த்துக்கொண்டு வாளாயிருப்பேனே யொழிய உமாவின் பணத்தை மாத்திரம் உனக்காக செல வழிப்பேனா? நீ இவ்வாறு எண்ணுவது தாங்க முடியாத வேதனையாய் இருக்கிறது இத்தனை நாள் சிநேகிதத்தில் நீ என்னைப்புரிந்து கொண்டது இவ்வளவுதானா என்றும் தோன்றுகிறது.

வசு, தயவுசெய்து ஒருபோதும் என்னை இவ்வாறு எடைபோட்டு விடாதே. இப்பணம் என்சொந்தப்பணம். என் உழைப்பின் ஊதியம். நான் இந்த ஃபாக்டரியில் எல்லா தொழிலாளர்களையும்விட அதிகமாய் வேலை பண்ணுவதற்காக வழங்கும் ஊதியம் அது. அதிலிருந்து தான் உனக்கு செலவழித்தேன். என் பணத்தால் நீ உடல் நலம் தேறியது எனக்கு எத்தனை ஆனந்தத்தைஅளிக்கிறது தெரியுமா? நீ அனுப்பிய இப்பணத்தைப் பெற்றுக்கொள்

டால் அந்த சந்தோஷம் நிலைக்குமா எனக்கு? ஒன்று சொல்றதைக் கேள் — உனக்கு உடல் நலமில்லாத நாட்களில் நான் பணத்தை எத்தனை சிக்கனமாய் செலவழித்தேன் தெரியுமா?

ஆசுபத்திரியிலிருந்து பலமுறை வீட்டிற்கு நடந்தே திரும்பியிருக்கிறேன். ஏனெனில் அந்தரூட்டில் பஸ்சரியாய் வராது. ஆட்டோவில் போவோம் என்றால் அதிகம் ஆகும். இரண்டு நாளைய ஆட்டோ செலவு உனக்கு. ஒரு நாள் ஆரஞ்சு பழத்திற்காவது ஆகுமே என்றுதான் தோன்றும். இதையெல்லாம் சொல்லிக்கொள்வதற்கு வெட்கமாயிருக்கிறது எனக்கு. நீ அனுப்பிய பணத்தை திருப்பி அனுப்புகிறேன். நான் உனக்கு யாரோ அன்னியன் என்று எண்ணினால் பணத்தை அனுப்பு.

வசு, உன்னைப் பார்த்து எத்தனை நாளாகிறது! உடனே ஓடிவந்து உன் மடியில் தலைவைத்து நான் தப்பு எதுவும் பண்ணவில்லை. என்னைக் கோபிக்காதே என் கதற வேண்டும் போலுள்ளது—ரவி.'

படித்து முடித்த வசத்தி அழுது தீர்த்து விட்டாள். 'சி...சி. எத்தனை முட்டாள் நான்' என்று தலையைச் சுவற்றில் மோதிக் கொண்டாள். காவேரி 'என்ன வாச்சு' என்று சரேலென்று ஓடிவந்துத் தடுத்தாள்.

'காவேரி, ரவியை வரச்சொல்லி போன் பண்ணேன். உடனே வரச்சொன்னதாய் சொல்லு. என்ன வேலை இருந்தாலும் விட்டுட்டு ஒரு நிமிஷம் வரச்சொல்லு' என்று அழத் தொடங்கினாள்.

காவேரி அச்சத்துடன் சமையற்கட்டைப் பார்த்தாள்.

'உங்க அக்கா வீட்டில் இருக்கிறாளே?'



'இருந்தாலும் பரவாயில்லை. இதில் ரகசியம் ஒன்றுமில்லை.' என்றாள் ஆவேசத்துடன்.

'காவேரி, நீ போய் பண்ணுகிறாயா, அல்லது நானே போய் பண்ணட்டுமா?'

'மை காட்!' இதென்ன ஆவேசம்? நானே பண்றேன்' என்றாள் காவேரி எழுந்திருந்து.

## 16

அரைமணி நேரங்கழித்து அவ்வீட்டிற்கு முன்னால் ஒரு ஆட்டோ வந்து நின்றது. அதிலிருந்து ரவிசங்கரன் இறங்கினான். ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்துவிட்டுக் காவேரி— 'வசந்தி, இதோ உமாசங்கர் வந்துவிட்டார்' என்றாள். அதைக்கேட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த வசந்தி எழுந்து உட்கார்ந்தாள்.

ரவிசங்கர் உள்ளே நுழைந்தான். அவன் முகம் கலவரமடைந்ததாய் விளங்கிற்று. கட்டிலில் வீற்றிருந்த வசந்தியைக் கண்டவுடன் அவன் கண்களில் சிறிது நிம்மதி தோன்றிற்று. வசந்தியை அவன் ஒன்றுமே கேட்கவில்லை. வசந்தி நன்றாகத்தானே இருக்கிறாள். பின்னே காலேரி ஏன் அவ்வாறு போன் பண்ணினாள்? வசந்திக்கு உடப்பு சரியில்லை என்றும் அழுது கொண்டிருப்பதாகவும் சட்டென்று வரும்படியும் சொல்லிவிட்டு மறுபேச்சிற்கிடமின்றி போனை வைத்துவிட்டாள். ரவிசங்கரன் மேற்கொண்டு எதுவும் யோசிக்கவில்லை. மானேஜரிடம் 'வேலையாய் போகிறேன். இதோ வந்துவிட்டேன்' என்று டிராயரை மூடிப் பூட்டிவிட்டு கிளம்பி வந்துவிட்டான்.

ஆட்டோ என்னதான் வேகமாய் போய்க்கொண்டிருந்த போதிலும் அவனுக்கு ஊர்ந்து செல்லுவதாகவே

தோன்றிற்று. அவன் உள்ளம் அம்பாய் ஊடுருவிச்சென்று வசந்தியை மனக்கண்ணால் பார்க்கத் தவிதவித்தது வசந்திக்கு என்னவாகிவிட்டது. தனிமையைத் தாங்க மாட்டாமல் எதற்காகவது துணிந்திருப்பாளோ? கடவுளே வசந்தியைத் தன்னால் இனி பார்க்க முடியுமா?

ஆட்டோ அவ்வீட்டிற்கு முன்னால் வந்து நின்று அவன் இறங்கி உள்ளே வந்து வசந்தியைக் கண்ணாரக் கண்டபிறகுதான் அவனுக்கு மூச்சே வரத்தொடங்கிற்று. அவனை நிறைச்செய்துக் கொண்டிருந்த பயம் நீங்கி சாதாரண நிலைக்கு வரத்தொடங்கினான்.

ரவிசங்கரனின் முகத்தில் கலவரமும், வசந்தியை சாதாரண நிலையில் பார்த்ததும் தோன்றிய ஆச்சரியமும் கேள்விக்குறியும் கண்டு காவேரி தவறிழைத்துவிட்டவளாய் அஞ்சி 'இதோ வரேன்' என்று உள்ளே நழுவி விட்டாள்.

ரவிசங்கரன் அறைக்கு நடுவில் நின்றவாறு இன்னும் வசந்தியையே நோக்கிக் கொண்டிருந்தான். வசந்தி கட்டிலைவிட்டு எழுந்து வந்தாள் 'ரவி...உங்களை ரொம்ப கலவரப்படுத்திட்டேனில்லே? என்னை...என்னை மன்னிச்சுடுங்க' தள்ளாடி கீழே விழப்போன வசந்தியை அவன் சட்டென்று பிடித்துக் கொண்டான்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுபவனுக்குப் பற்றிக் கொள்ள ஆதாரம் கிடைத்தாற்போல் வசந்தி அவன் கரத்தைப் பற்றிக் கொண்டாள் அழுத்தமாய். தலை சுற்றுவது போலிருந்தது அவளுக்கு. கால்கள் தள்ளாடின. தானே அவனை நெருங்கினாளா அல்லது அவன்தான் தன்னை நெருங்கி அணைத்துக் கொண்டானா என்றே தெரியவில்லை. அடுத்த வினாடி அவன் அணைப்பில் கட்டுண்டு நின்றவாறிருந்தாள்.

'வசு...' அவன் தலையை நிமிர்த்தினான்.



'என்னால் உங்களைப் புரிஞ்சுக்க முடியாமல் போயி டுத்து. பைத்தியக்காரத்தனமாய் அந்த லெட்டரை எழுதி விட்டேன், இல்லே? என்னை மன்னிச்சுடுங்க.'

'அப்படிச் சொல்லாதே.'

'என் மேல் கோபம் வரலையே?'

'உன் மீதா? கோபமா? பைத்தியக்காரி வசந்தி.'

அவன் சிரிப்பில் அன்பு இழையோடிற்று.

'உங்களுக்குத்தான் தெரியுமே எனக்கு ஆவேசம் அதிகம்னு.'

'அது எத்தனை தொந்தரவுக்குள்ளாக்கி விட்டதுன்னு இப்போதாவது புரிஞ்சுண்டால் தேவலை.'

'ரவி...எனக்கொண்ணும் தெரியாது. என்னைக் குற்றம் சொல்லாதிங்க. ப்ளீஸ்.'

'நான் உன்னை எதுவும் சொல்லலை, சொல்லவும் மாட்டேன். போதுமா'?

வசந்திக்கு அழுகையாய் வந்தது. அவன் அருகிலிருக்கும் போது எத்தனையோ பொறுமையாயிருக்க வேண்டுமென்றும் எதற்குமே பதற்றப்படக் கூடாது என்றும் அவனுக்குத் தொந்தரவு தராமல் சரி கட்டிக்கொண்டு போய் விட வேண்டுமென்றும் தோன்றும். அவன் சற்றுக் கண்மறைவாகி விட்டதுமே அந்த யோசனைகள் யாவும் எங்குதான் ஓடிப் போய் ஒளிகிறதோ தெரியவில்லை.

அவனைப்பார்க்க வேண்டுமென்றும் அவனை இனி பார்க்கவே முடியாதோ என்ற அச்சமும் தோன்றிவிடும். அதற்கு மேல் பொறுமை தளர்ந்து விடும். தான் அவனைத் தொந்தரவிற்குள்ளாக்குவது புரிந்தும் அவளால் தொந்

தாவுபடுத்தாது இருக்க முடியாத ஆதரவற்ற தன்மை அது! அவனுக்கு அது புரிந்தால் நல்லது, அவன் மிகவும் நல்லவன். அவளுக்காக எதையும் தாங்குவான். அது அவள் அதிர்ஷ்டந்தான். அதை அவள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

'வசு... நீ திடமாய் இருக்கப் பழகிக்கொள் மிக அன்போடு வெளிவந்தது அவன் வார்த்தை..

'என்னால் முடியவில்லை.'

'பழக்கத்தை மேற்கொண்டால் வராதது இல்லை'.

எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது ரவீ.'

'ஏன்?'

'என்னை விட்டு நீங்க தொலைவில் போயிடுவீங்களோன்னுதான். அப்பொழுது நான் எப்படி வாழ்வேன்'?

'நான் உயிரோடிருக்கும் வரையிலும் அந்த மாதிரி ஒரு நாளும் நேராது. போதுமா? இல்லாததைய பற்றி ஏன் இப்படி யோசித்துச் குழம்புகிறாய்? உன் உடம்பைப் பார்த்துக் கொள்.'

ஆம் அவள் திடமாய் இருக்கவேண்டும். அப்பொழுது தான் அவள் உடல்நிலை நன்றாயிருக்கும் ஆரோக்கியமாயிருந்தால்தான் வாழ்க்கையில் தனிமையை எதிர்த்து நிற்கமுடியும். அதனால் தான் ஆரோக்கியத்தைக் குறித்து அசிரத்தையாய் இருக்கலாகாது என்றெண்ணுவாள் வசந்தி.

அதற்குள் அவ்விடத்திற்கு வசந்தியின் அக்கா வந்தே வந்துவிட்டாள். அறைக்கு நடுவே ஒருவரையொருவர் பற்றிக் கொண்டு ஒரே கொடியைப் போல நின்றுக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவள் கோபம் தலைக் கேறி விட்டது.



வசந்தி...' உறுமுவது போல் வந்தது அவன் குரல்.

வசந்தியைக் காட்டிலும் ரவிசங்கரனே அதிகமாய் திடுக்கிட்டுவிட்டவனைப் போல சரேலென்று வசந்தியை விட்டு ஒதுங்கி நின்றான்.

வசந்தியின் அக்கா பரபரவென்று உள்ளே வந்தாள்.

'வசந்தி, உனக்கு புத்தி இருக்கா? இதென்ன வீட்டிலேயே இந்த நாடகம்? அக்கம்பக்கத்தார் பார்த்தால் வேறு வினை வேண்டுமா? உன்னை ஒன்னும் சொல்ல மாட்டாங்களே, ஒன் மூஞ்சியில்தானே காரித்துப்புவாங்க? அக்காவுக்குத் தெரிஞ்சே இந்த நாடகம் நடக்கிறதும்பாங்க. என்னால் தெருவில் தலையைக் காட்ட முடியுமா? இப்போதே குற்றுயிராய் கிடக்கிறேன் நான்.'

இதற்கு முன்பாயிருந்தால் வசந்தி ஏதாவது பதிலளித்திருப்பாளோ என்னவோ? இப்பொழுதோ பேசப் பொறுமையும் இல்லை. அக்கா தன்னை ரவிசங்கரனோடு நெருக்கமாயிருந்ததைப் பார்த்து விட்டாளே என்ற பரபரப்பும் வெட்கமும் அவளை அலைக்கழித்தன.

அவள் ரவிசங்கரனைப் பார்த்து—'என்னய்யா, உனக்காவது வெட்கம் இருக்கவேண்டாம்? நீ என்னவோ பெரிய இடத்துப் பெண்ணை மணந்துண்டு செல்வந்தர் வீட்டு மருமகனாய் காரில் சுற்றித் திரிந்துக் குலுங்கி மகிழ்கிறாய்.

இவாள் வாழ்க்கையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டாய், கல்யாணம் பண்ணிக்கிறேன்னு ஆசைக் காட்டிட்டு இவள் வாழ்க்கையை நட்டாற்றில் விட்டு விட்டாய். இப்போதாவது இவளை விட்டுத் தொலையேன்,? நீயா கல்யாணம் பண்ணிக்கப் போகிறாய் இவளை? அத்தனைக் காதலித்து அழுத.நீ ஏன் கல்யாணம் பண்ணிக்கலைங்கறேன்? இவள் உனக்கு வேணும்னால்

எங்க வீட்டுக்கு எதுக்கு வரேங்கிறேன்? எங்க மானம் மரியாதையைச் சந்தியில் இழுக்கவா'? என்று வசந்தியின் கையைப் பிடித்து அவளை நோக்கித் தள்ளு தள்ளிவிட்டு 'போ அழைச்சுண்டு போ; உன் வீட்டுக்கு அழைத்துண்டு போய் உன் மனைவிக்கு எதிரேயே கட்டித் தழுவி முத்த மிட்டுக் கொள். துணிச்சலிருந்தால். ஆண்பிள்ளையா யிருந்தால் அதைப்பண்ணுய்யா. போ, அழைச்சுண்டு போ' அவள் கத்தனுக்கு அக்கம் பக்கத்தார் எட்டிப் பார்க்கலாயினர்,

'இதை வெச்சுண்டிருக்கிற தலையெழுத்துக்கு நான் எதத்னை அவஸ்தைப் படறேன்னு அந்த தெய்வந்தான் அறிவார். இந்த மாதிரி ஒண்ணு என் தங்கச்சின்னு சொல்லிக்க நேர்ந்தால் நாளைக்கு என் பொண்ணுங் களுக்கு எப்படிக் கல்யாணம் ந! க்கும்? வெட்கமில்லாமல் ஏன் இப்படித்திருதிருன்னு முழிக்கிறாய்? போ, வசந்தியின் மேல் உனக்கு இஷ்டமிருந்தால் அவளை இப்போவே கூட அழைச்சுண்டு போயிடு, கல்யாணம் பண்ணிண்டு குடுத்தனம் நடத்துவாயோ, நாளு நாளைக்கு வைத்துண்டு மோகம் தீர்ந்ததும் இத்தனை விஷத்தைத் தருவாயோ பண்ணிக்கொள்.

ஏன் விட்டில் ஒரு நிமிஷம் கூட வைத்துக் கொள்ளப் போவதில்லை. போங்கல் இருவரும், என் வீட்டுப் படியை மிதிக்க வேணடாம் இனிமேல்' என்று ஆயாசத்துடன் நிறுத்தினாள்.

ரவிசங்கரன் துவண்டு சரிந்தாந்போலானான். அவன் இதயத்தில் அவமானப் புயல் வீசத்தொடங்கிற்று. அவனால் அதைத் தாளமுடியவில்லை.

அவன் வசந்தியைப் பார்த்தான். 'வசந்தீ, வா, போகலாம். பெட்டியை எடுத்துக் கொள்'



வசந்தியின் அக்கா, அவமானத்தைவிட அவன் வார்த் தையைக் கேட்டு மூளையே குழப்பிவிட்டாற்போல பார்த்து நிற்கலானாள்.

'நான் நிஜமாய்தான் சொல்றேன். போகலாம் வா. காவேரி. வசந்தியின் பெட்டியை எடுத்துட்டு வா.'

காவேரி அங்கு வந்தாள். 'ரவிசங்கரன் சார், உங்க ளுக்கு ஏதாவது புத்தி பிசகிடுத்தா? அக்கா கூச்சலிட்டதில் தவறென்ன இருக்கு? நீங்க விட்டிற்குப் போய் ஒரு முறை யோசிசசுப் பாருங்க. நீங்க திருமணம் ஆனவர். வசந் தியை நீங்க விட்டு நீங்குவது உங்களுக்கும் அவளுக்கும் இருவருக்குமே நல்லது. உலகத்தாரின் பழிச் சொல்லுக்கு முன்னால் அக்கா சொன்ன வார்த்தைகள் ஒன்றும் அதிக மில்லைன்னு நினைச்சுக்குங்க. இப்போதைக்குப் போய் விடுங்கள் நீங்கள். தயவு செய்து போயிடுங்கள்.'

அவன் வசந்தியை நோக்கினான்.

'வசு, என்னோடு வரயா, இல்லையா?' அவன் குரல் திடமாய் பிரதிபலித்தது.

வசந்தி வெறித்து நோக்கினாள்,

'வசந்தி என்ன சொல்லிப்பிடுவாள்? அவள் யோசிக் கிற நிலையில் இருந்தாலல்லவா? நீங்க போய் விடுங்கள். அக்கா புருஷன் ஆபீசிலிருந்து வர வேளையாயிடுத்து. அவர் வந்தால் ரொம்ப அனர்த்தமாகி விடும்' கெஞ்ச லானாள்.

ரவிசங்கரன் மெதுவாய் திரும்பிப் போய் விட்டான். வசந்தி சூனியத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

'சீ, சீ, என் தவறுதான்! நான் போன் பண்ணாமலிருந் திருக்கணும்' என்றெண்ணிக் கொண்டாள் காவேரி.

'நான் சொன்னால் என் வாய்தான் தெரியும். அவள் நல்லனைக் கருதுபவள் ஆதலால் அப்படிப் பேசினேன்.

ஊராருக்கென்ன வந்தது? இதெல்லாம் என் தலையெழுத்து' வசந்தியின் அக்கா மூக்கைச் சிந்தினாள்.

'நீங்க சொன்னதில் தப்பு ஒண்ணுமில்லை அக்கா. நீங்க சொல்லாட்டால் அவளுக்குத் தப்புன்னு யார் எடுத்துச் சொல்லுவாங்க?' என்றாள் காவேரி.

'தெரியாதவங்களுக்குச் சொல்லணும். தெரிஞ்சுப் பண்றவங்களுக்கு சொல்லி என்ன லாபம்?' அக்கா பழித்தாற் போல சொன்னாள்.

காவேரி வசந்தியின் தோளின் மீது கை வைத்துச் சொன்னாள்.

'வசு, நானும் உனக்குச் சொல்றேன், அக்கா சொன்னதில் தப்பில்லை. இதற்கு முன்னால் அவருக்கு உன்மேல் என்னதான் அன்பிருந்தாலும் இருக்கட்டும். இப்பொழுது அவர் கல்யாணம் ஆன ஆள். கல்யாணமான ஆணுடன் தொடர்பு கொள்ளும் எந்தப் பெண்ணுமே சுகப்பட்டதில்லை. நம்ப கண் முன்னாடியே நாம்ப எத்தனையோ பார்த்திருக்கோம். காதலைவிட, கல்யாணத்தைவிட வாழ்க்கைதான் நமக்கு முக்கியம் வசு, 'நீ இந்த சேற்றிலிருந்து வெளியேறு. நீ அக்கா மேல் கோபிச்சுக்காதே' என்றாள்.

வசந்தி பேசாமலிருந்தாள். எல்லா வார்த்தைகளும் அவள் காதில் விழுந்துக் கொண்டுதானிருந்தன. ஆனால் இவை எல்லாவற்றையும் விட அக்கா பண்ணிய அவமானங்களை பலவந்தமாய் மென்று விழுங்கிய ரவிசங்கரனின் முகமே கண்முன் நிழலாடிற்று.

வசந்தியால் அதை மறக்கவே முடியவில்லை. அவனால் இந்த அவமானத்தை சகிக்கத்தான் முடியுமா? வாழ்க்கையில் இனி தன் முகத்தை ஏறிட்டுத்தான் பார்ப்பானா?



# 17

ரவிசங்கரன் வீடு திரும்பினான். உமா விழித்துக் கொண்டுதான் இருந்தாள். வந்து கதவைத் திறந்தாள். ஒருமுறை ரவிசங்கரனை உற்றுப் பார்த்துவிட்டு அகன்றாள். அப்பார்வையில் இப்பொழுதுதான் வீடு ஞாபகம் வந்ததா?' என்ற அர்த்தம் தொக்கி நின்றது. உமா வாயைத் திறந்து எதுவுமே பேசமாட்டாள். ஆனால் அப்பார்வையில் ஆயிரக்கணக்கான பொருள் பொதிந்திருக்கும்.

உடைமாற்றிக் கொண்டு வந்து தன் அறையில் உட்கார்ந்தான். உமா வாசற்படியில் வந்து நின்றாள். 'சாப்பிட வாருங்கள்' என்றாள். அவள் அவன் அறைக்குள் வர மாட்டாள் அவனில்லாத நேரத்தில் அவள்தான் அறையை ஒழித்துவைக்கிறாளோ அல்லது வேலைக்காரிதான் வைக்கிறாளோ தெரியாது. அறை எப்பொழுதும் நீட்டாய் அமைந்திருக்கும்.

'எனக்குப் பசிக்கலை' என்றான் அவன்.

'எனக்கு ரொம்ப பசிக்கிறது'

'நீ சாப்பிடு'

'தனியாய் சாப்பிடறதாயிருந்தால் எப்போதே சாப்பிட்டிருப்பேன்'

அவன் மௌனமாய் எழுந்து வந்தான்.

உமா புத்திசாலித்தனமாய் அவனுக்கு விதித்த தண்டனைகளுள் இது ஒன்று. அவன் வரும் வரையிலும்சாப்பிட மாட்டாள். ஒருக்கால் அவன் சாப்பிடப்போவதில்லையென்றால் தானும் சாப்பிடமாட்டாள்.

அன்றிரவு காமாட்சி அவனைத் திட்டினாள். 'உனக்கு புத்திகித்தி இருக்கா? ஏன் அந்தப்பெண்ணை அப்படி வறுத்தெடுக்கிறாய்? கல்யாணமாகிறதுக்கு முன்னாடி அந்த வசந்தியை ஏதோ பிடித்திருந்துன்னு வச்சுக்கோ, கல்யாணமானப் பிறகும் இதென்னது? நாளை நாளன்றைக்கு உமாவின் அப்பா ஊரிலிருந்து வருகிறராம். பொண்ணு ஏனிப்படி இளைத்துட்டாள்னு கேட்டால் என்னத்தைச் சொல்றது.'

'என்னை என்னம்மா பண்ணச் சொல்றீங்க?' அவன் செய்வதறியாமல் கேட்கலானான்.

'என்ன செய்றதாவது? வேளைக்கு வீட்டுக்கு வந்து அந்தப் பெண்ணோடு சேர்ந்து சாப்பிடு, சினிமாவுக்கு எங்கேயாவது அழைச்சுண்டு போயேன், பாவம் அந்தப் பெண் வேறென்னத்தை கேட்டாள்?'

அன்றிலிருந்து ரவிசங்கரன் உமாவுடன் சேர்ந்து சாப்பிடுவதைத் தன் நித்திய கடமைகளுள் ஒன்றாக்கிக் கொண்டான்.

சாப்பிடுக் கொண்டிருக்கையில் உமா கேட்டாள்,

'வசந்தியை டிஸ்சார்ஜ் பண்ணியாச்சா?'

'உம்' முற்றுப்புள்ளி வைத்தாற்போல பதில் வந்தது.

'நீங்க போய் பார்த்துட்டு வந்தீங்களா?' மிகச் சாதாரணமாய் விசாரிக்க முயன்றபோதிலும் அக்குரலில் துருவி கேட்ட மனப்பாங்கு பளிச்சிட்டது.

'போனேன்' அவன் தயக்கமின்றி பதிலளித்தான். உமா பெருமூச் செறிந்தாள் அதற்குப் பிறகு சம்பாஷணை தொடரவில்லை.



சிலசமயம் உமா நினைத்துக் கொள்வாள். பல ஆண்கள் இத்தகைய விவகாரங்கள் இருந்தாலும் மறைத்து வைக்கப் பிரயாசைப் படுவார்கள். பொய் கூறி மனைவிக்கு முன்னால் அப்பாவியாய் நடிக்க முயல்வார்கள். ரவி சங்கரனிடம் அம்மாதிரி எதுவுமில்லை. அவனை ஏதேனும் கேட்கவே அச்சமாயிருந்தது அவளுக்கு. ஏனெனில் அவன் வெளிப்படையாய் சொல்லும் பதிலைக் கேட்டு அவளுக்கு அதிகத் துன்பமேற்படலாயிற்று.

உமா நினைத்துக் கொண்டாள்.— அவனை அவள் பலவந்தமாய் கடிப்போட்டு வைக்கிறாள். ஆனால் என்ன பயன்? அவன் மனம் இங்கே இருக்கவே இருக்காது எத்தனை நாட்கள் தான் இப்படி.?

சில சமயம் உமாவுக்குத் தோன்றும். தனக்கு என்ன குறைச்சல் என்று அவனுடன் சளைக்காமல் போராடுகிறாள்? சண்டையிட்டுக் கொண்டு விவாகரத்துப் பெறறுக் கொண்டு விட்டால்தான் என்ன என்றுத் தோன்றிற்று.

உமாவுக்கு பயமாயிருந்தது விவாகரத்தா? தந்தையின் மான அவமானம் என்ன ஆவது? இன்னாரின் பெண் கணவனை விவாகரத்து பண்ணிவிட்டாள் என்று எல்லோரும் பேசிக் குத்திக் குதறிவிடுவார்களே? போகட்டும் அதற்கும் அவள் வருந்தவில்லை. ஆனால் ரவிசங்கரனைப் போன்ற மற்றொரு ஆள் தனக்குக் கிடைக்கக் கூடும் என்ற உறுதி இருந்தால் தான் அவனை விடத் தயார். சல்லடைப்போட்டு சலித்தாலும் அவனைப் போன்ற ஆள் கிடைக்கவே மாட்டார்கள்.

அது நினைவுக்கு வந்ததும் உமாவுக்குக் கோபம் வந்தது. தான் அவனை எதற்காகத் துறக்கவேண்டும். அவளுக்கு அவன் மீது சகல உரிமையும் இருக்கிறது. அவள் தலையணையில் தலையை மோதிக் கொண்டாள்.

அந்த உரிமைகளை வைத்துக் கொண்டு என்ன பண்ணி விட முடியும் அவளால்? ஆளே தன்னைச் சாராதபொழுது அவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. வசந்தி அவனுக்கு மிக அருமையானவள் என்பதே அது. தான் பொறாமைப் படலாகாது, தான் அவனுக்குப் பிடித்தாற்போல நடந்துக் கொள்ள வேண்டும். அதற்குக் கொஞ்சம் டயம் தேவை. அவனை ஒதுக்கி விட்டு அவளால் எந்த வேலையிலும், கவனத்தைச் செலுத்த முடியாது என்பதை உணர்ந்தாள் அவள்.

ரவிசங்கரனின் பால் விருப்பம் உதித்தது உமாவுக்கு, அவள்தான் எத்தனை துரதிஷ்டசாலி! அவனைத் திருமணம் மட்டுமே பண்ணிக் கொள்ள முடிந்தது அவளால், ஆனால் அவன் அன்பைப் பெற முடியவில்லையே! வசந்தியின் மீது தான் அவனுக்கு எத்தனை உயிர்! அந்த மாதிரி உயிரையே தரும் ஆள் வாழ்க்கையில் கிடைத்து விட்டால் கல்யாணம் என்று ஒன்று எதற்குத் தேவை? இத் திருணத்தில்தான் என்ன பயன்? காதலுக்கு முன்னால் திருமணம் என்பது சூரியனுக்கு முன்னால் ஏற்றுவைத்த விளக்கைப் போலதானே!

ஒருக்கால் அவனைத் துறக்க நேர்ந்தால் அந்த ஏமாற்றம் அவளை வாழ்நாளெல்லாம் துரத்திக் கொண்டேதானிருக்கும். அதனால்தான் உமா போராடத் தயாராகி விட்டாள்.

வசந்திக்கு அவள் அக்கா ஒரு வரனைப் பார்த்துக் கொண்டு வந்தாள். அவன் மருத்துவப் பிரதிநிதியாய் வேலை பண்ணிலந்தாராம். அக்கா வசந்தியை உலுக்கி எடுத்தாள்.

'வசந்தி, இதுதான் என் இறுதி முயற்சி. இந்த கல்யாணத்துக்கு நீ சம்மதிக்கப் போகிறாயா அல்லது என் வீட்டைவிட்டடுப் போயிடப்போகிறாயா? ஏதோ ஒன்றை மாலைக்குள் தீர்மானித்துச் சொல்லிவிடு.'



வசந்தி திகிலடைந்து விட்டாள். இந்த சோதனையிலிருந்து எப்படி வெளியேறுவதென்றுதான் விளங்கவில்லை அவளுக்கு. அக்கா மிகப்பிடிவாதமாயிருந்தாள். காவேரியும் அக்காவின் பக்கந்தான்.

'ஏன் வசந்தி. இன்னும் அதையே பிடிச்சுண்டுருக்கிறாய்? அவன் எப்படியும் அன்னிய மனுஷனாகிவிட்டான் நீ அவனோடு சேர்ந்திருப்பது என்பது நடக்காத காரியம் என் பேச்சைக் கேட்டு அக்கா சொன்னதுபோல இந்த வரனை மணந்துண்டு சந்தோஷமாயிரு. அவனுக்கும் உன்னைப் பிடித்திருக்கிறாப் போலத்தான் தெரிகிறது. நம்மைப் பிடித்திருக்கும் ஆளைப் பண்ணிண்டால் வாழ்க்கை சுகமாய் கழியும். நினைவு வெச்சுக்கோ'

வசந்திக்கு காவேரியின் வார்த்தைகள் மூளையில் ஏறவே இல்லை.

'காவேரி, அவனுக்கு ரவிசங்கரனின் விஷயம் தெரியுமா ? கேட்டாள்.

'தெரியாது'

'பிற்பாடு தெரிந்தால் என் உயிரை எடுத்துட மாட்டாரா? முதல்லயே சொல்லிடச் சொல்லு அக்காவை, என்றாள். அன்றுமாலையில் 'அக்கா மகிழ்ச்சியுடன் சொல்லத் தொடங்கிறாள்.

'வசு, உனக்கு அந்த சந்தேகமே வேண்டாம். அவனுக்கு நான் எல்லாவற்றையும் சொல்லிட்டேன். அவன் மிக பரந்த மனப்பான்மையுடையவன். அதைப் பொருட்படுத்தவில்லை. கல்யாணத்திற்கு முன்னால் இதெல்லாம் சகஜந்தானே என்றான். ரொம்ப நல்லவனாய் தெரிகிறது.'

வசந்திக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை. ஆத்திரந்தான் வந்தது. அவனே தன்னோடு இவ்விஷயமாய் பேசி ஒரு

முடிவிற்கு வந்தால் நன்றாயிருக்கும் போலிருந்தது. அக்கா சொன்னதுமே அவன் கேட்டுவிட்டது அவளுக்கு சரியாய் படவில்லை.

'நான் வேலையை விட்டுடப்போறேன்னு சொல்லிடு அக்கா' என்றாள்.

'என்னது? தங்கமான வேலையை ஏன் விடணும்?' என்றாள்.

'உனக்குத் தெரியாது அக்கா. நான் உள்ளத்தாலும் உடலாலும் மிகத் தளர்ந்துபோய் விட்டிருக்கிறேன். அதிலிருந்து என்னை மீட்கும் ஆள்தான் எனக்குத் தேவை. அந்த ஆள் ரவிசங்கரனைத் தவிர வேறு ஒருவருமே கிடையாது என்பது என் அபிப்பிராயம். என்னைப்பண்ணிக்கப் போகிற நபரிடம் ஒளிவு மறைவின்றி நான் எல்லாவற்றையும் சொல்லிவிடறேன். ஆனால் அவன் புரிஞ்சுக்கொள்ளும் நல்லியல்பு கொண்டிருந்தால் ரவிசங்கரனிடம் சொல்லிவிட்டு தொலைவில் போய்விடுகிறேன்.'

'பார்த்தாயா, திரும்பவும் அவனைப்பற்றியே பேச்செடுக்கிறாய், உனக்கு அல்லும் பகலும் அவனும் நாமஸ்மரணைதான். அவனைப்பார்த்துட்டு அதே கண்ணில் மற்றவங்களையும் எடை போட்டால் எப்படி? இந்த உலகத்தில் யாருமே ஒருத்தர் இன்னொருத்தரைப்போல இருக்க முடியாது. வேலை பண்ணப்போறதில்லைன்னு அவனுக்கு நான் சொல்லிடறேன், அவனே ஒப்புக்குவான்' என்றாள்.

மறுநாள் வசந்தி காவேரியின் வீட்டிலிருந்து திரும்புகையில் அக்கா எள்ளும் கொள்ளும் வெடிக்கப் பொருமிக்கொண்டிருந்தாள் குழந்தைகளிடம்.

வசந்தி நேராய் தன் அறைக்குப் போனாள். அவளுக்கு ரவிசங்கரனுக்கு கடிதம் எழுத வேண்டும் போல் இருந்தது.



அன்றைக்கு அக்கா அவமானப்படுத்தி அனுப்பிவிட்ட பிறகு அவன் கண்ணில் படவேயில்லை.

தனியாய் அமர்ந்து ரவிசங்கரன் தனக்காக எத்தனை பாடுபடுகிறான் என்றும் அவன் அன்பு தனக்கு எவ்வாறு உயிரூட்டிவருகிறதென்றும், அவன் நினைவுகள் எவ்வாறு தன்னை வேட்டையாடி வருகின்றனவென்றும் மனம்உருக கடிதத்தில் எழுதத் தோன்றுயது அவளுக்கு. அவனுக்குக் கடிதம் எழுதினால் அவனோடு உரையாடுவது போலிருந்தது அவளுக்கு.

பிற்பகல் காவேரி சொன்னாள் அவளிடம், முந்தைய நாள் ரவிசங்கரன் அவள் வீட்டிற்கு வந்து, வசந்திக்குத் தான் பாடுபட்டு முயன்ற ட்ரான்ஸ்பர் கிடைத்துவிட்டதென்றும் இனி இவ்வூரிலேயே அவளுக்கு வேலை உத்தரவு வந்துவிடும் என்றும் சொல்லிவிட்டுப் போனானாம்.

அதைச் சொல்லி விட்டுக் காவேரி— வசு, அவன் முயன்று இந்த ஊருக்கு மாற்றிவிட்டான். ஆனால் இது அத்தனை நல்லதில்லையோ என்றும் தோன்றது எனக்கு. நீ வேறு ஊருக்கு மாறினாலாவது அவனை மறக்க முடியும் என்றாள்.

'அப்படிச் சொல்லாதே காவேரி, ரவிசங்கரனின் மேல் உனக்கு மதிப்பில்லையா?'

'இப்பொழுதும் இருக்குதான். ஆனால் அவனைவிட நீதான் முக்கியம். நான் உன் சிநேகிதி, வசு, அவன் மனைவி உமா இருக்கிறாளே அவளுக்கு அவன் மீது உயிர் அவனை அப்பெண்ணால் துறக்க முடியாது. நான் சொல்றதைப் புரிஞ்சுக்கோயேன்.'

வசந்தி பரபரக்க வந்துவிட்டாள் அங்கிருந்து.

காவேரி சொன்னது பாதி சந்தேகத்தையும் பாதி வருத்தத்தையும் அளித்தன.

தனக்கு வேலை இங்கேயே மாற்றலாகிவிட்டது. என்றதைக் கேட்டு சந்தோஷமும் உமாவைப் பற்றிப் பேச்செடுத்ததற்கு மனம் பாரமாயும் ஆகிவிட்டது.

ரவிசங்கரனுக்குக் கடிதம் எழுதத் தொடங்கிய பொழுது அக்கா அங்கே வந்தே வந்துவிட்டாள். துவைத்த துணிகளை பீரோவில் மடித்து வைக்க வந்தவள்—'உனக்கு இந்த ஜென்மத்தில் கல்யாணம் ஆகிற தலையெழுத்து இல்லை' என்றாள்.

'அதுதான் நானும் விரும்புவது' என்றாள் அவள்.

'தலையெழுத்துப்படிதானே புத்தியும் இருக்கும்? உன் புத்தி அப்படி இருப்பதால்தான் உன் தலையெழுத்தும் அப்படி எழுதிவைத்திருக்கிறது. அவனுக்கு நீ வேலையை விட்டுட்டால் தேவையில்லையாம்.'

'ரொம்ப சந்தோஷம்னு சொல்லிடு.'

'நீ இப்படிச் சொல்லுவாய்னு தெரியுமே எனக்கு. என் கல்யாணம் எனக்காக இல்லை, உனக்காகத்தான் பண்ணிக்கிறேன் என்பது போலிருக்கிறது உன் தோரணை இதப்பார். இப்போதே சொல்லிட்டேன், நீ வேலை பண்ணித்தான் தீரணும்— அவனையும் பண்ணிண்டுதான் தீரணும்' அருகில் வந்து சொல்லானால்.

பொறுமையை வரவழைத்துக் கொண்டு பதிலளித்தாள் அவள்.

'உத்யோகம் பண்றேன் அக்கா, கல்யாணம் மாத்திரம் வேண்டாம்.'

'ஏன்? எதற்குங்கறேன்?'

'எனக்குக் கல்யாணமோ உத்யோகமோ ஏதாவது ஒண்ணுதான் தேவை.'



'ரவிசங்கரனைப் பண்ணிக்கிறேன் என்றபோது வேலை பண்ணப் போகிறேன் என்றுதானே சொன்னாய்?'

'அந்தச் சூழ்நிலை வேறு.'

'இப்ப என்னவாயிடுத்து?'

'உனக்குத் தெரியாதுக்கா. இவன் என்னைப் பண்ணிக்கிறேன். என்றது எனக்காக இல்லை, என் உத்யோகத்துக்காகத் தான். அவன் ரவிசங்கரனின் விஷயத்தை ஈடு கட்டிக் கொண்டது பெரிய விஷயமில்லை. எல்லாம் பணத்திற்காகத் தான்.'

'சீ, சீ மூடு வாயை. உனக்கு எல்லாமே கோணல் புத்திதான்.'

'உண்மையைத்தான் சொல்றேன் நான்.'

'நீ இந்த வரனைப் பண்ணிக்கப் போறாயா இல்லையா?'

'மாட்டேன்.'

'எல்லாம் உன்னிஷ்டந்தானாங்கறேன்? இப்போதே சொல்லிட்டேன், நீ இவனைப் பண்ணிண்டால் சரி, இல்லாவிட்டால் என் வீட்டில் இருக்கத் தேவையில்லை. நான் நிஜமாய் சொல்றேன், இதில் பூடகம் எதுவுமில்லை. இது என் வீடு. என் வீட்டிலிருப்பவங்க என் பேச்சைக் கேட்டுத் தீரணும். அவ்வளவுதான்.'

அக்கா அங்கிருந்து அகன்றாள்.

வசந்தி சிலையாய் நின்று விட்டாள் அப்படியே. ரவிசங்கரனுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் செத்தொழிந்தது. 'அன்புள்ள ரவி' என்ற வார்த்தைக்குக் கீழே கோடிட்டுக் கொண்டு வீற்றிருந்து விட்டாள்.

எத்தனை ஆதரவற்ற வாழ்க்கை! அக்கா தன்னை ஏன் புரிந்துக் கொள்ளவில்லை? திருமணம் என்பது சில விஷயங்களால் தனக்கு அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. கல்யாணம் பண்ணிக் கொள்ளத் தோன்றவில்லை. ஏன்? கல்யாணம் பண்ணிக்கொள்ளாமலேயே பெண்களால் வாழவா முடியாது?

# 18

ஒரு வாரம் ஓடிற்று. வசந்தி வேலையில் சேர்ந்தாள். வேலை இங்கேயே மாற்றல் கிடைத்த சந்தோஷம் கடுகளவும் இல்லை. அந்தப் பையனை மணக்க உடன்படாததால் அக்கா அவளோடு பேசுவதை விடுத்தாள். அக்காவின் விட்டேற்றியான நடத்தையைக் கண்டு வருத்தம் ஏற்பட்டது அவளுக்கு.

ரவிசங்கரனின் ஜாடையே தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் அவனை எதிர்பார்த்து ஏமாந்தாள் வசந்தி அவனுக்கு அவள் மீது கோபம் வந்துவிட்டது போலும்! அக்கா திட்டிய போது, தன்னோடு வரச்சொல்லி அவன் அழைத்த போது வாராதது அவனுக்கு வெறுப்பை உண்டாக்கிவிட்டதோ? வசந்தியை துகில் சூழ்ந்தது. அவனுக்குத்தான் எத்தனை வருத்தத்தை உண்டாக்கி விட்டாள்? உலகம் அவனை ஏளனம் பண்ணிற்று. அவனிடம் ஒருமுறை அவள் மனதிலிருப்பதை சொல்லிவிட்டால் எத்தனை நன்றாயிருக்கும் என்றெண்ணினாள். தாளமாட்டாமல் ஆபீசுக்குப் போன் பண்ணினாள். வேறு யாரோ ஒருவர் போனை எடுத்து அவளைப் பெயர் என்ன வேலை என்ன என்று துருவிக் கேட்டார். அவள் போனை வைத்துவிட்டாள். காவேரியும் இப்பொழுதெல்லாம் ஒத்துழைப்பதில்லை. இதனால் அவனுக்கும் அவளுக்குமிடையேபெரிய குறுக்குச் சுவர் ஏற்பட்டு விட்டாற் போலிருந்தது. அது



நாளுக்கு நாள் வளர்ந்துக் கொண்டே வந்ததேயொழிய குறைந்தபாடில்லை.

யோசித்தவாறு மேஜையடியில் வீற்றிருந்தவளிடம் ப்யூன் வந்து போன் வந்திருப்பதாய் சொன்னான்.

எழுந்து சென்றாள். பாங்கில் வாடிக்கையாளர்களில் பலர் போன பண்ணுவது வழக்கம்.

'ஹலோ'

வசந்தி திடுக்கிட்டாள். நிமிர்ந்து நின்றாள்.

'வசு' மறுமுனையிலிருந்து ரவிசங்கரன் அழைத்தான்.

'ரவி' நம்ப மாட்டாதவளாய் அழைந்தாள்.

'நான்தான்'

'இத்தனை நாளும் என்னவாயிடுத்து?'

'என்னையிருக்கும் சொல்லு பார்ப்போம்'

'மனைவியோடு ஏதாவது ஊருக்குப் போயிருப்பீங்கன்னு நினைச்சேன்'

'மைகாட்'

'ஏன்னால், ஊரிலிருந்தால் நீங்க என்னைச் சந்திக்காமலோ போன் பண்ணமலோ இருக்கமாட்டீங்களே' சொல்லுங்கள் எங்கே போனீங்க?'

'எங்கேயும் போகலை, வசு, எனக்கு ஜீரம் வந்துடுத்து'

'என்ன?'

'ஆமாம். நன்றாய் ஜீரம் அடித்தது. எழுந்திருக்கவே முடியவில்லை. கடிதம் எழுதி உனக்குத்தரச் சொல்லி ஆளை கூட. அனுப்பினேன் அவன் அதை உமாவிடம் கொண்டு போய் தந்துட்டான்'

'என்னது? 'வசந்தியின் குரலில் ஆவேசம் பிறந்தது.

'அனர்த்தம் ஏற்பட்டதா''

'அனர்த்தம் ஆகாமலிருக்குமா? சாரி 'வசு'

'நான்— நான்தான் சாரி சொல்லணும்னு இருந்தேன்'

'நீயா. எதற்கு?'

'அன்றைக்கு அக்கா அவ்வாறு பேசியதற்கு. உங்களுக்குக் கோபம் வந்துடுத் தோன்னுதான்'

மேனஜக்கருகில் வீற்றிருந்த மானேஜர். கனைத்தார். ஃபைலைப் படீரென்று ஓங்கி மூடினார்.

வசந்தி இவ்வுலகிற்குத் திரும்பினாள்.

அது ஆபீஸ் என்றும் பக்கத்தில் மானேஜர் இருப்பதையும் அவர் செவிகளைத் தீட்டிக்கொண்டு கேட்டுக் கொண்டிருந்ததையும் உணரத் தொடங்கினாள்.

ரவிசங்கான் சொல்லலானான்.

'கோபம் வரலை வசு. அன்றைக்கு அத்தனைத் தீவிரமாய் யோசிச்சுப் பார்க்கலை. அப்புறமாய் நினைத்துப் பார்த்த பொழுது தான் தெரிந்தது, நீ பண்ணியது சரி தான். எப்படி இருக்கிறாய்?'

'நன்றாய்தான் இருக்கிறேன்.'

'சாயந்திரம் ஆபீசை விட்டுப் போகும் போது வந்து சந்திக்கிறேன்' திடீரென்று போனைத் துண்டித்து விட்டான்.

'ஹலோ...ஹலோ...' என்றாள் வசந்தி.

என்ன திடீரென்று போனை எதற்கு வைத்து விட்டான்? யாரேனும் வந்து விட்டார்களா?



வெளியேறும் பொழுது மானேஜர் மூக்குக் கண்ணாடியின் கீழிருந்து விழுங்கி விடுவது போல பார்ப்பதை கவனித்தாள்.

அன்று முழுவதும் ஃபைல்களில் தப்புத் தப்பாய் பண்ணி மானேஜரிடம் திட்டு வாங்கிக் கொண்டாள் வசந்தி.

'இதப்பாரும்மா, இது பாங்க், பண விவகாரம் கொண்ட வேலை. ஆபீஸ் நேரத்தில் சொந்த விவகாரங்களை மூளையில் வைத்துக் கொள்ளக் கூடாது.

வசந்தி பதில் பேசவில்லை.

வெளியே வந்தாள். அங்கே பஸ் ஸ்டாண்டிற்கருகில் ரவிசங்கரன் நின்று கொண்டிருந்தான். வசந்தி அது ஜன நடமாட்டம் மிகுந்த தெரு என்பதைக் கூட மறந்து விட்டாள். ஓட்டமாய் ஓடி வந்தாள்.

ரவிசங்கரனை நெருங்கியதும் வசந்தி சரேலென்று அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள். அவன் நன்றாய் இளைத்து விட்டிருந்தான். முகத்தில் ஆயாசம் தெரிந்தது இன்னும். அவனைப் பார்த்ததும் வசந்தியின் கண்களில் கிர்ரென்று கண்ணீர் ததும்பியது.

ரவி ஜுரம் ரொம்ப இருந்ததா?' என்று கேட்டாள். அவன் இல்லை என்று தலையாட்டினான். அருகிலிருந்த டாக்சியைக் காட்டி 'ஏறு' என்றான்.

வசந்தி பதில் பேசாமல் ஏறிவிட்டாள். அவனும் ஏறி அவளுக்கருகில் அமர்ந்துக் கொண்டு கதவை சாத்தி விட்டு டிரைவரிடம் 'போ' என்றான்.

'எங்கே?' வசந்தி.

'ஓரிடம் என்றில்லை. எங்கே இறங்கணும்னு தோன்றிற்றோ அங்கே இறங்கலாம். டாக்சிகாரனிடம், அதைத்தான் கொஞ்சம் முன்னாடி சொல்லிவைத்தேன்' என்றான்.

வசந்தி வியப்புடன் நோக்கினாள். சிறு குழந்தையின் கையை கெட்டியாய் பிடித்துக் கொண்டிருக்கும் தாயைப் போல அவன் கையைப் பிடித்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

வசந்திக்குக் கண்ணீர் வந்தது தனக்கு உடல் நலமில்லாத போது அவன் எத்தனையோ செய்தான். அவனுக்கு உடல் நலமில்லாதபோது அவளால் என்ன செய்ய முடிந்தது? வசந்தி இன்னொரு கையையும் அவன் கையின் மீது வைத்தாள். அவனுக்குத் தான்படும் வருத்தம் புரியுமா என்று தோன்றிற்று.

வசந்தியின் மனதைப் புரிந்துக் கொண்டதுபோல அவன் மெதுவாய் சொன்னான்.

'வசு, உனக்கு சேதி சொல்லியனுப்பணும்னு ரொம்பத் தவித்தேன் முடியலை. எனக்கு நினைவே இல்லை முதலில் அதென்ன ஜுரமோ, அதென்ன தலைவலியோ? நரக வேதனைதான். அத்தனை ஜுரத்திலும் கூட உன்னைச் சந்திக்க முடியலையேங்கற ஏக்கம்தான்.'

'எனக்குத் தெரியாமல் போயிடுத்தே. தெரிந்திருந்தால் என்னை ஒருவராலும் தடுத்து நிறுத்திட முடியாது, வந்திருப்பேன். அத்தனை ஜுரத்திலும் பார்த்துண்டது யார்? அம்மாதானே?'

'இல்லை. உமா,'

வசந்தி சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியே பார்க்கத் தொடங்கினாள். அவள் மனதில் 'அவனுக்கு ஜுரம் வந்தது? என்ற வருத்தம் வெள்ளம் வடிந்தாற் போல மெதுவாய் வடிந்துவிட்டது.



உமா சேவை செய்தாளா? ஆம், அவள்தானே அவன் வாழ்க்கைக்கு அதிகாரி, அவளின்றி வேறுயார் செய்வார்கள்? அவனுக்கு ஜுரம் வந்தது தெரியாதே என்று அவள் கவலை மட்டுமே படமுடியுமேயன்றி, தெரிந்தால் மட்டும் அவளால் என்ன பண்ணிவிட முடியும்? தெரிந்தும் ஒன்றும் செய்யமுடியாத அக்கையாலாகாத்தனம் இன்னும் மோசத்திற்கும் மோசமானதன்றோ? அவளால் அவ்வீட்டிற்குப் போக முடியுமா? போனாலும் உமா வீட்டிற்குள் அடியெடுத்து வைக்கத்தான் சம்மதிப்பாளா?'

ரவிசங்கரன் வசந்தியின் கையை அழுத்திச் சொன்னான்.

'உனக்கு ஒரு நல்ல சேதி.'

'என்னது? கேட்டாள்.

'ஹவுசிங் போர்டில் நீ எப்போதோ பணம் கட்டி அப்ளை பண்ணியிருந்த வீடு அலாட் ஆகியிருக்கிறது. விரைவிலேயே அந்த ஆர்டர் காகிதம் உனக்கு வந்து சேர்ந்துடும்.'

வசந்தி சட்டென்று திரும்பி 'நிஜமாகவா?' என்று கேட்டாள்.

'உன்னிடம் என்றாவது பொய் சொல்லியிருக்கேனா?'

'இல்லையில்லை, நிஜமாகவா ரவி? உங்களுக்கு யார் சொன்னது?'

'உமாவின் சித்தப்பா அவர் இந்த ஹவுசிங் போர்டு கமிட்டியின் செக்ரடரி. நேற்று சாப்பிட வந்தார். பேச்சு வாக்கில் நான் இதைப் பற்றிக் கேட்டேன். உன் பெயர், அப்ளிகேஷன் நம்பர் இவைகளை எழுதித் தந்தேன். வீடு கண்டிப்பாய் கிடைக்கும் என்றார். இன்று

மத்தியானம் போன் பண்ணி வீடு அலாட் பண்ணிட்டதாயும் நாளைக்குக் காகிதத்தை அனுப்புவதாயும் சொன்னார்.'

வசந்தியின் முகத்தில் படர்ந்த ஆனந்தம் என்ற சந்திரனைக் கருமேகம் என்ற திரையானது போர்த்தினாற் போல அதிருப்தியானது படர்ந்தது.

'உமாவுக்குத் தெரியுமா?' தாழ்ந்த குரலில் விசாரித்தாள்.

'சித்தப்பாவுக்கு எழுதித்தந்த சீட்டை வாங்கிப் பார்த்தாள்.

'என்ன சொன்னாள்?'

'என்ன சொல்லுவாள்? ஒன்றும் சொல்லலை.'

வசந்தி பெருமூச்செறிந்தாள். ஒன்றும் சொல்லவில்லையா? ஆச்சரியமாகவன்றோ இருக்கிறது! உமா கண்டிப்பாய் சண்டை போட்டே இருப்பாள். ரவிசங்கரன் தான் சொல்ல மறுக்கிறான் என்றெண்ணினாள் அவள். வசந்தி பெருமூச்செறித்தாள்.

டாக்சி தெருவில் ஓடிக்கொண்டேயிருந்தது.

'காபி குடிக்கலாமா?' கேட்டான் அவன். வசந்தி தலையை ஆட்டினாள். ரவிசங்கரன் டாக்சியை ஓட்டலுக்கருகில் நிறுத்தச் சொன்னான். மீட்டரை பார்த்த வசந்திக்கு பகீர் என்றது எழுபது ரூபாய் ஆகிவிட்டிருந்தது. வசந்தி கைப்பையைத் திறக்கப் போனபோது அவன் தடுத்து விட்டு பாக்கெட்டிலிருந்து பர்சை எடுத்துத்தானே தந்து விட்டான். வசந்திக்கு அந்த வினாடி டாக்சியில் உட்கார்ந்துச் சுற்றிய சந்தோஷம் எகிறிப்பறந்தோடி விட்டாற்போலிருந்தது.



இருவரும் உள்ளே போய் உட்கார்ந்துக் கொண்டார்கள். வசந்திக்குப் பழைய நினைவு வந்துவிட்டது. சம்பளம் வந்ததும் இருவரும் இங்கே வந்து விடுவார்கள். அந்த நாட்கள்தான் எத்தனை நன்றாயிருந்தன! இருவரும் தம் எதிர்காலத்தைப் பற்றியும், தம் இல்வாழ்க்கையைப் பற்றியும் பெறும் குழந்தைகளைப் பற்றியும் வாய்ஓயாமல் பேசித் தீர்ப்பார்கள்.

அவனும் மௌனமாய் வசந்தியையே ஏறிட்டு நோக்கினான். அவனுக்கும் அவ்விஷயந்தான் நினைவுக்கு வந்து விட்டன. அவன் கண்களில்கூட அதே ஏக்கம் நிழலாடிற்று.

ஸ்பிரிங் கதவைத் திறந்துக் கொண்டு ஒரு பருமனான மனிதர் தம் மனைவி, குழந்தைகளுடன் அங்கே வந்தார். ரவிசங்கரனைப் பார்த்த அவர் புருவம் உயர்ந்தது. மனைவியை அழைத்து 'இதோ பார், நம்ம சிதம்பரத்து மாப்பிள்ளை உமாசங்கரன்' என்றார்.

'இல்லை, என் பேர் ரவி சங்கரன்' என்றான் அவன்.

அவர் கண்கள் விரிய, 'என்ன? உன் பேர் உமாசங்கரன் இல்லையா? எல்லோரும் பின்னே உமாசங்கரன் என்று ஏன் சொல்லுகிறார்கள்? நான் நிஜமாய் உமாசங்கரன் தான்னு நினைச்சிண்டிருந்தேன். அப்படீன்னால் நிஜப்பேர் ரவிசங்கரனா? உமாவின் கணவனாதலால் உமாசங்கரன் என்கிறார்கள் போலும்!' அவர் வயிறு குலுங்க பெரிதாய் சிரிக்கத் தொடங்கினார்.

'உங்க மாமனார் மாமியார் ஊருக்குப் போய் நாளாகிறதே, இன்னும் வரலையா? ஆமாம், இந்தப்பெண் யார்?' வசந்தியை ஏற இறங்க நோட்டமிட்டார் அவர்.

'என் கசின். பேர் வசந்தி. வேலைபண்றாள்.' என்று அறிமுகப்படுத்தினான். வசந்தி வணங்கினாள்.

'கல்யாணம் ஆயிடுத்தா? அவளைப் பார்த்தால் கல்யாணம் ஆன லட்சணம் தெரியவில்லை

'இன்னும் இல்லை' ரவிசங்கரன் அதைச் சொல்லும் போது அவன் முகத்தில் செம்மை படர்ந்தது.

'ஆங்... என் தம்பிப் பிள்ளை கூட ஒருத்தன் இருக்கிறான். பி. காம். பாஸ் பண்ணிட்டு வேலை தேடிண்டிருக்கிறான். சமீபத்தில் ஏர் லைன்ஸில் வேலைகிடைக்கப் போகிறது. அவனுக்குப் படித்து வேலை செய்யும் பெண் வேணுமாம்' என்று அவளைப் பார்த்தபடி சொன்னார்

வசந்தி தோசையைப் பாதி வைத்துவிட்டாள். ரவிசங்கரனும் சரியாய் சாப்பிடவில்லை.' காபி வேண்டாம் என்றாள் அவள்.

'எனக்கும் வேண்டாம் பில்லைக் கொண்டா' என்றான் ரவிசங்கரன்.

சர்வர் பில்லைக்கொணர்ந்ததும் தந்து விட்டு எழுந்து நின்றான்.

அவர் ரவிசங்கரனைப்பார்த்து— 'வீட்டுக்கு வரேன். உமாவைக் கேட்டதாய் சொல்லு.' என்றார் அவர்.

ரவியோடு பேசிக்கொண்டிருந்த போதிலும் அவர் பார்வை வசந்தியையே அளந்துக் கொண்டிருந்தது' ரவிசங்கரனுக்குக் கூட அப்பார்வை சுருக்கென்றது. வசந்தியின் நடை உடை பாவனையை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

'அப்பப்பா, செத்தேன், இவங்க எங்கேயிருந்து வந்துத் தொலைந்தாங்களோ?' ரவிசங்கரன் அலுத்துக் கொண்டான்,

'சினிமாவுக்காவது போகலாம. அங்கேயாவது மூன்று மணி நேரம் நிச்சிந்தையாய் உட்கார்ந்திருக்கலாம்' என்றாள் வசந்தி.



இருவரும் அருகிலிருந்த தியேட்டருக்குப் போனார்கள். பழைய இந்திப்படம் ஓடிக்கொண்டிருந்தது அதிக கூட்டமில்லை 'அப்பாடா' என்று உள்ளே போனார்கள். மூலையில் உட்கார்ந்தார்கள் முதலில் இருட்டில் அங்கு மிங்குமிருந்த ஜனங்கள் புலப்படவில்லை. கண்கள் அவ்விருட்டைப் பழக்கப்பட்டுப் போன பிறகு கொஞ்ச நேரத்தில் ஜனங்கள் தெளிவாய் தெரிந்தார்கள். உட்கார்ந்திருந்த வசந்தி திடீரென்று தாழ்ந்த குரலில்' ரவி, எழுந்திருங்கள் போய் விடலாம்' என்றாள்'

'ஏன்? என்னவாச்சு?' கலவரமடைந்தான் அவன்.

'அதோ அந்த முன் வரிசையில் உட்கார்ந்திருக்கும் மாமி எங்க பக்கத்து வீட்டுக்காரி அவள் நம்மைப் பார்த்து விட்டால் அக்காவிடம் சொல்லிவிடுவாள்'

ரவிசங்கரன் உடனே எழுந்திருந்தான். இருவரும் வெளியே வந்துவிட்டார்கள்'

வசந்தி சொன்னாள்— 'ரவி, பார்த்திங்களா, ஆசுபத்திரியிலிருந்து நான் டிஸ்சார்ஜ் ஆன அன்றைக்கு நீங்கள் என்னசொன்னீர்கள்? இந்த உலகம் பரந்தது, அதில் நாம் எங்கே வேணுமானாலும் சந்திக்கலாம் என்றீர்கள். இப்பொழுது தெரிந்ததா? நமக்குத் தனிமை எங்கேயுமே கிடைக்காது என்று புரிந்துக் கொள்ளுங்கள்' தொலைவிலிருந்து பஸ் வந்தது. அது அவன் ஏறும் பஸ்.

'நான் போய்வரேன் வசந்தி' என்று கூறி விட்டு சரேலென்று பஸ்ஸில் ஏறிவிட்டான். பஸ்ஸில் கூட்டம் வழிந்தது. அக்கூட்டத்தில் கரைந்து போய் விட்ட அவன் வசந்திக்குத் தென்படவில்லை. கையை ஆட்ட உயர்த்திய வசந்தி தயக்கத்துடன் நிறுத்திக் கொண்டாள்.

வசந்தி வீட்டிற்கு வந்து கட்டிலில் சரிந்தாள். ரவிசங்கரனைப் பார்த்த மகிழ்ச்சி சிறிதும் இல்லாமல் போய்

விட்டது. அந்த உமாவின் பந்தத்திலிருந்து விமுக்தியடைந்தால்தான் இதற்குப் பரிகாரம் கிட்டும். அவன் உமாவைத் துறக்க சித்தமா இல்லையா என்பதை மறுநாள் கேட்டுவிடத் தீர்மானித்துக் கொண்டாள் அவள்.

## 19

மறுநாள் ரவிசங்கரன் போன் பண்ணினான். சரியாய் வசந்தி ஆபிசிலிருந்து வீடு திரும்பும் நேரத்திற்கு வருவதாயும் கொஞ்சநேரம் எங்கேயாவது உட்கார்ந்திருக்கலாம் என்றும் சொன்னான்.

வசந்தி அத்தனை உற்சாகம் காட்டவில்லை, முதலில். ஃபைல்களைப் புரட்டிக் கொண்டே 'இன்று என்னவானாலும் சரி உண்டு இல்லை என்றுத் தெரிந்து கொண்டு விடவேண்டும் என்றெண்ணிக் கொண்டாள்.

மாலை வந்தது. வசந்தி வெளியே வந்தாள். ஆனால் அங்கு ரவிசங்கரன் தென்படவில்லை. பஸ் ஸ்டாண்டிற்கருகில் காத்துக் காத்து நின்றாள். எத்தனை பஸ் வந்தபோதிலும் ஏறாமல் யாருக்காகவோ எதிர்பார்த்து நிற்பதுபோல் நின்று கொண்டிருந்தாள்

வசந்தியை நோட்டமிட்ட ஓரிரு காலிப் பசங்கள் விசிலடித்துக் கொண்டு வட்டமிடத் தலைப்பட்டார்கள். அவளுக்கு பயமாகி விட்டது. உடனே ஆட்டோவை அழைத்து ஏறிக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டாள்.

ரவிசங்கரனுக்கு என்ன வாயிற்று? ஏன் வரவில்லை? அவள் மனதில் பல்வேறு பயங்கள் குடைந்தெடுக்கலாயிற்று.

அன்றிரவு முழுவதும் அவள் உறங்கவேயில்லை. மறுநாள் ஆபிசிற்கு வரும் பொழுது ரவிசங்கரன் அங்கு வந்து



உட்கார்ந்திருந்தான். 'அவனும் இரவெல்லாம் உறங்கவில்லை போலிருந்தது.

'வசு, நேற்று மாலையில் அவசர வேலையாய்ப் போயிட்டேன்.'

'என்ன வேலை?' என்றாள் கலக்கத்துடன்.

'கம்பெனி ஆர்டர் ஒன்று ஐம்பதாயிரத்திற்கு அவசரமாய் அனுப்ப வேண்டி வந்துடுத்து.,

வசந்தி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். 'கம்பெனி வேலையா?' என்ற இளப்பம் தென்பட்டது அப்பார்வையில். பாங்கிற்கு ஒவ்வொருவராய் வரத்தொடங்கி விட்டார்கள்.

'நான் சாயந்திரமாய் வரேன்' அவன் சொன்னான்.

'எனக்கு வேலை இருக்கு' மறுக்கப் போனாள்.

'ப்ளீஸ், மறுக்காதேயன்' என்று சொல்லி விட்டுப் போய் விட்டான் அவன்.

வசந்தி அன்றெல்லாம் வேலையில் கலனமின்றி கழிக்கலானாள். சாயந்திரம் வரேன் என்றான், தான் இருக்கக் கூடாது. கம்பெனி வேலையாம்! என்னவானாலும் அவனுக்கு அந்த வியாபாரத்தின் மீதுதான் கவனம் இருக்கிறது. அவளுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. அவனுக்கு அந்த கம்பெனியின் மீதும் உமாவின் மீதும் கடுகளவு கூட ஆர்வம் இருத்தலாகாது என்றெண்ணினாள். தான் எவ்வாறு அல்லும் பகலும் அவனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறாளோ அதுபோலவே தான் அவனும் தன்னைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் உள்ளம் விழைந்தது.

பிற்பகலே போய்விடவேண்டும் என்றெண்ணிய வசந்திக்கு, பிற்பகல் ஆனதும் உள்ளத்திலிருந்த உறுதி

தளரலாயிற்று. அவன் வரும்பொழுது அவனைப் பார்க்காமல் போவது அவளால் இயலாது போலிருந்தது.

மாலை வந்தது. அவன் வந்து விட்டான் அவன் முகத்தில் தெரிந்த களைப்பைக்கண்டு வசந்திக்குப் பரிதாபமாய் இருந்தது. 'இருக்கிறாயா? அப்பாடா! ஏனோ நீ போய் விடுவாயோன்னு தோன்றிற்று. மத்யானம் போன் பண்ணினேன், நீ பிசியாயிருப்பதாய் மானேஜர் சொல்விட்டார். அரைமணி கழித்துத் திரும்பவும் பண்ணிய போது அதையேதான் சொன்னார். உன்னைப் போனில் அழைக்க அவருக்குப் பிடிக்கலைன்னு தெரிந்தது.'

இருவரும் ஆட்டோ ஏறி பீச்சிற்கு வந்தார்கள். இறங்கி நடக்கலானார்கள்.

'நம்மை யாராவது பார்த்துட்டால்?' என்றாள் வசந்தி.

'பார்க்கட்டுமே' எந்த தயக்கமுமின்றி சொன்னான் அவன்.

'உமாவுக்குத் தெரிஞ்சுட்டால்?'

அவன் மௌனமாயிருந்தான்.

'ஏன் பதில் சொல்லலை?'

'மாட்டேன். உனக்கு இதுவரை ஆயிரந்தடவை சொல்லியிருப்பேன். உமாவுக்கு நான் பயப்படமாட்டேன்னும் அவளுக்கு எல்லாம் தெரியும்னு... ஆனால் நீ என் பேச்சை நம்பமாட்டாய், என் தலையெழுத்து' அவன் ஆவேசத்திற்கு வசந்தி வியப்படைந்தாள்.

'ஏனிந்த கோபம்?'

'நீ நம்பா விட்டால் பைத்தியம் பிடித்தாற் போலிருக்கிறது.' இருவரும் ஓர் இடத்தில் உட்கார்ந்துக் கொண்டார்கள்.



'எத்தனை நாளைக்கு இப்படி?' தண்ணீரையே பார்த்துக் கொண்டு கேட்டாள் அவள்.

அவன் மௌனமாயிருந்தான்.

''உங்களைத்தான். இதற்கு ஏதாவது பரிகாரம் காட்டச்சொல்றேன்.'

'எதற்கு?'

'நம்மிருவரின் தொடர்பு பற்றி.'

'நீயே சொல்லு' அவன் குரல் ஏதோ மாதிரியிருந்தது.

'நான் சொன்னால் கேட்பீங்களா நீங்க?'

'முயற்சிக்கிறேன்.'

'உமாவைக் காதலிக்க முயற்சியுங்கள்.'

'வசு...' அவன் திருப்பினான்.

வசந்தி தண்ணீரையே இமைக்காமல் நோக்கியபடி சொன்னாள். 'இல்லாவிட்டால் என்னைக் கல்யாணம் பண்ணிக்குங்க ஏதாவது ஊருக்குப் போல் விடலாம் வாங்க. இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுங்க. நாம் போகும் வழி ஒன்றை நோக்கியே இருக்க வேண்டும். இரண்டு வழிகளில் யாருமே ஒரே சமயத்தில் போக முடியாது.

இந்த திருட்டு வாழ்க்கையை நம்மால் வாழ முடியவில்லை. நேற்றுத்தான் பார்த்திர்களே, சேர்ந்து ஒரு பத்து நிமிஷம் கூட சழிக்க முடியவில்லை. இன்றும் அது போல தான்? நாளைக்கும் அது மாதிரி தான். ஜென்மம் பூராவும் இப்படித்தான்னு தோன்றது. என்னால் தாங்க முடியவில்லை.'

அவன் மௌனமாய் இருந்துவிட்டான்.

வசந்தியே சொன்னாள்—

'நேற்றிரவு நான் நன்றாய் யோசித்துப் பார்த்து விட்டேன். நான் ஒரு முட்டாள். இந்த உலகத்தில் யாருமே பண்ணாத முட்டாள்தனத்தைப் பண்ணிவிட்டேன் நான்.

என் சுயநலத்தைப் பாராமல் இதர மனுஷங்களின் நலத்தைப் பார்த்தேன். உங்களுக்கு உங்கம்மாவின் மேல் எத்தனைப் பிரியம் என்பதை நான் அறிவேன்.

அவங்கசொன்ன சம்பந்தத்தைத் தவிர்த்துவிட்டு நீங்க என்னைப் பண்ணிட்டால் அவங்களும் குழந்தைகளும் மிகவும் வருந்த நேருமென்னு நினைச்சுட்டேன். அவங்களை வருத்தப்படுத்தி விட்டு உங்களால் என்னோடு சுகமாய்வசிக்க முடியாது என்றெண்ணிவிட்டேன்'

நான் செய்த மோசமான தப்பே உங்கள் தரப்பில் இருந்து ஆலோசித்துப் பார்த்ததுதான். உங்கம்மா வருந்தினால் எனக்கென்னன்னு இருந்திருக்கணும். அவங்க என்னைப்பற்றி யோசித்துப்பார்த்தாங்களா? நான்மட்டும் ஏன் அவங்களைப் பற்றி யோசித்துக் குழம்பினேன். புத்திக் கெட்டத் தனத்தால் என் வாழ்க்கையில் விலைமதிப்பற்ற உங்களை இழந்துட்டேன். திரும்பவும் அதே முட்டாள்தனத்தை இப்பொழுதுப் பண்ணிண்டிருக்கிறேன்.

உங்களைப் பற்றியும் உமாவைப்பற்றியுமே நினைச்சுண்டிருக்கிறேன். நேற்றிரவிலிருந்து இந்த யோசனைகளுக்கு விடுதலை அளித்துவிட்டேன், நீங்க என்னை மணந்துக்க முடியுமா முடியாதான்னு சொல்லிடுங்க. பண்ணிக்கிறதாய் சொன்னால் நாம்ப எங்கேயாவது கோவிலுக்குப் போய் பண்ணிக்கொண்டு விடலாம். நாம்ப நம்ப சங்கதியை யோசிச்சுப்பார்த்துப்போம். எனக்கு உண்மையைச் சொல்லுங்க.

அவன் சிலையாய் வீற்றிருந்து விட்டான்.



'நாளையும் மறுநாளும் பாங்கிற்கு லீவு. திங்களன்று இந்த விஷயத்தைப் பற்றி முடிவைச் சொல்லிடுங்க.

அவன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

'சரி நான் கிளம்பறேன்'

அவன் எழுந்திருந்தான்.

வசந்தி ஆட்டோவை அழைத்தாள். அதில்ஏறிஅமர்ந்தாள்? அவனிடம் போய் வருவதாய்சொல்லிக்கொள்ளவேயில்லை. அவன் ஒன்றுமே பேசவில்லை, ஏன்? பிடிக்காததலா? அவளுக்கு அழுகை வந்துவிட்டது தான் எடுத்த இம்முடிவு சரியானதுதான் என்று தோன்றிவிட்டது.

மறுநாள் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் மிக பாரமாய் கழியலாயிற்று வசந்திக்கு யோசித்து யோசித்துக் குழம்பியதால் ஜுரம் வந்தாற் போலாயிற்று.

வசந்தி ஆபீசுக்குக் கிளம்பினாள்.

ஆபீசில் எல்லோரும் கூடி கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். சீட்டில் அமர்ந்து ஒருவரும் வேலை செய்யவில்லை. ஒரே சந்தடியாயிருந்தது

'என்னவாச்சு?' பக்கத்து சீட்டு ராணியைக் கேட்டாள் வசந்தி.

'நேற்றிரவு இந்திரா கெரசினாயிலை ஊற்றி எரித்துண்டு தற்காலை பண்ணிக் கொண்டு விட்டாளாம்.'

வசந்திக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'இந்திராவா? இந்திராவுக்கு என்னவாயிடுத்து?' என்று கேட்டாள்.

இந்திரா அவள் சக கிளார்க்குதான். மிக நல்ல சுபாவம். அதிகமாய் பேசமாட்டாள். தன் வேலையைத்

தான் பண்ணிக் கொண்டு போவது வழக்கம். ஆசைக்கு இரு குழந்தைகள் கூட இருந்தனர்.

'என்னவோ வீட்டில் தகறாராம். கணவன் சரியாய் கவனிக்க மாட்டானாம். வேறொரு பெண்ணோடு தொடர்பு உண்டாம்.'

'இருந்தால்?'

'வெறுமே சம்பந்தம்னு இருந்தால் இந்திரா ஒன்றும் பண்ணியிருக்க மாட்டாள். அவன் அந்தப் பெண்ணை அழைச்சுண்டு போய் கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டானாம். இந்திரா இதைத் தாங்காமல் செத்துட்டாளாம்... ஐயோ இந்த புராணம் இப்போதில்லை நாலு வருஷமாகவே நடந்துண்டுதான் வந்திண்டிருந்ததாம்.

ஆனால் கல்யாணமே பண்ணிண்டு வந்து தன்னை உதறிவிடுவான்னு நினைக்கவில்லையாம். அந்தப் பெண்ணோடு கல்யாணமாவதற்கு முன்னாலிருந்தே சம்பந்தம் உண்டாம். வரதட்சணைக்காகத்தான் இந்திராவையே பண்ணிண்டானாம்

கல்யாணம் ஆனதிலிருந்தே பணத்துக்காக அரித்துண்டிருந்தானாம். தந்தை கொடுத்த பணமெல்லாம் கரைந்துடுத்தாம் குடும்பம் இந்திராவின் பணத்தைக் கொண்டுதான் எப்படியோ ஓடிற்றாம்.

ஒருவன் வந்து சொன்னான்—

'நாங்க ஆசுபத்திரிக்குப் பிணத்தைப் போய் பார்க்கப் போகிறோம், நீங்களும் வரீங்களா?'

'ஏன் வரமாட்டோம்? உங்களைவிட நாங்க பெண்கள் தான் மிகக் கலங்கிப் போயிருக்கோம்' என்றாள் ராணி.



எல்லோரும் வேனில் ஏறிப் போனார்கள். இந்திரா
வின் தாய் அழுதுக்கொண்டிருந்தாள். 'தரித்திரம் பிடித்த
வன். பெண்ணைக் கொடுத்தால் சுகப் படுவாள்னு
நினைத்தோம். இப்படி அவள் வாழ்க்கையையே பொசுக்
கிப் புடுவான்னு நினைக்கலை. அவன் மட்டும் கண்ணில்
பட்டால் கொன்றுக் குடலை மாலையாக போட்டுப்
பேன்.'

எல்லோரும் அவளைத் தேற்றினார்கள். அவளோடு சேர்ந்து இந்திராவின் கணவனைத் தூற்றினார்கள். குழந்தைகளும் 'அம்மா' என்றுக் கதறினார்கள்.

பாங்கிற்கு அன்று லீவு விட்டு விட்டார்கள். வசந்தி வீட்டிற்கு வந்துவிட்டாள்.

வசந்தியின் மனம் சூனியமாகி விட்டாற் போலிருந்தது. செவிகளில் திரும்பத்திரும்ப இந்திராவின் தாயார் இட்ட சாபமே ஒலித்துக் கொண்டிருந்தது—'அவள் யாரோ என் மகளின் வயிற்றெரிச்சலை அள்ளிண்டு உருப்படமாட்டாள். என் மகள் பேயாகி அவளை வதைக்கத்தான் செய்வாள்.' என்ற வார்த்தைகள் தாம் அவை.

வசந்தி ஆடாமல் அசையாமல் வீற்றிருந்ததைக் கண்டு அக்கா வந்து நெற்றியில் கைவைத்துப் பார்த்து விட்டு இதென்னது,? அந்த இந்திரா ஏதோ செத்தால் நீ எதற்குப் பைத்தியம் பிடித்தவளைப் போல பார்க்கிறாய்? சரியான கல்யாணம் ஆகாவிட்டால் எல்லா பெண்களின் வாழ்வுமே அந்த கதிதான் ஆகும்.' என்றாள்.

சாப்பிடச் சொல்லி வற்புறுத்திலாள் வசந்தி சாப்பிட மறுத்துவிட்டாள். உறக்கமும் வர மறுத்தது. அவள், என்ன காரியத்தைப் பண்ணிவிட்டாள்!

ரவிசங்கரனை வரச் சொல்லி அழைத்து, எங்காவது போய் மணந்துக் கொள்வோம் என்றும் கூறி விட்டாளே,

அவன் வந்துவிடுவான் அதில் சந்தேகமேயில்லை அவன் மீது அவனுக்கிருந்த அன்பில் கடுகளவு கூட சந்தேகமே இல்லை. அப்பொழுது உமா என்ன பண்ணுவாள்? உமாவின் மேனி கருகி. விகாரமாய் கண் முன் தெரியலாயிற்று வசந்திக்கு.

வசந்தி வீல்' என்று அலறிவிட்டாள்.

'என்ன?' சமையலறையில் ஒழித்துக் கொண்டிருந்த அக்கா ஓடி வந்தாள்.

'என்ன வாச்சு?'

'ஒன்றுமில்லை அக்கா, ஏதோ பயமாயிருந்தது.'

அக்கா வசந்தியை விநோதமாய் நோக்கினாள். 'பயமாகவா இருக்கு? நான் வேணும்னால் பக்கத்தில் படுத்துக்கட்டுமா?' என்றாள்

படுத்துக் கொள் என்பது போல தலையசைத்தாள் வசந்தி. அக்கா கதவையெல்லாம் தாழிட்டு விட்டு வந்து கைக்குழந்தையோடு வந்து படுத்துக் கொண்டாள். அடுத்த வினாடியே குறட்டை விடத் தொடங்கினாள்.

வசந்தி கட்டிலில் அப்படியே வீற்றிருந்தாள். தான் எத்தனை மோசம் பண்ணத் துணிந்து விட்டாள்! ரவி சங்கரனைத் தன்னோடு வரச்சொல்லிவிட்டாள். உமாவின் கதி என்ன? இதில் உமா என்னதான் தவறிழைத்து விட்டாள்? எல்லா பெற்றோர்களும் பார்த்து மண முடித்து வைத்தாற்போலத்தான் உமா ரவிசங்கரனை மணந்துக் கொண்டாள்.

ரவிசங்கரன் முன்பே ஒரு பெண்ணைக் காதலித்து வந்தது உமாவின் தவறில்லையே. உமாவை சம்மதிக்க வைத்துவிட்டு ரவிசங்கரன் வந்தானானால் பரவாயில்லை.



11347 2968651

ஆனால் அது சாத்தியக் கூறா? [illegible] இந்த தா[illegible] திருமணத்திற்கு தரப்பட்டிருக்கும் [illegible] அர்த்[illegible]ந தானோ?

அத்திருமணம் மிக உன்னதமானதென்றுதானே அவளே திருமணத்திற்காக இத்தனை தவிதவிக்கிறாள்? திருமணத்தின் மதிப்பே அறியாதவளாயிருந்தால் ரவிசங்கரனுடன் சேர்ந்து சாதாரணமாய் வசித்து வரலாமே! வசந்திக்கு மூளையே குழம்புவது போல இருந்தது

'என் மூளையில்தான் குறை இருக்கிறது. எப்பொழுதுமே மற்றவர்களுக்காகத் தான் யோசித்துப் பார்க்கிறேனேயன்றி என்னைப்பற்றியே நான் சிந்திப்பதில்லை' என்று தன் மீதே கோபம் வந்தது அவளுக்கு.

ரவிசங்கரன் என்னவென்று தீர்மானிப்பான்? உமாவை உதறிவிட்டுத் தன்னோடு வருவதற்கு இணங்குவானா?

என்னதான் அவன் மீது அன்பிருந்தாலும் அதென்ன தீர்மானம்? அது அவன் நற்பண்புக்கே ஒரு களங்கமாய் அமைந்து விடாதா? அவன் சரியென்று இணங்கி வந்து விட்டால் அவளுக்கு அவன் மீது அருவருப்பாய் கூட இருக்குமோ என்னவோ? அப்பொழுது அவள் என்ன பண்ணுவாள்? தன் வெறுப்பை எடுத்துக்காட்டி போகச் சொல்லி துரத்தி விடுவாளோ? ஒருக்கால் உமாவை உதறி விட்டு வர முடியாது என்றால்? வசந்திக்கு மேலும் அசதியை அளித்தது ஆலோசனை.

# 20

செவ்வாய்க் கிழமை வசந்தி ஆபீசிற்கு வந்தாள். அவள் உள்ளம் கூண்டிலிருந்த கைதி நியாயாதிபதி வழங்கப்போகும் தீர்ப்பைக் கேட்கத் துடித்துக் கொண்டு நின்றிருந்தாற்போலிருந்தது.

ரவிசங்கரன் வந்தால் என்ன பண்ணுவது? வராவிட்டால் என்ன பண்ணுவது? அடிக்கடி சுவற்றிலிருந்த கடிகாரத்தையே நோக்கிக் கொண்டிருந்தன அவள் கண்கள். காலியாய் வெறிச்சிட்டுக் கிடந்த இந்திராவின் சீட்டைப் பார்த்தால் இதய பாரம் அதிகரிக்கலாயிற்று.

பல யுகங்கள் கழிந்தாற்போல மிக பாரமாய் கழிந்துவிட்டு வந்துச் சேர்ந்தது அந்தமாலைப்பொழுது. பாங்கை மூடும் நேரமாயிற்று. எல்லோரும் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்? வசந்தி வெளியே வந்தாள்.

அங்கே ரவிசங்கரனைக் காணும், வசந்தி சக கிளார்க்கான ராணியை துணைக்கு வைத்துக்கொண்டு ஒரு மணி நேரமாய் காத்துக்கொண்டிருந்தாள். ரவிசங்கரன் வரவேயில்லை. வசந்தி பெருமூச்செறிந்தாள். 'சாரி ராணி. உன்னை தொந்தரவிற்குள்ளாக்கிட்டேன். வா, வீட்டிற்கருகில் இறக்கிவிட்டுப் போறேன்' என்று ஆட்டோவைக் கூப்பிட்டாள். ராணி மறுத்தபோதிலும் வீட்டிற்கருகிலேயே இறக்கி விட்டு விட்டுத் திரும்பினாள் வசந்தி.

உடைமாற்றிக்கொண்டு வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் ஏதேனும் சிறிய ஓசை எழும்பினாலும் வாசலை எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டே இருக்கலானாள். ரவிசங்கரன் வருவான் வருவான் என்று மிக உறுதியாகத் தெரிவித்தத் தன் அந்தராத்மாவின் சத்தியம் ஏன் இப்படி பொய்த்து விட்டதென்றுதான் அவளுக்குப்புரியவில்லை.



விடிந்தது.

வசந்தி சோர்வுடன் படுத்துக் கிடந்தாள். ஆபீசுக்கு மிகப் பிரயாசைப்பட்டுத் தயாராகிக் கிளம்பினாள்.

திரும்ப மாலை வந்தது. ரவிசங்கரன் வரவேயில்லை.

அவளுக்கு மிகவும் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. வந்து துணிச்சலாய் ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டு போயிருந்தால் அவளுக்குச் சந்தோஷமாயிருந்திருக்கும். அவன் கோழைத் தனத்திற்கு அருவருப்பாயிருந்தது.

ஏதோ வாய் பேச்சுக்கு ஏதேனும் சொல்லலாமேயொழிய செல்வாக்குள்ள மாமனார் வீட்டை அவனால் விட்டுவிட்டு வந்துவிடத்தான் முடியுமா? அவள்தான் பைத்தியக்காரியாய் அவனுக்காகத் தன் வாழ்க்கையையே துறக்கலானாள். வசந்திக்கு அவ்வினாடி உலகத்தில் எல்லோருமே தன்னைவிட புத்திசாலிகளாய் தெரிந்தது.

மணி பிற்பகல் ஒன்றைத் தாண்டியதும் அதற்குமேல் வசந்தியின் கோபம் தரிக்கவில்லை. தானே போய் அவன் ஆபீசிற்குப் போன் பண்ணினாள். தான் இவ்வாறு போன் பண்ணுவது இதுதான் கடைசி முறை என்று சபதமிட்டுக் கொண்டாள் உள்ளூர.

போன் ஒலித்தது. மறுமுனையில் யாரோ எடுத்தாற்போல ,க்ளிக்' என்றது. வசந்தி 'ஹலோ' என்ற பரிச்சயமானகுரலுக்காகக் காத்திருந்தாள்.

'ஹலோ' மறுமுனையிலிருந்து கேட்டது. அக்குரல் ரவிசங்கரனுடையதில்லை. முரட்டுக் குரலாய் கட்டைத் தொண்டையில் ஒலிக்கலாயிற்று.

'ஹலோ, ரவிசங்கரன் சார் வேணும்.'

'ரவிசங்கரன் சாரா? அவர் இல்லைங்க. ஊருக்குப் போயிருக்கிறார்.'

'ஊரா? எந்த ஊர்?'

'டெல்லிக்குங்க... அவங்க மாமனாரும் மாமியாரும் ரயில் விபத்தில் போயிட்டாங்களாம். குடும்பத்தோடு போயிருக்கிறார்.'

வசந்தி இவ்வார்த்தையைக் கேட்டு நிமிர்ந்து நின்றாள்.

'மாமனாரும் மாமியாருமா?'

'ஆமாங்க. அவங்க போய் இரண்டு நாளாகிறது. நீங்க யார், என்ன வேலைன்னு சொல்லுங்க, மானேஜர் வந்ததும் தெரிவிக்கிறேன். ஹலோ...'

வசத்தி அதற்குள் போனை வைத்து விட்டாள்.

உமாவின் பெற்றோர்கள் காலமாகி விட்டனரா! 'ரவி சங்கரன் உமாவை அழைத்துக் கொண்டு டெல்லிக்குப் போயிருக்கிறானா? வசந்திக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. வந்து சீட்டில் அமர்ந்துக் கொண்டாள். ஃபைலில் எண்கள் தென்படவில்லை.

அந்த ஃபைலில் டெல்லி தெரிந்தது அங்கே உமாவைத் தேற்றித் கொண்டிருக்கும் ரவிசங்கரன் கண்ணுக்குத் தெரிந்தான். உமாவின் தலை அவன் தோளில் பதிந்திருந் தது. உமா அழுதுக் கொண்டிருக்கிறாள்.

ரவிசங்கரனின் கை உமாவின் தலையைக் கோதுகின் றன. 'உமா, அழாதே ப்ளீஸ்! போனவைங்க திரும்பி வர ாட்டாங்க. அவங்க எத்தனை அதிர்ஷ்டசாலி பார், இருவருமே ஒன்றாக போயிட்டாங்க. நீ பெரியாவளாகி



விட்டாய். அவருக்கு வேறு கவலை என்ன? அழாதே. என் பேச்சைக்கேட்கமாட்டாயா இதோ இந்த காபியைக் குடி, நல்லப் பெண்ணில்லையா? காபி குடிக்காவிட்டால் என் மேல் ஆணை...' அவன் பலவந்தமாய் குடிக்க வைக்கிறான்.

ஒரு விழுங்கு குடித்துவிட்டு உமா அவனைப் பேதை யாய் ஏறிட்டு நோக்குகிறாள். அக்கண்களில் கண்ணீர் வழிந்தோடுகிறது.

'உமா' அவன் அத்தலையை மார்போடு அழுத்திக் கொள்கிறான். உமா அவன் மார்பில் சாய்ந்து குலுங்கி அழுகிறாள்.

'உங்களைத்தாம்மா, மானேஜர் கூப்பிடுகிறார்.' ப்யூன் உரக்கக் கத்தினான்.

'ஆங்...' வசந்தி திடுக்கிட்டாள். தன்னைத் தேற்றிக் கொண்டு எழுந்து அவனைத் தொடர்ந்துச் சென்றாள். வசந்தியின் கண்களுக்கு மானேஜரின் உருவம் மட்டுமே தெரியலாயிற்று. அவர் என்ன பேசுகிறார் என்றே விளங்கவில்லை.

மானேஜரிடமிருந்து திட்டு வாங்கிக் கொண்டு உடம்பு சரியாயில்லை என்று லீவை எழுதிக் கொடுத்து விட்டு வெளியே வந்துவிட்டாள் வசந்தி.

உமா பெற்றோர்களின் கர்மகாண்டத்தை சிரத்தை யாய் நடக்கச் செய்தாள்.

பத்து நாட்கள் ஆனதும் லாயர் சொத்து விவரங் களைப் படித்துவிட்டு ரவிசங்கரனைப் பார்த்து— 'ரவி சங்கரன் சார், உமா பெண்பிள்ளை. இதுவரையிலும் தாய்தந்தையரின் நிழலில் வளர்ந்து வந்தவள்; எல்லோரும் கழுகாய் கொத்தக் காத்திருப்பார்கள் இந்தச் சொத்தை-

இனிமேல் இந்த சொத்துக்கெல்லாம் நீதான் வாரிசு. ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கோப்பா

உமா பிறக்கறதுக்கு முன்னால் சிதம்பரம் சார் அவர் தம்பி மகனை கொஞ்சநாள் எடுத்து வளர்த்தார். அவன் இப்பொழுது சொத்தில் பங்கு வேண்டும்னு வழக்குப் போடப் போறானாம். கொஞ்சம் ஜாக்கிரதையாய் பார்த்துக்கோப்பா. இந்த சம்பத்து இருக்கு பாரப்பா இதை சம்பாதிக்கிறது கஷ்டமில்லை. ஜாக்கிரதையாய் காப்பாற்றிக் கொள்வதே கஷ்டம்' என்று கூறிவிட்டுப் போனார்.

உமா திகிலடைந்து போய் அமர்ந்து விட்டாள். தந்தை எத்தனையோ சம்பாதித்துத் தந்து விட்டுப் போயிருக்கிறார். ஆனால் இதன் மூலம் அவளுக்கு சுகம் இல்லாமல் வருத்தந்தான் வந்துச் சேர்ந்தது. கம்பெனியின் லாப நஷ்டங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். கணவனின் மேல் கோபம் வந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளக்கூடாது. தந்தை இறந்து இரண்டு வாரங்கள் கூட முடிவடையவில்லை. அதற்குள் கோர்ட்டிலிருந்து தாவாவின் சம்மன்கள் வந்துச் சேர்ந்தன.

இதையெல்லாம் தாங்கிக் கொண்டு ஈடுகட்டிச் செல்ல பாரமாயிருந்தது உமாவுக்கு.

அன்றைக்குத் தாய்தந்தையர் போய்விட்டதாய். டெல்லியிலிருந்த அத்தை புருஷனிடமிருந்து போன் வந்த அந்த இரவை அவளால் எப்படித்தான் மறக்கமுடியும்? அன்று வீட்டில் எத்தனை பயங்கரமான யுத்தம் நடந்தேறிற்று! ரவிசங்கரன் அவளை விவாகரத்துத் தரச் சொல்லிக் கோரினான்.

உமா அதிர்ந்து விட்டாள்.

'நான் என்ன தவறிழைத்தேன்?' என்றாள்



ரவிசங்கரனால் பதிலளிக்க முடியவில்லை. உமா உளுக்கி எடுத்தாள்.

'இதுல உன் தவறு எதுவுமில்லை. தப்பெல்லாம் என்னுடையதே, உன்னை மணந்துக் கொண்டதும், மணந்தும் எல்லா கணவன் மார்களையும் போல காதலிக்க முடியாமல் போனதும்—என் தவறுதான்.'

'நான் இப்பொழுது உங்களைக் காதல் பிட்சை வேண்டவில்லையே?'

'உமா';

'உங்க சந்தோஷத்திற்குக் கூட குறுக்கே வரவில்லை. வசந்தியோடு நீங்க வெளியே சுற்றுகிறீர்கள் ஒட்டலுக்கும் சினிமாக்களுக்கும் போகிறீர்கள். அவளுக்கு வேலையை இங்கேயே மாற்றலாக்கி விட்டீர்கள். வீட்டைக் கூட ஏற்பாடு பண்ணிவிட்டீர்கள். ஜீரம் வந்தால் ஆசுபத்திரியில் சேவை பண்ணுகிறீர்கள். நான் என்றாவது ஏதாவது சொன்னேனா?'

'சொல்லலை'

'அதையெல்லாம் தாங்கினேன். எதற்கு? அப்பாவுக்காக இல்லை. எனக்காகவே தான். நீங்க என்னை கவனிக்காவிட்டால் உலகத்தாரின் முன்னால் இளப்பமாகி விடுவேனோ என்ற அச்சத்தால்தான் தங்கினேன். சிறுவயதிலிருந்தே என் அதிர்ஷ்டத்தை எல்லோரும் மெச்சுவது வழக்கம்.

என் அதிர்ஷ்டத்திற்கு ஈடு இணை இல்லை என்று பொங்கிப் பூரித்து மகிழ்வேன் நான்— இங்கே என்னை விதி நன்றாய் தாக்கிவிட்டது. இந்த அடி வெளியே தெரிந்து விடாமல் சமாளிக்கத்தான் உலகத்தாருக்கு முன்னால் இந்த மாதிரி ஜாக்கிரதையாய் நடந்துக் கொள்கிறேன்.

என் இந்த மதிப்பு எனக்கு உங்களை விட மேம்பட்டது.

இதை என்னால் துறக்கமுடியாது. நான் உங்களுக்கு விவாகரத்து அளிப்பதென்பது என் இந்த உடலில் உயிருள்ள வரையிலும் நடக்காத காரியம். இத் திருமணத்தை ஏன் பண்ணிண்டீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. இது என் துரதிர்ஷ்டமும் கூடத்தான்

என்னை உதறிவிட்டும் போய்விடமுடியாது உங்களால். போய்விட்டாலும் உங்களை வரவழைத்துக் கொள்ள என்னால் முடியும். நீங்க எதற்கு விவாகரத்து கேட்கிறீங்கன்னு எனக்குத் தெரியும். வசந்தியை உங்களால் வெறுமே வைத்துக்கொள்ள வேண்டுமானால் முடியுமேயன்றி திருமணம் மட்டும் பண்ணிக்கொண்டு விட முடியாது.

'வாயை மூடு' உமாவின் கன்னம் அதிர்ந்தது.

'அத்துமீறி பேசாதே' ரவிசங்கரனின் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன,

அதற்குள் போன் ஒலித்தது கன்னத்தைக் கையில் பிடித்துக் கொண்டு அதிர்ந்துபோய் நின்றுவிட்ட உமா மெதுவாய் சொரணையை அடைந்து, போய் போனை எடுத்தாள்.

உடனே உரக்க ,இல்லை, இருக்காது, பொய் பொய்' என்று கூச்சலிட்டு விட்டாள். அறையை விட்டுப் போன ரவிசங்கரன் திரும்பிப் பார்த்தான். உமா கதறிக் கொண்டே பேசினாள். 'எப்பொழுது? என்னவாச்சு! ரயில் விபத்தா?' அழத் தொடங்கி விட்டாள்.

ரவிசங்கரன் திரும்பி உள்ளே வந்தான். ரிசீவரைக் கீழே போட்டுவிட்டு ஓவென்று தலையிலடித்துக்கொண்டு



கதறித் தீர்த்த அவளை நோக்கி ரவிசங்கரன் ''என்ன என்னவாச்சு?' என்றும் கேட்டான்.

'அப்பாவும் அம்மாவும் போயிட்டாங்களாம்.'

ரவிசங்கரன் போனை எடுத்துக் கொண்டான். டெல்லியிலிருந்து உமாவின் அத்தை புருஷன் பேசினார். உமாவை உடனே அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். உடனே கிளம்பினால் பிளேன் கிடைக்கும் என்றார். டிக்கெட் கிடைக்கும்படி தான் முயற்சி பண்ணுவதாய் சொன்னார்.

அரை மணிக்குள் இச்செய்தி எல்லோருக்கும் தெரிந்து விட்டது.

உமாவும், ரவிசங்கரனும் விமான நிலையத்திற்குக் கிளம்பினார்கள்.

காரில் உமா அழுதுக் கொண்டிருந்தாள். ரவிசங்கரன் தோளைத் தொட்டு சமாதானப்படுத்த முனைந்தான்.

'உமா...' அவன் உதடுகள் முணுமுணுத்தன.

உமா அவனை பலமாய் தள்ளி விட்டாள், மூலையில் போய் அமர்ந்துக் கொண்டு கையால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழலானாள். ரவிசங்கரன் சிலையாய் மௌனமாய் வீற்றிருந்து விட்டான்.

தொடர்ந்து ரவிசங்கரன் ஒரு பொம்மையாய் நின்றுக் கொண்டிருந்தானேயொழிய உமாதான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டாள். உமாவின் துணிச்சலைக் கண்டு வியந்து விட்டான் அவன்.

அதற்குப் பிறகு அவனும் உமாவும் தனியாய் சந்திக்கும் சந்தர்ப்பமே கிட்டவில்லை. அவனுக்கு உமாவைப்

பார்த்தால் பரிதாபமாயிருந்தது. இந்த நேரத்தில் அவன் அனுபவிக்கும் தனிமையை விவரிக்க இயலுமா? அவனுக்கு வேதனையாயிருந்தது.

உமா தன்னையின்றி வேறு யாரையாவது மணந்துக் கொண்டிருந்தால் சுகப்பட்டிருப்பாள். உமாவுக்கு உறவினர்கள் நிறைய பேர் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் பெரிய அந்தஸ்துக்களில் சமூகத்தில் மேம்பட்ட இடங்களில் இருந்து வந்தார்கள். உமா கௌரவத்திற்குப் பிரதான இடம் ஏன் தருகிறாள் என்பது புரியத் தொடங்கிற்று அவனுக்கு.

## 21

வசந்தி மறுநாள் அபிசிற்கு வந்தாள். பஸ் தவறி விட்டதால் வேறுபஸ் பிடித்துக் கொண்டு வருவதற்குள் அரைமணி நேரம் தாமதமாகி விட்டது. வசந்தி அரக்கப் பரக்க சீட்டில் வந்து வந்து உட்கார்ந்துக் கொண்டு பைலைப் புரட்டிக் கொண்டிருந்தவள் எதற்கோ இந்திராவின் சீட் இருந்த பக்கமாய் திரும்பிப்பார்த்தாள். அந்த சீட் அன்றைக்கு காலியாய் இல்லை. மாநிறத்தில் உயரமாய் இருந்த ஒருவன் உட்கார்ந்திருந்தான்.

பக்கத்திலிருந்த சாவித்திரி அவனோடு ஏதோ பேசிக் கொண்டிருந்தாள. வசந்தியைப் பார்த்ததுமே— 'வசந்தி இவர் தான் ஜெயபிரசாத் என்று இந்திராவின் சீட்டிற்குப் புதிதாய் ட்ரான்ஸ்பர் ஆகி வந்திருக்கார். இவள் வசந்தி!' என்று பரிச்சயம் பண்ணினாள்.

'கிளாட் டு மீட்யூ' என்றான் அவன் முறுவலுடன், சிரித்த முகம், உதடுகளிலும், கண்களிலும் முறுநகை நாட்டியமாடிக் கொண்டேயிருந்தது.



பிற்பகல் லஞ்சு டயத்தில் அவனே எல்லோருக்கும் காபி வரவழைத்துத் தந்தான். 'இன்றைக்கு என்னைக் கொடுக்க விடுங்க. அப்புறமாய் வட்டியும் முதலுமாம் நானே வசூல் பண்ணிக்கிறேன். பார்க்கப் போனால் என் மனத்தத்துவமே பாங்கில் மனத்தத்துவந்தான். யாருக்கு எதைக் கொடுத்தாலும் வட்டியும் முதலுமாய் வசூல் பண்ணிக்கொண்டு விட வேண்டியதுன்னு அர்த்தம்.' எல்லோரும் கொல்லென்றுச் சிரித்தார்கள்.

வந்த வாடிக்கையாளர்களிடம் கூட சிரித்துக் கொண்டும் ஜோக் அடித்துச் சிரிக்க வைத்துக் கொண்டும் இருந்தான். அப்படிப்பட்ட ஆள் நடுவில் இருந்தால் வேலைபண்ணிக் கொண்டிருக்கும் அலுப்பே தெரியாது.

அன்றைக்கு மட்டுமேயில்லை. அதற்குப்பிறகுதினமும் பாங்கிற்குள், நுழைந்துவிட்டாலே போதும். பொழுது சீக்கிரமாய் கழிந்து போய்க் கொண்டிருந்தது ஜெயபிரசாந்தை எல்லோரும் 'ஜெய்' என்பார்கள். அப்படிக் கூப்பிடச் சொல்லியும், தன்னை எல்லோரும் அப்படித்தான் அழைப்பார்கள் என்றும் அவனே சொல்லிக்கொண்டான் எல்லோருக்கும் எப்பொழுதும் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டிருக்கும் மேனேஜரே கூட அவன் பேச்சைக் கேட்டு வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினார்.

காஷியர் கோபால் 'ஜெய்க்கு' அன்று பார்ட்டி தந்தார். ஏனெனில் மேனேஜர் சிரித்தார் என்று. ஜெயபிரசாத் வந்ததிலிருந்தே யாரோ ஒருத்தர் எந்த காரணத்திற்காவது பார்ட்டி கொடுப்பது வழக்கமாகிவிட்டது.வசந்தி மட்டும் கொடுக்கவில்லை. வசந்திக்கு எந்தக் காரணமும் ஏற்படவில்லை?

'வசந்தியை எப்படியாவது பார்ட்டி கொடுக்கும்படி பண்ணிடறேன்' என்று ஜெயபிரசாத் சவாலிட்டான்.

அன்றைக்கு இந்திரா வந்ததுமே — 'கங்கிராஜுலேஷன்ஸ்' என்றான்.

,எதுக்கு? ஏன்?

'இந்தச் சின்னச் சின்னப் புள்ளியுடைய புடவை உங்களுக்கு ரொம்ப அழகாயிருக்கு'

'தாங்க்யூ'

'வெறும் தாங்க்ஸ் போதாது. பார்ட்டி கொடுத்துத் தீரவேண்டியது'

'ரொம்ப நன்றாய்தானிருக்கு'

'அப்படிச் சொல்லிட்டால் சும்மா விட்டுட மாட்டேன். கொடுக்கணும். நீங்களே சொல்லுங்கள், இந்தப் புள்ளிகளையுடைய புடவை அழகாயிருக்குன்னு சொல்றத்துக்கு நான் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருந்தது தெரியுமா?'

'கஷ்டமா?'

'ஆமாம்! தினமும் நீங்க கட்டிக்கிற புடவைங்களை கவனமாய் பார்த்திருப்பேன். ஆஃப்கோர்ஸ் எனக்குத் தெரியாமலேயேதான்னு வையுங்க. இந்தப் புடவையில் தென்படுலதுபோல அத்தனை அழகாய் வேறெந்தப் புடவையிலுமே தென்படலை. மொதல்ல உங்க முகம் சீரியஸாய் இருப்பதைக் காட்டிலும் சிரித்துக் கொண்டேயிருந்தால்தான் அழகாயிருக்கும். இன்னும் சொல்லணும் என்றால்—' அவன் தீவிரமாய் சொல்லத்தொடங்கினான்.

'போதும், போதும்! நீங்கள் இன்னும் கஷ்டப்பட்டு புகழத் தேவையில்லை. நான் பார்ட்டி தந்து விடுகிறேன், போதுமா?' என்றாள்.

'தாங்க்யூ' என்றான் சந்தோஷமாய்



அன்று பிற்பகல் வசந்தி எல்லோருக்கும் பார்ட்டி தந்தாள்—' எப்பொழுதும் காபியேதானா? ஃபர் சேஞ்ஜ் ஐஸ் க்ரீம்' என்று வசந்தி வரவழைத்தாள். ஜெயபிரசாத் 'பார்ட்டி' என்று தினமும் ஒருத்தரைக் கொடுக்கும்படி பண்ணிக் கொண்டிருந்தானே தவிர, ஆராய்ந்து பார்த்தால் வாரத்திற்கு ஒருவர் என்று முறை வந்து கொண்டிருந்தது. அவரவர்கள் தினமும் காபி டிபனுக்குச் செலவழித்துக் கொண்டிருந்த அதே செலவேதான் செலவழிந்துக் கொண்டிருந்தது எனலாம்.

வசந்தி இந்த விஷயத்தைச் சொன்னதுமே எல்லோரும் 'ஆமாம் ஆமாம்' என்று ஆச்சரியமடைந்து விட்டார்கள்.

எல்லோரும் ஐஸ் கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது ரவிசங்கரன் வந்தான். அவனைப் பார்த்ததுமே வசந்தியின் இதயம் லயம் தப்பிவிட்டது.

'வசு, உன் பிரெண்ட் வந்திருக்கார்' என்றாள் சாவித்திரி.

வசந்தி வெளியே போவதா வேண்டாமா என்று குழப்பத்தில் ஆழ்ந்தாள். மனம் தீவிரமாய் யோசித்தது. வெளியே வந்தாள்.

'ஹலோ பிரதர்! என்ன விசேஷம்! இப்படி வந்திருக்கீங்க?' குரல் கேட்டுத் திரும்பினான் ரவிசங்கரன். ஜெயபிரசாத் நின்று கொண்டிருந்தான் அங்கே.

ஜெயபிரசாத் உமாவுக்கு தூரத்து உறவினன். தம்பி முறை. 'என் தங்கைக்குத் தெரியாமல் ஏதாவது அகௌண்ட் ஓப்பன் பண்ணியிருக்கீங்களா என்ன? ஆஃப் கோர்ஸ் உமாவிடம் நான் சொல்ல மாட்டேன், கவலைப் படாதீங்க! வாங்க உள்ளே, நாங்க பார்ட்டி பண்ணிட்

டிருக்கோம், நீங்களும்; ஐஸ் கிரீம் சாப்பிடுங்க. வசந்தி என்ற இவள் எங்க கொலீக், பார்ட்டி தந்துட்டிருக்காங்க. ஓ வசந்தி தேவியாரே, இவர் பெயர் உமாசங்கரன். அதாவது உமாவின் சங்கரன்னு அர்த்தம். நிஜப் பேர் ரவிசங்கரன்—

வசந்திக்கு என்ன பதில் பேசுவதென்றே புரியவில்லை. நேரமாகி விட்டதால் எல்லோரும் தம் தம் வீட்டுகளுக்குப் போகும் பரபரப்பில் இருந்தார்கள்.

வசந்தி ரவிசங்கரனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'வசந்தி! சாயந்திரமாய் வந்து பார்க்கிறேன்.' என்று ரவிசங்கரன் போகக் கிளம்பியபடி...ஜெயபிரசாத் வியப்போடு பார்த்து. 'அட! உங்களிருவருக்கும் முன்பே தெரியுமா?' என்று கேட்டான்.

'நன்றாய்த் தெரியும்! நாங்கள் சிநேகிதர்கள். உமாவுக்குக் கூட வசந்தியை நன்றாய்த் தெரியும்' என்றான் ரவிசங்கரன். அவன் போய்விட்டான்.

'அப்படியென்றால் நீங்களும் எங்க பனுஷிதான்னு சொல்லுங்க, வெரிகுட்' என்றான் ஜெய். அவன் முகத்தில் ஆர்வம் தெரிந்தது. வசந்தியின் முகம் சிவந்தது.

❀ ❀ ❀

அன்று மாலை ஜெயபிரசாத் உமாவின் வீட்டிற்கு வந்தபோது உமா சமையலறையில் சமையல்காரனிடம் ஏதோ உத்தரவிட்டுக் கொண்டிருந்தாள்.

'உமா' ஜெயபிரசாத் அழைத்தான். பரிச்சயமான அக் குரலைக் கேட்டதும் உமா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.



ஜெயபிரசாதைப் பார்த்ததும் உமாவின் முகம் மலர்ச்சியடைந்தது.

'நீயா? எப்போ ஊருக்கு வந்தாய்?' என்றாள்.

'இப்பத்தான்...'

'உட்காரு. எல்லோரும் சௌக்கியமா? காபிகொண்டு வரச் சொல்றேன் இரு.'

அதற்குள் குழந்தைகள் ஓடிவந்தார்கள். 'அண்ணீ, என் ஹோம் ஒர்க் முடிஞ்சுடுத்து. டி. வி. பார்க்கலாமா? கேட்டாள் ஒருத்தி.

'ஓ' என்றாள் உமா.

குழந்தைகள் ஓட்டமாய் ஓடிவிட்டார்கள்.

'இந்த வால்கள் யார்?' கேட்டான் அவன்.

'என் நாத்தனார்களும் மைத்துனனும்.'

'இவங்களும் இங்கேதான் இருக்காங்களா?'

'ஆமாம். மாமனார் காலமாயிட்டாரில்லையா? வா!

'உட்காரு வேறென்ன விசேஷம்?'

வேலையாள் காபியைக் கொணர்ந்து தந்தான்.

'குடித்துக் கொண்டிருந்த ஜெயபிரசாத், 'உமா, உனக்கும் முன்னாடி உன் கணவரைக் குசலப்பிரச்னை விசாரித்து விட்டேன்; பாங்கிற்கு வந்திருந்தார், என்றான்.

உமாவின் கண்கள் ஒரு வினாடி காபி கோப்பையின் மீது நிலைத்து நின்றது.

'அந்த பாங்கிற்கு ஏன் வந்தார், அங்கே அவருக்கு அகௌண்ட் இல்லையே' என்றாள்.

'வசந்தின்னு ஒரு பெண் வேலை செய்றாள். அந்தப் பெண்ணை இவருக்குத் தெரியும் போலிருந்தது. ஏதோ வேலையாய் வந்தாரே என்னவோ, நான் வந்ததுமே பரபரப்பாய் ஒன்றுமே சொல்லிக்காமல் போய்விட்டார் திரும்பி.'

உமா நிமிர்ந்து நின்றாள். வசந்தியின் பெயரைக் கேட்டதுமே அவள் முகம் தொய்ந்து விட்டது.

அதற்குள் இருவர் அங்கு வந்தார்கள். அவர்கள் சிரித்துப் பேசிக் கொண்டு ஒருவர் கரத்தை மற்றவர் பிடித்துக் கொண்டு வந்தார்கள். இளம்வயது ஜோடிகள். அவர்கள் நேராய் அறைக்குள் நுழையப் போனபொழுது உமா பெயரிட்டுக் கூப்பிட்டாள் அவர்களை. ஜெயபிரசாதுக்குப் பரிச்சயம் பண்ணி வைத்தாள்.'

'இவன் மாமா பிள்ளை ரகு! இவள் அவன் மனைவி சுமதி' என்றாள். இருவரும் 'ஓஹோ?' என்பதுபோலப் பார்த்தார்கள்.

'உட்காருங்கள்' என்றாள் உமா. ரகு உட்கார்ந்துக் கொண்டான். அப் பெண் உட்காரவில்லை. அவன் நாற்காலிக்குப் பின்னால் நின்றாள்.

உமா சொன்னாள். 'இவங்களுக்குக் கல்யாணமாகி ஒரு மாதந்தான் ஆகிறது. மதுரையிலிருந்து இந்த ஊரைப்பார்ப்பதற்கு வந்திருக்கிறாங்க. நாலு நாளாகிறது. நான்தான் இன்னொரு வாரம் இருந்துட்டுப் போகச் சொன்னேன்.'

அதற்குள் அப்பெண் அவன் தோளைக் கிள்ளினாள் அது ஜெயபிரசாதின் பார்வையில் படத் தவறவில்லை.

ரகு அந்த சமிஞ்ஞை புரிந்தாற்போலச் சட்டென்று' எழுந்திருந்தான். 'வரேன், அப்புறமாய்ச் சந்திக்கிறேன்'



என்று அப்பெண்ணைத் தொடர்ந்து அறைக்குள் போய்விட்டான். கதவைப் படாரென்று ஓங்கிச் சாத்திக்கொண்டார்கள். கைக்கோர்த்துக் கொண்டு நடந்துப் போன அவர்களையே வாயைப் பிளந்துக் கொண்டு கழுத்து வலிக்கத் தி ரு ம் பி ப் பார்த்துக் கொண்டிருந்தான் ஜெயபிரசாத்.

உமா அவன் பார்வையைப் பார்த்து சிரிப்பை அடக்கிக்கொண்டு; 'புதிசாய் கல்யாணமானவங்களோனோ?' என்றாள்.

'ஆனால் மாத்திரம்:' என்றான்.

அவர்கள் அறைக்குள் நுழைந்ததுமே சிரிப்போசை கேட்கத் தொடங்கிற்று. உமா சட்டென்று வேலை இருப்பதைப் போல அங்கிருந்து போய்விட்டாள்.

கொஞ்ச நேரங்கழித்து சமையலறையிலிருந்த உமாவிடம் வந்தான் ஜெயபிரசாத்.

'உமா, இந்த அட்டகாசத்தை நீ எப்படித்தான் தாங்குகிறாயோ?' என்றான்.

'அட்டகாசமா? என்ன அட்டகாசம்?' ஆச்சரியத்துடன் கேட்டாள் உமா.

'அதான்' தொலைவில் ரகு மூடிய கதவைச் சுட்டிக் காட்டிச் சொன்னான் அருவருப்புடன்.

'அதுவா? புதிதாய்க் கல்யாணமானவங்க. அதில் தப்பென்ன இருக்கு?' என்றாள்.

'தப்பில்லையா? மற்றவங்க வீடுன்னுகூடப் பார்க்காமலா?'

'புதிதாய் மணந்தவங்க. அவங்க உலகில் அவங்க ஆழ்ந்திருக்காங்க. அவங்களுக்கு வேறெதுமே கண்ணுக்

கும் தெரியாது,' காதிலும் விழாது.' என்றாள் பெரிய மேதாவியாய்.

'அப்பப்பா! என்னதான் புதிதாய் மணந்தவர்களானாலும் இவங்களுக்கு மட்டுந்தானா கல்யாணம் ஆச்சு உலகத்தில்? நீ எப்படித்தான் தாங்கறாயோ இந்த லூட்டியை' அருவருப்புடன் நோக்கிச் சொன்னான்.

அதற்குள் அறைக்குள்ளிருந்து மறுபடியும் பெருத்த சிரிப்போசைகள் கேட்கலாயின.

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு ஜெய பிரசாத் போய்விட்டான். உமாவுக்கு அந்த இளம் தம்பதிகளின் போக்கு ஒன்றும் அருவருப்பாய்த் தோன்றவில்லை. சமையல்காரனிடம் போய் அவங்களுக்குக் காபி வேண்டுமான்னு கேட்டுண்டு வா' என்று உத்தரவிட்டாள்.

சமையல்காரன் போய்விட்டான். உமா கவனித்துக் கொண்டேதானிருந்தாள். சமையல்காரன் கதவைப்படபட வென்று கையால் தட்டினான்.

'யாரு?' உள்ளிருந்து அவன் கத்தினான்.

'நான்தான் சமையல்காரன். உங்களுக்குக் காபி வேணுமான்னு அம்மா கேட்டு வரச் சொன்னாங்க.'

'வேணும்.'

'தேவையில்லை.' இரண்டு குரல்களும் ஒரே மாதிரி கேட்டன.

'வேணுங்கறேன்.'

'இப்போ வேண்டாங்கறேன்.'

'எனக்கு வேண்டும்.'



'எனக்கு வேண்டாம்.'

'என் மேல் உங்களுக்கு இஷ்டமிருக்கா இல்லையா.'

'இருக்கு.'

'அப்படீன்னால் காபியை விடுங்கள்.'

'என் மேல் உனக்கிஷ்டமிருந்தால் நீயும் குடிப்பாய்' என்றான் அவன்.

'தம்பி, நான் போய் சமையலைக் கவனிக்கணும். சட்டுனு சொல்லுங்கள்.'

'வேண்டும். இரண்டு காபி' கத்தினான்.

'அப்பப்பா... என்ன இவங்களோ! மணிக்கணக்காகும் பதில் வெளிவரத்துக்கு...' சமையல்காரன் அலுத்து கொண்டே சொன்னவன், உமாவைப் பார்த்துவிட்டு திருத்திக் கொண்டான்.

உமா தானே காபியைக் கலந்து இரு கோப்பைகளில் ஊற்றிச் சமையல்காரனிடம் தந்து 'கொடுத்துட்டு வா' என்று அனுப்பினாள்.

உமாவுக்கு அவ்விளஞ் ஜோடியைப் பார்த்தால் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவுமிருந்தது.

அலுத்துக் கொள்ளவோ கோபித்துக் கொள்ளவோ மாட்டாள். ஆம்! புதிதாய் மணமானவர்களானால் தன்னைச் சுற்றியுமுள்ள உலகத்தையே மறந்து போய் அப்படித்தான் இருக்க வேண்டியது என்றெண்ணிக் கொள்வாள். அவர்களைப் பார்த்தால் அவளுக்கு எவ்வளவோ திருப்தியாயிருந்தது.

அவர்கள் ஊருக்குப் போகிறோம் என்ற போதும் 'உங்கள் வீட்டைப்போல பாவித்துக்கொள்ளுங்கள்,

சங்கோஜப்படாதிங்க' என்று பலவந்தமாய் இருத்தி வைத்திருந்தாள்.

ரவிசங்கரனுக்கோ அவர்கள் இருந்தது மிகத் தொந்தரவாயிருந்தது. சாப்பாட்டு மேஜையில் லேசில் சாப்பிட்டு விட்டு எழுந்துப் போக மாட்டார்கள்; ஒரே சந்தடி! ஒருவர் தட்டிலிருந்து சாப்பாட்டை இன்னொருவர் இழுந்துக் கொள்வார்கள். அவன் ஏதாவது சொன்னால் அப்பெண் ஊடலை மேற்கொள்ளத் தொடங்கிவிடுவாள். அவன் அவளைக் கெஞ்சத் தொடங்கி 'விடுவான். ரவிசங்கரனுக்கு அவர்களின் நடவடிக்கை அருவருப்பையளித்தது.

இரவு சாப்பிட்டு முடித்ததும் கம்பெனி கணக்குகளைப் பார்வையிட ...பைல்களை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டால், அறையிலிருந்து ஒரே சிரிப்பும் கும்மாளமும் கேட்கத் தொடங்கிவிடும்'

ரவிசங்கரன் ஃபைலை மூடி வைத்து விடுவான்.

'எனக்குத் தூக்கம் வரது' என்று எழுந்து போய் விடுவான். உமா அவ்விடத்திலேயே ஆழ்ந்த யோசனையில் அமிழ்ந்து விட்டாற்போல உட்கார்ந்து விடுவாள். கல்யாணம் ஆனவர்களானால் ரகு, சுமதியைப் போலிருக்க வேண்டும் அவர்கள்தான் எத்தனை மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள்! ஒருவரைவிட்டுப் பிரிந்து இன்னொருவர் ஒரு வினாடி நேரம் கூட இருக்கமாட்டார்கள்.

நேற்று ரகு வேலையாய் கடைவீதிக்குப் போய்விட்டு ஒரு மணிநேரம் தாமதமாய் வந்தான். அதற்குள் சுமதி குட்டிப்போட்ட பூனையாய் வீட்டை வளைய வந்துவிட்டாள்.



'அக்கா, அவருக்கு ஒன்றும் ஆகியிருக்காதே! இத்தனைத் தாமதமாக்கமாட்டாரே, ஏதாவது விபத்து ஏதும் நிகழ்ந்திருக்காதே?' என்றாள் கலவரமடைந்து.

'சீ சீ! இதென்ன பேச்சு? ஏதாவது தாமதமாயிருக்கும். கவலைப்படாதே' என்று தேற்றினாள் உமா.

ரகு வந்தான். க்ஷேமமாய்த் திரும்பி வந்த அவனைப் பார்த்து சுமதியின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்த போதிலும் சட்டென்று முகத்தை முறுக்கிக் கொண்டு விருட்டென்று அறைக்குள் ஓடிப்போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

அவன் வந்து அரைமணிநேரம் கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்பு வேண்டிக் கொண்ட பிறகுதான் கதவைத் திறந்தாள் அவள்.

ரவிசங்கரன் கூட அவ்விடத்தில்தான் இருந்தான். சுமதி கதவைத் திறந்தாள். ரகு, அவ்விடத்தில் ரவிசங்கரனும் உமாவும் இருந்ததைக்கூட பொருட்படுத்தாமல் சுமதியை ஓடிப்போய் கட்டிக் கொண்டே உள்ளே போய் காலால் கதவை ஓங்கித் தள்ளி சாத்தினான். உமாவும் ரவிசங்கரனும் ஆளுக்கொரு பக்கமாய் நின்று கொண்டு ஜன்னலுக்கு வெளியே தோட்டத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்

அரைமணிக்குப் பிறகு ரவிசங்கரன் ப்ரீப்ஃப்கேசை எடுத்துக்கொண்டு வந்தான்.

'நான் ஆபீசுக்குப் போறேன், ராத்திரி வரமாட்டேன்' என்றான்.

உமா அவனைத் திரும்பிப் பார்த்தவள், 'ஏன்?' என்று கேட்டாள் ஆச்சரியத்துடன்.

'ராத்திரி மட்டுமில்லை, இவங்க இங்கே இருக்கும் வரையிலும் வரப்போவதில்லை' என்றான்.

'அழகு தான், இது ஒரு சாக்கு. அவங்க என்ன பண்ணிட்டாங்க இடையில்?' கேட்டாள்.

'நாளு நாளாய்ப் பார்த்துண்டேதான் வரேன்; எனக்கு அருவருப்பாயிருக்கு' என்றான்.

'ஏன்? எதுக்காம்? அவங்க என்ன தப்புப் பண்ணிட்டாங்க? ஒருவரைக் கண்டால் மற்றவருக்குப் பிடித்திருக்கு. இஷ்டப்பட்டு சந்தோஷமாய் இருக்காங்க. இதில் என்ன தப்பு? கல்யாணமானவங்க எப்படி இருக்கணும்னு எடுத்துக் காட்டறாங்க. உங்களுக்கு அது கிட்டவில்லைன்னு வருத்தமாய் இருக்கோ?' உமா பழிப்பது போல மொழிந்தாள்.

'உமா!' கத்தினான் அவன்.

'இவங்க இருக்காங்கன்னு சாக்கு ஒண்ணு எதற்கு? பாங்கில் வசந்தியைச் சந்திக்க முடியலைன்னு சொல்லிட்டுப் போங்களேன்! எங்கேயாவது ஓட்டலில் சந்திப்பீங்க! சொல்லுங்கள் எத்தனை நாளைக்குத் தான் இவ்வாறு இருப்பீங்க?'

'வாழ்நாள் பூராவும்.'

உமாவின் முகம் அடியுண்ட புலியாகி விட்டது. அவன் போய் விட்டான். அவள் அழுதவாறு அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்து விட்டாள்.

சுவர்க் கடிகாரம் பனிரெண்டு மணி அடித்து ஓய்ந்தது. உமா திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

ரவிசங்கரன் போய் மூன்று மணி நேரமாகி விட்டது. அவன் ஆபீசுக்குதான் போயிருப்பானா? உமா எழுந்து



சென்று ஆபீசுக்குப் போன் பண்ணினாள். ஒரு முறை மணியடித்தது. சட்டென்று ரவிசங்கரனின் குரல் 'ஹலோ' என்று கேட்டது.

உமாவின் இதயத்திலிருந்து பெருத்த பாரம் இறங்கினாற் போலிருந்தது.

'ஹலோ...' அவன் திரும்பவும் அழைத்தான். உமா மெதுவாய் வைத்து விட்டாள்.

ஒரு நிமிஷம் கழித்து போன் கணகணவென்று ஒலித்தது. மறுமுனையிலிருந்து ரவிசங்கரனின் குரல் கேட்டது.

'ஏன் பேசாமல் வைத்து விட்டாய்? நான் இங்கேதான் இருக்கிறேன். எங்கேயும் போயிடலை. நீ எப்ப வேணுமானாலும் போன் பண்ணிக்கலாம்' என்று போனை வைத்து விட்டான்.

உமாவின் மனது இலேசாகி விட்டது. போனை வைத்தாள். கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

## 22

ரிசல்டுகள் வெளிவந்துவிட்டன.

குழந்தைகள் பாஸ் பண்ணிவிட்டார்கள். அவர்களின் உற்சாகம் வானை எட்டிற்று.

'கோபி, உங்கண்ணா ஆபீசில் இருக்கிறார். ரகுவும் சுமதியும் போயிட்டாங்கன்னு போன் பண்ணு' என்றாள்.

'ஓ' என்று கோபி ஆபீசுக்குப் போன் பண்ணி ரகுவும் சுமதியும் போய்விட்டதையும் தாம் பாஸ்பண்ணிவிட்டதையும் சொன்னான்.

'இதோ வருகிறேன், ஸ்வீட் வாங்கிண்டு வரேன், ரெடியாய் இருங்கள்' என்றான் ரவிசங்கரன் போனை வைத்துவிட்டு.

ரவிசங்கரன் அரைமணி கழித்து வீட்டிற்குத் திரும்பி வந்தபோது எல்லோரும் சாப்பாட்டு மேஜைக்கருகில் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். ரவிசங்கரன் ஸ்வீட் பாக்கெட்டைத் திறந்து ஒவ்வொருவருக்காய் 'கங்கிராஜுலேஷன்ஸ்' என்று கூறிவிட்டு அவர்கள் வாயிலிட்டான். அவர்களைப் பார்த்ததும் ரவிசங்கரனுக்கு மிகவும் ஆனந்தமாய் இருந்தது.

சாப்பாட்டு மேஜையில் எல்லாம் எடுத்து ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தது. உமா பறிமாறலானாள். ரவிசங்கரன் கைகால் அலம்பிக் கொண்டு வந்தான். குழந்தைகள் வந்து அமர்ந்தார்கள்.

'அண்ணா, அண்ணிக்கு மட்டும் ஸ்வீட் கொடுக்மாட்டாயா என்று கேட்டான் கோபி.

'நீயே தா! நான் தரக்கூடாது' என்றான் ரவிசங்கரன் முறுவலுடன்.

'ஊஹூம், நீயேதான் தரணும்.'

கோபி, எனக்கு ஸ்வீட்டைப் பிடிக்கவே பிடிக்காது என்றாள் உமா.

'பிடிக்காவிட்டாலும்சும்மா விடமாட்டோம்' என்று குழந்தைகள் மூவரும் ஒன்று சேர்ந்து அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தார்கள் ரவி சங்கரனிடம். வேறு வழியின்றி ரவி சங்கரன் பாக்கெட்டிலிருந்து ஸ்வீட்டை எடுத்து உமாவின் கையில் தந்தான்,

'கையில் தரக்கூடாது, எங்களை மாதிரியே வாயில் போடணும்' என்று பிடிவாதம் பிடித்தான் கோபி. ரவி



சங்கரன் ஒரு நிமிஷம் தடுமாற்றமடைந்தான். பிறகு உமாவின் வாயில் வைத்தான்.

வேறு வழியின்றி உமா அதைச் சாப்பிடவேண்டியதாகி விட்டது.

குழந்தைகள் மூவருமாய்ச் சேர்ந்து பூ வேலைப்பாடு அமைந்த பிளாஸ்டிக் ஒயரால் பின்னிய கூடை ஒன்றைக் கொணர்ந்து உமாவிடம் தந்து விட்டு,

'அண்ணி, நீ தான் சொன்னாயே, நமக்கு இஷ்டமானவங்களுக்கு அவங்க பண்ணின உதவிக்கு நன்றியாய், ஏதாவது வெகுமதி கொடுத்தால் நல்லதுன்னு, அதான் நீங்க பாடம் சொல்லிக் கொடுத்து எங்களைப் பாஸ் பண்ண வைத்ததால் நாங்க இந்த வெகுமதியைத் தரோம்' என்றார்கள்.

காமாட்சி உமாவின் தலையில் பூவைத் தொடுத்து வைத்துவிட்டு, 'மறுக்காதே உமா, வாங்கிக் கொள். அவங்க மனம் கோணும், ரொம்ப அதிர்ஷ்டசாலிகளானதால் உன்னைப் போன்ற அண்ணி கிடைத்திருக்கிறாள். அவங்களைவிட நான்தான் ரொம்ப அதிர்ஷ்டசாலி. என் மருமகள் தங்கக்கட்டி' என்று முகத்தில் கைவைத்து திருஷ்டி கழித்தாள்.

உமாவின் கண்களிலிருந்து திடீரென்று கண்ணீர் மடை திறந்தாற் போல வெளிவந்தது. பலவந்தமாய் அடக்கிக் கொண்டாள்.

ரவி சங்கரன் வியப்புடன் குழந்தைகளையும் உமாவையும் மாறிமாறி நோக்கலானான். குழந்தைகளைப் பார்த்தால் உமாவின் மீது அவர்களுக்கு மிகப் பிரியம் இருந்ததை எடுத்துக் காட்டிற்று. அந்த நேரத்தில் அவனுக்கு எஞ்சிய எல்லோரும் ஒன்றாகி விட்டாற்

போலவும் தான் மட்டும் தனித்து விடப்பட்டு விட்டாற் போலவும் தோன்றலாயிற்று.

ரவிசங்கரன் யோசிக்கலானான். உமா அவன் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தது நிஜந்தான். ஆனால் அம்மா, தம்பி தங்கைகளின் வாழ்க்கையில் அவள் சந்தோஷத்தையும் நெருக்கத்தையும் தோற்றுவித்து விட்டாள். அவனுக்கு முதல் முதலாக ஏதோ புதிய உண்மை ஒன்று வளங்கினாற் போல் ஆயிற்று.

உமாவை விட்டு என்றாவது நீங்கிப் போய் விட வேண்டும் என்பதே அவன் எண்ணம். தான் போக நேர்ந்தால் தன் மனிதர்களும் தன்னோடு வரத் தவறமாட்டார்கள். அப்பொழுது உமாவுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள அவர்களுடைய இந்த பந்தம் என்னவாகும்? அவனுக்கு ஏனோ மிகவும் தத்தளிப்பது போலவும் குழப்பமாகவும் தோன்றலாயிற்று.

குழந்தைகளை ஒரு வழிக்குக் கொணர்ந்து விட்ட உமாவை ஏதேனும் நல்ல வார்த்தை ஒன்றால் புகழ வேண்டிய கடமையை உணர்ந்தான் ரவிசங்கரன். உமாவிடம் வந்தான் 'உமா...' என்றான். அவன் வாயிலிருந்து அவ் வார்த்தை வெளிவந்ததும் உமாவுக்கு விவரிக்க இயலாத ஆனந்தம் ஏற்பட்டது. சட்டென்று ஓடிப் போய் அவன் மார்பில் முகத்தைப் பொத்திக் கொண்டுவிட வேண்டும் போலிருந்தது. ஆனால் அதற்குள் அவள் தன் மனம் விழித்துக் கொண்டது. கோபம் வந்தது அவளுக்கு.

'உமா... நான்... நான் உனக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கறேன்' என்றான்.

உமா நிமிர்ந்தாள் கண்களில் ஆச்சரியமானது விலையாய் தெரிந்தது. 'எனக்கா? எதற்கு நன்றி?' என்ற கேள்வி தொக்கி நின்றது.



'பசங்கள் எல்லோரும் பாசாகி விட்டார்கள். அவர்கள் படிப்பில் அத்தனை கவனம் செலுத்தினார்கள் என்றால் அதற்குக் காரணம் நீ தான் என்று அம்மா சொன்னாள். தாங்க்ஸ்.'

உமாவின் முகம் சிவந்தது.

அக் கண்களில் கோபம் புஸ்ஸென்று கிளம்பிற்று. கோபத்தை அடக்கிக் கொண்டு, 'நீங்க ஒண்ணும் எனக்குத் தாங்க்ஸ் சொல்லத் தேவையில்லை. நீங்க அங்க ஃபாக்டரியைப் பார்த்துக்கிறீங்க. உங்களுக்கு அவங்களை கவனித்துக்க ஒய்விருக்காதுன்னு எனக்குத் தெரியும். அதனால் அந்தப் பொறுப்பை நான் சுமந்துண்டேன். அதனால் எங்க ஃபாக்டரியைப் பார்த்துக்கிறீங்கன்னு நான் உங்களுக்கோ, உங்க தம்பி தங்கைகளின் படிப்பை கவனித்துப்பதாய் நீங்க எனக்கோ நன்றிக் கடன் பட வேண்டிய தேவையே நமக்கிடையே கிடையாதுன்னு நம்பறேன்.'

ரவிசங்கரன் திணுக்குற்றாற் போல நோக்கினான்.

'அதுமட்டுமில்லை, உங்கம்மாவிடம் கூட அநேகம் முறை சொல்லியாகி விட்டது, என் பணம் ஒன்றையும் நான் உங்களுக்குத் தரவில்லை, உங்கள் மகன் தரும் பணத்தால் தான் நீங்கள் செலவைத் தாங்குறீங்கன்னு அவங்க பெரியவங்க, அவங்க பிடிவாதந்தான் பெரிது. நான் சொன்னதைக் கேட்டுக்க மாட்டாங்க.

நான்தான் ஏதோ உங்களையெல்லாம் பார்த்துப்பதாய் நினைத்துக்கிறாங்க. ஆனால் எனக்கு நன்றாய்த் தெரியும், என் இடம் இந்த வீட்டில் எது என்று. நான் என் கடமையைத்தான் செய்கிறேனேயன்றி வேறொன்றும் இல்லை. என் வாழ்க்கையே ஒரு பெரிய நாடகமாகி விட்டது. ஆனால் நாடகத்திலோ பாத்திரங்களுக்கு அவரவர்களின் சம்பவங்கள் நன்றாய்த் தெரியும். எனக்

மட்டும் தெரியவில்லை அது.' உமா பதிலை எதிர்பார்க்காமல் அங்கிருந்து போய்விட்டாள் உடனே.

ரவிசங்கரன் வெகு நேரம் யோசித்தவாறு அப்படியே வீற்றிருந்தான். அவன் மனம் முழுவதும் குமுறலாயிருந்தது.

உமா அவன் எதிர்பார்த்ததைக் காட்டிலும் தொலைவிலேயே இருந்து வருகிறாள். ஆனால்—ஆனால்...அவ்வாறு தொலைவில் இருந்தது அவள் விருப்பத்தின்படியில்லை. அவன் இஷ்டத்தால்தான் அக் காரியத்தைப் பண்ணுகிறாள் என்பது மிகத் தெளிவாய்ப் புரிந்தது.

ரவிசங்கரன் இயல்பாய் யாரையுமே. துன்புறுத்தமாட்டான். மனம் நோகச் செய்பவனும் இல்லை. அவன் மூலமாய் யாருக்காவது வருத்தம் ஏற்பட்டுவிட்டால் அவன் மனது வெலவெலத்து விடும். இப்பொழுதும் அது தான் நிகழ்ந்தது. உமாவைத் துன்புறுத்தும் உரிமை தனக்கேது? இதற்குப் பரிகாரம் ஒன்றே ஒன்றுதான். அவன் வெகு தொலைவிற்குப் போய் விட வேண்டும். ஆனால் உமா போக விடமாட்டாளே! இருதலைக் கொள்ளி எறும்பானான் அவன்.

## 23

வசந்தியின் பெயருக்கு ஹவுசிங் போர்டு வீடு கிடைத்துவிட்டது. வசந்தி ஒரு நல்ல நாள் பார்த்து ஆர்ப்பாட்டமின்றி அப் புது வீட்டிற்கு ஆடம்பரமின்றிக் குடி போகத் திட்டமிட்டிருந்தாள்.

வசந்தியின் அக்கா கிரகப்பிரவேசத்தை ஆர்பாட்டமாய் நிகழ்த்த விரும்பினாள். கிரகப்பிரவேசம் என்பது வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் வரும். அவ் விழா



வாழ்நாளில் மறக்க முடியாத அளவிற்குக் கோலாகலமாய் நடக்க வேண்டும் என்றெண்ணினாள்.

அதற்கு முன்னால் எள்ளும் கொள்ளுமாய் வெடித்து வந்த வசந்தியின் அக்கா இப்பொழுது வசந்தியின் மேல் அன்பைப் பொழியலானாள்.

ஏதோ பெரியவள், உன் நல்லது கெட்டதை நான் தான் கவனித்துக்க வேண்டியிருப்பதால் அவ்வப்போது கண்டிக்க நேரிடுகிறது. என்னை விட்டால் வேறு யார் உனக்குச் சொல்லப்போறாங்க எடுத்து? வீடு கிடைத்திருப்பது உன் அதிர்ஷ்டமில்லை, குழந்தைகளின் அதிர்ஷ்டந்தான்னு வை. அவங்களுக்கு எத்தனை வசதியாயிடுத்துத் தெரியுமா.?

அவங்க ஸ்கூல் மிக அருகில் இருக்கிறது. மத்தியானம் சாப்பிட வந்துடலாம். உங்க அத்தானுக்கு ஆபிஸ் கூட கிட்டேதானிருக்கு. நம்ப கஷ்டம் மலை ஏறிடுத்து' என்று தெய்வத்திற்குக் கும்பிடு போட்டாள்.

வசந்தி மௌனமாயிருந்தாள்.

அக்காவே கிரகப்பிரவேச காரியங்களை முன்னின்று நடத்தினாள். அழைப்பிதழ்களை அச்சடித்தார்கள்.

வசந்திக்கு அவ்வீடு யார்மூலம் கிடைத்ததென்று அவள் அக்கா அறிவாள். அதனால் உமாவின் பேரில் அவளுக்கு என்றுமில்லாத அன்பு பெருக்கெடுத்தது.

அழைப்பிதழில் உமாவின் பெயரை முதலில்பெரிதாய் எழுதச் செய்தாள்.

'உன் முஞ்சி, வசந்திக்குத் தெரிந்தால் கோபித்துக் கொள்வாள்' என்றான் அக்காவின் கணவன்,

'உங்களுக்குத் தெரியாது. சும்மாயிருங்கள். உமாவோடு கொஞ்சம் உரிமையோடு பழகலாம்னு திட்டம் போட்டிருக்கிறேன். நாம்ப அவங்க வீட்டுக்குப் வந்துண்டு போயிண்டிருந்தோம்னு வையுங்க, உமாவைக் கொஞ்சம் உன் கணவனைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருன்னு நான் சொல்ல முடியும்' என்றாள்.

அக்காவும் அவள் புருஷனுமாய் சேர்ந்து உமாவை அழைக்கச் சென்றார்கள் வசந்தியின் அக்காவை உமா ஒரே ஒரு முறைதான் பார்த்திருக்கிறாள். வசந்தியின் ஜாடை அவளிடத்திலும் தெரிந்தது.

அவளைக் கண்டதும் வரவேற்று உட்காரவைத்தாள். வசந்தியின் அக்கா உமாவின் நெற்றியில் குங்குமத்தை இட்டு விடடுக் கார்டை நீட்டி 'எங்கள் இந்த சந்தோஷத்துக்குக் காரணம் நீங்கதான். எங்க வசந்தி இனிமேல் தினந்தோறும் வீட்டில் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு உங்களைத்தான் நினைச்சுக்கணும். உங்க உதவி மட்டும் இல்லாவிட்டால் அந்த வீடு எங்களுக்குக் கிடைத்திருக்காது. என்றாள் தடபுடலாய் நன்றியை எடுத்துக் காட்டி.

நான் என்ன பண்ணிட்டேன்?' என்றாள் உமா.

அவர்களுக்குக் காபி வழங்கி உபசரித்தாள். காமாட்சியை அழைத்து அறிமுகம் பண்ணிவைத்தாள். காமாட்சி அவர்களுடன் பேச அதிக அக்கறை காட்டவில்லை.

வசந்தியின் அக்காவும் அவள் கணவனும்இமைக்கவும் மறந்தவர்களாய் உமாவின் வீட்டைக் கண்களால் ஆராய்ந்தார்கள்.



'நீங்க கண்டிப்பாய் வரணும். வராவிட்டால் எங்களுக்குக் கோபம் வரும்' என்று திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டு விட்டு புறப்பட்டுச் சென்றார்கள் அவ்விருவரும்.

உமா கண்டிப்பாய் வருவதாய் வாக்களித்தாள். இருவரும் கிளம்பியபோது உமா டிரைவரை அழைத்து அவர்களை வீட்டிற்கருகில் இறக்கி விட்டுவிட்டு வரச் சொன்னான்.

வீடு திரும்பியதும் அவள் கணவன் சொன்னான்.

'அப்பப்பா, என்ன மரியாதை என்ன மரியாதை! அந்த உமா எத்தனை நல்லப் பெண்!' என்று மெச்சலானான்.

'ஆங்...பணம் இருக்கிறவங்க எது பண்ணினாலும் அமர்க்களமாய் தான் இருக்கும். எங்க வசந்தி மட்டும் நல்லவளில்லைங்கிறீங்களா?' என்றாள் வசந்தியின் அக்கா.

கணவன் உமாவைப் புகழ்ந்துத் தள்ளியதைக் கண்டவுடன் வசந்தியின் அக்காவுக்கு எரிச்சல் மண்டிற்று. உமா நல்லப் பெண்தான், அதை மறுக்க முடியாது. ஆனால் அவள் கணவன் புகழ்ந்துத் தள்ளும்படி அப்படி ஒன்றும் அபூர்வ குணமில்லை அவளிடம். அவர்கள் மரியாதைகளை வழங்கி தம் கௌரவத்தை இரு மடங்கு பெருக்கிக் கொள்கிறார்கள் என்பது அவள் எண்ணம்.

'இத்தனை நல்ல மனைவியை வைத்துண்டு அந்த ரவிசங்கரன் இந்த வசந்தியைச் சுற்றி வருவானேன்? அவன் ஒரு மூளையில்லாத ஆள்' என்றான் அவள் கணவன்.

உமாவை அழைத்து விட்டு வந்த செய்தியைச் சொன்னதும் வசந்திக்குக் கோபம் வந்து விட்டது.

'ஏன் அழைத்தாய்? என்னிடம் ஒரு வார்த்தையாவது சொன்னாயா?' என்றாள் கோபமாய்.

'ரொம்ப அழகாய்த்தாம்மா இருக்கு. இதென்ன தலை போகிற விஷயமா என்ன உன்னை ஆலோசனை கேட்டுண்டு பண்றத்துக்கு? கூப்பிடாவிட்டால் கோபித்துக்க வேண்டியது நீ. என்னவோ நினைச்சேன், ஆனால் அந்த உமா எத்தனை நல்லவள் தெரியுமா?' என்றுத் தொடங்கி தான் போனதிலிருந்து திரும்பி வந்தவரையிலும் நிகழ்ந்தவைகளை விவரிக்கத் தொடங்கினாள்.

'உம், சரி விடு' என்றாள் வசந்தி எரிச்சலுடன். வீடு வசந்தியின் பேரில்தானிருந்தது. அவள் தான் அதற்குப் பணம் கட்டினாள். ஆனால் பண்ணிய ஆர்பாட்டங்கள் யாவும் அவள் அக்காதான். அவள் வீடுதான் போலும் என்று எண்ணினார்கள் பார்த்தவர்கள் எல்லாம்.

வசந்தி பெருமூச்செய்தினாள்.

அக்கா இனி ரவிசங்கரனை ஒன்றும் சொல்ல மாட்டாள்! குறைந்த பட்சம் இந்த வீடு என்றாவது ஒன்றிருந்தால் தானும் ரவிசங்கரனும் என்றாவது ஒன்றாய் வசிக்க வழியுண்டு!

வசந்திக்குப் பிடிவாதம் ஏற்பட்டது. ரவிசங்கரனுக்கு ஒரு கல்யாணந்தான் ஆகியிருக்கட்டும், அல்லது லட்சம் கல்யாணமேதான் ஆகியிருக்கட்டுமே, அவன் உள்ளம் மட்டும் அவளுக்குத்தான் சொந்தம். தான் அவன் திருமணத்தைப்பற்றி அதிகமாய் யோசித்துக் குழப்பாமலிருப்பதே நல்லது என்றெண்ணிக் கொண்டாள்.

வசந்தியின் வீட்டு கிரகபிரவேசம் எதிர்பார்த்ததை விட கோலாகலமாய் நடந்தேறி விட்டது. அழைத்தவர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். வந்தவர்களையெல்



லாம் வசந்தியின் அக்காவும் அவள் கணவனும் வரவேற்று உபசரித்தார்கள்.

உமாவும் ரவிசங்கரனும் கூட வந்தார்கள். உமாவுடன் சேர்ந்து வந்த ரவிசங்கரனைப் பார்த்ததும் வசந்தியின் உள்ளத்தில் சந்தோஷம் தரைமட்டமாகி விட்டது. உமா வசந்தியிடம் கலகலப்பாய் பேசினாள். உடல் நலத்தைப் பற்றி விசாரித்தாள். வெள்ளித் தட்டு ஒன்றை வெகுமதியாய் அளித்தாள்.

பட்டுப்புடவை கட்டிக் கொண்டு தலைநிறைய பூவைச் சூட்டிக் கொண்டு, முத்துச் சரங்களை தரித்தவாறு நடு மையத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த உமாவைக் கண்டவர்கள் எல்லோரும் வைத்த விழி எடுக்காமல் பார்த்தார்கள்.

வாழ்க்கையில் எந்தக் குறையுமே இல்லை தன்னிடம் என்பதுபோலவும், கணவனின் அன்பைக்கூட தன்னால் சாதித்து வெற்றிக் கொண்டு விட முடியும் என்ற இறுமாப்புடனும் உட்கார்ந்திருந்தாற் போலிருந்தது. மகாராணியைப் போல மிடுக்காய் உட்கார்ந்திருந்தாள்.

ரவிசங்கரன் முடிந்தவரை உமாவை விட்டு ஒதுங்கி இருந்தாற் போல தோன்றிற்று, ஆனால் வசந்தியின் அக்கா கணவன் அடிக்கடி அவனை அழைத்து உமாவின் பக்கத்திலிருந்து அவனை நகரவொட்டாமல் செய்துக் கொண்டிருந்தான். ரவி சங்கரனுக்குக் கூட அது மிகத் தொந்தரவாய் இருந்தது.

தொலைவில் வசந்தி தனியாய் உட்கார்ந்து ஓமத்திக்கு நெய் வார்த்துக் கொண்டிருந்தாள். வசந்தியின் முகத்தில் உற்சாகமே இல்லை. அக்காவின் பலவந்தத்தின் பேரில் தலைக்குக் குளித்துவிட்டுப் பட்டுப் புடவை உடுத்திக் கொண்டிருந்தாள் அவள்.

இந்த வீட்டிற்காக அவளும் ரவிசங்கரனும் எத்தனைக் கனவுகளைக் கண்டிருப்பார்கள்? அன்றைக்கு அப்ளிகேஷன் பாரத்தைப் பூர்த்திப் பண்ணும் பொழுது சோபாவில் பின்னுக்குச் சாய்ந்துக் கொண்டு அவன் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கையில் அவன் மடியில் சாய்ந்து கொண்டு அவள் அப்ளிகேஷன் பாரத்தில் கையொப்பமிட்டாள். கையொப்பமிட்டு முடித்த பிறகு கூட அவள் எழுந்திருக்கவில்லை.

'வசு, என்ன யோசிக்கிறாய்?' என்று அவன் அவளைக் கேட்ட பொழுது, 'இந்த காகிதத்தின் மீது எனக்கு வீடு தெரிகிறது. இதோ இது வராந்தா, இது நம் அறை, இது குழந்தைகளின் அறை, இது அம்மாவும் அப்பாவும் தங்கும் அறை, இங்கே சாப்பாட்டு மேஜை'—என்று விரலால் கோடிட்டுக் காண்பித்தாள்.

'அந்த நாள் என்று வருமோ?' என்றான் அவன் வசந்தியின் தலையைக் கோதியவாறு.

'சீக்கிரத்திலேயே வரும் என்றாள் வசந்தி ஆழ்ந்த நம்பிக்கையுடன்.

'அப்ப முதலில் கல்யாணம். அப்புறமாய் கிரகப்பிரவேசம்...இருவரும் அருகருகில் நின்றுக் கொண்டு எல்லோரையும் வரவேற்போம். அப்ப வரவங்க எல்லாம் என்ன சொல்வாங்க தெரியுமா?'

'என்ன சொல்வாங்க?' என்றான் முறுவலுடன்.

'இவங்க ரெண்டு பேரும் எவ்வளவு ஜோடிப் பொருத்தமாய் இருக்காங்க பாரும்பாங்க.'

அவன் 'அப்படியா?' என்பது போல அவளைப் பார்த்தான்



வசந்தி வந்தவர்கள் யார் யாரையோ வரவேற்றுக் கொண்டேயிருந்தாலும் அவள் மனம் மட்டும் கடந்த கால நினைவுகளைச் சுற்றியே சுழன்றுக் கொண்டிருந்தது. அவள் கனவுகளைக் கண்டு விதிகூட எள்ளி நகையாடியிருக்கும் போலும்!

வசந்தி உமாவைப் பார்த்தாள். அவள்தான் எத்தனை அதிர்ஷ்டசாலி! உமா எப்படி இங்கு வரத் துணிந்தாள்? எல்லோருடனும் சிரித்துப் பேச அவளால் எப்படி முடிகிறது? வசந்திக்கு வியப்பாய்தான் இருந்தது.

உமாவையும் ரவிசங்கரனையும் ஜோடியாய் பார்த்த அவள் மனம் பாரமாகிவிட்டது. அவள் நினைத்ததென்ன, நடந்ததென்ன? யாருக்கு வேண்டும் இந்த வீடு? இந்த ஆர்பாட்டம் எல்லாம் எதற்காக? வசந்திக்கு அங்கிருந்து எங்கேயாவது வெகு தொலைவிற்கு ஓடிவிட வேண்டும் போலிருந்தது.

பாங்க் ஏஜெண்ட் சொல்லிக் கொண்டிருந்தார்—

'அம்மா வசந்தி, உத்யோகம் ஸ்திரமாயிடுத்து உனக்கு. வீடு கிடைத்துடுத்து. இனி வாழ்க்கையைச் சொந்தமாக்கிக்க ஒரு புருஷன் எப்போ வரப்போகிறான்? கல்யாண விருந்து எங்களுக்கெல்லாம் எப்போ வைக்கப் போகிறாய்?'

வசந்தி பதிலளிக்கவில்லை.

வந்தவர்கள் சாப்பிட்டு முடித்தார்கள். வசந்தியின் அக்காவும் அவள் புருஷனும் பலவந்தப்படுத்தி உமாவையும் ரவிசங்கரனையும் அருகருகில் உட்கார வைத்தார்கள்.

வசந்தி தொலைவில் நின்றுக் கொண்டிருந்தாள்.

'நீங்களாவது சொல்லுங்க, அவள் வெட்கப்படுகிறாள்.'

என்று பலவந்தமாய் உமாவிற்குப் பறிமாறினாள் வசந்தியின் அக்கா.

'அந்த மாதிரி சொல்றதும் கேட்டுக்கறதும் எங்களுக்குப் பழக்கமில்லை' என்றாள் உமா.

'அந்நியோனியமாய் இருந்து இருவருக்கும் ஒரே கருத்தாய் இருந்து விட்டால் சொல்ல வேண்டியது எதுக்கு?' எனறாள் இன்னொருத்தி.

## 24

சாப்பாட்டுப் பந்தியிலிருந்து சீக்கிரமாய் எழுந்துக் கொண்டான் ரவிசங்கரன். சாப்பிட்டு முடித்த பிறகு அவரவர்கள் கூட்டம் கூட்டமாய் உட்கார்ந்துப் பேசிக் கொண்டிருக்கலாயினர்.

வசந்தி பூஜையறையில் நின்றவாறு வெற்றிலைப் பாக்கை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். ரவிசங்கரன் அவ்விடத்திற்கு வந்தான். வசந்தி கவனியாதது போல வாளாயிருந்து விட்டாள்.

'சீக்கிரம் சாப்பிடு வசந்தி' என்றான் அவன். வசந்தி பேசாயலிருந்தாள்.

'உன்னைத்தான்' என்றான் அவன்.

'எனக்கு...எனக்கு இன்னிக்குப் பசிக்கத்தான் செய்யுமா? சந்தோஷத்தால் வயிறு நிரம்பிடுத்து. ரொம்ப சந்தோஷமாயிருக்கு' என்றாள்.

'அப்படிச் சொல்லாதே! ப்ளீஸ்.'

'பின்னே எப்படிச் சொல்றது? இந்த வீடு வேணும்னு நான் ஏன் ஆசைப்பட்டேன்னு மறந்துட்டீங்க. என்னால்



மறக்க முடியலை. இந்த வீட்டை நான் எதற்கு வாங்கினேன் இப்போ?' வசந்தி தலையைச் சுவரில் மோதிக் கொண்டு துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றவாறு உதடுகளை அழுத்திக் கொண்டாள்.

'வசு!'— அவன் கிட்டே வரப் போனான்.

'நில்லுங்கள், அருகில் வர வேண்டாம். எனக்கு அருவருப்பாயிருக்கு. அக்கா முதலியவர்கள்தான் ஏதோ மரியாதைக்கு அழைத்தார்கள் என்றால் நீங்களும் எதற்கு வரணும்? என் மனைவிதான் இந்த வீட்டை வாங்கிக் கொடுத்தது என்று புகழ்ச்சியாய் சொல்லிக் கொள்வதற்காகவா? வீட்டிற்காக அன்று ஃபாரத்தைப் பூர்த்தி பண்ணும் பொழுது நாம் என்ன நினைச்சுண்டோம்? இப்போது நடப்பது என்ன?' திடீரென்று அழத் தொடங்கினாள் வசந்தி

'வசு...'

'என் கனவுதான் எத்தனை பயங்கர சத்தியமாகி விட்டது! நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்னு இந்த தண்டனை எனக்கு? நீங்க என்னிடம் சொன்னதெல்லாம் பொய்தான். உமாவிடம் உங்களுக்கு நிஜமாய் ரொம்ப அன்பிருக்கு. உங்க அன்பில் அப்பெண்ணிற்கும் நம்பிக்கையிருக்கு. அதான் இப்படித் துணிந்து என் முன்னாடியே வர முடிந்தது.

'நான்தான்... நான்தான் வடிகட்டின முட்டாளாய் இருந்துவிட்டேன். என்னோடு தொடர்பும் வைத்துக்க மாட்டீங்க, என்னை உதறவும் மாட்டீங்க. என்னைச் சித்திரவதை புரிகிறீங்க ... போயிடுங்க ... போயிடுங்க... போய்விடுங்க. நாமிருவரும் இதுதான் இறுதியாய் பார்த்துப்பது!' வசந்தி சுவரில் தலையை மோதிக் கொண்டிருக்கையில் ரவிசங்கரன் ஓடி வந்து தடுத்தான்.

'வசு... வசு, ஆவேசப்படாதே, ப்ளீஸ்' அவன் வசந்தியை மார்போடணைத்துக் கொண்டு தேற்றத்தொடங்

கினான். திடீரென்று வசந்தி அவன் கரங்களில் சிறு குழந்தையாய்த் துவண்டு போய் அழத் தொடங்கினாள்.

அதற்குள் வசந்தியின் அக்காவும் உமாவும் அவ்விடத்திற்கு வந்துவிட்டார்கள்.

'வசந்தி, எங்கே போயிட்டாய்? உமா போறாளாம்' என்று சொல்லிக் கொண்டே வந்த அக்காவின் கண்கள் நிலைக் குத்தி நின்று விட்டன.

அங்கு பூஜையறையில் வசந்தி ரவிசங்கரனின் அணைப்பில் கட்டுண்டவளைப் போல நின்றிருந்ததைக் கண்டாள். உமாவும் சிலையாய் அப்படியே நின்று விட்டாள். உமாவைப் பார்த்ததும் அவன் மெதுவாய், மிக மிக மெதுவாய் வசந்தியை விடுத்து நின்றான்.

ஒரு வினாடி உமாவின் பார்வையும் அவன் பார்வையும் பின்னிப் பிணைந்தாற் போல நிலைத்து விட்டன. வசந்தியின் அக்கா பரபரப்பெய்தினாள். கலவரத்துடன் 'நான்... நான்... நீங்க... நான் வெற்றிலைப் பாக்குக்காக' என்றாள்.

'இங்கே இருக்கு, எடுத்துட்டுப் போ' மெதுவாய் முணுமுணுத்தாள் வசந்தி.

அக்கா உள்ளே போய் வெற்றிலைப் பாக்குத் தட்டை எடுத்துக் கொண்டு, வசந்தியையும் ரவிசங்கரனையும் ஏளனமாய் ஒரு பார்வை பார்த்து விட்டு அகன்றாள்.

வசந்தியின் அக்கா திரும்பிப் போனபொழுது அங்கே உமாவைக் காணாததைக் கண்டாள். ஜெய் பிரசாதை விசாரித்தாள். அவள் போய் விட்டதாய்ச் சொல்லி விட்டான். பெருமூச் செறிந்தாள் அவள்.

★ ★ ★



உமா காரை ஓட்டிக் கொண்டிருந்தாள். கார் வீட்டை நோக்கிச் செல்லவில்லை, கடைத்தெரு வழியாய்ப் போய்க் கொண்டிருந்தது. கடைவீதியில் எள் விழ இடமில்லாதவாறு கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது. கல்யாண சீசனாதலால் எந்தக் கடையில் பார்த்தாலும் ஜனத்திரள் வழிந்துக் கொண்டிருந்தது.

எதிரே இன்னொரு கார் வந்து கொண்டிருந்தது. அதில் ஒரு தம்பதிகள் இருந்தார்கள். மனைவி காரை ஓட்டிக் கொண்டிருந்தாள் அவன் பின்னுக்குச் சாய்ந்துக் கொண்டு ஒரு கையை அவள் தோள் பக்கமாய் நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவள் கலகலவென்றுச் சிரித்துக் கொண்டிருந்தாள் உமா தானே ஒதுங்கி அவர்களுக்கு வழி விட்டாள்

உமாவுக்குத் தன்னைத் தவிர இந்த உலகத்தில் எல்லோருமே சந்தோஷமாய் இருந்தாற் போலிருந்தது. திருமணமான பிறகுதான் தந்தை அவளுக்கு டிரைவிங் கற்றுத் தந்தார். ரவிசங்கரனும் கற்றுக் கொண்டான். ஆனால் ஒரு நாள்கூட இருவருமாய்ச் சேர்ந்து காரில் வெளியே போனதில்லை. காரோட்டிக் கொண்டிருந்த உமாவின் கண் முன் திரும்பத் திரும்ப வசந்தியைத் தேற்றிக் கொண்டிருந்த ரவிசங்கரனின் உருவமே மிதந்து கொண்டிருந்தது.

உமாவுக்கு வசந்தியின் மேல் கோபம் வரவில்லை. ரவிசங்கரன் மீதுதான் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அக் கோபத்திலிருந்து செயலற்றத் தன்மை பீறிட்டுக் கொண்டு வரத் தொடங்கிற்று.

இந்த உலகத்தில் மனிதர்களை யாராலும் சிறைப் பிடித்து விடலாம். ஆனால் மனதை சிறைப் பிடித்துவிட முடியுமா?

உடலளவில் சுதந்திரம் இல்லாவிட்டாலும் மனத்தள வில் ஒவ்வொரு நபரும் சுதந்திரமானவர்கள்தாம். உமா யோசித்தாள். இவ்வளவு நாளாய் என்ன பண்ணினாள்? ரவிசங்கரின் மனதை என்னால் வென்று விட முடியாதா என்ன என்ற அகம்பாவத்தோடு அவனைக் கணவனாய் வாழ்க்கையில் கட்டிப் போடத்தான் தவித்துக் கொண் டிருந்தாள். இன்றைக்கு உமாவின் கண் முன் அந்த பிரம் மைகளின் திரை நீங்கி விட்டது.

வசந்தியையும் ரவிசங்கரனையும் யாராலுமே பிரித்து விட முடியாது. அவ்விருவரின் அன்புப் பிணைப்பை யாராலும் முறித்து விட முடியாது. உமாவுக்கு இந்தத் தோல்வி மிகவும் விரக்தியை அளித்தது. இவ்வளவு நாளாய் அவள் என்ன பண்ணினாள்? கானல் நீரை நோக்கி ஓடிக் கொண்டிருந்தாள்.

வசந்தி வீட்டு கிரகப்பிரவேசத்திற்குப் போயிருக்கா விட்டால் இந்த உண்மை என்றைக்குமே தெரிந்திருக்காது. உமாவுக்கு திடீரென்று ரவிசங்கரனின் மீதும், இந்த உலகத்தின் மீதும், அவனைத் தனக்குத் திருமணம் பண்ணி வைத்த தந்தை மீதும், அவனை மணந்துக் கொண்டும் அவன் அன்பைப் பெறமுடியாத தன் துரதிருஷ்டத்தின் மீதும் சொல்ல முடியாத விரக்தி ஏற்பட்டது.

ரவிசங்கரோடு சேர்ந்து வசிப்ப தென்பது இனி முடியாத காரியம். ஆனால்— ஆனால், 'கணவனால் கைவிடப்பட்ட உமா' என்ற அபவாதத்துடன் வசிப்பது கூட அசம்பவந்தான். அவள் எதற்காக வாழ வேண்டும்? வாழ்ந்து என்ன செய்யப் போகிறாள்? சிறுவயது உமாவாய் கோபம் வந்துவிட்டது. அழுகை வந்தது. கையிலிருந்த சாமான்களைத் தரையில் ஓங்கியெறிந்தோ, உடைத்தோ ஆத்திரத்தைக் தீர்த்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது.



இப்பொழுது அவள் கையில் —இருந்த அவளுக்குப் பிடிக்காத பொருள் எது? வாழ்க்கை! இது மிகவும் விலை மதிப்பானது. உண்மைதான். ஆனால், இது அவளுக்குப் பிடிக்கவில்லை. இதைப் பார்த்துக் கோபம் வருகிறது.

இந்த வாழ்க்கை அவளைத் தயையின்றி மிகவும் வருத்திக் கொண்டிருக்கிறது இனி இவ்வாறு வருத்தப் படக்கூடிய பொறுமையோ, சக்தியோ அவளிடம் இல்லை. உமா காரை ஒரு பக்கமாய்த் திருப்பினாள்.

எதிரே பெரிய மரம் தென்பட்டது. உமாவின் கைகள் தரையில் வீசியெறிவது போல விருப்பாத பொருளை ஓங்கித் மரம் பூதத்தைப் போல நெருங்கி வந்து கொண்டிருந்தது. உமாவின் கண்களில் ஆத்திரம் மட்டுமேயில்லை, ஆனந் தம்கூடத் தென்பட்டது.

தனக்குப் பிடிக்காத விளையாட்டுச் சாமானை உடைத் தெறிந்தாற்போல சுக்குநூறாக்கிக் கொண்டிருந்தாள். வாழ்க்கை மிகவும் விலைமதிப்பானது. உமாவின் மனம் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. எப்பொழுது அந்த மதிப்பு? அது நமக்குப் பயன் படும்போது! மகிழ்ச்சியைத் தரும் போது. துன்புறுத்திக் கொண்டிருந்தால் யாரால் தாங்க முடியும்? உதறியெறியாமல் யாரால் சும்மாயிருக்க முடியும்.?

மரம் பயங்கரமாய் ஆர்பாட்டத்தோடு சிரித்துக் கொண்டே, நகங்களைக் காட்டிக் கொண்டே இட்டே வந்துக் கொண்டிருந்தது. மிகச் சமீபத்தில் வந்துக் கொண்டிருந்தது. அதற்குள் திடீரென்று மரத்திற்குப் பின்னாலிருந்து பத்து வயது சிறுவன் ஒருவன் வெளியே வந்தான். அவன் கையில் பட்டம் இருந்தது. காரைப் பார்த்ததுமே வீலென்று பெரிதாய்க் கத்தினான்.

உமா சரேலென்று காரை பக்கத்தில் திருப்பி விட்டாள். கார் சுழன்று, பலமாய் எதன் மீதோ மோதிக் கொண்டு ஒதுங்கியது. உமாவின் தலையில் பலமான அடிப்பட்டுவிட்டது. உயிர் பறந்தாற் போலிருக்க, கண் முன்னாடி இருள் சூழ்ந்துக் கொண்டது.

* * *

உமா முனகிக் கொண்டிருந்தாள். அந்த முனகல் இருளடர்ந்த குகைகளிலிருந்து தெளியே வந்து வெளிச் சத்தைப் பார்க்க வேண்டுமென்று தவிதவித்துக் கொண் டிருக்கும் இதய தாபமாய் இருந்தது. எங்கே இருக்கிறான் அவன்? உமா எழுந்து நிற்க முயன்றாள்.

அதற்குள் உடைந்து விழுந்து அலையைப் போல கீழே சரிந்தாள். அவளுக்கு யார் இருக்கிறார்கள்? யாருமே இல்லை. 'அப்பா! அப்பா! எங்கே இருக்கிறாய்? எனக்கு இங்கே பயமாயிருக்கிறது, வா!' கத்திக்கொண்டிருந்தாள்.

'என்னால் வரமுடியாதும்மா!' ரவிசங்கரன் தான் இருக்கானே, கூப்பிடு.' எங்கிருந்தோ கேட்கிறது. அவரா? அவர்... அவர் என்னைப் பார்க்க மாட்டார் அப்பா! அவருக்கு நான் தேவையில்லை. வசந்தி வேண்டும்.' உமா அழத்தொடங்கினாள்

'சீ! பாவி நான்.' என் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? அவர்களிருவரும் என்னை எப்படித் திட்டிக் கொண் டிருக்கிறார்களோ? நான் செத்தொழிந்தால் நன்றாயிருக் கும் என்வெண்ணிக் கொள்கிறார்களோ என்னவோ? ஆம் சாகவேண்டும்; செத்துவிடவேண்டும்.' —உமா ஃபிட் வந்தவளைப்போல அழத் தொடங்கினாள்.

'உமா! உமா!' யாரோ கூப்பிட்டுக்கொண்டிருந்தார் கள்.



அப்பா! அப்பா!' உமா அவ்வாறு அழைத்த ஆளின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். 'என்னை அழைச்சுட்டுப் போ! உன்னோடு அழைச்சுட்டுப் போயிடு. என்னால் இங்கே இருக்க முடியாதுப்பா' உமா வீலென்று கத்தினாள்— உயிரே போய்க்கொண்டிருந்தாற் போல.

'ஐயோ என் காலுக்கு என்னவாயிடுத்து? வலி உயிர் போகிறதே!' அழத் தொடங்கினாள்.

'உமா! உன் காலுக்கு ஒன்றுமாகலை.' யாரோ மிகப் பரிவாய் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

'இவ்வளவு வலி எடுக்கிறதே!'

'குறைந்து விடும். இந்த ஹார்லிக்ஸைக் கொஞ்சம் குடி.'

'ஊஹூம். வேண்டாம்! எனக்கு வேண்டாம் அப்பா! நீ...நீ...நான் சுகப்படணும்னுதானே என்னை ரவிசங்கர னுக்குத் தந்து மணம் முடித்தாய்? நான் அவருக்குத் தேவையில்லைப்பா! வசந்தி மேல் அவருக்குக் கொள்ளைப் பிரியம். எவ்வளவு ஆசைன்னு நினைக்கிறாய்? இந்த உலகத்தில் யாருக்குமே யார் மேலேயும் அவ்வளவு அன்பு இருக்காது தெரியுமா?'

'உமா, ப்ளீஸ் தூங்கு.'

'தூங்கமாட்டேன். தூக்கம் வரமாட்டேங்குது! நான் போயிடணும். அவர் வந்துடுவார். நான் போயி டணும். சீ, சீ, பிடிக்காதவங்க யார் கிட்டேயாவது யாராவது இருப்பாங்களா? எவ்வளவு அசிங்கம்!'

'உமா, தூங்கு.'

'தூங்க மாட்டேன்...செத்துப் போறேன். செத்துட் டால் எந்த வருத்தமும் இருக்காது—நிம்மதியாய் இருக்

ளும். புருஷன் விட்டுட்டுப் போயிட்டான்னு உலகம் பழித்தாலும் சிரித்தாலும் நமக்குத் தெரியாது.

'சிதம்பரத்தின் பொண்ணு உமா இல்லே, அவளைப் புருஷன் உதறிவிட்டான்' என்று எல்லோரும் சொல்லிக் கிட்டால் எவ்வளவு அசிங்கம் இல்லையா? ரவிசங்கரன் என்னை உதறிவிடும் வரைக்கும் நான் ஏன் அவகாசம் தரணும்? உலகம் என்னைச் சிரிக்கும்படி ஏன் இடந்தரணும்? நானே ரவிசங்கரை உதறி விடுகிறேன். ஐயோ! உதறிட்டால் உமா கெட்டவள், புருஷனை விட்டு விட்டாள் என்பாங்க. செத்துப் போறேன். செத்துப் போகணும். அவ்வளவு தான்!'

'உமா!' உமா சிரிக்கத் தொடங்கினாள். 'நீ எவ்வளவு அதிர்ஷ்டசாலிம்மா, இவ்வளவு அதிர்ஷ்டம் யாருக்குமே கிடைக்காது.' உமா எழுந்து காளியாய் சீறிக் கொண்டே உட்காரப் போனாள். 'மொதல்ல நான் எதுக்கு அவரை உதறணுங்கிறேன்? நான் என்ன தப்புப் பண்ணிட்டேங்கிறேன்? அவருக்கு அந்த வசந்தி மேல் அன்பு இருந்தால் என்னை எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கணும்? நானே வேறொருத்தனைப் பண்ணிக்கொண்டு சந்தோஷமாய் இருந்திருப்பேனே அப்பா!'

உமா திரும்பவும் ரவிசங்கரனின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டாள். 'நீ அவரை நன்றாய்க் கேளு. அழுத்திக் கேள். எங்க உமா பண்ணிய தப்பு என்னன்னு உலுக்கி எடுத்துக் கேள்! நீ எங்களை மோசம் பண்ணிட்டாய்னு சொல்லு. இது மோசம் இல்லையா?

ஒரு பெண்ணைக் காதலித்து விட்டு இன்னொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிப்பதும், திரும்பவும் பண்ணிக் கொண்ட பெண்ணை விட்டு விட்டு, காதலித்த பெண்ணோடேயே இருப்பதும், மோசந்தானே! எல்லாம் அவங்க இஷ்டந்தான் போலிருக்கு! எவ்வளவு அரக்கர்கள் அப்பா, நீயே கேள்.



'இந்தக் கேள்விக்கு பதில் சொல்லச் சொல்லு. அப்பா நான் அவரை விட்டுவிடுகிறேன். அவரை செத்தாலும் விடமாட்டேன்' என்று சொல்லிக் கொண்டே திரும்பவும் அழத் தொடங்கினாள் உமா.

'ப்சு... லாபமில்லை. இதெல்லாம் உலகத்துக்கு எப்படித் தெரியும்? உன் புருஷன் உன்னை ஏன் விட்டான்னு கேட்டால் என்னத்தைச் சொல்வேன் நான்?'

டாக்டர் வந்தார்.

'எப்பத்திலிருந்து இந்த மாதிரி பிதற்றுகிறாள்?'

'ராத்திரியிலேருந்து இதே புலம்பல்தான்' என்றான் ரவிசங்கரன்.

அவர் உமாவைப் பரிசோதித்தார். ஜுரம் ரொம்ப இருக்கு' என்றார்; இஞ்ஜக்ஷன் தந்தார். தரவேண்டிய மருந்துகளைத் தந்துவிட்டுச் சொன்னார்—

'ரொம்பவும் ரகளைப் பண்ணினால் எனக்குப் போன் பண்ணுங்க. தூங்குவதற்கு மருந்து கொடுத்திருக்கேன். எவ்வளவு தூங்குகிறாளோ அவ்வளவு நல்லது' என்றார்.

ரவிசங்கரன் அவரோடு கூடவே வெளியே வந்தான். காரில் ஏறப்போன அவர் ஒருவினாடி நின்று சொன்னார். 'நீங்க ஒன்றும் நினைத்துக்காமலிருந்தால் ஒரு விஷயம் சொல்றேன்' என்றார்.

'சொல்லுங்க.'

'உமாவின் பேச்சில் ஏதோ பயம் நன்றாய்த் தெரிகிறது. நீங்கள் தன்னை உதறி விடுவீங்கன்னு நினைச்சுட்டிருக்கிறாள். அந்தப் பயம் உமாவின் மனதில் ஏன் புகுந்ததோ புரியவில்லை. இந்தக் குடும்பத்தின் டாக்டராய் உங்

களுக்கு ஒரு சின்ன ஆலோசனை. ஒவ்வொரு குடும்பத்திலும் ஏதாவது ஒரு பிரச்னை இருந்துட்டேதான் இருக்கும்.

'நீங்கள் எப்பொழுதோ ஏதோ கோபத்துடன் சொன்ன வார்த்தைகளை உமா சீரியஸாய் எடுத்துக்கிட்டிருக்கிறாள் போலிருக்கிறது. நீங்க உமாவிடம் அந்த வார்த்தைகளை சீரியஸாய்ச் சொல்லவில்லை என்றும், நீங்கள் உதறிவிடமாட்டீர்கள் என்றும் நம்பிக்கைத் தரணும். நீங்கள் அவள் வார்த்தைகளை நன்றாய்க் கேட்டிருந்தால் தெரிந்திருக்கும்.

'உமா தனக்கு யாருமே இல்லை என்று நினைச்சுட்டிருக்கிறாள். தந்தை இல்லாத குறை கூட வாட்டிக் கொண்டிருக்கிறது அவளை. அவள் மிகவும் நரகவேதனையை அனுபவிச்சுட்டிருக்கிறதாய்த் தோணுகிறது.

'மிஸ்டர் ரவிசங்கர்! நான் அன்றே சொல்லிட்டேன். உமா வேண்டுமென்றே ஆக்ஸிடெண்ட் பண்ணிக் கொண்டிருப்பதாய்த் தோணுகிறது. இது தற்கொலை முயற்சி! இன்னொரு தடவை உமா இதுபோல பைத்தியக்கார காரியத்தைப் பண்ண அவகாசம் தராதீங்க.

'சிதம்பரம் சாரின் மகளுக்கு எவ்வளவோ நல்ல நல்ல சம்பந்தங்கள் எல்லாம் வந்தபோதும் கூட மறுத்து விட்டார். ஏன் தெரியுமா? உமா மேல் அவருக்கு உயிர். உமாவை நன்றாய் வைத்துக் கொள்ளும் பையன் தான் வேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்தார்.

'உமாவுக்கும் உங்களுக்கும் திருமணம் நிச்சயமானதும், 'உங்களுக்குப் பிடித்தப் பையன் கிடைத்துட்டானா?'— என்று நான் கேட்டபோது—'நான் எதிர்பார்த்ததையும் விட நல்ல பையன் கிடைத்து விட்டான். அது உமாவின் அதிர்ஷடமில்லை. என் அதிர்ஷ்டந்தான்' என்று கர்வமாய்ச் சொல்லிக் கொண்டார்.



11347
2968651

இப்ப இந்தச் சூழ்நிலையை[illegible] பார்த்தால் அவர் நம்பிக்கை கானல் நீராய்த் தோன்று[illegible] பெண். உங்க மனம் கோணாதவாறு நடந்து[illegible]பவன் என்று தான் நினைக்கிறேன். உமாவை நன்றாய்ப் பார்த்துக் கொள்வது உங்கள் கடமை என்று நினைவூட்டுகிறேன். உமாவின் புலம்பல்கள் எனக்குக் கலக்கத்தை உண்டாக்குகிறது. அதனால்தான் இவ்வாறு சொன்னேன். ஒருக்கால் நான் தப்பாய்ப் புரிந்து கொண்டுவிட்டேனோ என்னவோ? ஒருக்கால் அதுதான் உண்மையாயிருந்தால் தயவு செய்து ஒன்றும் நினைத்துக்காதீங்க

'பெரியவன் ஏதோ சொல்லிவிட்டேன் என்று நினைத்து மன்னித்து விடுங்க'— ரவிசங்கரனின் தோளில் கை வைத்துச் சொன்னார் அவர்.

'அப்படிச் சொல்லாதீங்க' என்றான் ரவிசங்கரன், தனக்குள் முணு முணுத்துக் கொண்டாற்போல.

அவன் டாக்டரை அனுப்பி விட்டுத் திரும்பி வந்தான் அறையிலிருந்து உமாவின் அழுகைச் சப்தம்கேட்கவில்லை. தூக்கமருந்து நன்றாய் வேலை செய்தது போலிருந்தது. காமாட்சி உமாவின் கட்டிலுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள்.

அவள் இந்த இரண்டு நாட்களாய் பச்சைத் தண்ணீர் கூட வாயில் விட்டுக் கொள்ளவில்லை. குழந்தைகளும் அவ்வாறே. கால்களிலும் கைகளிலும் கட்டு காயங்களுடன் நினைவற்றுக் கிடந்த உமாவைப் பார்த்து திகிலில் உறைந்து போய்விட்டார்கள் அவர்கள், 'அண்ணா அண்ணிக்கு என்னவாச்சு?' என்று அழுதுவிட்டார்கள். வீட்டில் உற்சாகம் மடிந்துவிட்டது; குழந்தைகள் தலைக்கு ஒரு மூலையில் போய் உட்கார்ந்துக் கொண்டிருந்தார்கள்.

தாயோ கேட்கவே வேண்டாம். அவள் வெறுமனே அழுது கொண்டிருந்தாள்.

ரவிசங்கரன் சோபாவில் உட்கார்ந்திருந்தான். உமா வேண்டுமென்றேதான் ஆக்ஸிடென்டை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறாள். சந்தேகமில்லை. உமாவுக்கு ஏதாவது ஆகி விட்டிருந்தால்? அவன் உடல் சிலிர்த்தது.

அவன் ஒரு கொலையாளியாகி விட்டிருப்பான். உமாவை பலவந்தமாய்ச் சாகடித்தவனாகி விடுவான்.

ஆனால் ஏதோ கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்ததால் அவன் அந்தப் பயங்கரத்திலிருந்து தப்பினான். உமாவின் கால்களிலும் கைகளிலும் அடிப்பட்டு நன்றாய் காயமாகியிருந்தன. ஆனால் எலும்பு முறியவில்லை...

உமாவின் அறையிலிருந்து திரும்பவும் கூச்சல்கள் கேட்டன. 'நான் என்ன தப்புப் பண்ணினேன்? சொல்லுங்கள்.'

காமாட்சி பிடித்துக் கொண்டிருந்தாள் போலிருந்தது.

'சும்மாயிரும்மா, உமா! உமா! தூங்கும்மா!'

'தூக்கமா? தூக்கமே வராதுங்க எனக்கு. உங்களுக்குத் தெரியுமா? உங்க பிள்ளை என்னை விட்டுட்டுப் போயிடப் போறார்.'

'சீ, சீ, இதென்ன பேச்சு! ஜுரத்தில் கொஞ்சங்கூட நினைவில்லாமல் பேசுகிறாய்' என்றாள் காமாட்சி.

'எங்கப்பா இல்லாததால்தான் என்னை இப்படி மோசம் பண்றாங்க. எனக்குத் தெரியும்' என்றாள்.

'உங்கப்பா இல்லாவிட்டால் நான் இல்லையா? நான் சும்மாயிருந்துடுவேன்னு நினைச்சுட்டயா? அவன் நம்பளை உதறி விட்டு எங்கே போயிடுவானாம்?' காமாட்சி ரவிசங்கரனைக் கடிந்துக் கொண்டதைப் பார்த்து உமாவின் மனம் கொஞ்சம் ஆறுதலடைந்தது.



முன் அறையில் ரவிசங்கரன் தலையைக் கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். என்ன பண்ணிக் கொண்டிருந்தான் அவன்? என்ன பண்ணப் போனான்? உமா தன் வாழ்க்கையில் ஒரு பொறுப்பு என்ற விஷயத்தையே மறந்து விட்டான்.

பொறுப்பை உதறும் மனிதன் மிக ஈனமானவன் என்று அவன் இதுவரை எல்லோரையும் வாய்க்கிழியச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனே அந்தக் காரியத்தைப் பண்ணுகிறானே இப்பொழுது!

உமா தற்கொலை செய்து கொள்ளும் வரைக்கும் கொண்டு வந்து விட்டானே! கடவுளே! அவன் மனம் சோர்ந்துப் போய்க் கொண்டிருந்தது! அதற்குள் போன் மணியடித்தது. தங்கை போய் எடுத்தாள். 'ஹலோ' என்றாள். உடனே கடுமையான குரலில்— 'எங்கண்ணா இல்லைங்க, எங்க அண்ணிக்கு உடம்பு சரியாயில்லை, அண்ணியிடம் இருக்கார் அண்ணா' என்று சொல்லி வைத்து விட்டாள்.

'யார்?' என்று அவன் கேட்கவில்லை. வசந்தி என்று தெரிந்துவிட்டது. வீட்டில் பசங்களோடு சேர்ந்து அத்தனைப் பேரும் வசந்தி என்றாலே ஆத்திரமடைந்து கொண்டிருந்தார்கள். உமாவின் விபத்திற்குக் காரணம் வசந்திதான் என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

தங்கை அங்கிருந்து போய் விட்டாள்.

போன் திரும்பவும் ஒலித்தது.

யாருமே எடுக்கவில்லை. ரவிசங்கரன் நாற்காலியில் அப்படியே உட்கார்ந்திருந்தான். போன் கணகணவென்று மணியடித்துக் கொண்டேயிருந்தது. அவன் எடுக்கவில்லை. அவனுக்கு மிகச் சோர்வாயிருந்தது. இதற்குப் பரிகாரம்

என்ன என்றுதான் அவனுக்குத் தெரியவில்லை. மணியடித்துக் கொண்டேயிருந்து விட்டுக் கொஞ்ச நேரத்தில் ஓய்ந்து விட்டது போன். அவன் களைத்துப் போன ஆனாய் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு வசந்தி தன் வீட்டில் உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் புத்தகம் இருந்தது. ஆனால் கவனம் அதில் இல்லை நகங்களைக் கடித்துக் கொண்டே வேற்று யோசனையில் ஆழ்ந்து விட்டிருந்தாள்.

'வசந்தி, சமையல் ஆயிடுத்து, சாப்பிட வா' அக்கா கூப்பிட்டாள்.

'எனக்குப் பசிக்கலை அக்கா, நீ சாப்பிடு' என்றாள்.

'இதென்னது? ஒவ்வொரு வேளையும் இப்படியே சொல்கிறாய்! எவ்வளவு இளைத்துப் போயிட்டாய் தெரியுமா? ஒரு வாய் சாப்பிட்டுவிட்டுப் போ.'

'என்னைக் கொல்லாதே! எனக்குச் சாப்பிடப் பிடிக்கலை' என்றாள் அலுப்போடு.

'இப்பப் பசிக்காவிட்டால் கொஞ்ச நேரங்கழித்து சாப்பிடு. அதற்குள் நான் பசங்களின் உடைகளுக்கு இஸ்திரி போட்டுவிட்டு வரேன்' என்றாள் அக்கா.

வசந்தி உட்கார்ந்திருந்தாள். பக்கத்திலேயே போன் இருந்தது. வசந்தி கொஞ்ச நேரம் அதையே பார்த்தாள். புத்தகத்தை எடுத்துப் படிக்கப் போனாள். ஆனால் மனம் அதில் லயிக்கவில்லை. திரும்பவும் போனைப் பார்த்தாள். பிறகு போனை எடுத்து நம்பரை டயல் பண்ணினாள் படபடத்த இதயத்துடன் காத்திருந்தாள். மறுமுனையில் யாரே போனை எடுத்தார்கள்.



'ஹலோ!' — பெரிதாய்க் கேட்டது.

'ஹலோ, ரவிசங்கரன் சார் இருக்காரா?' ஜாக்கிரதையாய் மெல்லிய குரலில் கேட்டாள்.

'இல்லீங்க.'

'ஆபீசுக்கு வந்தாரா?'

'இல்லீங்க.'

'எப்ப வருவார்னு தெரியுமா?'

'தெரியாதுங்க. ஒருக்கால் உமா அம்மாவுக்கு காயம் குறையும் வரைக்கும் வரமாட்டார்னு தோணுது. ஏதாவது சொல்லணுங்களா? உங்க பேரு?'

வசந்தி போனை வைத்து விட்டாள்.

வசந்தி சோபாவில் சாய்ந்தபடி அப்படியே உட்கார்ந்து விட்டாள். அன்றைக்கு அவள் வீட்டு கிரகப்பிரவேசம் நடந்த அன்றைக்கு—உமா அவளும் ரவிசங்கரனும் நெருக்கமாய் இருந்ததைப் பார்த்து விட்டுப் போனாள். போன அரை மணிக்கெல்லாம் யாரோ ஓட்டமாய் ஓடி வந்தார்கள். அவர் ரவிசங்கரனின் ஆபீஸில் வேலை பண்ணும் மேனேஜராம். உமாவின் காருக்குப் பெருத்த ஆக்ஸிடெண்ட் ஆனதாய்ச் சொன்னார். அதைக் கேட்டதுமே ரவிசங்கரன் அதிர்ந்து விட்டான். அவன் முகத்திலிருந்த ரத்தமெல்லாம் வற்றிவிட்டாற் போலாயிற்று.

பக்கத்திலிருந்த வசந்தியிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் வந்த ஆளுடன் போய் விட்டான். அப்பொழுதிலிருந்து இன்று வரை ஒன்பது நாட்கள் கழிந்து விட்டன. ரவிசங்கரன் வசந்தியின் கண்ணில் இன்னும் படவேயில்லை.

அக்காவும் அவள் கணவனும் ஆசுபத்திரிக்குப் போய் உமாவைப் பார்த்து விட்டு வந்தார்கள். கால்களிலும் கைகளிலும் நன்றாய் அடிப்பட்டு விட்டனவென்றும், உயிருக்கு ஆபத்தில்லை என்றும், ஊனம் எதுவும் ஏற்பட வில்லை என்றும் சொன்னார்கள். அதைக் கேட்ட பிறகு பெருமூச்செறிந்தாள்.

உமாவுக்கு அன்றைக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருந் தால் அவளும் ரவிசங்கரனும் ஏதோ தவறிழைத்து விட்ட வர்களைப் போல வாழ்நாள் பூராவும் வருந்தவேண்டி யிருந்திருக்கும். தாங்க் காட்! உமாவுக்கு ஒன்றுமாகி விட வில்லை.

இது தன் அதிர்ஷ்டந்தான் என்றெண்ணிக் கொண்டாள் வசந்தி. ரவிசங்கரனின் வரவுக்காகக் காத்திருந்தாள். ஒரு நாள் கழிந்தது இரண்டு நாட்கள்... இரண்டு நாட்கள் கழிந்தன. அவனுக்காக ஆபீசிற்குப் போன் பண்ணிய போது அங்கு வருவதில்லை என்று சொன்னார்கள். ஒரு முறை தாள முடியாமல் போய் வீட்டிற்குப் போன் பண்ணினாள். ரவிசங்கரனின் தங்கை மிக விட்டேற்றியாய் பதிலளித்ததால் வசந்தியின் மனம் துணுக்குற்றது.

அக்காவின் வார்த்தைகளைக் கொண்டு பார்த்தால் ரவிசங்கரன் உமாவுக்குப் பணிவிடைகள் பண்ணிக் கொண்டிருப்பதாய்த் தெரிந்தது. ரவிசங்கரனின் நல்ல மனதைப்பற்றி வசந்தி நன்றாய் அறிவாள். யாருக்கு ஆபத்து வந்தாலும் கைகொடுப்பான் தன்னைமிலலாமல பிறருக்காகப் பாடுபடுவான்.

அவனிடமிருந்த இந்தக் குணந்தான் அவனிடம் வசந்தியைக் கவர்ந்துவிட்டிருந்தது என்றும் சொல்லலாம். ரவிசங்கரன் உலகத்திற்கெல்லாம் பணிவிடைகள் பண்ணி னாலும் பரவாயில்லை. ஆனால்— உமா! உமாவுக்குச்



செய்வது வசந்திக்குப் பிடிக்கவில்லை. அருவையாய் இருந்தது. அந்த எண்ணமே எரிச்சலைத் தந்தது. சில சமயம் தான் மிகத் தவறாய் யோசிப்பதாய்த் தோன்றும். நாணுவாள்; ஆனாலும் மனதில் ஏற்பட்ட வருத்தம் மட்டும் போகாது. அவன் வந்ததுமே தான்பட்ட இந்த வேதனைகளையெல்லாம் சொல்ல வேண்டும். அவன் கேட்டுச் சிரிப்பான். 'அசட்டு வசந்தி' என்பான்.

ஆனால் நாட்கள் கழிந்துக்கொண்டே இருந்தன. ரவிசங்கரன் மட்டும் வரவேயில்லை. வசந்திக்கு இரவும் பகலும் எரிச்சலாகவும், பொறுமையின்றியும், அமைதி யில்லாமலும் கழிந்தன.

சில சமயம் அப்பொழுதே புறப்பட்டு அவனிடம் போய் விட வேண்டும் போலிருக்கும். அதற்குள் தன்னை சுதாரித்துக் கொள்வாள். பொழுது போவதே பெரும் பாடாய் இருந்தது. சிலசமயம் இந்த யோசனைகளால் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கும்.

அதற்குள் கதவு தட்டிய சப்தம் கேட்டது.

'ஹலோ! நீங்க வீட்டில்தான் இருக்கீங்களா? அம்மாடா! ஏதாவது மார்னிங் ஷோவுக்குக் கம்பி நீட்டிட்டீங்களோன்னு நினைச்சேன்'— ஜெயபிரசாத் சிரித்துக்கொண்டே கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தான்.

அவன் இப்பொழுதெல்லாம் அடிக்கடி வந்துகொண் டிருந்தான். வசந்தியன் அக்காவுக்கு அவனோடு வம்புப் பேசுவதென்றால் ஆர்வம்! அவனும் அக்கா சொல்லும் வம்புகளையெல்லாம் கவனமாய்க் கேட்பான். வசந்திக்கு இதுவரை அவன் பேச்சும், ஜோக்குகளும் எரிச்சலைத் தந்துக் கொண்டிருந்தன. இப்பொழுதோ கொஞ்சம் பொழுது போவது போலிருந்ததால் கேட்க முடிந்தது

அவளால். எப்பொழுதும் எதையாவது சொல்லிச் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பான். அவனைப்பார்த்தால் எந்தக் கவலையும் இல்லாதவனைப் போலத் தோன்றும். தனிக்கட்டை ஆனதால் பிக்கல் பிடுங்கல் இல்லை. அவன் அடிக்கடி இங்கேயே சாப்பிடுவதும் வழக்கம்.

அறையில் குழந்தைகளின் துணிகளுக்கு இஸ்திரி போட்டுக்கொண்டிருந்த வசந்தியின் அக்கா அவனைப் பார்த்ததும் வெளியே வந்து, 'வாங்க! வாங்க! நாங்க சாப்பிட உட்காரப் போறோம். சரியான சமயத்துக்கு விருந்தாளித் தெய்வமாய் வந்திருக்கீங்க. எங்களோடு சேர்ந்து சாப்பிட்டுத் தீரணும்' என்றாள்.

'வாரத்துக்கு நான்கு நாட்களாவது உங்கள் கண்ணுக்கு நான் இந்த ரூபத்தை எடுத்துட்டிருக்கிறேன். சரி, ஆகட்டும். தெய்வத்தின் ரூபத்தை எடுப்பதற்குத் தடை எதுவும் இல்லை. வரம் கொடுன்னு கேட்டுட்டால் தான் கஷ்டம்'— என்றான் அவன் சிரித்துக்கொண்டே.

'உங்கக் கல்யாணம் ஆன பிறகு நாங்க வந்து உங்க வீட்டில் டேரா போட்டு வட்டியும் முதலுமாய் வசூல் பண்ணிக் கொண்டு விடுகிறோம்' என்றாள் அக்கா.

'நீங்க வாங்க, ஆட்சேபணை இல்லை. ஆனால் கல்யாணம் ஆகணும்னு சாபம் மட்டும் கொடுத்துடாதீங்க' என்றான்.

'ஏன் அப்படி?'

'அது அப்படித்தான்! அதற்கு மேல் நீங்க கேட்கக் கூடாது.'

'இதென்னது? என்னை அதற்குள்ளாகவே இந்தச் சுற்றுப் பக்கத்திலிருப்பவங்க எத்தனைப் பேர் உங்களைப்



பற்றிக் கேட்டுட்டாங்க தெரியுமா? நேற்றுத்தான் எங்க பக்கத்து வீட்டு வரலட்சுமியும் கேட்டாள். அவள் சின்னப் பெண்ணை நீங்க ஒரு தடவைப் பார்க்கணுமாம்.'

'ஐயோ! அந்த மாதிரி ஆபத்துங்களை யெல்லாம் கொண்டு வந்துடாதீங்க. அப்படியானால் உங்க வீட்டு ஜோலிக்கே இனி வரமாட்டேன்.' கையெடுத்துக் கும்பிட்டான்.

'ஏன், கல்யாணம் பண்ணிக்க மாட்டீங்களா?'

'பண்ணிக்கணும்னு இல்லை.'

'ஏன்?'

'சிலபேர் ஜாதகம் அப்படின்னு வையுங்க. நீங்கள் பரிமாறினால் சாப்பிடலாம்.'

'இதோ இப்பவே, ஒரு நிமிஷம்.' அக்கா சமையலறைக்குள் போனாள். வசந்தி அவனைக் கூர்ந்து பார்த்தாள். எல்லாவிதத்திலும் குறை இல்லாத இவனுக்குத் திருமணத்தின் மேல் ஏன் இந்த விரக்தி ஏற்பட்டதோ.

'நீங்க அப்படிச் சந்தேகத்தோடு பார்க்க வேண்டாம். சமயம் வரும் போது காரணத்தைக் கட்டாயம் சொல்கிறேன். நான் உங்க வீட்டில் இவ்வளவு சுதந்திரமாய் ஏன் வருகிறேன் தெரியுமா? உங்க வீட்டில் யாருமே இந்தக் கல்யாண விஷயத்தைப் பற்றிப் பேச்செடுக்க மாட்டீங்கன்னுதான்!' என்றான்.

வசந்தியின் அக்கா மூவருக்கும் தட்டில் பரிமாறிவிட்டு வசந்தியை சாப்பிட அழைத்தாள். வசந்தி 'எனக்குப் பசிக்கலை அக்கா' என்றாள்.

'பார்த்தீங்களா, இதே பாட்டுதான் எப்பவும்' என்றாள் அக்கா.

'அவன் கொடுத்து வைத்தவன். கனவிலேயே சாப்பிட்டுக் காலத்தைக் கழிக்கிறவன்' என்றான் அவன் சிரித்துக் கொண்டே.

'அதென்னது?' என்றாள் வசந்தி.

'பின்னே, அப்படித்தானே! எப்பப் பார்த்தாலும் ஏதோ வேற்று யோசனையுடனேயே இருக்கீங்க நீங்க. இதப் பாருங்க, ஒரு சின்ன ஆலோசனை! கனவுகள் எப்போதுமே மனிதனின் காலத்தைக் கற்பூரமாய்க் கரைத்து விடும். கனவில் வாழ்ந்துட்டிருப்பவங்களைக் கையாலாகாதவங்க என்பாங்க. வாழ்க்கையின் மதிப்பைப் பற்றி நினைவில் வாழ்ந்து மகிழ்ச்சியடைபவர்கள்தான் புத்திசாலிங்கன்னு நம்பறேன் நான். வாங்க எனக்கு ரொம்பப் பசிக்கிறது. நீங்க சாப்பிட மாட்டேன் என்றால் சங்கோஜத்துக்காக நானும் சாப்பிட மாட்டேன்னு சொல்லித் தீர வேண்டியிருக்கும்.

'மனுஷன் வாழ்க்கையில் எதை இழந்தாலும் பரவாயில்லை, ஆனால், சாப்பிட முடிந்த பொழுது அந்த அவகாசத்தை இழந்து விடக் கூடாது என்பதுதான் என் லட்சியம். வாங்க, ப்ளீஸ்—' என்றான்.

'எனக்குப் பசிக்கலையே' என்றாள் வசந்தி செய்வதறியாமல்.

'திரும்பவும் அதையே சொல்லாதீங்க. அதான் சொன்னேனே, நானும் சாப்பிடமாட்டேன்னு சொல்ல வேண்டியிருக்கும்னு.'

'நீங்க சாப்பிடுங்க. அக்காதான் உங்களுக்குத் துணை இருக்காளே.'

'நீங்க இல்லாத குறை, குறைதானே?'

'பரிமாறி விட்டேன். வா, வசந்தி.'



வசந்திக்கு அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லுவது சங்கடமாயிருந்தது. வேறு வழியில்லாமல் எழுந்து வந்தாள்.

'உமாவுக்கு எப்படி இருக்கு?' சாப்பிடுகையில் அக்கா கேட்டாள்.

'பரவாயில்லை. நன்றாய்க் குணமடைய இன்னும் இரண்டு வாரங்கள் ஆகுமாம். இப்பத்தான் எழுந்து உட்காருகிறாள். ஆஹா! அதிர்ஷ்டம் என்றால் எங்க உமாவைத்தான் சொல்லணும். எவ்வளவு நல்ல கணவன்! எவ்வளவு தங்கப் புஷ்பத்தால் பூஜித்து வந்திருப்பாளோ போன ஜென்மத்தில்! ரவிசங்கரன் கண்ணில் விளக்கெண்ணை விட்டுக் கொண்டு பார்த்து வருகிறான்னால் நம்புங்க. சாதாரணமாய்ப் பார்த்தால் உமா மேல் அவனுக்கு அவ்வளவு அன்பு இருப்பதாய் யாருமே நினைக்க மாட்டாங்க. அவ்வளவு விட்டேற்றியாய், பட்டும் படாமலுமாய் இருப்பான். நானே ஆச்சரியப்பட்டு விட்டேன்னால் நம்புங்க. நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி உமா என்றேன் நான். அதற்கு என்ன பண்ணினாள் தெரியுமா?' அவன் சாதத்தில் குழம்பைக் கலந்துக் கொண்டே தீவிரமாய்ப் பார்த்தான்.

'என்ன பண்ணினாளாம்?' என்றாள் அக்கா துருவிக் கேட்க விரும்பி.

'ஓ'வென்று அழுதுவிட்டாள்! மை காட்! அந்த அழுகையைப் பார்க்கணும் நீங்க. அது ஒரு ஆனந்தப் பிரவாகம்னு வையுங்க! நான் தோளில் தட்டிவிட்டுச் சொன்னேன்—'அசட்டு உமா! அத்தான் உன்னை நன்றாய் வைத்துக்க மாட்டார்னு தானே நீ கவலைப்படுகிறாய்? இப்பப் பார்த்தாயா, உன் மேல் அவருக்கு எவ்வளவு பிரியம்னு! சில ஆண்கள் அன்பை வெளிக் காட்டிக்க மாட்டாங்க. ஆர்ப்பாட்டம் பண்ணமாட்டாங்க. சிலர்

அட்டகாசமாய் வெளியே காட்டிப்பாங்க. அதான் வித்தியாசம்' என்றேன்.

'அடடா, இதென்னது வசந்தி அதற்குள் கைகழுவிக் கொண்டு போயிட்டாங்களே!' கலவரத்துடன் கேட்டான்.

'அதான் சாப்பாடு கசக்குது. சகிக்கலைன்னு சொன்னேனே!'

ஜெயபிரசாத் அக்காவின் பலவந்தத்தின் பேரில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்திருந்தான். சாப்பிட்டதும் கொஞ்ச நேரங்கழித்து அவன் வசந்தியைக் கேட்டான்—

'பிரசாந்த் தியேட்டரில் லவ் ஸ்டோரி ஓடுகிறது. போவோமா?'

'நான், வரலை' என்றாள் வசந்தி.

'ஏன்?'

'தலை வலிக்கிறது.'

'நீங்க சினிமாவுக்கு வந்தால் தலைவலி போயிடும். நான் கியாரண்டி தரேன்.'

'போகவிட்டால்?'

'நீங்க எவ்வளவு தோப்புக்கரணம் போடச் சொல்றீங்களோ போடறேன்.'

'நீங்க தோப்புக்கரணம் போட்டால் எனக்கென்ன லாபம்?'

'வேறென்ன பண்ணச் சொல்றீங்க? சொல்லுங்க?'

'ஒரு வாரத்துக்கு இந்த வீட்டுக்கு வராமலிருக்கணும்' என்றாள் வசந்தி.



'ஐயோ' அவன் இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டான். ஊஹூம், என்னால் முடியாது.' அவன் தீனமாய் வைத்துக் கொண்டே சொன்ன அம்முகத்தைப் பார்த்துப் பக்கென்று சிரித்து விட்டாள் வசந்தி.

'ஏன்?'

'ஆமாம், நிஜந்தான்! ஏன்? நான் எப்போதுமே அதைப்பற்றி யோசிக்கவேயில்லை.' அவன் எழுந்து கை கட்டிக் கொண்டு அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடை பயிலத் தொடங்கினான்.

'ஏன் என்றால் நீங்கள் எனக்கு சிநேகிதியைப் போல தோன்றுகிறீங்க. பாலைவனம் போன்ற என் வாழ்க்கையில் சோலையாய் தோன்றுகிறீங்க நீங்க. உங்க வீட்டுக்கு வந்தால் எனக்கு ஏனோ ரொம்பச் சந்தோஷமாய் இருக்கு.

'வேறெங்கே போனாலும் ஏதாவது ஒரு தொல்லை. பணம் கடன் கேட்பாங்க. அல்லது கல்யாண சம்பந்தம்னு உயிரை எடுப்பாங்க. இவ்விரண்டும் ரொம்பத் தொந்தரவாயிருக்கும். நீங்கள் பெண்ணாயிருந்தாலும் அனாவசியமாய் வெட்கப்பட்டுட்டு இருக்க மாட்டீங்க. உண்மையைச் சொல்லப்போனால் என்னோடொத்த ஆண் சிநேகிதனுடன் சிநேகம் பண்ணிண்டது போலத் திருப்தியாய் இருக்கு. இந்த வீடு உங்க வீடு; உங்களுக்கு சுதந்திரம் உண்டு.

'நீங்க யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லை. அக்காவும் குழந்தைகளும் கூட என் மேல் அன்பாயிருக்காங்க. ஒருக்கால் எனக்கே தெரியாமல் இதெல்லாம் என்னை உங்களை நோக்கி இழுத்துட்டிருக்குன்னு நினைக்கிறேன்.'

அவன் வசந்திக்கு எதிராய் சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டே சொன்னான்.

'இன்னொரு மகா பெரிய சத்தியத்தைச் சொல்லட்டுமா? கொஞ்சம் ஓய்வு கிடைத்துட்டாலும் போதும்; உடனே இங்கே ஓடி வந்துடணும் போலிருக்கு. இங்கிருந்து போனதுமே திரும்பவும் எந்த சாக்கில் இந்த வீட்டிற்கு வருவதுன்னு வழியைத் தேடிட்டிருப்பேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே, அவன் முகம் சீரியஸாய் மாறி விட்டது. அவன் முகத்தில் தோன்றிய நேர்மையையும், சங்கோஜமில்லாத தன்மையையும் பார்த்ததும் வசந்திக்குக் கூட முகத்தில் சிரிப்பு மாயமாகி கம்பீரம் வந்து சூழ்ந்துக் கொண்டது.

'நான்...நான் ஏதாவது தப்பாய்ப் பேசிட்டேனா?' கேட்டான் அவன்.

'இல்லையே!'

'நீங்க திடீர்னு தீவிரமாய் மாறிட்டதும் பயந்து விட்டேன்'—வசந்தி சிரித்தாள். அச் சிரிப்பு ஏதோ துன்பத்தை அடக்கிக் கொண்டே சிரித்தாற் போலிருந்தது.

அன்று மாலையில் எல்லோருமாய்ச் சேர்ந்து சினிமாவுக்கு போனார்கள். ஜெயபிரசாத் அப்படித்தான் ஒரு வேளை அந்த வீட்டில் சாப்பிட்டால் அவ்வீட்டிலுள்ள எல்லோரையும் தன்னோடு இழுத்துச் சென்று, அதற்கு நான்கு மடங்கு எந்த ஓட்டலிலாவது டிபன் வாங்கி தந்து விடுவான். குழந்தைகளுக்கு அவனைக் கண்டால் மிகப் பிரியம். ஏனெனில் அவர்களோடு சேர்ந்து சமமாய் அவனும் குறும்பு பண்ணிக் கொண்டிருப்பான்!

சினிமாவிலிருந்து வீடு திரும்பியதும் ஜெய்பிரசாத் போய்விட்டான். வசந்தி படுத்துக் கொண்டாள். அவள் யோசனைகள் திரும்பவும் ரவிசங்கரனைச் சுற்றியே தாவிற்று. அந்த யோசனைகள் வந்ததுமே திரும்பவும் வசந்தி மனம் திகிலடையத் தொடங்கிற்று.

★ ★ ★ ★



உமாவுக்கு விழிப்பு வந்தது. தெறிப் பொட்டு மின் மின்னென்று தெறித்துக் கொண்டிருந்தது. உடம்பு வலி தாங்கமுடியாமல் இருந்ததால் 'அப்பா...ஐயோ... அம்மா' என்று முனகத் தொடங்கினாள். காய்ந்த கட்டாந்தரையைப் போல் அவளது தொண்டை வறண்டுப் போயிருந்தது.

'தாகம்' ஹீனஸ்வரத்தில் கேட்டாள். யாரோ நகர்ந்த ஓசை கேட்டது 'இதோ, தண்ணீர்.'

மேற்கூரையையே பார்த்துக் கொண்டிருந்த உமாவின் கண்கள் சட்டென்று அக்குரல் கேட்டபக்கமாய் திரும்பின. ரவிசங்கரன் தண்ணீர் தம்ளரைக் கையில் ஏந்திக் கொண்டிருந்தான.

'தாகம்.'

'இந்தா தண்ணீர்.'

உமா கையை அசைக்கப் போய் வீலென்று கதறினாள். அது பாரமாய், கட்டையைப் போல அசைக்க முடியாமல் இருந்தது.

ரவிசங்கரன் கட்டிலில் உட்கார்ந்தான். உமாவின் கழுத்திற்குக் கீழே கையைக் கொடுத்து மிக மென்மையாய் எழுப்பி உட்கார வைத்தான் உமாவின் உதட்டில் தண்ணீர் தம்ளரைப் பொருத்தினான். உமா கடகடவென்று குடித்துவிட்டாள். தொண்டை ஈரமானதும் கொஞ்சம் உயிர் வந்தாற்போலிருந்தது.

'இப்ப எப்படி இருக்கு?'

'தலை வெடித்து விடும் போல இருக்கு.'

அவன் உமாவின் நெற்றிப்பொட்டை விரல்களால் அழுத்தத் தொடங்கினான். உமா முனகிக் கொண்டிருந்தாள். அந்த முனகல் உமா முயற்சி பண்ணமலேயே உடல் வலியைத் தாங்க முடியாமல் வாயிலிருந்து அதுவே வெளிவந்தாற் போலிருந்தது.

உமாவின் தலை அவன் தோளில் சாய்ந்திருந்தது. அவ்வளவு உபாதையிலும் உமாவுக்கு அவன் பண்ணிக் கொண்டிருந்த இந்த சேவைகள் சங்கடமாய் இருந்தது. அவனைத் தள்ளி விடுவதற்குக் கையைத் தூக்கப் போனாள். ஆனால் முடியவில்லை. 'என் கைக்கு என்னவாயிடுத்து?'

'ஒன்றும் ஆகலை.'

'அசைக்கவே முடியலையே என்னால். எலும்பு உடைந்துப் போயிடுத்தா? நான்... நான் ஊனமாயிட்டேனா?'

உமா அழத் தொடங்கினாள்.

'உமா' அவ்வளழப்பு மிகப் பரிவோடு இருந்தது.

உன் கைக்கு ஒன்றுமாகலை. கொஞ்ச நாளில் அதே சரியாயிடும். அனாவசியமான பயத்தால் மனதைப் பாழடித்துக்காதே! 'மிகக் குழைவாய் சொன்னான் அவன்.

'நான் எதுக்குப் பிழைத்தேனோ?' உமாவின் அழுகை இன்னும் பலமாயிற்று.

அவன் கை உமாவின் தலையைத் தடவிக் கொடுத்தது. நெற்றிப் பொட்டை விரல்கள் நீவி விட்டுக் கொண்டிருந்தன. உமா நகரப் போனாள்.

'பரவாயில்லை, உட்கார்' என்றான் அவன்.

'என்னைத் தொடாதிங்க. நான்... நான்... கம்பளிப் பூச்சி.' அவன் ஆச்சரியத்தோடு புரியாமல் பார்த்தான்.



'நம்பத் திருமணமான முதல் நாள் நீங்க எல்லோரிடமும் சொன்னீங்க. திருமணமான அன்றைக்குக் கணவன் வாயிலிருந்து புகழ்ச்சியான வார்த்தைகளைக் கேட்கணும்னு மனைவி தவிப்பாள். நான் கேட்ட புகழ்ச்சி இது ஒருக்கால் எந்தப் பெண்ணுமே இவ்வளவு நல்ல புகழ்ச்சியான வார்த்தைகளைக் கேட்டிருக்கமாட்டாளோ என்னவோ? அவன் புருவம் முடிச்சேறிற்று. அவனுக்கு நினைவுக்கு வந்து விட்டது.

அவன் அந்த வார்த்தைகளை அந்த நிமிஷமே மறந்து போய் விட்டிருந்தான். உமா இரண்டு வருஷங்கள் ஆகியும் இன்னும் மறக்கவில்லை போலும்! அவன் வெட்கத்தால் தலை குனியவில்லை. கோபத்தால் முகத் தைத் திருப்பிக் கொள்ளவில்லை.

மலர்ந்த முகத்துடனேயே சொன்னான்— 'உமா! கம்பளிப் பூச்சியின் இன்னொரு தசை அழகான பட்டாம் பூச்சி என்று தெரிந்தவங்க யாருமே அதை அருவருத்துக்க மாட்டாங்க.

ஒவ்வொரு மனுஷனின் வாழ்க்கையில் ஏதாவது ஒரு தசையில் கம்பளிப்பூச்சியைப் போன்ற தசையாய்தான் இருந்து தீரும் போலிருக்கு! கம்பளிப்பூச்சியைப் பார்த்து ஏளனம் பண்றவங்க அப்பாவிங்க, முட்டாளுங்க! அது சரி, தலைவலி எப்படி இருக்கு?'

'குறையவில்லை.'

'தூங்க முயற்சிப் பண்ணு.'

'தூக்கம் வரமாட்டேங்கிறதே! மனதில் என்னென்னவோ யோசனைங்க. பைத்தியம் பிடித்துடுமோன்னு பயமாய் இருக்கு.'

'ஒரு நிமிஷம் இரு.' ரவிசங்கரன் ஜாக்கிரதையாய் பின்னுக்குத் தலையணையைப் பொறுத்தி வைத்துவிட்டு

உமாவை அதில் சாய்த்தாற்போல் படுக்க வைத்து விட்டு எழுந்து போனான்.

அவன் சுவருக்கருகில் போய் டேப்பைப் போட்டான். மந்திரஸ்தாயியில் அதிலிருந்து சிதார் வாத்தியம் கேட்டது அது காதிற்கு இனிமையாய் மனதை வருடினாற்போல இருந்தது. ரவிசங்கரன் திரும்பவும் வந்தான்.

'இப்படி உட்கார்!' உமாவைப் பிடித்துக் கொண்டு தலையைத் தன் தோளின் மேல் சாய்ந்தாற்போல உட்கார வைத்தான். மெதுவாய் விரல்களால் உமாவின் நெற்றிப் பொட்டை அழுத்தத் தொடங்கினான்.

உமாவுக்கு அவன் பணிவிடைகளை வேண்டாம் என்று சொல்லிவிடவேண்டுமென்றும், மறுக்கவேண்டும் என்றும் தோன்றிற்று.

'வேண்டாம் நீங்க போய் படுத்துக்குங்க. எனக்காக சிரமப்படவேண்டாம். மற்றவங்களுக்காக நீங்க எதுக்கு இவ்வளவு சிரமப்படணும்?'

அவன் பேசவில்லை. உமா ஆவேசமாய்ச் சொன்னாள்—

'எனக்குத் தெரியும். எங்கப்பா இந்தக் கல்யாணத்தைப் பண்ணி வைச்சு என் கழுத்தையும் உங்கக் கழுத்தையும் கூட அறுத்துட்டார். அவருக்கு ... அவருக்கு இன்னொரு பெண்ணின் வயிற்றெரிச்சலை வாங்கிக் கட்டிக்கிட்டோம்னு தெரியவில்லை...

உங்களுக்கு வசந்தி மேல் இஷ்டம்னு அப்பாவுக்குத் தெரியாது... என்னால் நன்றாய்ச் சொல்ல முடியும்.'

'உமா! இப்ப அதெல்லாம் எதுக்கு?'

'நான்...நான் எவ்வளவோ தடவை உங்களுக்கு இந்த விஷயத்தைச் சொல்லணும்னு நினைத்தேன்...ஆனால் சந்தர்ப்பமே கிடைக்கலை.'



'நீ தூங்குவதற்கு முயற்சிப் பண்ணு.'

'என் யோசனைகள் என்னைத் தூங்கவிடவில்லை.'

'சரி போகட்டும். அந்த மியூசிக்கைக் கேளு.'

'என் தலையெழுத்தே அதைவிட பெரிய மியூசிக்காய் இருக்கு.'

அவன் பதில் பேசவில்லை.

உமா கொஞ்சம் பொறுத்துச் சொன்னாள்—'நம்பத் திருமணம் ஆகி ரெண்டு வருஷமாயிடுத்து, ரெண்டு வருஷம்!'

உமா சிரித்தாள். 'ரெண்டு வருஷம் நான் உங்களோடு குடித்தனம் பண்ணினேன். மனம் இல்லாத உடலோடு. எவ்வளவு உயர்ந்த ஜாதகம் என்னோடது!'

'உமா, நான் போய் விடட்டுமா?'

'போங்கள். நீங்க இருப்பீங்கன்னு நான் ஆசைப் பட்டால் தானே வருத்தம் ஏற்படும்! போயிடுவீங்கன்னு எனக்குத் தெரியும். நன்றாய்த் தெரியும்! நான் செத்துப் போயிருந்தால் நீங்க எவ்வளவு சந்தோஷப்படுவீங்கன்னு கூட நன்றாய்த் தெரியும்.'

'உமா!' அவன் வார்த்தைகள் ஆக்ரோஷமாய் வந்தன. 'அப்படிச் சொல்லாதே! ப்ளீஸ் அப்படிச் சொல்லாதே!' வேதனையாய்ச் சொன்னான்.

'எங்கே, உங்கள் இதயத்தில் கை வைத்துக் கொண்டு அதைச் சொல்லுங்கள். இந்தச் சனியன் ஒழிந்ததுன்னு நீங்கள் சந்தோஷப்பட மாட்டீங்களா?'

'நான் இப்ப எதைச் சொன்னாலும் உனக்குப் பொய்யாய்த்தான் தோணும். நாம்ப அப்புறமாய் பேசிக்கலாம். நீ படுத்துக் கொள்!'

'உம்! நம்ப வாழ்க்கையில் இன்னமும் 'அப்புறம்' என்ற பேச்சுக்குக் கூட இடம் இருக்கா?'

ரவிசங்கரன் பேசவில்லை. உமா அழத் தொடங்கினாள். அந்த அழுகையில் ஆதரவின்மையும், அன்பும் நன்றாய்த் தெரிந்தன. 'நான் உங்களுக்குத் தேவையில்லைன்னு தெரியும்... நன்றாய்த் தெரிந்தும் இந்த ரெண்டு வருஷமாய் உங்களைப் பிடிச்சுட்டுப் போராடினேன். ஏன்? கௌரவத்திற்காக. இந்த கௌரவம் என்ற ஒன்றிற்காக அன்பையும் ரோஷத்தையும் கொன்று கொண்டேன்.'

'உமா!'

'முந்தாநாள் என் சிநேகிதி பிந்து வந்தாள். அவள் வசந்தி விஷயத்தைப்பற்றிக் கேட்டாள். நிஜந்தான்னு சொன்னேன். அவள்... அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'உமா,— உனக்கு வெட்கமேயில்லை! உன்னைப் பிடிக்காத ஆளுடன் குடும்பம் நடத்துகிறாயே! சீ, சீ! பெண்களுக்கே அவமானத்தை உண்டாக்குகிறாய்! இதைவிட சாவதே மேல்!' என்றாள். உண்மைதான்! சாவதே மேல்! ஆனால்— விரும்பியபோது அந்தச் சாவு கூட உங்களைப் போலவே என்னை விட்டு ஓடிப் போயிடுச்சு என்ன பண்ணுவேன்?'

'உமா, உமா, ப்ளீஸ்!' ரவிசங்கரன் சரேலென்று பாய்ந்து உமாவை அணைத்துக் கொண்டான். உமா அவனைத் தள்ளிவிட்டாள். ஆனால் அவன் உமாவை விடவில்லை.

'உமா, ப்ளீஸ் உமா! 'அவன் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

கட்டுத்தறியை அவிழ்த்துக் கொண்டு ஓடிய கன்றுக் குட்டியை அணைத்துக் கொண்டு, தடவிக் கொடுத்து



வழிக்குக் கொண்டு வர முயலும் ஆளைப் போல இருந்தான் அவன். கொஞ்ச நேரத்தில் உமா சோர்ந்து போய் அவனுக்குக் கட்டுப்பட்டுப் போனாள்.

அவன் எதுவும் பேசவில்லை. உமா அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவன் கைகளுக்கிடையே சுகமாய் இருந்தாற் போலிருந்தது! எவ்வளவு சுகமாய் இருக்கிறது! ஜென்மத்தில் ஒரே ஒரு தடவையாவது இந்த அனுபவம் கிட்டிற்று.

கொஞ்சமும் பிடிக்காத அவளுக்கே இவன் இவ்வளவு சேவை பண்ணுகிறானே! இவ்வளவு தேற்றுகிறானே! வசந்தியை இன்னும் எவ்வளவு நன்றாய்ப் பார்த்துக் கொண்டானோ? உமாவுக்கு ஒரு வினாடி அவனைப் பிடித்துத் தள்ளிவிட வேண்டும் போலிருந்தது. அவன் உமாவின் தலை மேல் கை வைத்துத் தடவிக் கொண்டிருந்தான்.

அந்த ஸ்பரிசம் மிகவும் சுகமாயிருந்தது உமா பட்ட துன்பங்களும் வேதனையும் அந்த ஸ்பரிசத்தால் கருகிப் போய் விட்டாற் போலிருந்தது உமாவுக்கு அந்த நேரத்தில் மேன்மேலும் தான் துரதிர்ஷ்டசாலி, தன்னைப் போன்ற துரதிர்ஷ்டசாலி இந்த உலகத்தில் வேறு யாருமே இல்லை என்று திடமாய்த் தோன்றத் தொடங்கியது.

❋ ❋ ❋

ஜெயபிரசாத்துப் வசந்தியும் பார்க்கில் நடந்து கொண்டிருந்தார்கள் அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. அன்று மத்தியானமே ஜெய்பிரசாத் வந்து விட்டான். பார்க்கத் தக்கபடி எந்த சினிமாவும் இல்லை. பார்க்கில் போய் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்போம் என்றெண்ணினார்கள். வசந்தியின் அக்கா புருஷன் ஊரிலில்லை. அதனால் அக்காவும் குழந்தைகளும் கூட வந்தார்கள் அவர்களோடு.

பார்க்கில் மரத்தடியில் குளிர்ச்சியாய் இருந்தது. குழந்தைகள் புல் வெளியில் விளையாடிக் கொண்டிருந் தார்கள். அக்கா தெரிந்தவர்கள் யாரோ தென்படவே, அவர்களோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

'கொஞ்ச தூரம் இப்படியே நடந்து போய் விட்டு வருவோமா?' என்றான் ஜெய்.

வசந்தி புறப்பட்டாள்.

இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். குழந்தைகள் கை கொட்டி ஆரவாரம் பண்ணியபடியே விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களையே உற்றுப் பார்த்த ஜெயபிரசாத் பெருமூச்செறிந்தான்.

'என்னவாச்சு?' கேட்டாள் வசந்தி.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த அவன் திடுக்கிட்டு வசந்தி பக்கமாய்த் திரும்பினான்.

'ஏன் அப்படி ஆழ்ந்து பெருமூச்சு விடறீங்க?'

'அந்தப் பசங்களைப் பாருங்க! அவர்களைப் பார்த் தால் வாழ்க்கையில் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு யாராவது எண்ணிட்டிருந்தால் அது தப்புன்னுதோணும்.'

'ஆமாம்! நீங்க வேலையில் செட்டிலாகிப் போய் இவ்வளவு நாளாயிடுத்தே! கல்யாணம் ஏன் பண்ணிக் கலை?' என்று கேட்டாள் வசந்தி.

'பண்ணிக்கிற யோகம் இல்லை.'

'ஏன்?'

'அது அப்படித்தான்.'

'காரணத்தை விவரமாய்ச் சொல்லக் கூடாதா?'



'ஏன் சொல்லக் கூடாது? உங்களுக்குக் கேட்கிறதுக் குப் பொறுமை வேணுமே தவிர! சில சமயம் நம்ப கஷ்டத் தைச் சொல்லிக்கணுங்கிற தவிப்பில் எதிராளியைப் போரடித்து விடுவோம். அதுதான் என் பயம்.'

வசந்தி சிரித்தாள்.

'இந்த மாதிரிப் பயம் ஒன்றும் வேண்டாம். சில சமயம் நம்ப வாழ்க்கை நமக்கே தாங்க முடியாத போராய் இருக்கும். எதிராளியின் பிரச்னையைக் கேட் டால் கொஞ்சம் ஆர்வம் ஏற்படும். சொல்லுங்கள்.'

'இங்கே உட்காருவோமா?' — கேட்டான் அவன்.

வசந்தி தலையாட்டினாள். இருவரும் உட்கார்ந் தார்கள். அவன் சொல்லத் தொடங்கினான்.

'நான் எங்க மாமாவிடம் வளர்ந்தேன். எங்கள் பொருளாதார நிலைமை சிறு வயதிலிருந்தே நன்றா யில்லை. அவர் எங்க மாமான்னு பேரே ஒழிய எங்கம்மா அவர் வீட்டில் வேலைக்காரியைப் போல இருந்து வந் தாங்க! மாமிக்கு எங்களைக் கண்டாலே பிடிக்காது. இளப்பம். ஒருக்கால் இந்த உலகத்தில் இல்லாதவங்க எல்லோருமே அது போல்தான் நடத்தப்படுகிறாங்களோ என்னவோ!

ஏனோ நம் சமூகத்தால் ஏழ்மையைப் பொறுத்துக்க முடியாது. எரிச்சலடையும். அம்மாவுக்குக் கணவன் இல்லை. நானோ சிறுவன். மாமாவின் நிழலைத் தவிர எங்களுக்கு இந்த உலகத்தில் போக்கிடம் இல்லை.

மாமாவுக்கு மகள் இருந்தாள். பெயர் சுஜாதா. அவள் மிக நல்லவள். அவள் ஒருத்திதான் எங்களை வெறுக்காதவள். சுஜாதாவுக்கு என் மேல் உயிர். எனக் கும் அவளைக் கண்டால் மிகவும் பிடிக்கும். நாங்களிரு வரும் எனக்கு வேலை கிடைத்ததுமே திருமணம்

பண்ணிக் கொள்வோம் என்று வாக்குறுதி பண்ணிக் கொண்டோம்.

என் வாழ்க்கையில் சிக்கனமாய் குடும்பத்தை நடத்தி என்னை எவ்வளவு மகிழ்ச்சியடையச் செய்வேன் என்று சுஜாதா எடுத்துச் சொல்லும்போது என் மனம் புல்லரிக்கும். இருவரும் குடும்பம், குழந்தைங்கள் என்று பல கனவுகள் கண்டோம்.

ஆனால் மாமா மாமியின் யோசனைகள் வேறுவிதமாய் இருந்தன. வேறு சம்பந்தம் பார்த்தார்கள். அவன் கலெக்டர். அவங்கப்பா பெரிய போலீஸ் ஆபீசர்! அவன் தங்கைகள் வெளிநாட்டில் இருந்தார்கள். ஆனால் சுஜாதா அவனைப் பண்ணிக்க மாட்டேன் என்றாள். என்னைத்தான் பண்ணிப்பேன் என்றாள்.

மாமா என்னைக் கூப்பிட்டுக் கண்டபடி திட்டினார். உண்ட வீட்டிற்கு துரோகம் பண்ண வேண்டாம்என்றார். மாமியோ கேட்கவே வேண்டாம். நான் சொத்துக்காக சுஜாதாவை வலையில் போட்டுக் கொண்டிருக்கிறேன் என்றாள் என்னைக் கண்டபடி திட்டினாள். மாமா சுஜாதாவை அந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளும் படிச் செய்யச் சொன்னார் என்னிடம். அம்மா கூட இதைக் அழத் தொடங்கினாள். சுஜாதாவை அந்த கலெக்டர் பையனை மணக்கும்படிச் செய்து விட்டால் தான் விஷம் அருந்தி செத்துவிடுவேன் என்றாள். நான் யோசித்தேன். மாமி சொன்னதும் நிஜந்தான். என்னைப் பண்ணிக் கொண்டுசுஜாதா என்னத்தைச் சுகப்பட்டு விடுவாள்? அந்த கலெக்டர்பையனைப்பண்ணிக் கொண்டால் வாழ்க்கை பூம்படுக்கையாய் இருக்கும்.

என்னைப் பண்ணிக் கொண்டால் எல்லா விதத்திலும் வறுமைதான். சுஜாதாவின் மேல் எனக்குப் பிரியம். அவள் சுகப்படவேண்டுமென்றால் என்னால் அவ்வளவு தியாகம் கூடவா பண்ணமுடியாது?



காதல் என்றாலே தியாகந்தான் என்று தோன்றிற்று. அவ்வளவு யோசித்த நான் சுஜாதாவை அந்தக் கல்யாணத்தைப் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தினேன். அவள் தாய் தந்தையரை விரோதித்துக் கொண்டு நம்மால் சுகப்பட முடியாது என்றேன்.

சுஜாதா என்ன சொன்னாள்?'

'என்னை நன்றாய்த்திட்டினாள். நான் கையாலாகாதவன் என்றாள். கோழை என்றாள் தன்னை எங்கேயாவது அழைத்துக் கொண்டு போய் மணந்துக் கொள்வதை விட்டு விட்டு வீண் வார்த்தை பேசுவதாய் இடித்துரைத்தாள். இனி ஜென்மத்திலும் என் மூஞ்சியைப் பார்க்க மாட்டேன் என்றாள். என்னைக் காதலித்தது தான் அவள் பண்ணிய பெரிய தப்பு என்றாள்.'

'அப்புறமாய் என்னவாச்சு?'

'சுஜாதாவின் திருமணம் அந்த கலெக்டர் பையனுடன் நடந்து முடிந்தது.'

சுஜாதா அப்புறமாய் உங்களோடு பேசினாளா.?

'ஊஹூம். ஒரு வருஷம் வரை பேசவேயில்லை. என்னைப் பார்த்தாலே வெறுத்து ஒதுங்கினாள். அந்த கலெக்டருக்கு வேறு ஊருக்கு மாற்றலாயிடுத்து. ரெண்டு வருஷங்கழித்துப் பிறந்த வீட்டிற்கு வந்தாள். ரெண்டு குழந்தைங்கள். இப்ப என்னோடு பழைய சிநேகத்தைப் பற்றியே மறந்து போய் விட்டாள். என்ன வேடிக்கை என்றால் இப்ப என்னோடு மிக அன்பாய்ப் பேசுகிறாள்.

கல்யாணம் ஏன் பண்ணிக்க மாட்டேங்கிறாய் என்று உயிரை எடுக்கிறாள் அதோடு தான் வாழ்நாளெல்லாம் எனக்கு நன்றியோடிருப்பாளாம். நான் அவளுக்கு அவ்வளவு நல்லது பண்ணிட்டேனாம். அவள் கணவர் மிக நல்லவராம்.

வாழ்க்கையில் காதல் என்பது கன்னிப் பெண் ஒருத்தி காணும் கனவு தானாம்! நடைமுறைக்கு வந்துட்டால் அக் கனவு வெண்ணையாய் உருகிப்போய் விடுமாம். எப்பப் பார்த்தாலும் அவள் கணவன் குழந்தைகள் பற்றிய பேச்சுதான்.'

'உங்களுக்கு இப்போது என்ன தோன்றுகிறது?'

'என்னவோ வசந்தி?' என் மனதைப் பற்றி எனக்கே புரியமாட்டேங்குது.' அப்ப தியாகம் பண்ணியதாய் நினைத்து மகிழ்ச்சியடைந்தேன். இப்ப சுஜாதா அதுபோல கணவர் குழந்தைங்களோடு சந்தோஷமாய் இருப்பதைப் பார்த்தால் எதையோ இழந்துட்டாற் போலிருக்கு.

சுஜாதா எனக்குக் கிடைக்கவில்லையே என்ற வருத்தத்தால் வாழ்நாளெல்லாம் கல்யாணமே பண்ணிக்கக் கூடாதுன்னு இருந்தேன். சுஜாதா சந்தோஷமாய் இருக்கிறாள்.

என்னைப்பற்றியே மறந்து விட்டால்' நான் மட்டும் ஏன் இப்படி தனியாய் இருக்கணும்னு தோணுகிறது.

'நீங்க கல்யாணம் பண்ணிக்குங்க.'

'அதுகூட அவ்வளவு எளிதுன்னு படலை. எனக்குப் பிடித்தப் பெண் கிடைக்கணும். அந்தப் பெண்ணுக்கு என்னைப் பிடித்திருக்கணும்.

இந்த சுஜாதா விஷயம் தெரிந்தால் பொறாமைப்பட்டு என் வாழ்க்கையை நரகமாக்காமல் என்னைப் புரிந்து கொள்ளக்கூடிய பெண்ணாய் இருக்கணும். புரிந்துக்கா விட்டால் கூடப் பரவாயில்லை. என்னை இந்த நிராசையிலிருந்து மீட்கக்கூடிய பெண்ணாய் இருக்கணும். அப்படிப் பட்டப் பெண்ணைத் தேடி அலைவது பேராசையாகவும்



தோணுகிறது. என்னால் எந்தப் பெண்ணோடாவது சிநேகம் பண்ண முடியுமே யன்றிக் காதலிக்க மட்டும் முடியாது.'

வசந்திக்கு அவன் மனக் குமுறல் நன்றாய்ப் புரிந்தது.

வசந்தியின் அக்கா கூப்பிட்டாள்: 'வசு, வீட்டுக்குப் போகலாமா?'

வசந்தி எழுந்திருந்தாள். ஜெயபிரசாத்தும் எழுந்திருந்தான். வசந்திக்கு அவனைப் பற்றிப் புரியத் தொடங்கிற்று. இந்தச் சிரிப்பும் ஜோக்குகளும் ஒரு மேற்பூச்சுதான். ஜெயபிரசாத்திற்குள் கம்பீரமான ஒரு ஆள் ஒளிந்திருக்கிறான். அந்த ஆளுக்கு வாழ்க்கையைப் பற்றி சீரியஸாய் யோசிக்கும் குணம் உண்டு.

வீடு திரும்பினார்கள். சாப்பிட்டுவிட்டுப் படுத்தார்கள். ஏனோ வசந்திக்கு உறக்கம் வரவில்லை. இரவு பதினோரு மணி ஆயிற்று. வசந்தி படுக்கையில் அப்படியும் இப்படியுமாய்ப் புரண்டு கொண்டிருந்தாள். அதற்குள் போன் மணியடித்தது. வசந்தி திடுக்கிட்டு விட்டாள்.

இந்த அர்த்த ராத்திரி வேளையில் ரவிசங்கரனைத் தவிர வேறு யாருமே போன் பண்ண மாட்டார்கள்.

சரேலென்று கட்டிலை விட்டு இறங்கி, பரபரப்போடு போனை எடுத்து மார்பு படபடக்க, 'ஹலோ!' என்றாள்.

'ஹலோ வசந்தி தானே?' ஜெயபிரசாத் குரல்.

'ஆமாம்!' அவன் குரலைக் கேட்டதும் சாதாரணமாகி விட்டாள்.

'சாரி, டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?'

'இல்லை.'

'நீங்க தூக்கம் வராமல் தவிக்கிறீங்கன்னு உங்கள் குரல் சொல்லுகிறது' என்றான் அவன். அந்த வியாக்கியானத்தைக் கேளாதது போலவே பேசாமலிருந்தாள்.

'சொல்லுங்கள், என்ன விஷயம்?'

'ஒன்றுமில்லை. எனக்குத் தூக்கம் வரவில்லை. உங்களுக்குப் போன் பண்ணினேன். சாயந்திரம் பார்க்கில் மனம் விட்டு என் கதையை யெல்லாம் உங்களுக்குச் சொன்னபிறகு என் மனதிலுள்ள பாரம் குறைந்துவிட்டாற் போலிருக்கு. நீங்க...நீங்க எனக்கு ரொம்பவும் நெருங்கியவராய்த் தோணுகிறீங்க.'

அவன் குரல் ஏதோ போலாயிற்று. 'இதப் பாருங்க, எனக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் யுத்தத்திற்குப் போனான். இறந்து விட்டான். எனக்கு இப்பொழுது தோணுகிறது — ஒரு முறை கைவிட்டுப் போய்விட்டால் காதலைத் திரும்பத் திரும்பப் பெற முடியாது என்று. ஆனால் சிநேகத்தைப் பெற முடியும் இல்லையா?'

'என்னவோ, தெரியாது'—அவள் முணுமுணுத்தாள்.

'உங்களுக்குத் தெரியாதுன்னு எனக்குத் தெரியும். நான் சொன்னது என்னைப் போல அனுபவம் அடைந்தவங்களுக்கு மட்டுந்தான் புரியும். குட்நைட்!'

'குட்நைட்.'— வசந்தி போனை வைத்துவிட்டாள். வந்து படுத்தாள். அவனுக்கு அவளைப்பற்றியும் ரவிசங்கரனைப் பற்றியும் தெரியுமா? தெரியாதா? தெரிந்தாலும் பரவாயில்லை. தெரியாவிட்டாலும் பரவாயில்லை. வசந்தி பெருமூச்செறிந்தாள்.

வசந்தியின் மனம் பாராகிவிட்டது. ஜெயபிரசாத் வந்ததால் கொஞ்சமாவது அவளுக்குப் பொழுதுப் போய்க் கொண்டிருந்தது இல்லாவிட்டால் நாட்கள் எவ்வளவு பாரமாய் இருந்திருக்குமோ! மேற்கூரையைப் பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்தாள். தூக்கம் வரவில்லை.

❀ ❀ ❀



உமா படுக்கையறைச் சுவரைப் பிடித்துக் கொண்டு தொண்டி தொண்டி நடந்தபடி கட்டிலை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அதற்குள் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிவிட்டது. கண்கள் பஞ்சடைந்தாற் போலாகவே, 'ஐயோ' என்று கைகளால் கண்களை மூடிக்கொண்டாள். கால்கள் வெடவெடத்ததால் நிற்க முடியாமல் உட்கார்ந்து விட்டாள். சொல்ல முடியாத அசதி. எழுந்தால் உயிர் பறந்து போய் விடும் போலிருந்தது. எப்பொழுது தான் அவளால் பழையபடி ஆக முடியுமோ?

திரும்பவும் பழைய உமாவாய் அவளால் மாற முடியுமா? ஊஹூம், முடியாது. அந்தப் பிடிவாதம், துடுக்குத்தனம் இனி அவளிடம் பெயரளவிற்குக்கூட இருக்கவே இருக்காது.

அதற்குள் உமாவின் தோளில் யார்கையோ படிந்தது. கண்களைத் திறந்துப் பார்த்தாள். எதிரே ரவிசங்கரன் நின்று கொண்டிருந்தான்.

'தலைச் சுற்றுகிறதா?' —கேட்டான். ஆம் என்று தலையாட்டினாள்.

அவன், உமா எழுந்து நிற்க உதவி செய்தான். தோளைப் பிடித்துக் கொண்டு அழைத்து வந்து கட்டிலில் உடகார வைத்தான் உமா ஆயாசத்துடன் மூச்சிறைக்க உட்கார்ந்தாள். ரவிசங்கரன் போய் தம்ளரில் தண்ணீர் கொண்டு வந்தான்.

'இந்தா இதைக் குடி. குடித்தால் கொஞ்சம் சக்தி வரும்.'

உமா கண்களைத் திறந்துப் பார்த்தாள். ஆனால் தண்ணீர் தம்ளரை அவள் கண்கள் பார்க்கவில்லை. தம்ளரைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்த ரவிசங்கரனின் கை விரல்களையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன.

'குடி!' அவன் வார்த்தைகளில் என்ன மகத்துவம் இருந்ததோ, தெரியாது. உமாவுக்கு அழுகை வந்து விட்டது. உதட்டை இறுக்கிக் கொண்டு, துக்கத்தை அடக்கி,' வேண்டாம்' என்று தம்ளரைக் கையால் தள்ளினாள்.

'குடி... குடித்தால் கொஞ்சம் பலம் வரும்.'

உமா முறைத்துப் பார்த்தாள். பற்களைக் கடித்துக் கொண்டே சொன்னாள்—

'பலத்தைப் பெற்று நான் இப்பொழுது என்ன பண்ணணும்? இப்படிக் கட்டிலோடு படுத்துக்கிடந்தாலே தேவலை!'

'உமா!'

உமாவின் கண்களில் ஜில்லென்று கண்ணீர் பிறிட்டது.

'உயிரே போயிருக்கணும். போயிருந்தால் நன்றாயிருந்திருக்கும். குறைந்த பட்சம் உயிர் போகாவிட்டாலும்— அப்பொழுது... அப்பொழுது நொண்டியாய் என்னை யாருமே கலனிக்க மாட்டாங்க. அந்த திருப்தியாவது இருந்திருக்கும். அதனால்தான் எனக்கு அந்த அதிர்ஷ்டம்கூட கிடைக்க வில்லை.

'பின்னே இதென்ன அநியாயம்? கொஞ்சம் அடிபட்டதுமே எத்தனைப் பேர் உயிரையே இழந்திருக்காங்க! இவ்வளவு அடிப்பட்டும் கூட நான் என்ன இப்படிக் கல்லாய் இருக்கேனே! எத்தனை துரதிர்ஷ்டம்! எனக்குத் தெரியும், இன்னும் நான் அனுபவிக்க வேண்டியது நிறைய இருக்கு...'

'ஏன் அப்படிச் சொல்கிறாய்? — துக்கத்தை அடக்கிக் கொண்டவனாய்க் கேட்டான் அவன்.



'உங்களை நான் ஒன்றும் சொல்லலை. என் துரதிர்ஷ்டத்தை நான் நிந்தித்துக்கொள்கிறேன். போங்கள் எனக்கு நன்றாய் குறைந்து விட்டது நீங்க ஆபீசுக்குப் போங்கள்.'

'உமா!'

'போங்க, ப்ளீஸ், போயிடுங்க. உங்களுக்குத்தான் சொல்றேன். எனக்கெதிரே நின்னுட்டு சித்திரவதைப் பண்ணாதீங்க என்னை. நான்கு நாளாய்ப் பார்த்துட்டேயிருக்கேன். நல்லவரைப் போல நீங்க போட்டுட்டிருக்கிற இந்த வேஷம் எனக்குத் தாங்க முடியாத ரோதனையாய் இருக்கிறது. நீங்க ஏன் இப்படி நடிக்கிறீங்கன்னு எனக்குத் தெரியும். நான் சொல்றேன், நான் பட்ட வேதனைகளுக்கு முன்னால் இந்த காயங்களின் உபாதை ஒன்றும் வேதனையாகவே இல்லை எனக்கு. எல்லாம் உங்க இஷ்டபிரகாரமே நடக்கும். போதுமா? நீங்க அதற்காக வேற்று மனுஷர் வேஷம் போட்டுட்டு என் கண்முன்னாடி நிற்க தேவையில்லை. இவ்வளவு நாளாய் நான் உங்களை ஏன் மதித்து வந்தேன் தெரியுமா? நீங்கள் என்னிடம் எதையும் மறைக்கவில்லை. என் மேலிருந்த வெறுப்பை நீங்கள் கடுகளவு கூட மறைத்து வைக்கவில்லை உங்கள் மனதில்.'

'உமா!'

'என்னை அந்தப் பேரில் கூப்பிடாதீங்க. எனக்கு வேண்டியவங்களும், நெருக்கமானவங்களும் மட்டுமே அந்தப் பெயரில் அழைப்பது வழக்கம். உன் தலையெழுத்து என்று என்னை ஒதுக்கிவிட்ட நீங்கள் இனி என் ஜோலிக்கு வருவானேன்? நான் எப்படிச் செத்தொழிந்தால் உங்களுக்கென்ன?' உமா தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

'எனக்கு யார் இருக்காங்க? நான் யாருக்கு வேண்டும், யாருக்குமே தேவையில்லை!'

உமா அழத் தொடங்கினாள்.

ரவிசங்கரன் அங்கிருந்து மெதுவாய் வெளியே வந்துவிட்டான். அறையிலிருந்து உமாவின் அழுகுரல் கேட்டுக்கொண்டேயிருந்தது.

அந்த அழுகை அவன் இதயத்தைக் கூரிய கத்தியால் கிறினாற்போலிருந்தது. அவனுக்கு உடனே போய் உமாவைத் தேற்றவேண்டும் போலிருந்தது. ஆனால் உமா அவன் ஸ்பரிசம் பட்டாலே முறுக்கிக் கொண்டு விடுவாள் போலிருந்தது. என்ன பண்ணுவது?

அவனுக்கு இந்த ஒருவார காலத்தில் அழகிய கனவுகளிலிருந்து திடீரென்று அதளபாதாளத்தில் விழுந்துவிட்டாற்போலிருந்தது. இவ்வளவு நாளாய் அவன் உமாவை திருமணம் பண்ணிக் கொண்டிருந்தாலும், வசந்தியுடன் மனத்தளவில் கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.

உமாவின் விபத்து அவனுக்கு ஒரு புதிய விஷயத்தை எடுத்துச் சொல்லிற்று. உமாவை அவன் அளவுக்கு மீறிந் துபுறுத்திக் கொண்டிருக்கிறான். இது அவன் குற்றமில்லையா? 'இதில் நான் பண்ணிய தப்பு என்ன?' என்று உமா புலம்பியபடி அழுததைக் கேட்டு, அவன் அதிர்ச்சியடைந்து விட்டான்.

உண்மையே! உமாவின் தப்பு எது? அவன் மனதில் இருபத்திநான்கு மணி நேரமும் இதே கேள்வி குடைந்துக் கொண்டிருந்தது.

அவன் இவ்வளவு நாளாய் எவ்வளவு சுயநலமாய் யோசித்து வந்திருக்கிறான்! தன் சுகத்தை மட்டும் தான் பார்த்துக் கொண்டான் இன்னொரு நபரைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்ததைப் பற்றி யோசித்துப் பார்க்கவேயில்லை மைகாட்! அவனா இக்காரியத்தைப் பண்ணினான்? அவனுக்குக் குழப்பமாகவும் தத்தளிப்பாகவும் இருந்தது.



மனம் சுகத்தைக் கோரியது. வசந்தியிடம் நெருக்கமாய் இருப்பது தப்பில்லை என்றது. ஆனால் அந்தராத்மா உலுக்கி எடுத்தது. அறியாதவர்களுக்கு அநியாயம் இழைப்பதைவிட மோசமாது குற்றம்வேறில்லை என்றது.

வராந்தாவில் நின்றுகொண்டிருந்த ரவிசங்கரனிடம் வந்தாள் காமாட்சி. அவள் கையில் சின்ன கிண்ணத்தில் பாலில் செய்த கேரட் அல்வா இருந்தது. அவள் மகனைப் பார்த்ததும்

'ரவி! உமா ஒரேயடியாய் ஒன்றுமே சாப்பிடுவதில்லைப்பா. நான் கொண்டு போய்த் தந்தால் 'அங்கே வையுங்க' என்கிறாள். ஆனால் அப்புறமாய்ச் சாப்பிடுவதில்லை அது அப்படியே இருக்கும். சாப்பிடச் சொல்லிப் பலவந்தப்படுத்தினால் 'எனக்குப் பிடிக்கலை, சாப்பிடமாட்டேன்' என்கிறாள்.'

அவள், கிண்ணத்தை ரவிசங்கரன் கையில் தந்தாள்.

'நீ போய் கொடுப்பா! உன் பேச்சைத் தட்டமாட்டாள். ஒருக்கால் மறுத்தாலும் திருப்பிச் சொல்லக்கூடியவன் நீ' என்றாள். அதற்குள் மகள் கூப்பிட்டதால் அவள் உள்ளே போய்விட்டாள்.

ரவிசங்கரன் தன் கையில் தாய் வைத்துவிட்டுப்போன கேரட் அல்வா இருந்த கிண்ணத்தைப் பார்த்தான். பிறகு திட சங்கல்பத்துடன் உமா இருந்த அறைக்குள் நுழைந்தான். உமா காலடியோசை கேட்டும் திரும்பிப்பார்க்கவேயில்லை. சூனியத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்

'உமா!' அவன் கூப்பிட்டான்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

'கேரட் அல்வா கொண்டு வந்திருக்கேன், சாப்பிடு.'

'எனக்குப் பசிக்கலை.'

'சாப்பிட்டால் பசி தானே வரத்தொடங்கிவிடும்.'

உமா பதில் பேசவில்லை.

அவன் வந்து கட்டிலில் ஓரமாய் உட்கார்ந்துகொண்டான்.

உமா ஒதுங்கிக் கொண்டாள். அவன் ஸ்பூனில் எடுத்தான்.

'எனக்குப் பசிக்கலைன்னு சொன்னேனே!'

'நீ பொய் சொல்றாய்'னு தெரியும் எனக்கு. பார் கோபம் யார் மீதாவது வந்தால் அவங்க மேல்தான் தீர்த்துக்கணும். ஒருத்தர் மேல் கோபம் வந்தால் இன்னொருத்தர் மேல் காட்டக்கூடாது. அது ரொம்ப அநியாயம்.'

'இப்ப நான் யார் மேல் கோபத்தைக் காட்டினேன்?'

'என் மேல் உனக்கு வந்த கோபத்தை உன் மேல் காட்டிக்கிறாய்.'

உமா சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

'இதப்பார்! மனிதன் என்றால் தப்புப் பண்றது சகஜந்தான். நான் ஒன்றும் அதீதமான ஆள் அல்ல. சாதாரணமான ஒரு மனுஷன். வா, சாப்பிடு, ப்ளீஸ்?'

அதற்குள் அங்கு காமாட்சியும் வந்து விட்டாள்.

'சாப்பிடும்மா உமா, என் கண்ணில்லையா?'

'சாப்பிடுவாள். சாப்பிடாவிட்டால் இந்த வீட்டில் இனியாருமே பச்சைத் தண்ணியைக்கூட பல்லில் விட்டுக் கொள்ளப் போவதில்லை' என்றான் ரவிசங்கரன்.



'ஐயோ! என்ன இது!'

'அது அப்படித்தான்!'

உமா பலவந்தத்தின் பேரில் சாப்பிட்டாள். தானே வாங்கிச் சாப்பிட முயன்றபோது ரவிசங்கரன் கிண்ணத்தைத் தரவில்லை. தானே வாயில் தந்தான்.

'எனக்குக் குறைந்து விட்டது. இனி நீங்க ஆபீசுக்குப் போங்க' என்றாள்.

'உனக்குக் குறைந்துடுத்துன்னு நீ சொல்லத் தேவையில்லை. நானே தெரிந்து கொண்டதும் போவேன். போதுமா? ஆபீசுக்குப் போகாவிட்டால் மட்டும் என்ன? போன் தான் இருக்கே! போனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துட்டால் உலகம் பூராவும் நம்பளிடம் வந்துடும்.'

'நீங்க வெளியே போய் ஒரு வாரமாகிறது'

'என்னைப்பற்றி யோசிப்பதை விடு. உன்னைப்பற்றி யோசி.'

அவன் மருந்தைக் கொண்டு வந்து தந்தான். உமா சாப்பிட்டாள்.

அன்று மத்யானம் உமாவுக்குப் பத்தியம். ரவிசங்கரன் தானே சாப்பிடச் செய்தான். குழந்தைகள் எல்லோரும் அவர்களைச் சூழ்ந்துக் கொண்டுவிட்டார்கள். உமாவும் ரவிசங்கரனும் கேரம்போர்டு ஆடினார்கள். ரவிசங்கரன் தோற்றுப் போனதைப் பார்த்துக் கைத்தட்டிச் சிரித்தார்கள். குழந்தைகள் பள்ளியில் நடித்த டிராமாவை நடித்துக் காட்டினார்கள்.

ரவிசங்கரன் உமா, காமாட்சி மூவரும் பார்த்தார்கள். உமா பக்கென்னுச் சிரித்தாள். சிரித்த அவனையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

சாயந்திரம் ஆயிற்று. ரவிசங்கரன் உமாவுக்கு மருந்து கொடுத்தான். 'இங்கே உட்கார்ந்திருந்தால் போரடிக்கிறதா? அங்கே வராந்தாவுக்குக் கூட்டிட்டுப் போகட்டுமா?' என்றான். உமா தலையாட்டினாள். வேலைக்காரன் நாற்காலிகளைக் கொண்டு வந்து போட்டான். ரவிசங்கரன் உமாவை பிடித்துக் கொண்டே அழைத்து வந்து நாற்காலியில் உட்கார வைத்தான்.

ரேடியோவைப் போட்டான். எதிரே புல் தரையில் குழந்தைகள் ஸ்கிப்பிங் விளையாடிக்கொண்டிருந்தார்கள். இடையிடையே, 'அண்ணி' என்று கூப்பிட்டு ஏதோ சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். தேநீர் வந்தது.

ரவிசங்கரன் உமாவைத் திரும்பவும் பலவந்தமாய் ஹார்லிக்ஸ் குடிக்கச் செய்தான் உமா குடித்தாள்.

அவன் அறையிலிருந்து சால்வையைக்கொண்டு வந்து உமாவின் தோளைச்சுற்றிப் போர்த்தினான். உமா நிமிர்ந்து பார்த்தாள். அக்கண்களில் வியப்பும் ஈரமும் பளபளத்தன. 'அசட்டுப் பெண்!' என்றெண்ணிக் கொண்டான் அவன். அவனுக்கு உமாவை அதுபோல ஆரோக்கியத்துடன் திரும்பிப் பார்ப்பது சந்தோஷமாய் இருந்தது.

திரும்பத் திரும்ப அந்த பயங்கர ஆக்ஸிடென்ட் பற்றியே நினைவிற்கு வந்துகொண்டிருந்தது. அவன் உடல் சிலிர்த்தது! உமா பிழைத்தது உமாவின் அதிர்ஷ்டமில்லை. அவன் அதிர்ஷ்டம் என்றுதான் நினைக்கத்தோன்றியது. வாழ்நாள் பூராவும் அவன் அனுபவிக்க வேண்டியிருந்த ஒரு நரகவேதனையிலிருந்து மயிரிழையில் தப்பித்தான்.

அதற்குள் ஆபீசிலிருந்து போன் வந்தது. அவன் போய் பேசத் தொடங்கினான். சுழல் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டு, அப்படியும் இப்படியும் சுற்றிக் கொண்டே போனில் பேசிக்கொண்டிருந்த அவன், தொலைவில் தென்பட்ட உமாவையே பார்த்துக் கொண்டிருந்தான். போனில் பேசி விட்டு; லெட்டர்களை டிக்டேட் பண்ணி விட்டு வெளியே வந்தபோது இருட்டத் தொடங்கியிருந்தது.



குழந்தைகள் தொலைவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தாய் சமையலறையில் எங்கேயோ இருந்தாள். உமா நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் ரேடியோ சன்னமான குரலில் பாடிக் கொண்டிருந்தது.

'ரவிசங்கரன் ரேடியோவை அணைத்து விட்டு, உமாவின் கழுத்திற்குக் கீழேயும் முழங்காலுக்குக் கீழேயும் கைகளைப் போட்டுத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தான். மருந்தின் மயக்கத்தில் உறக்கத்தில் ஆழ்ந்து போயிருந்த உமா, கண்களைத்திறந்தாள். திறந்த வேகத்திலேயே அவை பாரமாய் மூடிக்கொண்டன. தலையை அவன் மார்பில் அழுத்திக் கொண்டு கண்களை மூடிக்கொண்டாள்.

ரவிசங்கரன் உமாவை அழைத்து வந்து படுக்கையில் படுக்க வைத்தான். போர்வையைப் போர்த்தினான். விளக்கை அணைத்தான். விடி விளக்கைப் போட்டான்.

எட்டு மணிக்கு பலவந்தமாய் எழுப்பி ஹார்லிக்ஸைக் குடிக்கச் செய்து, மருந்து கொடுத்துவிட்டுப் படுக்கச் செய்தான். உமா அடித்துப் போட்டாற்போல உறங்கிக் கொண்டிருந்தாள். ரவிசங்கரன் பக்கத்திலேயே ஸ்டூலின் மேல் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். அவன் மனம் இன்னும் கலக்கத்தில் இருந்தது.

ஒரு நாள் நடு இரவில் உமா அழுதுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

'உமா! உமா!' அவன் அவள் கையில் தட்டினான். உமா விழிப்பு வந்து கண்களைத் திறந்துப் பார்த்தாள்.

'நீங்க இங்கே தான் இருக்கீங்களா? என்னை விட்டுட்டுப் போயிட்டீங்களாம். கனவு வந்தது' என்றாள் தீனமாய் பார்த்துக் கொண்டே.

அவன் எழுந்து வந்து கட்டிலில் உட்கார்ந்துக் கொண்டு உமாவை இழுத்து அணைத்துக் கொண்டான். உமா அவனைச் சந்தேகமாய்ப் பார்த்தாள்.

'உன்னை விட்டுவிட்டு நான் எங்கேயும் போக மாட்டேன் போதுமா? படுத்துக்கொள். தூங்கு' என்றான் உமா இன்னும் அவநம்பிக்கையுடனேயே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் உமாவை அருகே இழுத்துக் கொண்டு அவள் தலையைத் தன் தோளில் மேல் சாய்த்துக் கொண்டான்.

'இது... இது நிஜந்தானா?'

'எது?'

'நான் உங்களுக்கு நெருக்கமாய் இருப்பது.'

'நிஜந்தான். தூங்கு' என்றான் அவன்.

உமா கொஞ்ச நேரத்தில் தூங்கிவிட்டாள். ரவிசங்கரனுக்குக் கூட உறக்கம் வந்தது. அவன் தலையணையைப் பின்னுக்குச் சாய்த்து வைத்துக்கொண்டான். அடுத்த நிமிஷம் உறக்கம் ஆட்கொண்டது.

அவனுக்கு விழிப்பு வந்த போது மார்பின் மேல் கனமாய் இருந்தது. பார்த்தால் உமா ஒதுங்கிப் படுத்துக் கொண்டிருந்தாள். அவன் திடுக்கிட்டுப் பார்த்தான். உமாவை மெதுவாய் நகர்த்தி, தலையணை மேல் படுக்க வைத்துவிட்டு, எழுந்து அப்பால் வந்தான்.



வராந்தாவிற்கு வந்த அவனுக்குக் குளிர்ந்த காற்று முகத்தில் பட்டது. வானத்தில் பிறைச் சந்திரன் தென்பட்டான். அதைப் பார்த்ததுமே வசந்தி நினைவிற்கு வந்தாள். அவன் மனம் வலித்தது. அது மெல்லியக் கயிற்றால் கழுத்தை நெறிக்கும்போது ஏற்படும் வலியைப் போன்றது!

ரவிசங்கரன் மனம் நிறைந்துக் கொண்டிருந்தது. அவள் நிசப்தமாய், மௌனமாய் யாருக்கும் தெரியாமல் அத்துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருந்தாள். அவள் மனதுதான் எவ்வளவு துன்பத்தில் தோய்ந்திருந்ததோ! அவன் இவ்வளவு நாளாய் போன் பண்ணவில்லை என்று வசந்தி எவ்வளவு வருந்திக் கொண்டிருக்கிறாளோ!

மாலையில் ஜெயபிரசாத் போன் பண்ணினான். அவனும் வசந்தியும் சேர்ந்து நேற்று சினிமாவுக்குப் போனார்களாம். வசந்தி வருந்திக் கொண்டிருக்கிறாள். அது அவனுக்குத் தெரியும் அவனும் வருந்திக் கொண்டிருக்கிறான். அது வசந்திக்குத் தெரியுமா என்று தோன்றியது அவனுக்கு.

* * *

வசந்தி கால்வாய் கரையில் நடந்து கொண்டிருந்தாள். அக்கரையில் ரவிசங்கரன் தென்பட்டான். வசந்தி நீரில் இறங்கி அவனை நோக்கி வரவேண்டுமென்று பார்க்கிறாள். அவன் நீர் ஆழமாய் இருக்கிறது வர வேண்டாம் என்று சொல்லுகிறான். வசந்தி நீரில் இறங்கும் முயற்சியை விட்டுவிட்டு, திரும்பவும் கரையை ஒட்டியே நடக்கிறாள். அவ்வாறு முன் நோக்கிப் போனால் கால்வாயின் அகலம் குறைந்துப் போய்விடும் என்றும் ஆழம் இருக்காது என்றும், ரவிசங்கரனை நெருங்குவது சுலபம் என்றும் தோன்றுகிறது வசந்திக்கு. ஆனால் வசந்தி

நினைத்தாற்போல நடக்கவில்லை. வரவர அக்கால்வாய் இன்னும் அகலமாகிக் கொண்டே வரத் தொடங்கிறது.

நீர் கரையையொட்டி சளசளவென்று ஓடிக் கொண்டிருந்தது. வசந்தி பயந்தாள். மறுகரையில் மரங்கள் அடர்த்தியாய் இருந்ததால் ரவிசங்கரன் கண்ணுக்குத் தென்படவில்லை. வசந்திக்கே பயமாயிருந்தது. தன்னந் தனியளாகி விட்டாற் போலிருந்தது திகிலாயிருந்தது. ஐயோ! அவள் தான் எவ்வளவு முட்டாள் தனமான காரியம் பண்ணிவிட்டாள். அவ்விடத்திலேயே துணிந்து கால்வாயைத் தாண்டியிருந்தால் ரவிசங்கரனை போய்ச் சேர்ந்திருக்கலாமே. அவள் கோழைத்தனமே அவனை அவனிடமிருந்து பிரித்து விட்டது; தூரமாக்கி விட்டது. வசந்திக்கு அழுகை வந்தது.

அந்தப்பக்கத்தில் ரவிசங்கரனையும் கோட்டை விட்டு விட்டாள். இந்தப் பக்கத்தில் வீட்டையும் விட்டுத் தனியாய் வந்து விட்டாள். தொலைவில் ஒரு வீடு தென்பட்டது அங்கே வீட்டிற்கு முன்னால் கயிற்றில் பேண்ட்டுகளும் ஷர்ட்டுகளும் காயப் போட்டிருந்தன. வசந்தி அந்த வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். தான் வழிதவறி வந்து விட்டதை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். அவர்கள் உதவியோடு திரும்பவும் தன் வீட்டிற்குப் போய்ச் சேர வேண்டும்— என்றெண்ணிக் கொண்டாள். மண்ணில் பாதத்தை எடுத்து வைப்பதே சிரமமாயிருந்தது.

வசந்திக்கு அழுகை வந்தது. அது அவள் தன்னந்தனியாய் இருந்ததற்கு இல்லை. இதென்னது. ரவிசங்கரன் தன்னை இப்படி விட்டுவிட்டுப் போய் விட்டானே! அவனுக்குத் தான் தேவையில்லையா?

அவள் மீதிருந்த விருப்பம் குறைந்து விட்டதோ? வசந்தியால் அழுகையை அடக்க முடியவில்லை. அழுது



கொண்டே துணிகளை உலர்த்தியிருந்த அந்த வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

சீ! சீ! அவள் ஒன்றும் சின்னப் பெண் இல்லை அழக் கூடாது என்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளப்போய் அழுகை இன்னும் வலுத்தது.

'வசந்தி! வசந்தி! இதென்னது, ஏன் அழுகிறாய்?'

அக்கா தட்டி எழுப்பினாள். வசந்தி திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள்.

'கெட்டக் கனவு ஏதாவது வந்ததா? எழுந்திரு! எழுந்து கால்களைக் கழுவிக்கொண்டு வந்து படுத்துக் கொள்' என்றாள்.

அக்காவின் உத்தரவுப்படி எழுந்து கால் கழுவிக் கொண்டு வந்து படுத்தாள் ஆனால் தூக்கம் வரவில்லை. நேரத்தைப் பார்த்தால் மணி நாலடித்து விட்டிருந்தது. அக்கா திரும்பவும் தூங்கி விட்டாள். வசந்தி கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். அக்கனவு இன்னும் நடப்பது போலவே இருந்தது! வசந்தியின் இதயம் கனத்தது.

'ரவி! நான் எவ்வளவு தனிமையால் துடித்துடித்துட்டிருக்கேன் தெரியுமா? நீங்கள் என்னவாயிட்டீங்க? நான் ஒருத்தி இந்த உலகத்தில் இருப்பதே உங்களுக்கு மறந்து போய் விட்டதோ? ஒரு வேளை போன் பண்ணாவிட்டாலோ, உங்களைப் பார்க்கா விட்டாலோ நான் எவ்வளவு துடித்துடித்துப் போய் விடுவேனோ உங்களுக்குத் தெரியும். தெரிந்தும் இப்படி மௌனமாய் ஏன் இருக்கிறீர்கள்?'

வசந்தியின் கண்களில் கிர்ரென்று நீர்ச் சுழன்றது. எவ்வளவு நாட்கள் இந்த வேதனை? வசந்தியால் தாள முடியவில்லை. இந்த வீட்டை எவ்வளவு ஆசையோடு

வாங்கியிருப்பாள்? எவ்வளவு கனவு கண்டிருப்பாள்? இப்பொழுது நடப்பது என்ன? வசந்திக்கு அந்த வீட்டை விட்டு ஓடிப்போய் விடவேண்டும் போலிருந்தது.

'இந்த வீட்டில் அவளும் ரவிசங்கரனும் சேர்ந்து வசிப்போம் என்றெண்ணியிருந்தாள். இப்பொழுது இவ்வீட்டைப் பார்த்தால் மூர்த்தி இல்லாத கோவிலைப் போலருந்தது.'

வசந்திக்கு அந்த வீட்டை விட்டும் ஊரை விட்டும் எங்கேயாவது தொலைவிற்கு ஓடிப் போய் விடவேண்டும் போலிருந்தது. அவள் வேண்டும் என்றிருந்தால் ரவி சங்கரன் அவளைத் தேடிக் கொண்டு வருவான். இல்லா விட்டால் அவள் தேவையில்லை என்று அர்த்தம்.

அன்று பிற்பகல் மதுரையிலிருந்த அவள் சிற்றப்பா விடமிருந்து' வந்த கடிதம் நினைவிற்கு வந்தது. அங்கு பெரிய கம்பெனி ஒன்றில் நல்ல உத்யோகம் காலியாய் இருக்கிறதாம்.

'எனக்கும் உன் சித்திக்கும் வயதாகி விட்டது. குழந்தைகள் இல்லாத எங்களிடம் யாராவது இருக்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. உன் சித்திக்குத் தான் உன் மேல் உயிர் என்று உனக்குத் தெரியுமே! அதனால் உன்னை இங்கே வரச்சொல்லி கேட்டுக் கொள்கிறேன்.

'இந்த உத்யோகம் உனக்குக் கட்டாயம் கிடைக்கும். உன் பாங்கு உத்யோகத்தைவிட நல்ல வேலை இது. சீக்கிரத்தில் பிரமோஷன் கிடைக்கும், உனக்கு அவ்வளவு தூரம் நம்பிக்கை இல்லையென்றால் நாலைந்து மாதம் லீவு போட்டு விட்டுவா.

'இங்கே உனக்குச் சூழ்நிலை பிடித்தால் பண்ணலாம். உன் சித்தி திரும்பத் திரும்ப இதையே சொல்லிக்



கொண்டிருக்கிறாள். நீ வந்தால் எனக்கு மிக சந்தோஷமாய் இருக்கும். உன் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். நீ இதை மறுக்க மாட்டாய் என்ற ஆசையோடு இக்கடிதத்தை எழுதுகிறேன்'.—

வசந்தி தலையணைக்கடியில் இருந்த அக் கடிதத்தை எடுத்துத் திருப்பவும் படித்தாள். பிறகு ஆழ்ந்த யோசனையில் மூழ்கிவிட்டாள்.

❋ ❋ ❋

மறுநாள் வசந்தி ஆபீசிற்குப் போகவில்லை.

'என்ன வசந்தி ஆபீசுக்கு டயமாயிடுத்து, நீ இன்னும் குளிக்காமல் அப்படியே உட்கார்ந்திருக்கிறாய்?' என்றாள் வசந்தியின் அக்கா

'ஆபீசுக்குப் போகலை அக்கா.'

'போகலையா? ஏன்?'

'உடம்பு சரியாயில்லை' மென்று விழுங்கினாள்.

'டாக்டரிடம் போகிறாயா?'

'தேவையில்லை.'

வசந்தியின் அக்கா பதில் பேசவில்லை. அதற்குமேல் வாதாடவும் இல்லை. வசந்தி வீட்டில் இருந்தால் அக்காவிற்கு நிச்சிந்தையாய் இருக்கும். வசந்தியை வீட்டிற்குக் காவல் வைத்து விட்டுக் கடைவீதிக்கும், சிநேகிதிகளின் வீட்டிற்கும் போய் விட்டு வரலாம். கடைத் தெரு வேலைகளையெல்லாம் முடித்துக் கொள்ளலாம்.

பத்தரைக்கெல்லாம் அக்கா ரெடியாகி, 'காமேஸ்வரிக்கு உடம்பு சரியாயில்லையாம். போய் விசாரித்து விட்டு வரேன்' என்றுப் போய் விட்டாள்.

வசந்திக்கு அந்த வீட்டில் தனியாய் உட்கார்ந்துக் கொண்டிருக்க ஏதோ போலிருந்தது.

இனி வாழ்நாளெல்லாம் இதே போல் தான் இருக்குமா? அவள் என்ன பண்ணிவிட்டாள்! ரவிசங்கரனோடு நெருக்கமாய் இருப்பதற்காக சிநேகிதிகள் எல்லோரையும் விட்டு நீங்கிவிட்டாள் உறவினர்களின் வீடுகளுக்குப் போவதைக் கூட தவிர்த்துக் கொண்டாள் இப்பொழுது அவனே இல்லை. இந்தத் தனிமையை இப்பொழுது எப்படிப் போக்கிக் கொள்வாள்?

வசந்திக்கு வாழ்க்கையே விரக்தியாய் தோன்றியது. கொஞ்ச நேரம் கிடைத்து விட்டாலும் போதும் கனவு காணத் தொடங்கி விடுவாளே, இப்பொழுது அந்த ஆர்வமெல்லாம் எங்கே போய் விட்டது?

இதுவரை வாழ்க்கையே நொடிப்பொழுதில் கழிந்துப் போய்க் கொண்டிருந்தன. கொஞ்சம் நேரம் கிடைத்தாலும் போதும் ரவிசங்கரனுடன் கழித்துக் கொண்டிருந்தாள்.

அவள் எதிரே இருந்தால் அவனோடு! அவன் இல்லாத போது அவனைப் பறறிய யோசனைகள்! அவனைச் சந்திக்கப் போகும்பொழுது எந்தப் புடவையைக் கட்டிக் கொண்டு போகலாம், அவன் வந்தால் அவனுக்குச் சாப்பிட என்ன தரலாம், என்பது பற்றிய யோசனைகள் தான்!

அவன் வந்துபோன பிறகு அவன் பேச்சுக்கள், சேஷ்டைகள் இவைபற்றிய நினைவுகளே இருந்துவரும். இத்தனை நாள் இந்த விதமாய் ஆர்வத்தோடு கழித்துக் கொண்டிருந்த காலமே— இப்பொழுது அவளை அழ வைத்துக் கொண்டிருக்கிறது!

வசந்தி திரும்பவும் யோசனையில் ஆழ்ந்தாள்.



ரவிசங்கரன் ஏன் வரவில்லை? போன் கூட செய்யவில்லையே, ஏன்?

அவன் மௌனமாய் இருப்பது ஏன் என்றுதான் வசந்திக்குப் புரியவில்லை.

அவன் சதா உமாவிற்குப் பக்கத்திலேயே கழித்து வந்தது வசந்திக்கு ஆச்சரியமாய் இருந்தது. அந்த ஆச்சரியத்திலிருந்து எரிச்சலும், எரிச்சலிலிருந்து கோபமும் வந்தன... இல்லை... இல்லை... அவன் சுபாவத்தை அறிவாள்; அவனுக்கு யாரையும் வருத்தப்படுத்தும் குணம் கிடையாது. ஏதோ நடந்துவிட்டிருக்கிறது. போகட்டும், குறைந்த பட்சம் அந்தக் காரணத்தையாவது தெரிந்து கொண்டால் நன்றாயிருக்கும். அவள் உயிர் போனாலும் பரவாயில்லை.

அதே சமயத்தில், காலடி சப்தம் கேட்டது.

வசந்தி நிமிர்ந்து பார்ப்பதற்குள் ஜெய் பிரசாத் பரபரப்புடன் உள்ளே நுழைந்துகொண்டிருந்தான். அவன் முகம் மிகக் கலவரத்துடன் இருந்தது. வரும்போதே கேட்டுவிட்டான்.

'என்ன? உங்களுக்கு உடம்பு சரியாயில்லையாமே?'

'யார் சொன்னாங்க?'

'அக்கா. பஸ் ஸ்டாண்டில் சந்தித்தேன். என்னவாச்சு?'

'ஒன்றுமாகலை!'

'உங்களைப் பார்த்தால் ஏதோ ஆயிட்டாற் போலவே இருக்கு. உங்கள் கவலை என்னன்னு சொல்லாமல் மறைக்கிறீங்க.'

'நான் எதையும் ஒளிக்கவில்லை.'

'டபாய்க்காதிங்க. நாம்ப உலகத்தையெல்லாம் ஏமாற்றிடலாம். ஆனால் சிநேகிதர்களை ஏமாற்றமுடியாது. உண்மையைச் சொல்லுங்க. என்னதான் ஆச்சு? யாராவது ஏதாவது சொன்னாங்களா?'

'இல்லை.'

'பின்னே, ஏன் அப்படியிருக்கிங்க?'

'எப்படி இருக்கேன்?'

'எரிச்சலுடன்! எள்ளும் கொள்ளும் வெடிக்க!' வசந்தி சிரித்தாள்.

'அம்மாடா! சிரித்துவிட்டீங்க. அப்படீன்னால் விஷயம் நான் ஊகித்தாற்போல சீரியாய் இல்லைன்னு தோணுது' என்று வந்து உட்கார்ந்துக் கொண்டான்.

'நீங்க ஆபீசுக்குப் போகலையா?' கேட்டாள் வசந்தி.

'எங்கே! புறப்படப் போன பொழுது இந்தச் செய்தி தெரிந்தது. அந்தப் பஸ்ஸுக்கு பதில் இந்தப்பக்கமாய் வர பஸ்ஸில் ஏறிவிட்டேன். ராத்திரி நீங்க நன்றாய்த் தூங்கினீங்களா இல்லையா?'

'ஊஹும்.'

'அட! நான் நன்றாய்த் தூங்கினேன். உண்மையைச் சொல்லணும்னால் ரொம்ப நாளைக்கப்புறம், நிச்சிந்தையாய், சந்தோஷமாய் தூங்கினேன்.'

'என்ன விசேஷம்?'

'அதான் எனக்கும் தெரியலை. நேற்று உங்களோடு பேசிய பிறகு என் மனத்திலிருந்த பெரிய பாரம் நீங்கிவிட்டாற் போலிருந்தது.'



வசந்தி பதில் பேசவில்லை.

'ஹலோ வசந்தி! நீ வீட்டில்தான் இருக்கிறாயா? உங்க ஆபீசுக்குப் போயிட்டு வந்தேனே அம்மா' என்று ரத்னா உள்ளே வந்தாள்.

'வா, வா! பல நாட்களுக்குப் பிறகு சந்திக்கிறோம்!' என்றாள் வசந்தி. ரத்னா வந்து உட்கார்ந்துக்கொண்டு ஜெய்பிரசாத்தைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள். வசந்தி ஜெய்பிரசாத்தை ரத்னாவுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

ரத்னாவின் நடையுடை பாவனையில் மாறுதல் ஏற்பட்டிருந்தது. விலையுயர்ந்த புடவை கட்டிக் கொண்டிருந்தாள். கழுத்திலும் கைகளிலும் நகைகள் தென்பட்டன. பையிலிருந்து திருமண அழைப்பிதழை எடுத்துத் தந்தாள்.

'வியாழக் கிழமை, பதினாலாம் தேதி கல்யாணம்!'— வெட்கத்துடன் சொன்னாள்.

'நிஜமாகவா? அட! எவ்வளவு நல்ல நியூஸ்! திருடு! எனக்கு இதுவரை மூச்சுகூட விடலையே!' என்றாள் வசந்தி.

'சாரி வசு! எதிர்பாராமல் நிச்சயம் ஆயிடுத்து. யாருக்குமே தெரியாது. உண்மையைச் சொல்லப் போனால் எனக்குக் கூட நம்பிக்கை இல்லை. ஆகுமோ ஆகாதோ, தெரியலை!'

'ஏன் அப்படிச் சொல்கிறாய்?'

'இந்தக் கல்யாணம் என் சொந்தக்காரங்களுக்கெல்லாம் இஷ்டமில்லை.'

'ஐயோ, அப்படியா?'

'என் கல்யாண காரியங்களையும், எல்லோருக்கும் அழைப்பிதழ்களைக் கொடுப்பதையும் கூட நானே தான் கவனிக்கிறன்.'

'இதென்னது! என்னிடம் சொல்லியிருந்தால் நான் பண்ணித் தந்திருப்பேனே!'

'நீ கல்யாணத்துக்கு வந்தால் போதும். அதே என் பாக்கியம் என்று நினைத்துப்பேன். ரத்னா வசந்திக்குக் கொடுத்துவிட்டு, ஜெயபிரசாதிற்கும் ஒன்றைக் கொடுத்தாள்.

'கண்டிப்பாய் வரணும்' என்றாள்.

'வசந்தி வந்தால் நானும் வரேன்' என்றான் அவன். அழைப்பிதழைக் கையிலெடுத்து மணமகனின் பெயரைப் பார்த்த வசந்தி திடுக்கிட்டாள். 'பாலகிருஷ்ணன் என்றால்......?' ரத்னாவை சந்தேகத்துடன் பார்த்தாள்.

'அவர்தான் வசந்தி, எங்க வீட்டுக்காரர்.'

'இதென்ன ரத்னா...' கலவரத்துடன் கேட்டாள்.

'அவருக்கு என் வயதையொத்தப் பிள்ளைகள் இருக்காங்களேன்னுதானே தயங்குகிறாய்! அதனால் என்ன? என்னால் ஈடுகட்டிக்கொண்டு போக முடியும். எங்க வீட்டாருக்கெல்லாம் அதனால்தான் இஷ்டமில்லை. நான் அவர் மகளைப் போல இருப்பேன், வேண்டாம்னு எவ்வளவோ சொன்னார். பண்ணிக்கப்போற நான் இஷ்டப்பட்டுத்தான் பண்ணிக்கறேன்; உங்களுக்கு ஏன் தயக்கம்னு நான் கேட்டேன். எங்களிருவருக்கும் ஒரு வருஷமாய்ப் பழக்கம் இருந்து வந்தது. கல்யாணம் பண்ணிக்கிறது நல்லதுன்னு நினைத்தோம். அவர் மகள்களுக்கும் பிள்ளைகளுக்குங்கூட இஷ்டமில்லை. அவங்க வீட்டில்கூட தகராறு தான்.'



வசந்தி பதில் பேசவில்லை. ரத்னா சொன்னாள்:

'அதான் சொன்னேனே, ஒரு வருஷமாய் எங்கள் பரிச்சயம் இருந்து வந்ததுன்னு; வீட்டு வாடகையைக் கொடுக்க முடியாத நிலையில் நாங்கள் இருந்தோம். அவர் இரக்கப்பட்டுத் தொந்தரவு பண்ணவில்லை.

எனக்கு அவர் மேல் நம்பிக்கை ஏற்பட்டது.

'அவருடைய மனைவி சமீபத்தில் காலமாகி விட்டாள் அப்ப நான் அவங்களுக்கு நிறைய உதவி செய்தேன். அந்த உதவி மூலந்தான் எனக்கு அவர் மீதும் அவருக்கு என் மீதும் நம்பிக்கைப்பிறந்தது. அவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால் என் வாழ்க்கை நிச்சிந்தையாய் இருக்கும் வசு! என்னைப் பற்றிதான் உனக்குத் தெரியுமே! இதுவரை நிரந்தரமான உத்யோகமும் இல்லை. அண்ணன்மார்கள் என் விஷயத்தைப் பொருட்படுத்தமாட்டார்கள். நல்ல துணிமணிங்களும் நகைகளும் இல்லாமல் மூளியாய் வாழ்ந்து வந்தேன். இவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் எனக்கு அவை தாராளமாய்க் கிடைக்கும் அதனால்தான் பண்ணிக்கறேன்.

'காதல் கீதம் என்பதைப் பற்றியெல்லாம் நான் நம்பலை; எனக்கு அதைப் பற்றியும் தெரியாது. வாழ்க்கையில் பணம் என்பது ரொம்ப முக்கியம். காதல் இல்லாவிட்டாலும் வாழ்ந்துவிட முடியும்; ஆனால் பணம் இல்லாவிட்டால் முடியாதுன்னு தோன்றியது வரதட்சணை கொடுக்க முடியாது என்னால்.

'உத்யோகம் இல்லாத என்னை எந்த ஆம்பிள்ளை பண்ணிப்பான். சொல்லு? இந்தக் கல்யாண செலவைக்கூட அவரே தான் தாங்குகிறார். எனக்கென்னவோ கவலையில்லாமல், நிச்சிந்தையாய் இருக்கு' என்றாள்.

வசந்தி வாயடைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள். ரத்னாவைப் பார்த்தால் புது மனுஷியாய்த் தோன்றினாள்.

ரத்னா இரண்டு மூன்று பேர்களுடன் காதல் விவகாரத்தில் மூழ்கி மீண்டிருந்தவள். ஒருவன் அவளை விட்டு விட்டு ஓடிப் போய் விட்டான்.

இன்னொருத்தன் வேறொருத்தியை மணந்துக் கொண்டு இதே ஊரில் இருந்து வருகிறான்; அவன் ரத்னாவைத் தெரியாதவனைப் போலவே நடந்துகொண்டான். ஒருக்கால் ரத்னாவுக்கு இந்த விவகாரங்களால் காதல் மீதே நம்பிக்கை போய் விட்டிருக்கும்.

'கல்யாணத்துக்குக் கண்டிப்பாய் வரணும்' என்றாள் ரத்னா போக எழுந்திருந்தபடி.

வசந்தி தலையாட்டினாள்.

'சாரி வசு; உங்க வீட்டுக் கிரகப்பிரவேசத்துக்கு வர முடியலை; நான் ஊரில் இல்லை. வீடு நன்றாய்ருக்கு. ரவிசங்கரன் வரானா?' என்று கேட்டாள்.

வசந்தி சட்டென்று 'வருவதில்லை' என்பது போலத் தலையாட்டினாள்.

'இந்த ஆண்களே அப்படித்தான். கல்யாணம் ஆனதுமே அதற்கு முன்னாலிருந்த காதல் விவகாரங்களையெல்லாம் மறந்தே போயிட்டாற்போல நடந்துக்கறாங்க. நாம்பகூட அப்படிச் செய்ய முடிந்தால் ரொம்பவும் சுகப்படலாம். ஆனால் நம்ப இந்தப் பெண் மனசு இருக்குது பாரு; அது மட்டும் அடியோடு மறக்கவே மறக்காது ரவிசங்கரன் உமாவோடு நன்றாய்த்தான் குடித்தனம் பண்ணிட்டிருக்கான்.'

வசந்தியின் முகம் சிவந்து விட்டது. ஜெயபிரசாத் அதற்கு முன்பே அங்கிருந்து எழுந்து போய் புத்தக பீரோவிலிருந்த புத்தகங்களையெல்லாம் பார்வையிட்டுக்



கொண்டிருந்தான். ரத்னாவுக்கு அந்த அறையில் இன்னொரு ஆள் இருந்த விஷயம் அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது.

'ஓ ஐயாம் சாரி' என்றாள். 'கண்டிப்பாய் வரணும்' என்று மேலும் பல முறை எச்சரித்துவிட்டுப் போய்ச் சேர்ந்தாள் ரத்னா.

வசந்தி ஜெய பிரசாதைப் பார்த்தாள். அவனுக்கு ரவிசங்கரனைத் தெரியுமா? புத்தகம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தான் ஜெயபிரசாத்.

'உங்க சிநேகிதியைப் பார்த்தால் இரக்கமாயிருக்கு மிஸ் வசந்தி' என்றன்.

'ஏன்?'

'அவள் மனிதனின் வாழ்க்கையில் அன்பை விட பணம் கிடைத்து விட்ட பிறகு, அன்பிற்கு முன்னால் அது எத்தனைத் துச்சமானது என்று புரியும்.'

வசந்தி கொஞ்சம் யோசித்து விட்டுச் சொன்னாள்:

'நீங்க சொன்னதும் நிஜந்தான். ஆனால் அது எல்லோருக்கும் பொருந்தாதுன்னு நினைக்கிறேன். காதலைப்பற்றித் தெரிந்தவங்களுக்குத் தான் அது புரியும்னு நினைக்கிறேன்.'

'அதுவும் கரெக்ட் தான்' என்றான் அவன். வசந்தியின் அக்கா திரும்பி வந்தாள். ஜெயபிரசாத் அன்றைக்கு ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டான். வசந்தியைப் பலவந்தமாய் அண்ணா அரங்கத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு அழைத்துக் கொண்டு போனான். வசந்தி போக மறுத்தாள். அக்கா தலையிட்டு, 'கொஞ்சம் வெளியே போயிட்டு வந்தால் கொஞ்சம் தேறிக் கொள்வாய்' என்று பலவந்தப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

வசந்தியும் ஜெய பிரசாதும் டாக்ஸியில் அரங்கத்திற்கு வந்தார்கள். அவன் இறங்கி, வசந்திக்காகக் கதவைத் திறந்துகொண்டு நின்றான்.

டாக்ஸியை விட்டு இறங்கிக் கொண்டிருந்த வசந்தி தொலைவில் படியேறிப் போய்க் கொண்டிருந்த ஆளைப் பார்த்துப் பேயறைந்தாற் போல நின்று விட்டாள்.

ரவிசங்கரன் நடந்துப் போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் உமா இருந்தாள். மஞ்சள் நிறத்தில் சிவப்பு பார்டருடன் உள்ள ஷிபான் புடவை உடுத்தியிருந்தாள். தோளைச் சுற்றிலும் சால்வையைப் போர்த்திக் கொண்டிருந்தாள். அது நழுவிக் கொண்டிருந்தது. ரவிசங்கரன் சிரத்தையாய் அதை எடுத்துத் தோளைச் சுற்றிலும் போர்த்திவிட்டுக் கைத் தாங்கலாய் அவளைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனான்.

ஜெயபிரசாத் டாக்ஸிக்காரனுக்கு சில்லறை கொடுத்து விட்டுத் திரும்பிப் பார்த்த போது, வசந்தி தலையில் கை வைத்துக் கொண்டு குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

'என்னவாச்சு?' ஜெயபிரசாத் கலக்கத்துடன் கேட்டான்.

'தலை சுற்றுகிறது. என்னால் நடக்க முடியாது. ப்ளீஸ், வீட்டுக்குப் போவோம். நீங்க இருந்துக்குங்க, நிகழ்ச்சியைப் பார்த்துட்டு வாங்க. நான் போயிடறேன். டிரைவர், என்னைத் திரும்பி வீட்டிற்கருகில் இறக்கி விட்டு விடு' என்றாள்.

'இதென்னது! நான் உங்களுக்காகத்தான் வந்தேனே தவிர, நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு இல்லை உங்க உடம்பு சரியாயில்லைன்னால் போய் விடலாம். டிரைவர், வீட்டிற்கு விடு.' ஜெயபிரசாத் உள்ளே உட்கார்ந்து கொண்டு கதவைச் சாத்தினான்.



11342
296865

டாக்ஸி புறப்பட்டது. வசந்தி நெற்றிப் பொட்டை விரல்களால் அழுத்திக் கொண்டு சீட்டில் பின்னால் சாய்ந்து கொண்டாள்.

ஜெயபிரசாத் ஒரு வினாடி தடுமாறினான். பிறகு துணிந்து வசந்தியின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான்.

வசந்தி காய்ந்த சருகைப் போல நடுங்கிக் கொண்டிருந்ததைக் கவனித்தான். 'என்னவாயிருக்கும்?' என்றெண்ணத் தொடங்கினான் அவன்.

★ ★ ★ ★

வசந்தி ரத்னாவின் திருமணத்திற்கு வந்தாள். ஜெயபிரசாத்தும் வந்தான். ரத்னாவின் கழுத்தில் தாலி கட்டிக் கொண்டிருந்த பாலகிருஷ்ணனைப் பார்த்து வந்தவர்கள் எல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

அவர் வயது ஐம்பதிருக்கும். கருப்பாய் இருந்தார். தொந்தி பெரிதாய் இருந்தது. இருவரையும் தனித்தனியாய் பார்த்தால் ரத்னா கொஞ்சம் வயது வந்த மணமகளாய் தோன்றினாள். சிலர் வெளிப்படையாகவே விமரிசிக்கத் தொடங்கினார்கள்.

'இது பணத்துக்காகப் பண்ணிக்கிட்ட கல்யாணம்' என்றார்கள்.

'என்னவோப்பா! பாழும் காலம் இது? என்ன பொம்பிள்ளைங்களோ இவங்க' என்றார்கள் சிலர்.

ரத்னாவின் கோரிக்கை மட்டும் நூற்றுக்கு நூறு சதவீதம் பலித்து விட்டது. ஜரிகை போட்ட மிக விலையுயர்ந்த புடவையுடனும் உடம்பெல்லாம் மின்னும்படியாய் நகைகளுடனும் ரத்னாவின் திருமணம் விரும்பிய

மனிதரை மணந்துகொண்ட காதல் திருமணத்தைப் போலவே இருந்தது. அடிக்கடி தன் புடவையையும் நகைகளையும் பார்த்துக் கொண்டாள்.

திருமணத்திற்கு அவருடைய பிள்ளைகள் வந்திருந்தார்கள். அவர் பெண்கள் ரத்னாவைத் திட்டித் தீர்த்தார்கள். மொத்தத்தில் அத் திருமணம் முழுவதும் ஏதோ வேடிக்கை நிகழ்ச்சியைப் போலவே நடந்து முடிந்தது.

வசந்திக்கு வருத்தமாய் இருந்தது. ரத்னா ஏன் இது போல பைத்தியக்கார வேலைகளைப் பண்ணி, நாலுபேர்களின் வாயில் புரளவேண்டுமோ என்று நினைத்தாள்.

ஜெயபிரசாத் வசந்தியின் அபிப்பிராயத்தை மறுத்துச் சொன்னான்;

'வசந்தி, நீங்க ரொம்பவும் தப்பாய்ப் புரிந்துக்கிட்டீங்க. ரத்னா என்ற அப்பெண் தனக்கு விரும்பியதை அடைந்து விட்டாள். உலகம் என்ன சொன்னாலும் சொல்லிவிட்டுப் போகட்டும் என்று பொருட்படுத்தவில்லை. அந்தத் துணிச்சல் இருக்கிறவங்களுக்கு வாழ்க்கை சுகமாகவே கழிந்துவிடும். எந்தத் துணிச்சலும் இல்லாத நம்மைப் போன்றவங்கதான் திரிசங்கு சொர்க்கத்தில் தவிச்சுட்டிருப்போம்' என்றான்.

வசந்திக்கு அது உண்மைதான் என்று பட்டது.

'அந்தப்பெண்ணின் முகத்தை ஒரு தடவை பாருங்கள். எவ்வளவு சந்தோஷம்! தான் விரும்பியதை அடைந்து விட்டோம் என்ற மகிழ்ச்சி அது. சிலருக்கு வாழ்க்கையில் அன்பு வேண்டும் என்று தோன்றும்: சிலருக்கோ பணம்; வேறு சிலருக்கு அதிகாரம்; சிலருக்கு நல்ல குணம்!— இவ்வாறு அவங்கவங்க விரும்பியதற்காகத் தவித்துட்டிருப்பாங்க. ஒன்றைப் பார்த்து இன்னொன்று விமரிசித்துக் கொள்ளத் தேவையில்லை.'



ஜெயபிரசாத் மனிதர்களை மிக விவரமாகவும் இரக்கத்தோடும் யோசித்துப்பார்த்து எடைப்போடுகிறான் என்று தோன்றிற்று வசந்திக்கு. இப்படிப்பட்டவர்களுக்கு எந்தத் தொந்தரவும் இல்லை. இவர்கள் எப்பொழுதும் எதிராளியைப் புரிந்துக் கொண்டு ஈடுகட்டிக் கொண்டு போகத்தான் பார்ப்பார்கள்...

வசந்தியும் ஜெயபிரசாதும் வீடு திரும்பியபோது தூரத்து உறவுக்காரரான கணேசன் வந்து உட்கார்ந்திருந்தார் அங்கே அவர் வசந்தியோடு கூடவே வந்த ஜெயபிரசாதைக் கூர்ந்து பார்த்தார் விநோதமாய். 'இந்தப் பையன் யார்'? என்று கேட்டார் வசந்தியின் அக்காவிடம்.

'வசந்தியோடு கூட பாங்கில் வேலை செய்யறான்.'

'கல்யாணம் ஆயிடுத்தா அவனுக்கு'?

'இல்லை.'

அவர் வசந்தியையும் ஜெயபிரசாதையும் சந்தேகத்தோடு பார்த்தார்.

'வசந்தி கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லையாம்மா?'— கேட்டார்.

'பண்ணிக்கணும் நினைத்துட்டால் போதுமா. தாத்தா? வேளை வரவேண்டாமா?' என்றாள் அக்கா காபியைக் கலந்துக்கொண்டே.

'மனம் இருந்தால் வேளை தானே வந்துவிடாதா? அந்த ரவிசங்கரனைப்பண்ணிக்கப் போறான் என்றாய். அவன் என்னவோ பசையுள்ளப் பெண்ணாய்ப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டு லட்சணமாய்க் குடியும் குடித்தனமுமாய் இருக்கிறான். உன் தங்கைக்குக் கூட

னவிக்குத் தகுந்த வனையாய்ப் பார்க்க வேண்டாமா? வயதாகி விட்டால் எவனாவது ரெண்டாந்தாரமாய் தான் வந்து சேருவான்.'

வசந்தி மூச்சிறைக்க விடு விடென்று அவரிடம் வந்தாள்.

'தாத்தா, என் கல்யாண விஷயம் உங்களுக்கு எதுக்கு?' என்றாள்.

அவர் கொஞ்சமும் பயந்து விடவில்லை.

'இதென்னம்மா! என் தம்பியின் பேத்தி நீ! உன் விஷயத்தை என்னை விட்டால் வேறு யார் விசாரிப்பாங்க? அப்ப என்னவோ அந்த ரவிசங்கரனோடு சுற்றிட்டிருந்தாய். இப்ப இந்த இளைஞனுடன் சுற்றிட்டிருக்காய்னு எல்லோரும் பேசிக்கிறாங்க. என் வாழ்க்கை, என் இஷ்டம்னு சொல்லிட்டால் எப்படி? நம்பக் குடும்பக் கௌரவம்னு ஒன்று இருக்கே! கல்யாணம் கில்யாணம் இல்லையின்னு சொன்னால் வீட்டோடு கிட. நீ வீட்டில் உட்கார்ந்துட்டு என்ன பண்ணிக் கிழித்தாலும் யாருக்கும் தேவையில்லை. தெருவுக்கு வந்துட்டால் என்ன பண்றது?'

'தாத்தா' அதற்குள் அக்கா அங்கு வந்துவிட்டாள்.

'அவள் விஷயம் உங்களுக்கு எதுக்கு, சும்மாயிருங்க தாத்தா?'

'மொதல்ல, அவரை இந்த வீட்டை விடடுப் போகச் சொல் இனி ஒரு போதும் இந்த வாசற்படியை மிதிக்க வேண்டாம்னு சொல்லிடு.' வசந்தி கத்தினாள்.

'இதப் பாரும்மா, வார்த்தைகளை மரியாதையாய் அளந்து பேசு! இது உன் வீடா? உங்க அக்காவீடு!' அக்கா சங்கடத்தில் ஆழ்ந்தாள். எல்லோரும் இதை அக்காவின் வீடு என்றே நினைத்துக் கொண்டிருந்தார்கள். அக்காவும்



எல்லோரிடமும் அப்படித்தான் சொல்லிவந்தாள். அக்கா கலக்கமடைந்தாள்.

'இது அக்காவின் வீடு என்று இப்பொழுது வாதனை தேவை இல்லை. நீங்க போயிடுங்க தாத்தா

அவர் உத்தரீயத்தைக் கையில் எடுத்துத் தந்து, பலவந்தமாய் கையைப் பிடித்துத் தூக்கினாள்.

'போறேம்மா. போகாமல் இங்கே ஒண்ணும் உட்கார்ந்திருக்க மாட்டேன். ஏதோ வேண்டியவர்களாச் சேன்னு சொல்ல வந்தேன்.' என்று கூறியபடி அவர் போய்விட்டார்,

'கண்டவங்களையெல்லாம் வீட்டில் சேர்க்கிறாய் நீ. அவங்க வந்து கண்டபடி பேசினாலும் விழுந்து கிடக்கச் சொல்கிறாய்' வசந்தி அக்காவின் மேல் பாய்ந்தாள்.

'ஏதோ பெரியவர்! ஆனாலும் உன்னால் என் வாயை மூடி விட முடியுமே தவிர, உலகத்தின் வாயை மூடி விட முடியுமா? லட்சணமாய் எந்தக் குறையும் இல்லாமல் இருக்கிறாய். ஏன் கல்யாணம் பண்ணிக்கமாட்டேங்கிறாய்? இன்னும் அந்த ரவிசங்கரன் வந்து உன்னை தாங்கப் போகிறான் என்றா?'

'அக்கா, அவர் பேச்சை எடுக்க வேண்டாம்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்!'

வசந்தி அங்கே நிற்க முடியாமல் சரேலென்று போய்க் கதவைச் சாத்திக் கொண்டாள்.

'சொல்லுவாய், சொல்லுவாய்! உன் கூடப் பிறந்தவளாய் உன் கஷ்ட சுகங்களில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் என்னைவிட அவன் தான் உனக்கு அதிகம். அவன் என்ன உன்னைத் தாங்கிட்டான்னு...?' அக்கா ஜெயபிரசாத்தைப் பார்த்தாள்.

'ஜெயபிரசாத் சார்! இதப் பாருங்க, நீங்களே சொல்லுங்கள். அந்த ரவிசங்கரனை இவள் கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைத்தாள். அவன் என்னவோ அந்தப் பணக்காரப் பெண் உமாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டான். இவள் மேல் அவனுக்கு இஷ்டம் இருந்தால் அவன் அந்த மாதிரி வேறு கல்யாணம் பண்ணிப்பானா? ஆனாலும் இவளுக்கு வெட்கம் இல்லை. தன் விஷயத்தைத் தான் பார்த்துக் கொள்ளமாட்டாள். இன்னும் அவனையே பிடித்துக் கொண்டு அழுகிறாள்.

'அவள் நாலு பேருக்கு முன்னால் சந்தி சிரிக்கும்படி பண்ணிக் கொண்டு உங்களையும் சந்தி சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறாள். சீ, சீ, எங்கேயாவது போகணும்னால் கூட பயமாயிருக்கு. இதே ரோதனைதான்...உலகத்தைப் பற்றி நமக்குத் தேவையில்லை. ஆனால் உலகத்துக்கு நம்பளைப் பற்றித் தேவை இருக்கே!

'நீங்களே சொல்லுங்கள். இப்ப நான் சொன்னதில் தப்பு ஏதாவது இருக்கா?'

'அந்த ரவிசங்கரனை மறந்துவிட்டு வேறு யாரையாயாவது பண்ணிக்கக் கூடாதாங்கிறேன்? உனக்கென்ன குறைச்சல்? உன் வாழ்க்கையை ஏன் பாழாக்கிக் கொள்கிறாய் என்கிறேன்? இதுதான் நான் சொல்றது. நீங்களே நியாயத்தைச் சொல்லுங்கள்!'

ஜெயபிரசாத் வாயடைத்துப் போய் பார்த்துக்கொண்டிருந்தான். 'ரவிசங்கரன்—வசந்தி! மைகாட்!' அவன் தலை சுற்றியது. அவனுக்கு இதுவரை தெரியலே தெரியாதே. அவன் கண் முன் ஏதேதோ காட்சிகள் சுழன்று கொண்டிருந்தன. புத்திசாலியான வசந்தி, ஆரோக்கியம் வீடு. முக்கிய வசதிகள் வாழ்க்கையில் இருந்தபோதிலும் எதுவுமே இல்லாததுபோல, தினமாய், கோழையாய் ஏன் இருந்து வருகிறாள் என்று இப்பொழுதுதான் புரியத் தொடங்கியது அவனுக்கு.



உமாவினிடம் ரவிசங்கரன் விட்டேற்றியாய் இருப்பது — உமாவின் கண்களில் அதிருப்தியா! மை காட்! அவன் தலையைப் பிடித்துக் கொண்டு சோபாவில் உட்கார்ந்து விட்டான்.

அக்கா சமையலறைக்குள் நுழைந்து பெரிதாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

'சொல்லிவிட்டால் எல்லாம் தப்பாயிடும். கண்ணிருந்தும் குருடியாய்ப் பார்த்துட்டிருக்க முடியுமா? நான் சும்மாயிருக்கேன், உலகம் இருந்து விடுமா?'

அவன் திரும்பி, மூடியிருந்த வசந்தியின் அறையைப் பார்த்தான். ஒரு வினாடி ஓடிப்போய் அந்தக் கதவுகளை உடைத்தெறிந்தாவது வசந்திக்கு முன்னால் நின்று பேசிவிட வேண்டும் போலிருந்தது.

'முட்டாள்! யூ ஃபூல்! நான் பண்ணிய தப்பையே நீயும் பண்ணுகிறாய். கற்றுக்கொள்! என் அனுபவத்திலிருந்து நீயும் கற்றுக் கொள்.

'இந்த வாழ்க்கை நம்மோடது. யாருக்காகவும் இதைப் பாழடித்துக் கொள்ளாதே! நீ பைத்தியக்காரத்தனமாய் விலைமதிப்புக் கொண்ட உன் காலத்தைப் பாழடித்துக் கொள்கிறாய்'— என்று சொல்லிவிட வேண்டும் போலிருந்தது.

வசந்தி கேட்காமல் போனால் கன்னத்தில் ஒன்று கொடுக்க வேண்டும் போலிருந்தது. வசந்தியினிடம் அவனுக்கு அந்தச் சமயத்தில் சொல்ல முடியாத கோபமும் இரக்கமும் ஏற்பட்டன. கோபமும் இரக்கமும் சமமாய் நிரம்பி வழிந்த உணர்ச்சி அது.

அவனுக்கு வசந்தியின் நிலைமை புரிந்தது. வசந்தி பயங்கரமான தனிமை என்ற சமாதியில் ஆழ்ந்து விட்டிருக்

கிறாள். அதிலிருந்து வசந்தியை மீட்க வேண்டும். அவ்வாறு மீட்க வேண்டுமானால் வசந்திக்கும் தனக்கும் இடையேயுள்ள சிநேகம் போதுமா? அதைத் தவிர வேறு உணர்ச்சி இல்லையா? முதலில் அவன் மனதில் உள்ள உணர்ச்சி என்ன என்பதைப் பற்றி அவன் தெரிந்து கொள்ள வேண்டும்.

வசந்தி— ரவிசங்கரன்! மை காட்! அவனுக்கு இந்த உண்மை தலை சுற்றச் செய்தது.

வசந்தியை இன்னும் கிட்டே நெருங்குவதா? அல்லது அவள் முகத்தில் கூட விழிக்காமல் போய் விடுவதா? அவனுக்கு மிகப் பொறாமையாய் இருந்தது. இரக்கமாகவும் இருந்தது.

வசந்தி வேறொருத்தரை விரும்புகிறாள் என்ற உண்மை அவனுக்குத் தாங்க முடியாததாய் இருந்தது. அவனால் அங்கே நிற்க முடியவில்லை.

வசந்தியின் அக்கா அங்கு காபி தம்ளருடன் வந்தபோது அவன் இல்லை. அவளுக்குத் தெரியும், வசந்தி இனி ஒரு நாள் பூராவும் சாப்பிடமாட்டாள் என்று.

ரவிசங்கரன் பெயரை எடுத்து யாராவது எதையாவது சொல்லிவிட்டால் போதும். அவளால் தாங்க முடியாது. அத்தனை கோபம் தலைக்கேறிவிடும்.

அக்கா பெருமூச்செறிந்தபடியே உள்ளே போய் விட்டாள்.

❀ ❀ ❀



'அண்ணா! அண்ணா! பார்த்தாயா? அண்ணி என்ன பண்ணிளாங்கன்னு!' ரவிசங்கரனின் தங்கை ஓடிவந்தாள்.

பேப்பரைப் படித்துக் கொண்டிருந்த ரவிசங்கரன் நிமிர்ந்து—

'என்ன பண்ணினாள்?' என்றான்.

'முயல்களை விட்டு விட்டாங்க. கிளிகளைக் கூண்டிலிருந்து திறந்து விட்டுட்டாங்க. நாய்களை பிராணிகள் வளர்ப்புச் சங்கத்திற்குத் தந்துட்டாங்களாம்.'

ரவிசங்கரன் பேப்பரை மடித்துக் கீழே வைத்தான்.

'சரி, நீ போய் படி.' என்றான். தங்கை போகவில்லை. அண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டே தீனமாய்க் கேட்டாள்.

'அது மட்டுமில்லை, இப்ப என்னைக் கூப்பிட்டு என்ன சொன்னாங்க தெரியுமா?'

'என்ன?'

'நானும் சின்ன அண்ணனும் தங்கையும் ஹாஸ்டலில் இருந்துட்டுப் படிக்கணுமாம்.'

'ஏனாம்?'

'இந்தக் காரியங்களையெல்லாம் கவனிக்க அவங்களுக்குப் பொறுமையில்லையாம். ஓய்வு வேணுமாம்.'

'சரி, அப்படியே பண்ணிடுவோம்,'

'அண்ணா, என்னால் ஹாஸ்டலுக்குப்போக முடியாது. அண்ணயிடம் சொல்லிடு.'

'சொல்றேன்.'

'அண்ணியை நாங்க எதுவும் கேட்கமாட்டோம். தொந்தரவுப் படுத்தமாட்டோம். ஃபஸ்ட் கிளாஸ் கிடைக்

கும்படியாய்ப் படிப்போம். ஹாஸ்டலுக்கு வேண்டாம் அண்ணா.'

'சரின்னு சொன்னேனில்லை?' தங்கையை அனுப்பி வைப்பதற்குள் அவன் உயிரே போய் விட்டது. கொஞ்ச நேரங்கழித்து ரவிசங்கரன் உமாவின் அறைக்கு வந்தான். அவள் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள்.

'உமா!'

உமா அவன் அழைப்பைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். எழுதுவதை நிறுத்திவிட்டு, பேனாவைக் கீழே வைத்தாள். நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்துக் கொண்டிருந்தவள் எழுந்து நின்றாள்.

ரவிசங்கரன் உள்ளே வரவில்லை. கதவிற்கு அப்பாலேயே நின்று கொண்டிருந்தான். உமா அவனை உள்ளே வந்து உட்காரும்படி சொல்லவில்லை. அவன் கதவின் மேல் கையை வைத்துக் கொண்டே சொன்னான்—

'முயலை விட்டு விட்டாயாமே! நாயை பிராணிகள் வளர்ப்புச் சங்கத்திற்கு அனுப்பிட்டாயாமே? ஏன்?'

உமா பதில் பேசவில்லை. தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

'அவற்றின் மேல் உனக்கு எவ்வளவு பிரியம்னு தெரியும். அவை கூட நீ வந்தால்தான் இரை தின்னும். ஏன் அப்படிச் செய்தாய்? வாயில்லா ஜீவன்களை ஏன் துன்புறுத்தினாய்?'

உமா சடேலென்று நிமிர்ந்தாள். துன்பமா? அவை எதற்காகத் துன்பமடையணும்? சுயேச்சையாய், தன்னிச்சையாய் இருக்கப் போகின்றன. நானே இவ்வளவு



நாளாய்த் தெரியாத்தனமாய் அவற்றை என் பாசத்தால் கட்டிப் போட்டிருந்தேன். மனிதன் எதற்குமே கட்டுண்டு இருக்கக் கூடாது. அதனால் லாபமில்லை அந்த உண்மை எனக்கு இப்பத்தான் தெரிஞ்சுது!'

அவன் ஒரு வினாடி பேசவில்லை. உமாவே திரும்பவும் சொன்னாள்—அக்குரலில் வைராக்கியமும் விரக்தியும் தென்பட்டன.

'ஒரு காலத்தில் என் மனம் முழுவதும் அன்பு நிரம்பி வழிந்துக் கொண்டிருந்தது. அப்ப எனக்கு அப்பா இருந்தார். அப்பா தந்த அன்பு எனக்கு ரொம்பவும் பலத்தைத் தந்தது. இந்த உலகத்திலுள்ள யாவற்றின் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்றும், எனக்குச் சொந்தமாக்கிக் கொண்டுவிட வேண்டுமென்றும் தோன்றும். அப்பா போன பிறகு...என் மனதே மாறிப் போய் விட்டது. எனக்கு இப்ப எதன் மீதும் ஆர்வம் இல்லை.'

அவன் அப்படியே நின்று கொண்டிருந்தான். கொஞ்ச நேரங்கழித்து அவள் சொன்னாள்:

'பசங்களைக் கூட ஹாஸ்டலுக்குப் போகச் சொல்லிட்டேன். ஒவ்வொன்றுக்கும் அண்ணிதான் இருக்கிறாளேன்னு நினைச்சுட்டிருக்காங்க. இன்றைக்கு அவங்க சின்னப் பசங்க. இந்த அனுபவம் நன்றாகவே இருக்கும். நாளைக்குப் பெரியவங்களாகி விடுவாங்க. அவங்க வாழ்க்கை அவங்களுடையவையாக மாறும். அப்பொழுது அவங்க பிரிந்துப் போய்விடத்தான் வேண்டியிருக்கும். அப்ப இந்த சூனியத்தை நான் எந்தச் சக்தியால் ஈடுகட்டிப்பேன்? அப்ப இன்னும் தனியனாகி விடுவேனோன்னு ரொம்பவும் பயமாயிருக்கு.

'ஏனோ தெரியலை, இந்த வாழ்க்கை என்னை ரொம்பவும்...ரொம்பவும் பயமுறுத்துகிறது! அது அவங்களுக்குப் புரியாது. என்னால் விளக்கிச் சொல்ல முடியாது...'

அவன் உமாவையே பார்த்துக் கொண்டிருந்தான். உமா திடீரென்று பல ஆண்டுகள் அனுபவம் முதிர்ந்தவளாய்த் தோன்றினாள்.

உமா என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்? உமாவின் மனதை அவனால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. இந்த ஆக்ஸிடெண்ட் ஆன பிறகு, உமா மிகவும் மாறிப் போய் விட்டாள்.

ரவிசங்கரனிடம் உமாவுக்கு விரக்தியும், தொலைவிற்குப் போய் விட்டாற் போன்ற உணர்ச்சியும் ஏற்பட்டிருந்தது நன்றாய்த் தெரிந்தன.

'என்னிடம் இன்னும் ஏதாவது வேலை இருக்கா?" உமா கேட்டாள்.

'ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை' முணுமுணுத்துக் கொண்டே அவன் திரும்பி வந்துவிட்டான்.

அன்று முழுவதும் எந்த வேலையில்ஆழ்ந்திருந்தாலும் அவன் செவிகளில் உமாவின் வார்த்தைகளே பிரதிபலித்துக்கொண்டிருந்தன.

அன்று மாலையில் ரவிசங்கரன் அறைக்குள் வந்து விளக்கைப் போடப்போன பொழுது காலில் ஏதோ மெத்தென்று பட்டுவிட்டு மாயமாயிற்று. அவன் கலவரத்துடன், அதிர்நதுபோய் விளக்கைப் போட்டான்; அவ்விளக்கு வெளிச்சத்தில் சிவநத கோளங்களைப் போல பளபளத்த கண்களுடன் முயல் தென்பட்டது. ரவிசங்கரனை நோக்கிப் பாய்ந்து வந்து கொண்டிருந்த அதுசரேலென்று கட்டிலுக்கடியல் போய் ஒளிந்து கொண்டது. அவன் கட்டிலுக்கு அடியல் குனிந்து பார்த்தான் அங்கே மூன்று முயல்கள் படுத்திருந்தன.

அது உமாவின் அறை. அங்கு வந்து கட்டிலடியில் படுத்துக் கொள்வது அவற்றின் வழக்கம்தான். அவை



உமாவின் அழைப்பிற்காகக் காதுகளைத்தீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பது போலத் தோன்றியது. ஜன்னல் கம்பிகளின் மேல் கிளி வந்து உட்கார்ந்துகொண்டது.

'உமா, உமா. உன் புருஷன் வந்துட்டானே!' என்றது.

ரவிசங்கரன் கூண்டைக் கொண்டு வந்து ஜன்னல் கம்பிகளில் மாட்டினான். கிளி சரேலென்று அதற்குள் நுழைந்து ஊஞ்சல் கட்டையின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டது.

ரவிசங்கரன் கிட்டே வந்தபோதிலும் அது பறந்து போகவில்லை. தன் இருப்பிடம் அதுதான் என்றுஉணர்ந்து கொண்டாற்போல அதன் மேல் ஏறி உட்கார்ந்தபடி ஆடிக்கொண்டிருந்தது. ரவிசங்கரன் மெதுவாய் கூண்டின் கதவைச் சாத்தினான். கட்டிலுக்குக் கீழே குனிந்து முயல்களைப் பிடித்துக் கொண்டு வந்து, அவற்றை மரப்பெட்டியில் மூடி, பசும்புல்லையும், தழைகளையும் போட்டான். பிராணி வளர்ப்பு சங்கத்திற்குப் போன் பண்ணினான்.

நாய்கள் பிஸ்கட்டுகளைக் கூட தின்பதில்லையாம். தண்ணீர் குடிப்பதில்லையாம். அவற்றை உடனே அனுப்பி வைத்து விடும்படித் தெரிவித்தான். வேலைக்காரனை அனுப்பினான். உமா மறுநாள் காலையில் எழுந்திருப்பதற்குள் வராந்தாவில் அறைக்கெதிரேயிருந்த கூண்டிற்குள் ஆடிக்கொண்டே— கிளி கொய்யாக் காய்களைப் பலகாரம் பண்ணிக் கொண்டே—

'உமா! உமா! உன் புருஷன் வந்துட்டான், எழுந்திரு!' என்று அழைத்துக் கொண்டிருந்தது.

முயல்கள் பசும் புற்களைக் கொரித்துக் கொண்டே திருப்தியோடு பார்த்துக் கொண்டிருந்தன. உமாவைப் பார்த்ததுமே தொலைவில் கட்டிப் போடப்பட்டிருந்த நாய்கள் காச்சு மூச்சென்று கத்தத் தொடங்கின.

'யார் கூட்டிட்டு வந்தாங்க இதுகளை?' உமா சமையல்காரனைக் கூப்பிட்டு இரைந்து கேட்டாள்.

'ராத்திரி ஐயா கூட்டிட்டு வரச்சொன்னாருங்கம்மா' என்றான்.

'ரொம்பப் பெரிய காரியம்பண்ணிட்டார்.' என்றாள். அம் முகத்தில் எரிச்சல், ரோஷம் தென்பட்டன. ரவிசங்கரன் அவ்விடத்திற்கு வந்தான்.

'இதுங்களை ஏன் கூட்டிட்டு வந்திங்க?' கேட்டாள்.

'உமா! இவை உன் பாசத்தால் பிரிந்துப் போக முடியாமல் தவிக்கின்றன. இவ்வளவு நாளாய் வளர்த்து வந்து கொணடிருந்த நீ, இப்பொழுது விட்டு விட்டால் எப்படி? அதுங்களுக்கு வாயில்லை. இருந்தால் இது ரொம்ப அநியாயம்னு ஓலமிட்டிருக்கும்.'

அவற்றிற்கு வாயில்லை. ஆனால் எனக்கு நடந்துகிட்டிருக்கும் அநியாயத்துக்கு என்ன சொல்றீங்க? வாயிருந்தும் என்னால் யாரையும் எதுவும் கேட்கமுடியாது.'

'உமா சரேலென்று திருப்பி அங்கிருந்து போய் விட்டாள். ரவிசங்கரன் இன்னும் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

❀ ❀ ❀

வசந்தி ஆபீசிற்கு வந்தாள். ஜெயபிரசாத் அதற்கும் முன்பே வந்திருந்தான். வசந்தி அவனைப் பாராதது போல இருந்தாள். அவனும் எப்பொழுதும் போல 'ஹலோ குட் மார்னிங்' என்று சொல்லவில்லை. வசந்தி ஃபைல்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். இருவரும் பரிச்சய மில்லாதவர்களைப் போல இருந்து கொண்டார்கள்.



மாலை ஆயிற்று. இருவரும் பஸ் ஸ்டாண்டிற்கருகில் வந்து நின்றார்கள். எவ்வளவு நேரம் காத்திருந்த போதிலும் பஸ் வரவேயில்லை. ஆட்டோ ஒன்று, வந்தது. வசந்தி அதில் ஏறப் போன பொழுது ஜெயபிரசாத் இடீரென்று கேட்டான்.

'என்னைக் கொஞ்சம் சென்டரலுக்கருகில் இறக்கி விடறீங்களா?'

வசந்தி சரி என்று தலையாட்டினாள். ஜெயபிரசாத் ஏறிக்கொண்டான். இருவரும் வழியில் ஒரு வார்த்தைகூட பேசிக்கொள்ளவில்லை. சென்டரல் வந்துவிட்டது. வசந்தி ஆட்டோவை நிறுத்தச் சொன்னாள்.

ஜெயபிரசாத் இறங்கிக் கொண்டே 'தாங்க் யூ' என்றான்.

'நோ மென்ஷன்' என்றாள். அவன் இறங்கிப் போய் விட்டான்.

அவன் கையாட்டப் போனான். ஆனால் வசந்தி அவன் பக்கமாய்த் திரும்பாமல் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்ததால் நின்றுவிட்டான். அவன் முகம் சிறுத்து விட்டது. வருத்தத்தை அடக்கிக் கொண்டிருந்தாள் போலிருந்தது

வசந்தி வீட்டிற்கு வந்தாள். எவ்வளவு மறக்க முயன்றாலும் ஜெயபிரசாத் கவனிக்காமல் போனது ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தது. இப்பொழுதெல்லாம் அவன் வரவால் அவளுக்கு நன்றாய்ப்பொழுது போய்க் கொண்டிருதது.

மூன்று நான்கு நாட்களாய் ஜெயபிரசாத் வராமலிருந்ததால் வீட்டில் சந்தடி இல்லை. போன் ஒலிக்கவில்லை.

வசந்திக்கு இருந்து வந்த ஒரே சிநேகம்கூட விடுப்பட்டுப் போய்விட்டது போலிருந்தது.

வசந்தி கைகால் கழுவிக் கொண்டு உடை மாற்றிக் கொண்டாள். அக்கா உப்புமாவைக் கொண்டு வந்து தந்து சாப்பிடச் சொன்னாள். பசி இல்லை என்று மறுத்து விட்டாள் வசந்தி. என்றோ பாதி பின்னி விட்டு விட்டிருந்த ஒயர் கூடையை எடுத்து வைத்துக் கொண்டு முடையத் தொடங்கினாள்.

இதென்ன வாழ்க்கை! இவ்வளவு சலனமே இல்லாமல் இருக்கிறதே! எதிலுமே ஆர்வம் இல்லை. இதுவரை புது சினிமா ரிலீஸ் ஆனால் முதல் ஆட்டத்திற்கே முந்திக் கொள்வாள். எப்பொழுதும் கொட்டமடித்துக் கொண்டேயிருப்பாள். அவளிடம் ஏதோ மாறுதல் வந்து விட்டது.

வசந்தி ஜன்னல் வழியாய்ப் பார்த்தாள். வானத்தில் மேகங்கள் தென்பட்டன. முன்பெல்லாம் அவற்றைப் பார்த்தால் சந்தோஷம் ஏற்படும் வானத்தில் ஓடும் மேகங்களைப் பார்த்து விட்டு ரவிசங்கரனுக்குச் சுட்டிக் காட்டுவாள். அவன சிரித்துவிடுவான்.

'அந்த மேகங்களில் நீ எது, நான் எது?' என்பான்.

'அருகருகே ஜோடியாய் ஓடும் மீனைப் போன்ற அந்த மேகங்கள் நாம்ப'— என்பாள்.

ஒன்று முன்னாடியும் இன்னொன்று பின்னாலும் இருக்கும் மேகங்களை அவளால் ஒப்புக்கொள்ளமுடியாது. ஏனெனில் இருவரும் சமமாய் அருகருகில் நடந்து செல்ல வேண்டும். ஒருத்தர் முன்னாடியும் மற்றொருத்தர் பின்னாலும் கூடாது. இதைக் கேட்டு விட்டு ரவிசங்கரன் சிரித்து விடுவான். 'அசட்டுப் பெண்'—என்று மூக்கைப் பிடித்துத் திருகுவான்.



'ஹலோ! குட் ஈவினிங், நான் உள்ளே வரலாமா?' வாசலில் குரல் கேட்டு நிமிர்ந்தாள். எதிரே ஜெயபிரசாத் நின்று கொண்டிருந்தான்.

'ஏன் புதுசாய் கேட்கிறீங்க? வாங்க' என்றாள் வசந்தி

'நீங்க என் கண்ணுக்குப் புதுசாய்த் தென்படறீங்க அதான்!' என்றான் உள்ளே வந்துகொண்டே. அவளுக்கெதிரே உட்கார்ந்து கொண்டான். வசந்திக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை.

ஒயர் கூடையின் மீது பார்வையை நிறுத்தி மளமளவென்று பின்னிக் கொண்டிருந்தாள். அவனும் அதையே கவனித்துக் கொண்டிருந்தான்.

இருவருக்குமிடையே மௌனம் குறுக்குச் சுவராய் நின்றது. அவன் அதைச் சிதறடிக்க முயன்றபடி சொன்னான்—'நீங்க என்னை மன்னிக்கணும்.'

'ஏன்?'

'நான் முட்டாளாய் நடந்துக்கிட்டேன்.'

'அதென்ன விஷயம்?'

'முந்தா நாள்...உங்களுக்கும் அக்காவுக்கும் நடந்த போராட்டத்தில் என் மூளையே சுற்றத் தொடங்கி விட்டது. என் காலடியில் பூமி நழுவிப் போய் விட்டது. இன்றுதான் திரும்பவும் உங்கக்காவுடன் பேசிய பிறகு அது சரியாயிற்று.'

வசந்தி நிமிர்ந்தாள். அக்காவும் இவனும் பேசிக் கொண்டார்களா? என்னவாயிருக்கும்?

ஜெயபிரசாத் வசந்தியின் விரல்களின் சுறுசுறுப்பைப் பார்த்துக் கொண்டே சொன்னான் :

'மனிதனின் பெரிய பலவீனம் எது தெரியுமா? தாமாகவே ஆசையை வளர்த்துக் கொள்வதுதான். அவை நிறைவேறாவிட்டால் உலகமே தலை கீழாகி விட்டாற் போல வருந்துவார்கள்!'

அவள் மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் தொடர்ந்தான்—

'பண்ணிய பாவத்தைச் சொல்லிவிட்டால் போயிடும் என்பாங்க. உங்களைக் கலந்தாலோசிக்காமலேயே நான் சில யோசனைகளைப் பண்ணியிருக்கிறேன். உங்கள் வாழ்க்கையில் யாருமே இல்லைன்னு நினைச்சுட்டிருந்தேன், ரவிசங்கரனின் விஷயத்தைப் பற்றிக் கேள்விப்படும் வரைக்கும்'

வசந்தி சரேலென்று நிமிர்ந்தாள். 'தயவுசெய்து ரவிசங்கர் பெயரை எடுக்காதீங்க. அந்த விஷயத்தை யாரோடும் வாதாட எனக்குப் பிடிக்கலை. என் வாழ்க்கையில் ஏதாவது அபூர்வமானது இருந்ததென்றால் அது அவரோட பரிச்சயத்தான் என்பேன்.'

'ஓ. கே. ஓ. கே! நான் அவனைப் பற்றிப் பேசலை. என்னைப்பற்றிச் சொல்லப் போறேன். இதப்பாருங்கள். உங்க மேல் ஏனோ தெரியலை எனக்கு அன்பு ஏற்பட்டு விட்டது. உங்கள் வாழ்க்கையில் யாருமே இருந்திருக்க முடியாதுன்னு ஆசைப்பட்டேன்.'

'அந்த மாதிரி ஆசை எதையும் நான் உண்டாக்கவில்லையே?'

'ஆப்கோர்ஸ்! அது நிஜந்தான்! அதான் சொன்னேன், மனிதன் எதிராளியின் தலையீடு இல்லாமலேயே பெரிய ஆசைங்களையெல்லாம் ஏற்படுத்திக் கொள்கிறான்னு! அதன் பலனைக் கூட என்றாவது ஒருநாள் அனுபவித்துத் தீரணும் என்றும் தெரிந்து கொண்டு விட்டேன்.



'முந்தா நாள் இங்கிருந்து நான் நேராய் வீட்டிற்குப் போகவில்லை. பைத்தியத்தைப் போல எங்கெல்லாமோ சுற்றியலைந்தேன்; சாப்பிடவில்லை; தூங்கவில்லை; மனமெல்லாம் மரத்துவிட்டிருந்தது. வழியில் தென்பட்ட எல்லோரையும் பிடித்துத் தள்ளிவிட வேண்டும் போல ஆத்திரம் ஏற்பட்டது. என் பேரிலேயே எனக்கு மிகக் கோபம் வந்தது.

'நான்... நான் ஒரு முட்டாள் என்று தோன்றிற்று. அலுத்துக் களைத்துப் போனேன். வீட்டிற்கு வந்து கட்டிலில் பட்டினியோடு விழுந்தேன்.' என் சித்தியின் மகள் கலங்கிப் போய்விட்டாள். அம்மாவுக்கு லெட்டர் எழுதட்டுமா என்றாள்.

'கடைசியில் அந்த ஆத்திரம் குளிர்ந்து விட்டது. எரிமலை ஆகிவிட்டது மனம். நான் எதற்காக வருந்துகிறேன் என்று என்னையே கேட்டுக்கொண்டேன். சுஜாதாவின் விஷயத்தைச் சொன்னபோது நீங்கள் எவ்வளவு இரக்கத்தோடும், சிரத்தையோடும் கேட்டீங்க. உங்களிடம் எந்த மாறுதலும் இல்லையே. மேலும் இன்னும் நெருக்கமானவர்களாகவும் ஆகிவிட்டோம். அப்படிப்பட்ட நான் ரவிசங்கரனின் விஷயத்தைக் கேட்டதுமே ஏன் அதுபோல ஆகணும்?'

அப்பெயரைக் கேட்டதும்வசந்தி மறுபடியும்நிமிர்ந்து பார்த்தாள்.

ஜெயபிரசாத் சொன்னான்: 'ப்ளீஸ்! அப்படிப்பார்க்காதீங்க. உங்க வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு ஆளைப் பற்றியும் பேச எனக்கு உரிமை இருக்குன்னு நினைக்கிறேன்.

'ஆங்... உங்களுக்கு இருபத்தைந்து வயதிருக்கும்னு நினைக்கிறேன். இதுவரை எந்தச் சம்பவமும் உங்கள்

வாழ்க்கையில் இல்லாமலிருந்திருக்கும்னு நினைப்பது என் தவறு! ஆணாகிய என் அகம்பாவம்! இதப் பாருங்க! காலம் மாறிடுத்து. பெண்களும் சரிநிகர் சமானமாய் எல்லாவற்றிலும் பங்கெடுத்துக்கிறாங்க. வாழ்க்கையில் ஆணுக்கு எவ்வளவு அனுபவங்கள் எதிர்படுமோ அதற் கிணையாய்ப் பெண்களுக்கும் ஏற்படும். பெண்ணைத் திரைக்குப் பின்னால் வைத்திருக்க வேண்டும் என்பது முட்டாள்தனம்.

'என் வாழ்க்கையில் நான் காதலில் தோல்வியடைந் தாற்போலவே நீங்களும் உங்கள் வாழ்க்கையில் தோல்வி யடைந்திருக்கிறீர்கள். இருவர் அனுபவமும் ஒன்றுதான். நியாயமாய் யோசித்துப் பார்த்தால் நாமிருவரும்ஒருவரை யொருவர் அதிகமாய்ப் புரிந்து கொள்ள வேண்டும். சுஜா தாவின் விஷயத்தைக் கேட்டுவிட்டு நீங்கள் நல்ல மன துடன் என் வருத்தத்தைப் புரிந்து கொண்டீர்கள்.

'ஆனால் என்னால் அந்தக் காரியத்தைப் பண்ணமுடிய வில்லை. அதனால் எனக்கே வெட்கமாய் இருக்கிறது. அதனால்தான் உங்களை மன்னிப்புக் கேட்டுக்கறேன். உங்கள் கடந்தகால வாழ்க்கையை நீங்கள் எவ்வாறு ஒப்புக்கொண்டீர்களோ அதுபோலவே நானும் உங்கள் வாழ்க்கையை ஒப்புக்க வேண்டும் இல்லையா?

நாமிருவரும் சிநேகிதர்கள். எந்த மனிதனுக்குமே வாழ்க் கையில் பணத்தைவிட—பெயரைவிட, இன்னும் சொல்லப் போனால் காதலையும்விட மதிப்பானம் சிநேகம் என்பது என் எண்ணம். இந்த சிநேகத்தைப் பெற முடிந்தது மிக அதிர்ஷ்டம்! வாழ்க்கையில் நல்ல சிநேகத்தைக் காட்டி லும் விலை மதிப்பானது வேறெதுவும் இல்லை என்பது என் உத்தேசம்!'

வசந்தி கூடை பின்னுவதை விட்டுவிட்டு விநோத மாய்,மகிழ்ச்சியாய் அவனையே பார்த்துக் கொண்டிருந்



தாள். சிரித்துப் பேசித்துள்ளிக் கொண்டிருக்கும் ஜெய பிரசாதிடம் அந்த நேரத்தில் வேறு மனிதனாகத் தென் பட்டான் வசந்திக்கு.

ஜெயபிரசாத் சீரியஸாய்க் கேட்டான்—

'என்ன சொல்றீங்க? நாமிவரும் சிநேதர்கள். இல் லையா?'

வசந்தி தலையாட்டினாள்.

'இதப்பாருங்கள், சிநேகத்திற்கு ஒரு உரிமை உண்டு. தப்புப் பண்ணினால் பயம் இல்லாமல், தயங்காமல் மன்னிப்புக் கேட்டுக்கணும். நான் உங்களிடம் மனப்பூர் வமாய் மன்னிப்புக் கேட்டுக்கறேன்.'

'நீங்க இப்ப என்ன தப்புப் பண்ணிட்டீங்க?'

'மூன்று நாளாய் உங்கக் கண்ணில் படலை. ஏறக் குறைய உங்களை விட்டுத் தொலைவிற்குப் போனது போல் நடந்துக்கிட்டேன்; அது என் தப்புதான்!'

'பலே ஆள்தான் நீங்கள்!' வசந்தி பக்கென்று சிரித்து விட்டாள். அதற்குள் அக்கா இரண்டு தட்டுக்களில் பக்கோடாக்களைக் கொண்டு வந்தாள். வசந்தி ஒன்றை எடுத்துக் கொண்டு ஜெயபிரசாதிடம் மற்றொன்றைத் தந்தாள். 'தாங்க்யூ. இப்ப என் மனம் ரொம்ப நிம்மதி யாய் இருக்கு' என்றான்.

'எனக்குந்தான்' என்றாள் வசந்தி சிரித்துக் கொண்டே.

அன்று காலையில் பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்த ரவிசங்கரனிடம் காபி தம்ளருடன் வந்தாள் காமாட்சி. அவன் தலைமேல் கைவைத்து— 'ரவி! நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலின்னு இப்பத்தான் புரிகிறது எனக்கு. நான் நிஜமாய் ரொம்ப அதிர்ஷ்ட சாலிதான் அப்பா! அந்த எதிர்த்த வீட்டு சீதாவைப் பார்த்த பிறகு தான் எனக்கு இது நன்றாய்ப் புரியத் தொடங்கியது. சீதாவின் கணவன் இறந்துவிட்ட பிறகு அவள் இரண்டு பிள்ளைகளுக்குள் அம்மாவை யார் வைத்துப்பதுன்னு போட்டி வந்துடுத்து. கடைசியில் ஒருத்தராலும் முடியாமல் போய் 'ஹோமில்' சேர்த்துட்டாங்க...

'நீ என் பேச்சை மீறி வசந்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தால் நானும் பசங்களும் என்ன வாகியிருப்போம், சொல்லு?

'அதுக்காகவே நீ உமாவைப் பண்ணிக் கொண்டாய். உமா நல்ல பெண்... எனக்கு அவ்வப் பொழுது தோணுகிறது— இந்தக் கல்யாணத்தைப் பண்ணி உமாவுக்கு நானே அநியாயம் பண்ணிட்டேனோன்னு?

'உமாவை மட்டும் கொஞ்சம் சந்தோஷமாய் வைத்துக் கொள். நம்மால் உமா கஷ்டப்பட்டால் கடவுள் கூட நம்மை மன்னிக்கமாட்டார். இன்றைக்கு நாம்ப இவ்வளவு கவலையில்லாமல் இருக்கிறோம் என்றால் உமாதானேடா அதற்குக் காரணம்?

'உமா கொஞ்சம் கர்வக்காரியாய் இருந்திருந்தால் நாம் எங்கே இருந்திருப்போம் சொல்லு?

'ரவி! நானும் பசங்களும் இப்ப சுகமாய் இருக்கிறோம். உமா சுகமாய் இருந்தால்தான் இந்த ஆனந்தம் நிலைக்கும். நீ என்னை நன்றாய்தான் கவனித்துக் கொள்கிறாய்டா. எனக்கு எந்தக் குறையும் இல்லை. உமாவை



யும் நன்றாய்ப் பார்த்துக் கொள்! உமாவைத் துன்புறுத்தாதே!'

'இப்ப நான் என்னம்மா பண்ணிட்டேன்?'

'உமாவின் சொந்தக்காரங்க எல்லாம் வசந்தியைப் பற்றியும் உன்னைப் பற்றியும் பேசும்போது எனக்கு ரோஷம் வருது. என் மகன் அப்படிப்பட்டவன் இல்லைன்னு சொல்லத் தோணுது. ஆனால் உலகம் நாம்ப பண்ற காரியங்களையெல்லாம் கவனித்துட்டே இருக்கே தவிர, பேச்சை எங்கே கேட்கிறது, சொல்லு! இன்றைக்குக் கோவிலுக்குப் போனேன்—அங்கே என்ன வாச்சு தெரியுமா?'

'என்னவாச்சு?'

'உமாவின் தூரத்து உறவுக்காரி ஒருத்தி வந்திருந்தாள். என்னைப் பார்த்ததுமே வேலை மெனக்கெட்டுக் கொண்டு, வந்து விசாரித்து விட்டு,

'அந்த வசந்தி கூட உங்க வீட்டில்தான் இருக்கிறாளான்னு—கேட்டாள். 'எங்க வீட்டில் ஏன் இருப்பாள்' என்று கேட்டதற்கு, 'உங்கப் பிள்ளை கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டதாய்ச் சொன்னாங்களே?' என்று கேட்டாள்.

'அவங்களுக்கு என்னத்தைச் சொல்றது நான்? நீ அந்தக் கம்பெனி விஷயத்தில் மூழ்கிப் போய் நாலு பேருக்கு முன்னால் வரவே மாட்டாய். வந்தால் தெரியும் உனக்கு. ஒவ்வொருத்தரும் பேசுவதைக் கேட்டால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருக்கும்.

'ரவி! உனக்குத் தெரியாதது இல்லை, நான் சொல்லத் தேவையில்லை. நம்பக் குடும்பக் கௌரவத்தைச் சந்தி சிரிக்க வைப்பாயோ! அல்லது ரகசியமாய் வைத்துப்பாயோ எல்லாம் உன் கையில்தான் இருக்கு. என் வருத்தத்தைப் புரிஞ்சுக்கோ.'

அவள் கண்களிலிருந்து நீர் பொலபொல வென்று உதிர்ந்தன.

மகனும் மருமகளும் அந்நியோன்யமாய் இல்லை என்றும், அவர்கள் வாழ்க்கை நான்கு பேருக்கு முன்னால் சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது என்றும் தெரியும் அவளுக்கு இது அவள் மனதில் ஆறாத புண்ணாய் இருந்து வந்தது. அதனால்தான் அவள் இதை அடிக்கடி மகனிடம் சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

ரவிசங்கரனும் யோசிக்கத் தொடங்கினான். எதிர்த்த வீட்டுச் சீதாவின் கதியைப் பார்த்ததும் அவனுக்கு ஏதோ உண்மை புரிந்தாற் போலிருந்தது.

மகன்கள் தாய்க்கு நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை நிறைவேற்றவில்லை என்றும் தம் சுகத்தைத் தாம் பார்த்துக் கொள்கிறார்கள் என்றும் அவன் அவர்களைப்பற்றி எண்ணினான். இப்பொழுது அவன் செய்து கொண்டிருந்த காரியந்தான் என்ன? உமாவிடம் அவன் நடந்து கொள்ளும் விதம் சுயநலமாய் இல்லையா? ஊருக்கு உபதேசித்துவிட்டு அவனே அதுபோலச் செய்யவில்லையா?

ரவிசங்கரன் ஆபீசுக்கு வந்தான். ஆபீசிற்கு வந்து சுமார் இருபது நாட்கள் ஆகிறது. அன்று உமாவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆனது தெரிந்து ஆசுபத்திரிக்குப் போன நிமிஷத்திலிருந்து, உமா டிஸ்சார்ஜ் ஆகித் திரும்பி வந்து சாதாரணமாய் ஆகும் வரை அவன் வீட்டிலேயே தங்கி விட்டான். இந்த இருபத்திரெண்டு நாட்களும் அவன் வாழ்க்கையில் அழிக்க முடியாத சாசன எழுத்துக்களாய் நிலைத்து விட்டன.



அவன் கண் முன்னாலிருந்த பிரம்மைகளையெல்லாம் கிழித்துக் குதறியெறிந்து விட்டன. அவன் அவனுக்கே புதிய மனிதனாய்த் தோன்றினான்.

அவன் ஃபைல்களை எடுத்துக் கொண்டிருக்கையில் அதன் மேல் கடிதம் ஒன்று வைத்திருந்தது. அவன் பிரித்துப் படித்தான். அது வசந்தி எழுதிய கடிதம். அதில் இவ்வாறு இருந்தது.

'ரவி!

நீங்கள் என் கண்ணில்பட்டு இருபது நாட்களுக்கு மேலாகிறது நீங்கள் க்ஷேமமாகத்தான் இருக்கிறீர்கள் என்று ஜெயபிரசாத் மூலமாய் அவ்வப்பொழுது தெரிந்து கொண்டேதான் இருக்கிறது. நீங்கள் என்னைப்பற்றி யோசிப்பதற்குக்கூட டயம் இல்லாதபடி பிஸியாய் இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். நான் உங்களைக் கொஞ்சமும் தப்பு சொல்லவில்லை.

'வேலைத் தொந்தரவில் ஆழ்ந்து விட்டவர்களுக்குக் காலம் எப்படி ஓடிக் கொண்டிருக்கிறது என்ற நினைப்பே இருக்காது. ஆனால் எந்த வேலையும் பண்ணாமல் ஒருவருக்காகவே காத்துக் கொண்டிருந்து, அவர் வரவுக்காகவும், அவரிடமிருந்து வரும் போனுக்காகவும் தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு காலமே ஓடாது. இந்த இருபது நாளும் அல்லும் பகலும் நான் எவ்வளவு வேதனையடைந்து வந்தேன் என்று உங்களுக்குத் தெரியாது.

'ஆபீசிற்குப் போன் பண்ணினால், நீங்கள் வரவில்லை என்றார்கள். உமாவின் காயம் குணமாகும் வரையிலும் வர மாட்டீர்கள் என்றும் சொன்னார்கள். ஒரு முறை உங்கள் வீட்டிற்குப் போன் பண்ணியபோது உங்கள் தங்கை எதிர்ப்புத் தெரிவித்துப் பேசி விட்டாள். என்னால் உங்களுக்குப் போன் பண்ண முடியவில்லையே என்ற

வருத்தத்தையாவது என்னால் பொறுத்துக் கொள்ள முடியுமோ என்னவோ, ஆனால் திரும்பவும் போன் பண்ணி அந்த திரஸ்காரத்தை மட்டும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்று தோன்றிற்று.

'இந்த மாதிரி எத்தனை நாட்கள்? எத்தனை வருடங்கள்? நம்மிருவரின் வாழ்க்கைகளுக்கும் முடிவு கடைசியில் ஒருத்தருக்காக இன்னொருத்தர் காத்துக் கொண்டே கழிப்பதுதானோ என்று தோன்றிற்று.

சில சமயம் உமாவோடு சேர்ந்து உங்களைப் பார்த்து விட்டால், நான்தான் பிரம்மையில் ஆழ்ந்திருக்கிறேனோ, உமாவை உங்கள் வாழ்க்கையிலிருந்து பிரிக்கும் சக்தி உங்களுக்கே கிடையாது போலும் என்று தோன்றுகிறது.

'இந்த இருபது நாட்களுள் என் பயத்தை இன்னும் பெருக்கிவிட்டன. ரவி! இது என் தப்புதானோ? உங்களைப் பார்க்க முடியவில்லையே என்ற ஆவேசத்தால் ஏற்பட்ட யோசனைதானோ? என் மனதை என்னாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை.

'என் மனது சில சமயம் உங்களை ஆழ்ந்து நம்புகிறது. சில சமயம் சந்தேகிக்கிறது. இந்த யுத்தத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என் மனம் ரணகளமாய் இருக்கிறது. எந்த வேலையிலும் நாட்டம் கொள்ள மறுக்கிறது என் மனம்.'

'எனக்குத் தெரியும், இதற்கெல்லாம் காரணம் நான்தான். நான் ஒரு காலத்தில் தெரிந்தோ தெரியாமலோ என் சுயநலத்தைக் கருதாமல் உங்கள் தாயைப் பற்றியே யோசித்தேன். அந்த முட்டாள்தனத்தால் வாழ்க்கையில் எத்தனை விலைமதிப்பானதை இழந்துவிட்டேன் என்று எனக்கு இப்பொழுது புரிகிறது.



'ரவி! உங்கள் அம்மாவுக்கு என் மனம் புரியுமா? ஒருக்கால் என்றைக்குமே புரியாது போல் தோன்றுகிறது. இந்த உலகத்தில் யாருமே தம் சுயநலத்தைத் தவிர எதிராளியைப் பற்றி யோசிக்க மாட்டார்கள். யோசிக்கவும் கூடாது. ஏனெனில் மற்றவர்களைப்பற்றிய யோசனையைத் தொடங்கி விட்டால், நம்மால் எதுவுமே செய்ய முடியாது. எனக்கு இந்த விஷயம் நன்றாய்ப் புரிந்துவிட்டது. ரவி! அதனால்தான் நான் இப்பொழுது யாரைப் பற்றியும் யோசிப்பதில்லை. நம்மிருவரின் வாழ்க்கைக்கும் கரை எந்தப் பக்கத்திலோ?'

'இப்பொழுது துணிந்து நாம் ஒரு முடிவை எடுத்துக் கொள்ளாவிட்டால், நம்மிருவரின் வாழ்க்கையும் இப்படியே கழிந்து விடும் போலிருக்கிறது. திருமணமான நீங்களும்— திருமணமாகாத நானும்— இருவர் வாழ்க்கையும் சூனியமாய் நிலைத்து விடும் போலிருக்கிறது.

'ரவி! நான் இன்றைக்கு வைகை எக்ஸ்பிரஸில் மதுரைக்குப் போய்விடப் போகிறேன். நான் இனித் திரும்பி வரமாட்டேன்; அங்கே உத்யோகம் ஒன்று காலியாய் இருக்கிறதாம்! சிற்றப்பா அந்த உத்யோகத்தை எனக்கு வாங்கித் தருவதாய்ச் சொல்லியிருக்கிறார். நான் போகிறேன்.'

'நான் உண்மையிலேயே உங்களுக்கு வேண்டும் என்றிருந்தால் நீங்கள் உமாவுடன் தொடர்பை அறுத்துக் கொண்டு வந்துவிடுங்கள். நாம் இனித் திரும்பி வரவேண்டாம். நான் நன்றாய் யோசித்துப் பார்த்துவிட்டுத்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறேன்.'

'சிற்றப்பாவின் விலாசத்தை இங்கே எழுதுகிறேன். நான் உங்களுக்கு வேண்டுமென்றிருந்தால் நேராய் அங்கே வந்து விடுங்கள். நாமிருவரும் நிரந்தரமாய்ச் சேர்ந்திருக்க

முடியும் முடியாது என்று தீர்மானித்துக் கொள்வதற்கு இதைக் கடைசித் தருணமாய் நான் பாவிக்கிறேன். உங்கள் வரவிற்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேன்.'

இப்படிக்கு
வசந்தி'

ரவிசங்கரன் அக்கடிதத்தைப் படித்துவிட்டு விக்கித்துப் போய்விட்டான்.

ஒன்றுக்குப் பத்து முறையாய்ப் படித்தான். அவன் வசந்திக்குப் போன் பண்ண முயன்றபோது மேனேஜர் உள்ளே நுழைந்தார்.

'சார், பெங்களூரிலிருந்து வெங்கடாச்சாரி வந்திருக்கிறார்' என்றார்.

அவர் சொல்லிக் கொண்டிருந்தபோதே, 'ஹலோ, குட் மார்னிங்'— கையை நீட்டிக் கொண்டே வழுக்கைத் தலையுடனிருந்த ஒருவர் உள்ளே வந்தார். ரவிசங்கரன் எழுந்து கைக்குலுக்கினான் அவருக்கு.

பன்னிரெண்டு மணியானதும் வெங்கடாச்சாரி சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினார். ரவிசங்கரன் மேஜைக்கு முன்னால் வந்து உட்கார்ந்துக் கொண்டான். அதற்குள் கதவைத் திறந்துகொண்டு 'சார்' என்று தயக்கத்துடன் வந்தான் ரமணன். அவன் கம்பெனியில் அகௌண்டென்ட் பல ஆண்டுகளாய் வேலை செய்து வந்தான். அவன் மருமகன்கூட இங்கேயேதான் வேலை பார்க்கிறான்.

'என்ன விஷயம்?'— கேட்டான் ரவிசங்கரன்.

'நீங்க ஒரு சின்ன உதவி செய்யணும் சார்!'

'சொல்லுங்கள்.'



'என் மருமகன் இருக்கானே, அவன் நடத்தை கொஞ்ச நாளாய் சரியாயில்லைங்க, நீங்கதான் மிரட்டிக் கண்டிக்கணும்.'

'என்ன பண்ணினான்?'

'என் மகளைத் தந்து மணமுடித்து ஆறு வருஷமாகிறது. ரெண்டு குழந்தைங்க. வேலை வெட்டி இல்லாமல் சுற்றிட்டிருந்ததால், நான்தான் நம்ப ஐயாவிடம் செல்லி இங்கே வேலை வாங்கித் தந்துனுங்க. ஃபைல்ஸுங்களை எழுதத் தெரியாதபோது நான்தான் வேலையும் கற்றுத் தந்தேன். இப்ப என்ன பண்ணினான் தெரியுமா?'

'என்ன பண்ணினான்?'

'யாரோ நர்ஸைக் காதலிக்கிறானாம். என் மகளை விட்டுடப்போறானாம். என் மகளிடம் ஒரே அழுகைங்க!'

ரவிசங்கரன் நிமிர்ந்து உட்கார்ந்தான். தன் முகத்தில் வேகமாய்ப் படத்தொடங்கிய செம்மையை அவன் பாராதவாறு தலை குனிந்தபடி ஃபைலைப் பார்க்கத் தொடங்கினான்.

'அவனுக்கு அந்த நர்ஸ் மேலிருக்கும் பைத்தியத்தால் கட்டிய மனைவியின் வார்த்தைகள் காதில் விழமாட்டேங்குது. நீங்கதான் கொஞ்சம் புத்தி சொல்லணும்.'

'என்னால் என்ன சொல்ல முடியும்?'

ரமணன் முகம் கோபமாய் மாறிற்று.

'இந்த மாதிரியெல்லாம் நடந்துக்கிட்டால் வேலையை விட்டுத் தள்ளிடுவேன்னு சொல்லிடுங்க.'

'அதற்குப் பயந்துடுவானா? இன்னொரு உத்யோகத்தைத் தேடிக்கிறான்.'

கிழித்தான்? அவன் என்ன படிப்புப் படிச்சுக் கிழிச்சிருங்காங்க? இங்கே என்னவோ ஐயா என் மூஞ்சிக்காக வேலை போட்டுத் தந்தாரு. உங்களுக்கு ஏங்க? நீங்க கொஞ்சம் திட்டுங்க. உத்யோகத்திலிருந்து தள்ளிடுவேன்னு சொல்லுங்க, போதும். அதற்குமேல் நான் கவனித்துக்கறேன்.'

ரமணன் ரவிசங்கரின் அங்கீகாரத்தைத் தெரிந்துக் கொள்ளும் வரையிலும் காத்திருக்கவில்லை. 'டேய் மது! இங்க வாடா, கூப்பிடறாரு'— என்று கத்தினான்.

அவன் வந்தான். ரமணன் ஏன் கூப்பிட்டான் என்று அவனுக்குப் புரிந்து விட்டது போலிருந்தது. தலை குனிந்த படி நின்றான்.

'உங்க மாமனார் உன் மேல் ஏதோ புகார் சொல்லுகிறாரே. என்ன விஷயம்?' என்று கேட்டான் மது பதில் பேசவில்லை.

'மனைவி, குழந்தைங்கள் இருக்கும் போது இது போன்ற பைத்தியக்கார வேஷங்களைப் போடலாமாங்க? நீங்களே கண்டித்து வையுங்க. அது இவன் சம்பளத்தைப் பார்த்துதான் குழையுது.

'அதைச் சொன்னாலும் புரிய மாட்டேங்குது. ஐயா உன்னை வேலையிலிருந்து தள்ளிடுவாராம். இந்த மாதிரி பைத்தியக்கார வேஷங்களையெல்லாம் போட வேண்டாங்கிறாரு.'

தானே சொல்ல எண்ணியதைச் சொல்லி விட்டான். மது பேசவில்லை.

'இந்த உத்யோகம் போயிட்டால் அப்புறமாய் இவன் மூஞ்சியைக்கூட பார்க்காது அது. மொதல்ல உத்யோகம்



பறி போகாமல் பார்த்துக்கோ'—என்று அதட்டினான் ரமணன்.

மது தலையாட்டினான். இருவரும் உடனே போய் விட்டார்கள்.

ரவிசங்கரன் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டான். தான் என்ன பெரிய காரியத்தைச் சாதித்து விட்டோம் என்று மதுவிற்கு நியாயத்தை எடுத்துச் சொல்ல முடியும் என்று தோன்றியது.

* * *

மாலையில் ரவிசங்கரன் வந்தவர்களை யெல்லாம் அனுப்பிவிட்டு, சோர்வுடன் நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டான். இவ்வளவு நாட்களாய் ஆபீசுக்கு வராததால் வேலைப்பளு சேர்ந்து போயிருந்தது. அவசரமாய்க் கவனிக்க வேண்டிய ஃபைல்கள் நிறைய இருந்தன. அதற்குள் டிரைவர் வந்தான். 'அம்மா இதை உங்களிடம் தரச் சொன்னாங்க சார்' என்று ஒரு கவரைத் தந்துவிட்டு, வினயமாய் சல்யூட் பண்ணிவிட்டுப் போய் விட்டான்.

ஃபைலில் கையொப்பமிடப் போன ரவிசங்கரன் அதை நிறுத்திக் கொண்டு, கவரைத் திறந்து பார்த்தான். உமா எழுதிய கடிதம் அது. அதில் இவ்வாறு இருந்தது:—

'உங்களுக்கு,

உமா வணக்கத்துடன் எழுதிக்கொண்டது.

நான் இப்பொழுது பம்பாயிலுள்ள என் மாமா வீட்டிற்குப் போகிறேன். நான் வேண்டுமென்றே இந்தப் பிரயாண விஷயத்தை உங்களிடம் சொல்லாமல் ரகசியமாய் வைத்திருந்தேன்.

நான் இந்த இருபது நாளாய் உங்களுள் வேறு மனிதனைக் கண்டேன். அவர் என்னைச் சீராட்டினார். அன்பு செலுத்தினார். எனக்குத் துணையாகவும் நிழலாகவும் இருந்தார். ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் நான் எப்படிப்பட்ட ஆள் எனக்குக் கணவராய்வரவேண்டும்என்றுஎண்ணியிருந்தேனோ அதே ஆள் என் கண்முன் நின்றார்.

'எனக்கு ஜுரம் தணிந்துவிட்டது. காயங்கள் ஆறிக் கொண்டிருந்தன. நீங்கள் ஆபீசுக்குப் போயிருக்கிறீர்கள். எனக்குத் தெரியும் இந்த இருபது நாளாய் என்னை ஆளைப்பாற்றிய நபரை இனி நான் வாழ்க்கையில் என்றுமே திரும்பவும் பார்க்க முடியாது என்று நீங்கள் ஆபீசிலிருந்து வந்ததுமே திரும்பவும் பழைய ஆளாய் மாறிவிடுவீர்கள்.

'உங்கள் அலட்சியத்தையோ, பொருட்படுத்தாத தன்மையையோ என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. இதற்கு முன்பாயிருந்தால் எனக்கு உங்கள் அன்பு தெரிந்திருக்காது. அந்த அன்பில் ஆனந்தமடைந்திருக்கவும் தெரிந்திருக்காது. ஒருமுறை அன்பு செலுத்தியவரால் திரும்பவும் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ள யாருமே விரும்பமாட்டார்கள். அதனால்தான் நான் தொலை தூரத்திற்குப் போய் விடுகிறேன்.

'போகும் முன்னால் தயங்காமல் என் மனதிலுள்ள கருத்தைச் சொல்லிவிட்டுப் போக விரும்புகிறேன். இதை நானே சொல்லாமல் போனால் உங்களுக்கு என்றுமே தெரிய சான்ஸ் இல்லை என்று நினைக்கிறேன்.

'ஏனெனில் என் மனதில் உள்ள எதுவுமே உங்களுக்குப் புரியாது, ஆதலால்! புரிந்துகொள்ள வேண்டிய தேவையும் உங்களுக்கு இல்லை, ஆதலால்!



'நான் உங்களைத் திருமணம் செய்து கொண்டு இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. ஆனாலும் உங்கள் வாழ்க்கையில் நான் யாரோ மூன்றாம் மனுஷியாய்த் தான் நிலைத்து விட்டேன். உங்கள் மனம் எங்கே உள்ளது என்று நான் அறிவேன். உங்களை மணந்து கொண்டு பெரிய தவறு இழைத்து விட்டேன் என்று எண்ணுகிறேன். இது என் தந்தை செய்த அநியாயம்.

'திருமணமான முதல் நாளே உங்கள் மனதில் என் இருப்பிடம் எது என்று தெரிந்து கொண்டு விட்டேன். நான் மிகவும் ரோஷம் அடைந்தேன். உங்களோடு குடித்தனம் பண்ண முடியாது என்று அழுதேன். ஆனால் அப்பா குடும்ப கௌரவத்தைப் பற்றிச் சொன்னார். என் சுகத்தை விட அது தான் முக்கியம் என்றார். உங்களை வழிக்குக் கொண்டு வரும்படி சொன்னார். நானும் உங்களை என்னால் அடையவா முடியாது என்று எண்ணினேன்.

'முதல் முதலில் பிடிவாதமாய் உங்களை நெருங்க முயன்றேன். அதனால்தான் உங்கள் தாயையும் தம்பி தங்கைகளையும் மிக ஆதரவாய்க் கவனித்துக் கொண்டேன். அதுவும் லாபமில்லைஎன்றுதோன்றிவிட்டது. லஞ்சம் கொடுத்து யார் மனதிலும் இடத்தைப் பிடித்துக் கொண்டு விட முடியாது என்று கற்றுக்கொண்டேன்.

'ஆண் பெண் இருவரும் நெருக்கமாக வேண்டுமானால் அன்பு என்ற கயிற்றால் பிணைக்கப்பட வேண்டும். அது ஒருத்தரிடம் இன்னொருத்தருக்கு உண்டாக வேண்டிய வார்த்தைகளால் விவரிக்க முடியாத உணர்ச்சி. அப்பொழுதுதான் அந்த ஆண் பெண் சேர்க்கை மகோன்னதாய் இருக்கும்.

'இல்விரண்டு ஆண்டுகளில் நான் இருபதாண்டு அனுபவத்தைப் பெற்றுவிட்டேன். அப்பாவின் மரணம், உங்கள் பாராமுகம், சொந்தக்காரர்களின் ஏளனம்...

'எல்லாம் என்னைப் பிடிவாதக்காரியாய் மாற்றி விட்டதோ என்னவோ! உங்களை நான் மிகவும் கஷ்டப்படுத்தி விட்டேன் என்று எண்ணுகிறேன், முதலில் உங்களுக்குப் பிடிக்காத 'காரியங்களைப் பண்ணி இன்னும் உங்களை வதைத்தேன். ஆனால் அதனால் எந்தப் பலனும் இல்லை என்றெண்ணிநிறுத்திக் கொண்டேன்

'உங்கள் மனம் எங்கே உள்ளது என்று தெரியும். நீங்கள் வசந்தியை சொந்தமாக்கிக் கொள்ள இனி நான் குறுக்கே இருக்க மாட்டேன். ஏனெனில் ஒரு மனிதனை நாம் பலவந்தமாய்ப் பிணைத்துக் கட்டிப் போடுவதால் சச்சரவு, அமைதியின்மைதான் ஏற்படுமே தவிர, வேறு எதையும் பெற முடியாது என்று சுய அனுபவத்தால் தெரிந்து கொண்டேன்.

'நான் போகிறேன். தயவு செய்து என் மேல் இரக்கப்படாதீர்கள். எனக்கு யாருடைய இரக்கமும் தேவையில்லை. எனக்கு உங்களிடமிருந்து வேண்டியது எது என்று நீங்கள் நன்றாய் அறிவீர்கள். அதை உங்களால் கொடுக்க முடியாதபோது, உங்கள் வாழ்க்கையில் ஒரு திருஷ்டி பொம்மையாய் நின்று கொண்டிருக்க நான் விரும்பவில்லை.

'நீங்கள் விவாகரத்திற்கு ஃபாரத்தை அனுப்பி வையுங்கள். கையெழுத்துப் போட்டு அனுப்பி விடுகிறேன். ஒரு விநாடி கூடத் தாமதிக்க மாட்டேன். கடவுள் எனக்கு எல்லாவற்றையும் வழங்கியிருப்பதாய் நினைத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது தெரிகிறது அவர் எதையுமே வழங்கவில்லை என்று.



'என் துரதிர்ஷ்டம் என்னைப் பழிக்கிறது. இந்த உண்மையை ஒப்புக்கொண்டு விலகிப் போகிறேன்.

உமா.'

ரவிசங்கரன் திக்கித்துப் போய் அப்படியே உட்கார்ந்து விட்டான். இரவு எட்டு மணி ஆயிற்று. அவன் இன்னும் அப்படியே சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தான். அவனுக்கெதிரே மேஜை மேல் வசந்தி, உமா இருவரும் எழுதிய கடிதங்கள் கிடந்தன.

ரவிசங்கரனுக்கு அவை இரண்டு வழிகளாய்த் தென்பட்டன. பொருள் பொதியப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அவன் இரு கைகளும் கேசங்களில் அளைந்துக் கொண்டிருந்தன. நாற்காலியில் சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டான்.

அவன் அந்தரங்க மனம் தீவிரமான போராட்டத்தில் ஆழ்ந்து போயிருந்தது.

ஒரு வாரத்திற்குப் பிறகு...

ரவிசங்கரன் ஆபீசில் உட்கார்ந்து ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மிகவும் இளைத்து விட்டிருந்தான். சோர்வு, வேதனை, தூக்கமின்மையைக் காட்டிக் கொண்டிருந்தன அக் கண்கள்.

அதற்குள் தடாலென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் ஜெயபிரசாத். அவன் குறாவளியாய் இருந்தான்.

'ரவிசங்கரன் சார்! வசந்தி ஆபீசுக்கு லாங் லீவு போட்டிருக்கிறாளாம். ஊருக்குப் போயிட்டாளாம். எந்த ஊருக்குன்னு அவங்க அக்காவை எவ்வளவு கேட்டாலும் சொல்லமாட்டேங்கிறாங்க. உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'

அவன் முகம் மிகக் கலக்கத்தில் தோய்ந்திருந்தது. ரவிசங்கரன் அவனை உட்காரச் சொல்லி கைகைக் காட்டினான். ஆனால் அவன் உட்காரவில்லை, பரபரப்போடு,—

'நான் ஊரில் இல்லை. இன்றைக்குத்தான் வந்தேன். வசந்தி அப்படிப் போய் விட்டாள் என்றால் ஏதாவது பெரிய காரணம் இருந்தே தீரும். ஏதோ வருத்தத்தால் தான் இப்படிப் பண்ணியிருக்க வேண்டும்'

ரவிசங்கரன் அவன் பரபரப்பைப் பார்த்துவிட்டு, 'தெரிந்து நீங்க என்ன செய்யப் போறீங்க?' என்றான்.

'என்ன பண்ணுவேனா? இதென்ன இப்படிக் கேட்டுட்டீங்க? என்னால் முடிந்தால் அந்த வருத்தத்தைத் தீர்ப்பேன். முடியாது போனால் தேற்றுவேன். வசந்தியை எனக்கு ரொம்பப் பிடிக்கும், ஐ லைக் ஹெர் வெரி மச்! அவள் சிநேகிதன் தான். நான் மட்டும் ஊரில் இருந்திருந்தால் அப்படிப் போயிருப்பாளா? போக விட்டிருப்பேனா?'

'ஒரு நிமிஷம் உட்காருங்க, ப்ளீஸ்' என்றான் ரவி. ஜெயபிரசாத் உட்காரவில்லை. நாற்காலியைப் பிடித்துக் கொண்டே சங்கடத்தில் நெளிந்தான்.

ரவிசங்கரன் டிராயரைத் திறந்து வசந்தியின் கடிதத்திலிருந்த விலாசத்தைக் குறித்துக் கொடுத்தான் ஒரு காகிதத்தில். ஜெயபிரசாத் அதைப் பார்த்ததுமே, 'மைகாட்! மதுரை!' என்றான்.

உடனே நேரத்தைப் பார்த்துக் கொண்டே, 'வைகை எக்ஸ்பிரஸ்ஸுக்கு இப்ப நேரே போனால் டயம் சரியாயிருக்கும். வசந்தியைப் பார்த்தால்தான் என்னால் திரும்பவும் சாதாரணமாக முடியும். வரேன்.'



'ஒரு நிமிஷம் இருங்கள். நானும் வரேன். உங்களை ஸ்டேஷனில் இறக்கி விடுகிறேன்' என்றான் ரவி. ஜெயபிரசாத் வியப்போடு பார்த்தான்.

ரவிசங்கரன் அதைக் கவனியாதது போலவே எழுந்து கார் சாவியைக் கையிலெடுத்துக் கொண்டான்.

இருவரும் ஸ்டேஷனுக்கு வந்தார்கள். வழியில் இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவேயில்லை.

ரவிசங்கரன் ஜெயபிரசாத்தை ஸ்டேஷனுக்கருகில் இறக்கி விட்டதும், 'தாங்கஸ்! உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துட்டேன்' என்றான் ஜெயபிரசாத் சங்கோஜத்தோடு.

'பரவாயில்லை இந்தக் கடிதத்தை நான் கொடுத்ததாய் வசந்தியிடம் தாங்க.' ஜேபியிலிருந்து கவரை எடுத்துத் தந்தான்.

'கண்டிப்பாய்!' என்றான் ஜெயபிரசாத்.

ஜெயபிரசாத் ஏறிய ரயில் புறப்பட்டது.

ரவிசங்கரன் வீட்டிற்குத் திரும்பினான். காரை ஓட்டிக் கொண்டிருக்கையில் மனதிற்குள்—

'நான் சரியான முடிவைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். என் முடிவு சரியானது தான்' என்று திரும்பத் திரும்ப அவன் மனதில் தோன்றிக் கொண்டேயிருந்தது.

பம்பாயில்—

உமா தலைக்குக் குளித்துவிட்டு சோபாவில் உட்கார்ந்து சிக்குகளை எடுத்துக் கொண்டிருந்தாள். மாமாவும் மாமியும் இல்லை. ஏதோ திருமணத்திற்குப் போய் இருந்தார்கள். உமாவை வரச் சொல்லிப் பலவந்தப்படுத்தினார்கள். ஆனால் உமா வர மறுத்து விட்டாள்.

'ஏம்மா, எப்பப் பார்த்தாலும் இப்படி மரவட்டையாய்ச் சுருண்டு சுருண்டு படுத்துட்டிருக்கிறாய். உடம்பு சரியாயில்லையா? ஏதாவது விசேஷமா?' என்றாள் மாமி.

'ஒன்றுமில்லை மாமி' என்றாள் உமா,

'ஆமாம், உன் கல்யாணமாகி ரெண்டு வருஷமாறது. இன்னும் ஒரு பிஞ்சையோ காயையோ காணோமே? குடும்பக்கட்டுப்பாடா?'

'இல்லை மாமி!'

'சரி, டாக்டரிடம் காட்டிக்கொள்.'

'தேவையில்லை மாமி.'

'உன் கணவனும்கூட வந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும். ரெண்டு பேருமாய்ச் சேர்ந்து நன்றாய்ப் பொழுது போகும். அவனையும் வரச்சொல்லி எழுது.

'அவர் வரமாட்டார். வேலை அதிகமாய் இருக்கும்.'

'மனைவிக்குப் பிறகுதான் எந்த வேலையும்! உங்க மாமா என்ன பண்ணுவார் தெரியுமா? வீட்டில் டூருக்குப் போவதாய்ச் சொல்லிவிட்டுப் போவார். நான் பிறந்த வீட்டுக்குன்னு சொல்லிட்டுப் புறப்பட்டு விடுவேன். ரெண்டு பேருமாய் வேறு ஊரில் சந்திப்போம். எங்க மாமியார் இருக்காளே, பெரிய ராட்சசி. அவரோடு பேசவே



விடமாட்டாள். நாங்க பட்ட கஷ்டங்கள் எல்லாம் இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவங்களுக்குஇல்லை. கல்யாணமான அடுத்த நிமிஷத்திலிருந்து கை கோத்துட்டுச் சுற்றத் தொடங்கிடறாங்க.'

மாமிக்குக் கொஞ்சம் நேரம் கிடைத்துவிட்டாலும் போதும், தன் கணவரைப் பற்றிய புராணங்களை அவிழ்த்து விடத்தொடங்கி விடுவாள். இந்த வயதில் அவ்விருவருக்குமிடையே இருந்த நெருக்கம் குறையவில்லை. உமாவுக்குக் குழந்தைகள் இல்லாததால் அந்தக் குறையை ஒருவர்க்கு மற்றவர் நெருக்கமாய் இருந்து தீர்த்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். உமாவுக்கு அவர்களைப் பார்த்தால் சந்தோஷமாயிருந்தது.

திடீரென்று காலிங்பெல் அடித்தது. உமா போய்க் கதவைத் திறந்தாள்.

மாமி உள்ளே வந்து கொண்டே— 'என் ஞாபகமறதியைப் பார்த்தாயா? கல்யாணத்துக்குக் கிளம்பிட்டு பிரசென்ட்டேஷனை வீட்டிலேயே வைத்துட்டேன். உங்க மாமாவும் ஞாபகப்படுத்தலேயில்லை'— என்று உள்ளே போய்ப் பரிசுப் பொருளை எடுத்துக் கொண்டு வந்தாள்.

உமா அவளை அனுப்பி வைத்துவிட்டு, உள்ளே வந்தாள். எதிரே கேலண்டர் தென்பட்டது. உமா தேதியைப் பார்த்தாள்.

அவள் வந்து ஒரு வாரம் ஆகிறது. ரவிசங்கரனிடமிருந்து லெட்டரோ, தந்தியோ, போனோ எதுவுமே வரவில்லை. உமா பெருமூச்செறிந்தாள். அவன் பாராமுகமும், அலட்சியமும் அவளுக்குப் புதிதில்லை. ஆனால் அந்த வருத்தம் மட்டும் அவளை விட்டு நீங்கவேயில்லை. இதற்கு முடிவே இல்லை. அவன் ஒருக்கால் லாயர்களைப் பார்த்துப்பேசும் பரபரப்பில் இருக்கிறானோ என்னவோ?

வசந்தியும் ரவிசங்கரனும் ஆனந்தமாய்இருப்பது போன்ற காட்சி அவள் கண் முன்னாடி வந்து நின்றது.

வசந்தி உண்மையில் மிக அதிர்ஷ்சாலி. காதலிக்கப் படும் நெஞ்சத்திற்கு முன்னால் சமூகம் ஏற்படுத்திய திருமணம் என்பது துச்சமாய்த் தோன்றியது. வசந்தியின் அதிர்ஷ்டத்தைப் பார்த்து அவள் பொறாமைப்படக் கூடாது. ஆனால் — ஆனால் அது அவளால் முடிய வில்லையே! உமாவின் கண்களிலிருந்து பொலபொல வென்று நீர் வழிந்தது.

திரும்பவும் காலிங்பெல் ஒலித்தது மாமி மறுபடியும் எதையாவது மறந்துவிட்டாள் போலும்! திரும்பவும் வந்திருக்கிறாள்.

உமா கண்களைத் துடைத்துக் கொண்டு போய்க் கதலைத் திறந்தாள். அவள் அப் பக்கமாய்ச் சரியாய்ப் பார்க்காமலேயே அப்பால் வரலானாள்.

ஆனால் மாமி த விக் கொண்ட சென்ட் வாசனை வரவில்லை; பட்டுப்புடவையின் சலசலப்பைக் காணோம்; வெள்ளை உடையுடன் செருப்பு அணிந்திருந்த ஆள் வாசற்படிக்கு அந்தப்பக்கத்தில் நின்றான். பார்த்தாள்; மறு நிமிஷம் தலைசுழன்றது. வாசலில் ரவிசங்கரன் நின்றுகொண்டிருந்தான்.

ஒரு வினாடி இருவரும் ஒருவரையொருவர் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார்கள்! 'உள்ளே வரலாமா?' —கேட்டான் அவன்.

உமா சுதாரித்துக்கொண்டு வழி விட்டாள். அவன் உள்ளே வந்தான்.

உமா உள்ளே போனாள். அவன் சோபாவில் சரிந் தான். பத்து நிமிஷங்களுக்குப் பிறகு உமா காப்ப தம்ள



குடன் வந்தாள். அம் முகத்தல் வரவழைத்துக் கொண்ட ரோஷமும், அகமும், தைரியமும் தென்பட்டன.

'டைவர்ஸ் காகிதங்களை நீங்களே நேரில் கொண்டு வந்தீங்களா?'

அவ் வார்த்தைகள் கூரிய கத்தியாய் இருந்தன. அவன் முகத்தில் வேதனையும் வருத்தமும் நன்றாய்த் தென்பட் டன. அவன் அச் சொல் அம்புகளை நிசப்தமாய்த் தாங்கிக் கொண்டான். முறுவலை வரவழைத்துக் கொண்டான்.

'காகிதத்தால் வேலை ஆகவேண்டியிருந்தால் அவை போஸ்டிலேயே வருமே! நானே நேரில் எதுக்கு வரப் போறேன்?'

உமா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அம் முகத்தில் பயம், அகம் கரைந்துப்போய் சந்தோஷமும், ஆசையும், அப்பாவித்தனமும் இடம் பெற்றுக்கொண் டிருந்தன. அவன் வார்த்தைகள் புரியாததுபோல் குழப்பத் துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'உமா! நான்... நான் உன்னைக் கூட்டிட்டுப் போக வந்திருக்கிறேன்!' என்றான்.

அவன் அவ் வார்த்தைகளைச் சொன்ன விதம் எப்படி இருந்ததோ தெரியாது. உமா அடுத்த நிமிஷம் அழுது விட்டாள். அவன் காபி தம்ளரைக் கீழே வைத்து விட்டு உமாவின் கையைப் பிடித்துக் கொண்டான்.

முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டே சோபாவில் சரிந்து விசும்பத் தொடங்கினாள் உமா. அவ்வழுகை இதயத்தைக் கசக்கிப் பிழியும்படியாய் இருந்தது.

ரவிசங்கரின் நாடை எலும்புகள் முறுக்கேறிக் கொண்டன. அவன் எதுவும் பேசவில்லை. நகர்ந்து வந்து உமாவின் தலையை மடியில் சாய்த்துக் கொண்டான். அவ்வழுகை மேலும் பலமாயிற்று. அவன் எதுவும் பேசவில்லை. உமாவை இன்னும் கிட்டே அணைத்துக் கொண்டு, கன்னங்களையும், கேசங்களையும் தடவிக் கொண்டேயிருந்தான். அவன் ஸ்பரிசத்தால் உமாவிற்கு எத்தனையோ கேள்விகளுக்குப் பதில் கிடைத்து விட்டது.

❋ ❋ ❋

மதுரையில்—

வசந்தி அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடை பயின்று கொண்டிருந்தாள். அன்றைக்கும் ரவிசங்கரன் வரவில்லை. மனம், வருவான் என்றும் வரமாட்டான் என்றும் மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டேயிருந்தது. அவள் வந்து இவ்வளவு நாளாகியும் ரவிசங்கரன் வராதது அவளுக்கு விநோதமாய் இருந்தது. இத் தனிமை மிகப் பயங்கரமாயிருந்தது.

அதற்குள் யாரோ கதவைத் தட்டினார்கள்.

வசந்தியின் இதயம் படபடத்தது. அந்த விதமாய்க் கதவைத் தட்டிய விதத்தில் ஏதோ நெருக்கம் தென்பட்டது. ஓட்டமாய் ஓடிப் போய்த் தடாலென்று கதவைத் திறந்தாள்.

எதிரே ஜெயபிரசாத் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்த வசந்தி விக்கித்துப் போய்விட்டாள். அவள் எங்கே, எந்த ஊருக்குப் போகிறாள் என்று சொல்லவே கூடாது என்று அக்காவிடம் குழந்தைகள் மேல் ஆணையாய் சத்தியம் வாங்கிக் கொண்டிருந்தாள்.

'நீங்களா?' வியப்புடன் கேட்டாள்.



'ஆமாம், நான்தான்!' என்றான், அவன் மார் தட்டிக் கொண்டே கவர்ந்தோடு,

'என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்துட்டால் கண்டுபிடித்து விட முடியாதுன்னுதானே நினைச்சிட்டிருக்கிங்க? இந்த பூமியில் நீங்க எங்கே ஒளிந்துக்கிட்டாலும் என்னால் கண்டுபிடித்துட முடியும்' என்றான் முறுவலுடன்.

வசந்திக்கு அவன் பேச்சும் சிரிப்பும் நிம்மதியைத் தந்தன. இருட் குகைக்குள் ஒளிக்கிரணம் தெறித்து வந்தாற் போலிருந்தது

'வாங்க!' என்றாள்.

அவன் உள்ளே வந்தான்.

வசந்தி அவனுக்குக் காபியைத் தந்து விட்டுக் குளிக்கச் சொன்னாள். அவன் காபியைக் குடித்துக் கொண்டே, வசந்தியைக் காணாமல் தான் திண்டாடித் தவித்ததையும் கலங்கிப் போனதையும் விவரித்துச் சொன்னான்.

'என் விலாசத்தை உங்களுக்கு யார் கொடுத்தாங்க?' —கேட்டாள்.

'அம்மோவ்! சொல்லமாட்டேன். அது என் ரகசியம்' என்றான் அவன் குளிக்க எழுந்துகொண்டே.

'ஆங் ... மறந்தே போயிட்டேன். உங்களுக்கு ரவிசங்கரன் கடிதம் கொடுத்தனுப்பியிருக்கிறார்' என்று ஜேபியிலிருந்த கவரை எடுத்துத் தந்து விட்டுக் குளிக்கப் போனான் அவன்.

வசந்தியின் புருவங்கள் நெளிந்தன. உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

'வசு!

நான் வராமல் இவ்வாறு கடிதம் எழுதுவதற்குக் கோபித்துக் கொள்ளாதே. உன் கடிதத்தை ஒன்றிற்கு இரண்டு தடவையாய்ப் படித்தேன். எனக்குப் பிடித்தாற் போல முடிவு எடுத்துக் கொள்வதற்கு நான் இப்பொழுது சுதந்திர புருஷன் இல்லை. இந்த என் வாழ்க்கை என் ஒருத்தனுடையது மட்டுமே இல்லை. ஒரு காலத்தில் நான் முழு சுதந்திர மனுஷன். அப்பொழுது என் வாழ்க்கை மேல் எனக்குப் பரிபூரணமான அதிகாரம் இருந்தது அதனால்தான் அன்றைக்கு உன்னை எங்கேயாவது போய்த் திருமணம் பண்ணிக் கொண்டு விடலாம் வா —என்று கூப்பிட முடிந்தது என்னால்.

'நீ வரவில்லை. அம்மாவுக்குப் பிடிக்காமல் உன்னைப் பண்ணிக் கொண்டால் என்னால் சுகமாயிருக்க முடியாது என்று மறுத்து விட்டாய். அது எவ்வளவு உண்மை! அன்றைக்கு என்னால் உன்னைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், நீ மட்டும் சரியாய் என்னைப் புரிந்துக் கொண்டிருந்தாய். அதற்கப்புறமாய்க் கூட உமாவைத் தவறுதலாய் திருமணம் பண்ணிக் கொண்டு விட்டதாய் நினைத்துக் கொண்டிருந்தேன்.

'உமாவை விட்டு விட்டு வந்து உன்னைத் திருமணம் பண்ணிக் கொண்டால் அந்தத் தவற்றைத் திருத்திக் கொண்டதாய் ஆகும் என்றும் எண்ணி வந்தேன். ஆனால் அது எவ்வளவு தவறானது என்று இப்பொழுது புரிகிறது வசு.

'நான் இப்பொழுது உன்னைத் திருமணம் பண்ணிக் கொள்கிறேன் என்று வைத்துக் கொள்; என்ன நடக்கும் தெரியுமா? வசந்தியைக் காதலித்த ரவிசங்கரன் உமா



வைத் திருமணம் பண்ணிக்கொண்டுவிட்டான் என்று உலகத்திற்குத் தெரியாது. உமாவின் கணவனை வசந்தி வலை வீசி பிடித்துக் கொண்டு விட்டாள் என்ற நிந்தனையை உன் மீது போடும். நான் உனக்கு வாழ்க்கையில் தர விரும்புவது அதில்லை இது நான் உனக்குச் செய்யும் அநியாயமாய்த்தான் ஆகுமே தவிர, நியாயமாகாது.

'இந்தப் பக்கத்தில் உமாவின் விஷயத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தால், என்னை மணந்து கொண்டது உமாவின் தப்பில்லை. இப்ப என் வழியை நான் பார்த்துக் கொண்டு விட்டால், உமாவின் கதி என்னவாகும்? ஆணான நான் இத் திருமணத்தை முறித்துக் கொண்டு உன்னைப் பண்ணிக் கொண்டு சுகமாய் இருக்கலாம். ஆனால், உமா அவ்வாறு பண்ணிக் கொள்வாளா?

'கணவன் உதறிவிட்ட பெண்ணை ஆதரித்து, இரக்கம் காட்டக்கூடிய சமூகமா இது? இல்லை! இல்லவே இல்லை. அதாவது நான் பண்ணிய தப்பிற்கு உமாவின் வாழ்க்கையைப் பலி கொடுக்கிறேன் என்று அர்த்தம்!

'இந்த இரண்டாண்டுகளாய் நான் எனக்குத் தெரியாமலேயே உமாவை இம்சித்து வந்திருக்கிறேன். வசு, உனக்குத் தெரியாது. அன்றைக்கு உன் வீட்டுக் கிரகப்பிரவேசத்தின் பொழுது நாமிருவரும் நெருக்கமாய் இருந்ததைப் பார்த்துவிட்ட உமா, வாழ்க்கையை முடித்துக்கொண்டு விட எண்ணி, காரை வேண்டுமென்றேஆக்ஸிடெண்டிற்கு ஆளாக்கிக் கொண்டாள். ஆனால் கடவுள் கிருபையால் உமாவுக்கு எதுவும் ஆகவில்லை.

'நான் என்ன பண்ணிக் கொண்டிருந்தேன்? உமாவை சாவை நோக்கித் துரத்திக் கொண்டிருந்தேன். மை காட், இந்த விஷயம் தெரிந்தபிறகு மனிதத்தன்மை உடைய ஆனால் அதே காரியத்தைத் திரும்பவும் பண்ண முடியுமா? முடியாது. பண்ணவும் மாட்டேன்.

'உமா அடிப்பட்டபொழுது ஜன்னி நிலையில் என்னைப் பிடித்துக் கொண்டு, 'நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்னு எனக்கு இந்தத் தண்டனை தந்துட்டீங்க?'

என்று உலுக்கி எடுத்த பொழுதுதான் என் கண்கள் திறந்துகொண்டன.

'இவ்வளவு நாளாய் நான் தவறான பிரம்மையில் ஆழ்ந்திருந்தேன். என் சுயநலத்தைப் பார்த்துக் கொண்டேனே தவிர உமாவைப் பற்றியே யோசித்துப் பார்க்கவில்லை. வசு! இளமையின் ஆரம்பக் கட்டத்தில் மனிதனுக்கு காதல்தான் உலகமே என்று தோன்றும். பிறகு போகப்போக அனுபவம் ஏற்பட ஏற்பட வேதனை, ஆனந்தம், ஏமாற்றம்— இவற்றையெல்லாம் விட வாழ்க்கைதான் முக்கியம் என்று தோன்றும். வாழ்க்கை என்றால் தன் சுகத்தை மட்டுமே தேடிக் கொள்வது இல்லை. கடமையை நிறைவேற்றுவது என்று அர்த்தம். இதைத் தெரிந்துக் கொள்ளாதவன் மனத்தளவில் வளர்ச்சியடையாதவனாய்த்தான் இருக்கவேண்டும்.

'உன் பக்கத்திலிருந்து யோசித்துப் பார்த்தால், உமாவை மணந்து கொண்டதும் உன்னை விட்டுத் தொலைவிற்கு விலகிப் போகாமலிருந்தது தான் உனக்குச் செய்த அநியாயமாய்த் தோன்றுகிறது.

'நான் இவ்வளவு நாளாய் என்ன பண்ணினேன்? உன்னைக் கனவுக் கூண்டிற்குள் அடைத்து வைத்திருந்தேன். உனக்கு சுதந்திரமில்லாமல் பண்ணினேன். உன்னை விட்டுத் தொலைவிற்குப் போயும்கூட உனக்கு அண்மையில் இருந்தாற் போன்ற பிரம்மையை ஏற்படுத்திக் கொண்டிருந்தேன். நீ என்னைக் காதலித்ததற்குப் பலன் உனக்கு ஏராளமான நிந்தனைகள் கிடைத்தன.



'உலகம் என்ன சொல்கிறது தெரியுமா? நீ வசிக்கும் அந்த வீட்டை நான் உமாவின் பணத்தைக் கொண்டு உனக்கு அன்பளிப்பாய் வாங்கிக் கொடுத்திருக்கிறேனாம். இப்படிப்பட்டவை எத்தனையோ! வசு, நாம் யாரையாவது நேசித்தால் நம்மால் அவர்களுக்கு சுகம், அமைதி, சந்தோஷம் கிடைக்கவேண்டும். நம்மால் அது முடியவேண்டும். அவை இன்றி, அமைதியின்மை, வேதனை முதலியவைகளைத் தருவது துரதிர்ஷ்டம் அல்லவா? என்னால் உனக்கு இவைதானே கிடைத்தன? இதெல்லாம் என் தவறுதான் என்று தோன்றுகிறது.

'வசு, வாழ்க்கை மிக விநோதமானது. யாரையோ நெருக்கமாய்க் கொண்டு வந்து பிணைத்து விடுகிறது. நம்முடையவர்கள் என்றெண்ணிக் கொண்டிருப்பவர்களை தொலை தூரத்திற்குப் பிரித்துவிடுகிறது.

நினைத்தும் பார்த்திராத அக்கரைக்கு நம் வாழ்க்கைப் படகுகளைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறது. 'காதல்' என்ற அனுபவத்தைப் பெற்ற ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விதத்தில் இந்த மனக்குமுறலிலிருந்து மீளமுடியாது போலும்!

'ஜெய பிரசாதிற்கு நான்தான் உன் விலாசத்தைத் தந்தேன்.

'வசு, நீ என்றுமே வாழ்க்கையில் தனிமையால் தவிக்கக்கூடாது என்பது என் ஆசை. உன்னால் என்னைப் புரிந்து கொள்ள, முடியாவிட்டால், இனி அந்த ஆண்டவனாலும்கூட என்னைப் புரிந்துக் கொள்ள முடியாது என்று நினைக்கிறேன். உமா பம்பாய்க்குப் போயிருக்கிறாள். அழைத்துக் கொண்டு வர புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இத்தனை நாளாய் நான் ரவிசங்கரன் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். இல்லை நான் உமாசங்கரன்தான்!'

ஜெயபிரசாத் குளித்துவிட்டுத் திரும்பி வந்தபோது, வசந்தி அழுது கொண்டிருந்தாள். அவன் கலக்கத்துடன் கிட்டே வந்தான்.

'ஏன்? என்னவாச்சு?' என்று கேட்டான்.

வசந்தி கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் எனக்கு இங்கே புழுக்கமாய் இருக்கு. காற்றோட்டமே இல்லாதது போல இருக்கு. என்னை எங்கேயாவது, வெளியே கூட்டிட்டுப் போக முடியுமா, உங்களால்?' என்றாள்.

'ஓ. கே; ஓ. கே! வித் ப்ளஷர்' என்றான் அவன், வியப்போடு பார்த்தபடி. உடை மாற்றிக் கொள்ள உள்ளே போனான் அவன்.

வசந்தி ரவிசங்கரன் எழுதிய கடிதத்தைக் கிழித்துத் தூளாக்கவில்லை. கைப் பையில் வைத்துக் கொண்டே,

'ரவி! நான் ஆவேசத்தோடு படித்தேன். எனக்கு சரியாய்ப் புரியவில்லையோ என்னவோ? திரும்பவும் படிக்க வேண்டும். அது எனக்குப் புரிந்த அன்றைக்கு—அதிலிருக்கும் ஒவ்வொரு எழுத்துமே உண்மைதான் என்று தோன்றும்; அன்றைக்கு அதைக் கிழித்துப் போட்டு விடுவேன். அந்த நாள் என் வாழ்க்கையில் வருமோ வராதோ ஆண்டவனுக்கே வெளிச்சம்!'— என்றெண்ணிக் கொண்டாள் கண்களைத் துடைத்துக் கொண்டே.

(முற்றும்)



11347
296865